35
சுதேச
மித்திரன்
ஆகஸ்டு 5, 1956 விலை 4 அணா

சுதேசமித்திரன் புத்தகசாலை

தலைமை ஆபீஸ்:

விக்டரி ஹவுஸ் :: மவுண்ட் ரோட் :: சென்னை-2.

அடியிற்கண்ட ரயில்வே பிளாட்பாரங்களில் எமது புத்தகசாலைகள் இருக்கின்றன.

ரயில்வே ஸ்டால்கள்:

1. பெங்களூர் க. மெண்ட்
2. செங்கற்பட்டு ஜங்
3. கோயமுத்தூர் ஜங்
4. திண்டுக்கல் ஜங்.
5 ஈரோடு ஜங்.
6 காரைக்குடி
7. காசரகாட
8 கும்பகோணம்
9. மதராஸ் பீச்
10. மதுரை ஜங்.
11. மானுமதுரை ஜங்.
12 மாயவரம் ஜங்.
13. ஒலவக்கோடு ஜங்.
14. பொள்ளாச்சி ஜங்.
15. ரெய்ச்சூர்
16. தாம்பரம்
17. தென்காசி ஜங்.
18. திருநெல்வேலி ஜங்.
19. திருப்பதி (கிழக்கு)
20. திருவாரூர் ஜங்.
21 திருச்சி ஜங்.
22. தூத்துக்குடி
23. விழுப்புரம் ஜங்.
24. விருதுநகர் ஜங்.
25. விருத்தாசலம் ஜங்.

மேற்படி இடங்களில் எல்லாவிதமான இங்கிலீஷ், தமிழ் புத்தகங்களும் தினசரி, வாரப் பத்திரிகைகளும், அமெரிக்கா, இங்கிலாந்து, சீனா, ரஷ்யா முதலிய இடங்களில் பிரசுரமாகும் வாரப் பத்திரிகைகளும், மாதப் பத்திரிகைகளும் கிடைக்கும்.

மானேஜர்

சுதேசமித்திரன் புத்தகசாலை,

விக்டரி ஹவுஸ், மவுண்ட் ரோட், சென்னை 2.

பொருளடக்கம்

Vol. XXVII] துன்முகிஸு ஆடிமீ 21உ ஆகஸ்டு 5 1956. [No. 27

படிப்புக்கு ஏற்ற வேலை		3
காற்றுவாக்கிலே	—வம்பன்	4
படித்திருக்கிறீர்களா?	—க. நா. சுப்ரமண்யம்	6
பூணூல் விஜயம்	—உமாதேவி	8
பிரமுகர்வரிசை		[illegible]
இலங்கை லிகித[illegible]		12
ஒட்டகம்	—மலையாளக் கதை	13
டில்லி மி[illegible]கள்	—தான்	17
துப்பறி[illegible] சுப்புடு	—சந்தனு	19
அன்பி[illegible] எல்லை	—சுகி	20
வைத்[illegible]யரைக் கேளுங்கள்	—குச்சாமாமா	24
நடந்த [illegible]யம்	—என். [illegible] ஹரிஹரன்	26
திரைக்குப்பின்...	—ஆர்வி	27
மனித குலம் வளர்ந்த விதம்	—சக்திதாசன்	33
விக்கிரமாதித்தன் கதைகள்	—சாலிவாஹனன்	35
வயதும் வீரமும்	—அஸ்வத்தாமா	36
[illegible]ப்மை	—பி. வி. பாரதீயன்	39
தவு[illegible]கரிகக் குறிப்புகள்	—காசினி	42
மோக[illegible]ள்	—தி. ஜானகிராமன்	43
[illegible]கர் தபால்		50
[illegible]ாமண்டபம்		51
நகர அரங்கம்	—கே. ஆர். எஸ்.	54
தீக்ஷிதர் கீர்த்தனை		55

"மித்திரன்" வாரப்பதிப்பில் வெளிவரும் கதைகளில் பெயர்கள், சம்பவங்கள் எல்லாம் கற்பனையே: அவை யாரையும் குறிப்பிடுவன அல்ல

208199

MAL N30s N56.27 27-28

திருச்செந்தூர் தாலூகா காயல் பட்டணத்தில் ஜனப் எல். கே. எஸ். சகோதரர்களால் கட்டி முடிக்கப்பட்ட மகாத்மா காந்தி ஞாபகார்த்த வளைவை முதல் மந்திரி ஸ்ரீ காமராஜ் திறந்து வைத்தார்.

ஆகஸ்டு 3 முதல்
சென்னை
வெலிங்டன்
பிரபாத்
சரஸ்வதி
மற்றும் தென்னாடெங்கும்
V.கோவிந்தராஜன் அளிக்கும்
ஜூபிலி பிலிம்ஸ்
மர்ம
வீரன்
டைரக்ஷன் T.R.ரகுநாத்
இசை:
வேதாசலம்
வசனம்:
A.L.நாராயணன்
ஸ்டுடியோ:
வாஹினி

வாழிய செந்தமிழ் — சுதேசமித்திரன் — வாழ்க நற்றமிழர்
வாரப்பதிப்பு

படிப்புக்கு ஏற்ற வேலை

சர்க்காரில் எந்தெந்த வகையான உத்தியோகங்களுக்கு எந்தெந்தவிதமான படிப்பு தேவை என்பதை ஆராய்வதற்காக ஸ்ரீ ராமஸ்வாமி முதலியார் தலைமையில் நியமிக்கப்பட்ட கமிட்டி தனது அறிக்கையை வெளியிட்டிருக்கிறது. படிப்புக்கு ஏற்ற உத்தியோகம் கிடைக்காத அவல நிலையைத்தான் இன்று காண்கிறோம். சர்க்கார் காரியாலயங்களில், குமாஸ்தா போன்ற வேலைகளை இன்று செய்து வருவோர் பெரும்பாலும் பட்டதாரிகளே. இவ்வேலைகளைச் சரிவர கவனிக்கச் சர்வகலாசாலைப் பட்டம் தேவையில்லை. இந்த நிலை காரணமாக, விஞ்ஞான இன்ன பிற துறைகளில் தேர்ச்சி பெற்றோரின் படிப்பெல்லாம் விரயமாவதோடு, குறைந்த படிப்புள்ளவர்களுக்கு வேலை கிடைக்காதவண்ணம் கடும் போட்டியும் ஏற்பட்டுவிட்டது. இதற்குப் பரிகாரம் காணும் ரீதியில் மேற்கூறிய கமிட்டியின் சிபாரிசுகள் அமைந்திருக்கின்றன.

சர்க்கார் உத்தியோகங்கள் மூன்று ரகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. முதலாவது, உயர்தர நிர்வாகப் பதவிகள்; இரண்டாவது, அடுத்த தரத்திலுள்ள நிர்வாகப் பதவிகள்; மூன்றாவது, குமாஸ்தா வேலை. முதல் வகை உத்தியோகங்களுக்குப் பட்டதாரிகளையே நியமிக்க வேண்டுமென்றும், இரண்டாவது வகைக்குப் பட்டத்தைக் குறைந்தபட்ச யோக்யதாம்சமாக நிர்ணயிக்காமல் பட்டதாரிகளும் மனுச் செய்துகொள்ள அனுமதிக்க வேண்டுமென்றும், மூன்றாவது வகை வேலைக்குப் பட்டதாரிகள் போட்டியிட இயலாமல் செய்துவிட வேண்டுமென்றும் கமிட்டி கூறுகிறது.

ஆனால், உயர்தரப் படிப்புக்குப் பிறகும் இந்த குமாஸ்தா வேலையைப் பட்டதாரிகள் நாடும் காரணம், வேலையில்லாத் திண்டாட்டம் தான். தற்போதையப் படிப்புக்கும், நமது சமுதாயத்தின் தேவைக்கும் சம்பந்தமேயில்லை. அவை ஒன்றுக்கு மற்றொன்று அனுசரணையாக இருக்கும்படி செய்வதுதான் படித்தவர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்க்கும் வழி.

பிழைப்புக்கான ஒரு சாதனமாகவே பெரும்பாலானவர் படிப்பை நாடுகின்றனர். சர்க்கார் துறைக்கும், தனியார் துறைக்கும் வருடா வருடம் எத்தகைய யோக்யதாம்சமுள்ளவர்கள், எவ்வளவு பேர் தேவை என்பதை குத்துமதிப்பாகவாவது நிர்ணயித்து அந்தத் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் நமது கல்வித் திட்டத்தை அமைப்பது உசிதமாகும். இதன் பயனாக, வேலைக்கேற்ற படிப்போ, படிப்புக்கேற்ற வேலையோ இல்லாத தற்போதைய இக்கட்டான நிலையைப் போக்க இயலும்.

எகிப்தின் படிப்பினை

ஸூயஸ் கால்வாய் கம்பெனியை திடீரென எகிப்து தனது தேசீய உடைமையாக்கிக்கொண்டதையடுத்து மேநாடுகளில் பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது. லண்டனிலும், பாரிஸிலும் எகிப்துக்குள்ள ஐவேஜிகள் முடக்கப்பட்டுவிட்டன. மேற்கொண்டு என்ன பதில் நடவடிக்கை எடுப்பதென்பதுபற்றி அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகள் தீவிர மந்திராலோசனையில் ஈடுபட்டுள்ளன.

இவ்வளவு ஆக்ரோஷத்தை விளைவிக்கக்கூடிய ஒரு நடவடிக்கையை எகிப்தின் ஜனாதிபதி நாஸர் எடுத்த காரணம்பற்றி நிதானமாகச் சிந்திக்க வேண்டும். அஸ்வான் என்னுமிடத்தில் நைல் நதி மீது பிரும்மாண்டமான அணையொன்றை எழுப்பி அதன் மூலம் துரிதமாக எகிப்து பொருளாதார வளம் பெற வேண்டுமென்பது அந்நாட்டினரின் நெடுநாளையக் கனவு. இதற்குப் பொருளுதவி (சுமார் ரூ. 35 கோடி) செய்வதாக மேநாடுகள் வாக்களித்துக் கடைசி நிமிஷத்தில் கைவிரித்துவிட்டன. மேநாடுகளிடம் இலகுவில் பெறமுடியாத ஆயுதங்களை கம்யூனிஸ்டு தேசங்களிலிருந்து எகிப்து தருவித்ததால் அவை இவ்விதம் செய்தனவாம். ஏகிப்து பதிலடியாக, ஸூயஸ் கால்வாயை தேசீய உடைமையாக்கி, வருடமொன்றுக்கு 47½ கோடி ரூபாய் வருவாயைத் தேடிக்கொண்டுவிட்டது. இதைக்கொண்டு அஸ்வான் அணைத் திட்டத்தை முடிக்கவும் தீர்மானித்துள்ளது.

கம்பெனியின் பங்குதாரர்களுக்கு, அவர்களுடைய பங்குகளின் மதிப்பைச் செலுத்திவிடுவதாக எகிப்து வாக்களித்திருக்கிறது. பிரிட்டனுக்கு எண்ணெய் சப்ளைக்கும், தொலைகிழக்குடன் போக்குவரவுக்கும் ஜீவநாடியாக ஸூயஸ் கால்வாய் விளங்குவதால், லண்டனில் அதிர்ச்சியும் மனவேதனையும் ஏற்பட்டிருப்பது இயற்கையே. சர்வதேச முக்யத்வம் வாய்ந்திருப்பினும், எகிப்துக்குள்ளிருக்கும் கால்வாய் மீது அந்நாட்டிற்குப் பூரண உரிமை உண்டென்பதை எவரும் மறுப்பதற்கில்லை. அந்நாட்டின் மீது சீற்றமடைந்து பதிலடிகளில் இறங்குவதைவிட, தற்போதைய நடவடிக்கையின் காரணத்தை உணர்ந்து அதைப் பரிகரிக்க மேநாடுகள் முற்படுவதே அறிவுடைமையாகும்.

காற்று வாக்கிலே..

இயற்கையும் செயற்கையும்

பண்டங்களின் விலையேற்றத்தைத் தடுக்க இயலாவிடினும் பிரஜா உற்பத்திப் பெருக்கத்தைத் தடுக்க அரசாங்கம் எடுத்துக்கொள்ளும் முயற்சிகள் வெகு தீவிரம். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் சுமார் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட குடும்பக் கட்டுப்பாடு நிலையங்களை அமைக்க உத்தேசம். இத்துறையில் சென்னை ராஜ்யம் மிகவும் முற்போக்கான நிலையில் இருப்பதாக ராஜ்ய சுகாதார மந்திரி பெருமிதமடைகிறார். பரந்த அளவில் ராஜ்யத்தில் குடும்பவிருத்திக் கட்டுப்பாடு திட்டத்தை அமுல் நடத்தப் போவதாக அறிவிப்பு. மூன்று நகரங்களில் பரீட்சார்த்த வேலை மேற்கொள்ளப்படும். கர்ப்பத்தடைமுறை பற்றி மக்களுக்கு விளக்கிக் கூற ஏற்பாடு. அதுவும் குறைந்த வருமானமுள்ள வர்க்கத்திலுள்ள இளம் தம்பதிகளுக்கு "யோசனைகள்" வழங்கப்படுமாம். "சம்பளத்தை உயர்த்துவதற்கில்லை. குழந்தைகள் அதிகம் பெறுவதை நிறுத்திக் கொள்ளுங்கள்" என்று கெஜட் பதிவில்லாச் சிப்பந்திகளுக்கு சமீபத்தில் அறிவுரை வழங்கப்பட்டதல்லவா?

வாய்மொழியாகப் பிரசாரம் செய்வது போதாதென்று ஒரு சஞ்சிகையும் வெளியிட சர்க்கார் முடிவு செய்துவிட்டது. இதற்காக ஒரு ஆலோசனைக் குழுவும் நியமனம். கர்ப்பத்தடை முறைகள் பற்றி சஞ்சிகையில் வெளியிடப்படுமாம். ஆங்கிலத்திலன்றி தாய்மொழியில் பிரசுரித்தால் அதிக லாபமுண்டு. வர்ணப் படங்களுடன் விளக்கமாகப் பிரசுரித்தால், நல்ல விற்பனையும் இருக்கும் தமிழகத்தில். அரசாங்கத்துக்கு வருமானமும் ஏற்படும். மக்களுக்கு அறிவூட்டும் அரசாங்க வெளியீட்டை ஆபாசம் என்று கருதுவது அபசாரமல்லவா?

"மயக்குறு மக்களை இல்லோர்க்குப் பயக்குறை இல்லை தாம் வாழும் நாளே" என்ற பண்பாட்டையுடைய தமிழகத்தில், மூன்று குழந்தைகளுக்கு மேல் வேண்டாம் என்று அரசாங்கமே பிரசாரம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது! பெண் டாக்டர்களுக்குக் குடும்பக் கட்டுப்பாடு திட்டம் பற்றி அரசாங்க ஆஸ்பத்திரிகளில் பத்து நாட்களுக்குக் கட்டாயப் பயிற்சி பெற வேண்டுமென்று உத்தரவிடப்பட்டிருக்கிறதாம். பத்து மாதம் சுமந்து பெற்றெடுக்க வேண்டிய வேதனையைத் தவிர்க்க யோசனை கூறுவோர்க்கு பத்து நாள் பயிற்சி போதுமா என்பது வேறு விஷயம்! எனினும் இந்த உத்தரவு குடியரசுச் சட்டத்தின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள தனிப்பட்ட உரிமைக்குக் குந்தகம் விளைவிப்பதாக ஒரு ஆட்சேபம் கிளம்பியுள்ளது.

இயற்கைக்கு விரோதமான செயல்களினால் நற்பலன் கிட்டுமா என்று வினவுவோர் உண்டு. பூகம்பத்தினாலும், புயலினாலும், வெள்ளத்தினாலும் ஆயிரக்கணக்கான மக்கள் மடிந்து போவதை யார் தடுக்க முடியும்? ஆண்டவன் லீலைகளினால் ஜனனமும் மரணமும் தாமாகவே சரிக்கட்டி விடும்போது, மனிதயத்தனத்தால் என்ன இருக்கிறது என்று ஆஸ்திகர்கள் கேட்கலாம். ஆனால், ஆண்டவன் உருவத்தைப் படம் எழுதி எரித்து விட்டால், ஆண்டவனே ஒழிந்து விடுவார் என்று நினைக்கும் பகுத்தறிவாளர்கள் உள்ள பிரதேசத்தில், ஆண்டவன் லீலைகள் எல்லாம் "மூடநம்பிக்கை"களாயிற்றே!

பிரசவத்தின் எண்ணிக்கையை மூன்றுக்கு மேல் ஏற்படாதவாறு கட்டுப்படுத்த யோசனை கூறலாம் அரசாங்கம். ஆனால், ஒரே பிரசவத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட குழந்தைகள் பிறப்பதை யார் தடுப்பது? இரட்டைக் குழந்தைகளும் மூன்று குழந்தைகளும் ஒரே சமயத்தில் ஜனனமாவது நாட்டில் சகஜமாகி வருகிறதே! அரசாங்கத்தின் யோசனைகள் நகரங்களிலுள்ள நாகரிகம் படைத்தவர்களிடையே எடுபட்டாலும், கிராமப்புறங்களில் ஜனசக்தி பெருகிக்கொண்டுதானே இருக்கும்? உத்தரப் பிரதேசத்தில் சமீபத்தில் கிராமப் பகுதிகளில் நடைபெற்ற ஆராய்ச்சியில் ஒரு ஸ்திரீக்கு 17 தடவை இரட்டைக் குழந்தைகள் பிறந்ததாகத் தகவல்! பெங்களூர் ஆஸ்பத்திரியில் ஒரு குழந்தையின் வயிற்றிலேயே மற்றொரு குழந்தை காணப்பட்டதாகச் சேதி! இயற்கையின் விபரீதங்கள் இவ்வாறிருக்கையில், செயற்கை கர்ப்பத்தடை முறைகளினால் எவ்வளவு தூரம் பலனேற்படும் என்பது சிந்தனைக்குரிய விஷயமன்றோ?

குடியிருப்பு வசதிக் குறைபாடே பிரஜா உற்பத்திப் பெருக்குக்கு ஒரு காரணம் என்று மத்யதர வகுப்புக் குமாஸ்தா ஒருவர் அங்கலாய்த்தார். "அது எப்படி ஐயா?" என்று கேட்டேன். "நான் இருக்கும் ஒட்டுக் குடித்தனத்தில் ஒரே ஒரு அறைதான் எங்களுக்கு உண்டு. சமைப்பதும், உண்பதும், உறங்குவதுமெல்லாம் அந்த ஒரு அறையில்தான். இந்நிலையில் என்ன செய்வது? புருஷனும் மனைவியும் தனித்தனியாகப் படுத்துறங்க வசதியிருந்தால்தானே குடும்பத்தின் எண்ணிக்கை விருத்தி பெறாமல் தடுக்க முயற்சியாவது பண்ணலாம்" என்றார் அவர். நியாயம்தானே?

குறைந்த வருமானமுள்ளவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதாகப் பல திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. ஆனால், உண்மையில் நிறைய வருமானமுள்ளவர்கள்தான் அவ்வீடுகளைப் பெற முடிகிறது. நிறைய வருமானமுள்ளவர்களுக்குக் குழந்தைச் செல்வம் குறைச்சலாய் இருப்பதும், குறைந்த வருமானமுள்ளவர்கள் குசேலர்களாய் இருப்பதும் அதிசயமல்ல. வீடுகள் இல்லாமலேயே, ரயில்வாகன்களிலேயே ரயில்வேச் சிப்பந்திகள் பலர் இல்லறம் நடத்துவதாகப் பார்லிமெண்டில் அறிவிக்கப்பட்டது. "ஓடும் ரயிலில் பிரசவம்" அடிக்கடி ஏற்படும்போது, ஓடாத வாகன்களில் பிரஜா உற்பத்தி நடைபெற்றால், ஆச்சரியம் என்ன இருக்கிறது! இம்மாதிரி ரயில்வே வாகன்களிலும் நடைபாதைகளிலும் பிரஜா உற்பத்திப் பெருக்கு ஏற்படுவதைத் தவிர்ப்பது அரசாங்கத்தின் கடமையல்லவா? வறுமையைப் போக்கி, வாழ்க்கை வசதிகளைச் செய்து கொடுத்தால், பிரஜா உற்பத்திக் கட்டுப்பாடு திட்டங்களுக்கு அவசியம் ஏது? பாமர மக்களுக்கு அத்யாவசியமான தேவைகளைக் கவனியாமல், கடற்கரையில் உல்லாசமாகத் தம்பதிகள் இரவைக் கழிக்க ஜக்ஜ் ஜோதியான மின்சார விளக்குகளைப் போடுவதிலும், சுரங்கப் பாதைகளை அமைப்பதிலும் பணத்தை விரயம் செய்வானேன்? உல்லாச வாழ்க்கைக்கான வசதிகளை அதிகரித்துக்கொண்டே போனால், வீட்டில் ஜனப்பெருக்கம் ஏற்படாவிடினும், நாட்டில் ஜனப்பெருக்கம் ஏற்பட்டுவிடுமே! அனாதைக் குழந்தைகள் விடுதிகளில் நெரிசல் அதிகரிப்பதாகவும் கேள்வி!

—வம்பன்.

★



சுப்புலக்ஷ்மி — கிருஷ்ணமூர்த்தி

சென்னை அரசாங்க மொழி பெயர்ப்பாளர் காரியாலய சூப்பரின்டெண்டு ஸ்ரீ எஸ். சுப்ரமணியத்தின் புதல்வி செளா. சுப்புலக்ஷ்மிக்கும் மதுரை மில்லைச் சார்ந்த ஸ்ரீ என். கணபதி ஐயரின் சகோதரர் சிர. என் கிருஷ்ணமூர்த்திக்கும் சமீபத்தில் மதுரை திருநகரில் சிறப்பாக விவாகம் நடைபெற்றது.

★

காலச் சக்கரம்

"உஹூம் கூடாது, அவனுக்குக் கொடுக்கக் கூடாது"
உபரி அமெரிக்க விவசாயப் பொருள்கள்
பாகிஸ்தான்
ஈ தொல்லை!
பிரிட்டன் திட்டமிட்டுள்ள பொருளாதாரத் தடை
நாஸர்
சீச்சீ! உன் மதிப்பென்ன, படிப்பென்ன! இந்த வேலையெல்லாம் உனக்குத் தகாதப்பா!
பட்டதாரி
குமாஸ்தா வேலைக்கு மனுக்கள் இங்கே கொடுக்கவும்
குமாஸ்தா வேலைகளுக்குப் பட்டதாரிகள் முனைவதை ஆதரிக்கக் கூடாது
வேலை இல்லை!
பட்டதாரி
நிர்வாகத்துறை வேலைகளுக்கு இங்கே மனு செய்யவும்



உல்லாஸ வேளை

★

பெந்தம்மாளை நீங்கள் அறிவீர்களா? அறிந்திருந்தால் பாக்கியசாலிகள் என்றேதான் கூறுவேன். இது என்ன இது, பேரே விசித்திரமாக இருக்கிறதே என்கிறீர்களா? அப்படி நீங்கள் நினைக்கப் போகிறீர்களே என்பதற்காக, எஸ். வி. வி. யே பெந்தம்மாளை அறிமுகம் செய்துவைக்கும் போது, சொல்லவேண்டியதையெல்லாம் சொல்லிவிடுகிறார்.

"வாசுதேவையர் சம்சாரத்தின் பெயர் பெந்தம்மாள். பெந்து என்று அவர் கூப்பாடுகிறது வழக்கம். முழுப்பெயர் பெருந்தேவி. அது எப்படி எப்படியோ சிதைந்து பெந்து என்று வந்து நின்றது. ஒரு ஜட்ஜின் சம்சாரத்தின் பெயர் பெந்து என்றிருந்தால் சிரிப்பு வரவில்லையா? முன் காலத்துப் பேர்வழி. ஒரு பள்ளிக்கூடம் போனவளல்ல. இன்றைக்கும் ஒரு அக்ஷரம் தெரியாது. முன்காலத்தில் நாட்டுப்புறத்தில், 'ரெயிலை மாடு கட்டி இழுக்கிறதா, குதிரை கட்டியிழுக்கிறதா?' என்று சண்டை போடுவார்கள் என்று கேட்டிருக்கிறோமே, அந்த ரகத்தில் அந்த அம்மாளைச் சேர்க்கலாம். வாசுதேவையருக்கு தம் சம்சாரம் அப்படியிருப்பதில்தான் திருப்தி."

வாசுதேவையரையும், பெந்தம்மாளையும் அவர்களுடைய பெண்கள், பிள்ளை, மற்றுமுள்ள உறவினர்கள், நண்பர்கள் எல்லோரையும் சிருஷ்டித்து நம்மிடை நடமாடவிட்ட எஸ். வி. வி. அவர்களுக்குத் தமிழர்கள் என்றும் கடமைப்பட்டவர்கள் என்றுதான் சொல்லவேண்டும். நாம் தினசரி பழகி, விருப்பும் வெறுப்பும் கொள்கிற மனிதர்களை அறிகிற அளவுக்கு அவர்களையும் நாம் அறிந்துகொள்ள எஸ். வி. வி.யின் மேதை நமக்கு உதவுகிறது. எவ்வளவு நுட்பமாக எல்லாவற்றையும் கவனித்து, சுலபமாக மனத்தில் பதியும்படியாக விஷயங்களைச் சொல்லியிருக்கிறார், எஸ். வி. வி.! ஹாஸ்யமாக எழுதியதால்தான் அவருக்குப் பெருமை என்று சொல்லமுடியாது. உண்மைக்கும் கலைக்கும் விரோதமில்லாமல், முரண்பாடில்லாமல், அந்த ஹாஸ்யத்தைக் கையாள முடிந்தது என்பதுதான் எஸ். வி. வி.யின் தனிச்சிறப்பு.

'உல்லாஸ வேளை' என்கிற நூலை நாவல் என்று சொல்வதா? கதைத் தொகுப்பு என்று சொல்வதா? வெறும் கட்டுரைகள் என்று சொல்வதா? மூன்றுமே சொல்லலாம். இலக்கியத்தில் அது எந்த வகுப்பில் சேரும் என்பதுபற்றி எஸ். வி. வி.க்கு ஒரு போதும், தன் எந்த எழுத்திலுமே கவலையிருந்ததில்லை. கலை என்கிற ஞாபகமே அற்ற ஒரு கலைஞர் அவர். இலக்கிய நண்பர்கள் கூட்டமொன்றில் அவர் 'தான் எழுதுகிறது எப்படி?' என்பதைப்பற்றி விவரித்துச் சொன்னார்: "பேனாவை எடுக்கும்போது எனக்கு என்ன எழுதப்போகிறேன் என்றே தெரியாது. கதைத் திட்டமோ, கதாநாயகன், நாயகியின்பெயரோ என்மனத்திலிராது. சட்டென்று ஏதாவது ஒரு பெயர் வரும். அவன் ஸ்டேஷனுக்குப் போவான். ஸ்டேஷனுக்குப்போய் என்ன செய்வான்? டிக்கெட் வாங்குவான். எந்த ஊருக்கு? ஏதாவது ஒரு ஊருக்கு. தனக்கா..? தனக்காகவும் இருக்கலாம், வேறு யாருக்காகவும் இருக்கலாம். அது ரெயில் கிளம்பும்போது தெரிந்திருந்தால் போதுமே! கதாநாயகி அநேகமாக அவன் அறிந்தவளாகவே இருப்பாள். ஆனால், அவளைக் கதாநாயகியாக அதுவரை அறிந்திருக்கமாட்டான் அவன். நான் மனசுவைத்தால் தான் அறிந்து கொள்ளமுடியும்..."

எஸ். வி. வி.யை மற்ற எழுத்தாளர்களிடமிருந்து பிரித்துவைத்தன அவருடைய கண்களும் காதுகளும் என்று சொன்னால் அது மிகையல்ல. காண்பது பூராவையும் கண்ணில் வாங்கவும்; கேட்பது பூராவையும், கொச்சைமொழி அந்தரார்த்தங்கள் உள்படக் காதில் வாங்கவும் அவருக்கு ஒரு சக்தியிருந்தது. தான் பார்த்ததையும் கேட்டதையும் அப்படி அப்படியே அழகுபெறச் சிருஷ்டித்துத் தந்திருக்கிறார் எஸ். வி. வி. நாம் நேரில் அறிந்து கொண்டவர்களையே பல சமயங்களில் எஸ். வி. வி.யின் எழுத்துக்களிலும் அறிந்து கொள்கிறோம். ஒரு திடமான பழங்கால அறிவுடனும், அனுபவ முதிர்ச்சியுடனும் இன்றைய வாழ்க்கையின் விசேஷங்களை, முக்கியமல்லாவிட்டாலும் அனுபவிக்கக்கூடிய அதிசயங்களை, எடுத்துச் சொன்னவர் எஸ். வி. வி. இதைத் தினசரி பேச்சுத் தமிழில் சொன்னார் என்பதும், இயற்கையாகவுள்ள ஒரு ஹாஸ்யத்துடனும் சொன்னார் என்பதும் ஒரு விசேஷம்தான்.

எஸ். வி. வி.

நேற்று—இன்று என்கிற இரண்டு தத்துவங்களுக்கிடையே இவ்வுலகில் என்றுமே போராட்டம் நடந்துகொண்டு தான் வருகிறது. மனோதத்துவ நிபுணர்கள், தகப்பன் பிள்ளை, தாய் மகன் என்கிற உறவுகள் சிநேக உறவுகள் அல்ல, அன்பு உறவுகள் அல்ல, வெறுப்பு உறவுகளே என்று நிரூபிக்க இந்தக் காலத்தில் வெகுவாக முயன்று ஓரளவு வெற்றியும் பெற்றுவிட்டார்கள். மனோதத்துவம் என்கிற கானல் நீரிலே எஸ். வி. வி.க்கு அவ்வளவாக நம்பிக்கைகிடையாது. அவர் கொண்டுள்ள முடிவுகளும், வற்புறுத்துகிற தன்மைகளும் வாழ்க்கையை நேரில் பார்வை பார்த்து அவர் அறிந்து கொண்டவை. ஆனால் நேற்று—இன்று என்கிற தத்துவத்தின் போராட்டத்தை அவரைப்போல தம் தலைமுறைக்கு விவரித்துள்ளவர்கள் வேறு யாருமில்லை என்றுதான் சொல்லவேண்டும். போராட்டம் என்றோ, தத்துவம் என்றோ, இது பெரிய விஷயம் என்றோ சொல்லாமல் (உணராமல் என்றுகூடச் சொல்லலாம்) லேசாகச் சொல்லிவிட்டு நகர்ந்துவிடுகிறார்.

பெந்தம்மாளை அறிமுகம் செய்துவைத்த கட்டத்திலேயே தொடர்ந்துவருகிறது இச்சம்பவம்.

"தாயின் பேரில் குழந்தைகளுக்குப் பிராணன். அவளை எப்பொழுதும் வேடிக்கையாகப் பரிகாசம் செய்து கொண்டிருப்பார்கள். "அம்மா, பெண் பாடசாலைப் பரிசளிப்பு விழா ஞாயிற்றுக்கிழமை நடக்கப்போகிறது. அப்பா அக்கிராசனம் வகிக்கப் போகிறார். நீ பரிசு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அப்பா அதற்கு ஒப்புக்கொண்டிருக்கிறார்" என்பாள் ஒரு பெண்.

"பரிசளிக்கிறதென்றால் நமக்கு என்ன செலவு பிடிக்கும்?"

"நமக்கு ஒரு செலவும் இல்லை, அம்மா, பள்ளிக்கூடத்தில் புஸ்தகங்கள் வாங்கி வைத்திருப்பார்கள், நீ ஒரு பிரசங்கம் செய்துவிட்டுப் புஸ்தகங்களை அவர்கள் சொல்லுகிறபடி பெண்களுக்கு எடுத்துக் கொடுக்கவேண்டும். உனக்கு மாலை போடுவார்கள்..."

"நான் பிரசங்கம் பண்ணுகிறதா? எனக்கு என்ன தெரியும்? புருஷர்களெல்லாம் வந்திருக்க மாட்டார்களா? அவர்கள் எதிரிலேயா நான் நிற்கிறது?"

"அதற்கு என்ன பண்ணுகிறது? சர்க்காரில் அந்த மாதிரி உத்தரவு போட்டிருக்கிறார்களே; ஜட்ஜ் அக்கிராசனம் வகித்தால் அவர் சம்சாரம் பரிசளிக்க வேண்டுமென்று."

"ஏன், அப்படியா உத்தரவு போட்டிருக்கிறார்கள்? பசங்கள் பரிகாசமாகச் சொல்லுகிறதுகளோ?" என்று புருஷனைக் கேட்பாள்.

"வாசுதேவையர், 'ஐயோ இப்படியும் ஒரு வெகுளி இருக்குமா?' என்கிற மாதிரி அவளைப் பார்த்துச் சிரிப்பார்.

"ஐயோ! நான் கேட்கிறேன், சும்மா இருக்கிறார்களே? அப்படியா உத்தரவு போட்டிருக்கிறார்கள்?"

"பசங்கள்தான் சொல்லுகிறார்கள்; நீ கேட்டுக்கொண்டிருக்கிறாயே!"

விடாது, "அம்மா, ஞாயிற்றுக்கிழமை நீ பிரசங்கம் பண்ணித்தான் ஆக வேணும். அம்மா பிரசங்கத்தைக் கேட்க எல்லோரும் போக வேணும்டா" என்று எல்லாக் குழந்தைகளும் சிரித்துக் கோஷம் செய்தார்கள்.

"மணி பத்தாச்சு. எல்லாம் படுக்கப் போங்கள்", என்று சொல்லிவிட்டு வாசுதேவையரும் கிளம்பினார்.

"அவர் சம்சாரம்! வாஸ்தவமாகவா? அப்படியா உத்தரவு போட்டிருக்கிறார்கள்?" என்று கேட்டுக்கொண்டே பின் சென்றாள்.

"பிரசங்கம்தான் பண்ணேன் என்றார் வாசுதேவையர்."

" 'நன்றாயிருக்கிறது, வெட்கக்கேடு! நிஜத்தைச் சொல்லுங்கள் என்கிறேனே!"

"பசங்கள் பரிகாசம் பண்ணித்துகள். போய் விசாரமில்லாமல் படுத்துத் தூங்கு" என்று சொல்லிவிட்டு அவர் படுக்கப் போனார்.

இந்தப் பரிகாசப் பேச்சு, வெறும் பேச்சாக நின்றுவிடவில்லை. பத்தாவது அத்தியாயத்திலேயே பெந்தம்மாள் லேடீஸ் கிளப்பில் பிரசங்கம் செய்துவிடுகிறாள்.

"ஸௌம்யா குறுக்கிட்டுச் சொன்னாள்: 'என்ன பேச்சுப் பேசியிருக்கிறாள் என்கிறார்கள்?'

" 'ஆச்சரியம் என்னடி? அவள்தான் உபந்நியாசம் பண்ணுவாள் என்று முன்னமே சொன்னேனே! படித்திருக்கவில்லையே என்று பார்க்கிறாயா? படித்தவர்கள் தாம் ரொம்ப விசேஷமாய்ப் பேச வேணுமென்று நினைத்துக்கொண்டு அசடு மாதிரி உளறிக் கொட்டுவார்கள். படிக்காதவர்களுக்கு இயற்கை அறிவு இருக்கிறது. மனசில் பட்டதைச் சொல்வார்கள். அது சரியாகவே இருக்கும். இந்தக் காலத்துப் படிப்புப் படித்துவிட்டால் தான் கோணல் புத்தியும் விபரீத யுத்திகளும் ஏற்பட்டு விடுகின்றனவே!"

இலக்கண சுத்தங்களில் எஸ். வி. வி.க்கு அவ்வளவாக ஈடுபாடோ நம்பிக்கையோ இல்லை என்பது வெளிப்படை. 'வசனத்துக்குத் தெளிவும் நேர்மையுமே அவசியம்; இலக்கண சுத்தங்களைத் தேடிப் போகிற பண்டிதர்கள் அநேகமாகத் தெளிவையும் நேர்மையையும் இழந்துவிடுகிறார்கள்' என்று சொல்வது போலவே இந்தப் பேச்சில் விவரித்திருக்கிறார் வாசுதேவையர் வாயிலாக என்று எனக்குத் தோன்றுகிறது.

பெந்தம்மாள் லேடீஸ் கிளப்பில் என்ன பிரசங்கம்தான் செய்தாள் என்று கொஞ்சம் பார்க்கலாம். ஸௌம்யா அப்படியே எழுதிக் கொண்டுவந்து வாசுதேவையரிடம் வாசித்துக் காட்டினாள். பெந்தம்மாள் சொன்னாள்: "என்ன படிப்போ அம்மா. படிச்ச பெண்களைப் பார்த்தால் படிப்பே இல்லாமல் இருந்தால் நன்றாயிருக்கும்போலிருக்கிறது...நல்ல ஆசாரங்களை எல்லாம் விட்டுவிடுவதற்கா படிப்பு?... படித்த பெண்களெல்லாம் கல்

யாணம் செய்துகொள்ள மாட்டேன் என்கிறது. கல்யாணம் பண்ணிக் கொள்ளாததற்குப் பெண்ணாக ஏன் பிறந்தாள்? கல்யாணம் பண்ணிக்கொண்டால், அவர்கள் சுதந்திரம் போய்விடுமாம்!... அகமுடையான் விரட்டினால் சுதந்திரம் போய்விட்டதாம்: ஆபீஸில் எஜமான் விரட்டினால், அது சுதந்திரமாம்.... தெய்வமென்றும் தேவதையென்றும் ஒரு பக்தி, நம்ம ஆசார அனுஷ்டானங்கள், அப்பியாசங்கள் இவைகளையெல்லாம் வளர்க்கிறதாயிருந்தால், படிப்பு பிரயோஜனந்தான்..." என்று பிரசங்கம் செய்தாள். பெந்தம்மாள் சுகாதாரத்தைப் பற்றியும் பிரசங்கம் செய்தாள்.

பஸ்ஸில் கண்டக்டர் எச்சில்படுத்தி டிக்கட்டுகளைக் கிழித்துக் கொடுத்தான். பெந்தம்மாள், காசுதான் கொடுத்தாகிவிட்டதே, டிக்கட் வேண்டாம், என்றாள். "ஏண்டா அப்பா, மூன்றணாவையும் கொடுத்துவிட்டு, உன் எச்சிலை நான் சுமக்க வேணுமா? ஐயோ ராமா! உத்தமமான சாஸ்திரி குலத்தில் பிறந்து, ஜட்ஜுக்கு வாழ்க்கைப்பட்டு, மூன்றணாவையும் கொடுத்துவிட்டு, உன் எச்சிலையா அப்பா என்னைச் சுமக்கச் சொல்லுகிறாய்? என் தமையனார் சாஸ்திரி; நாலு வேதம் ஆறு சாஸ்திரங்கள் படித்தவர். என் தகப்பனார் மூன்று யாகங்கள் பண்ணினவர். என் புருஷர் ஜட்ஜ் வேலை பார்க்கிறவர்... நாராயணா! நாராயணா! எத்தனை பஞ்சகவ்யம் சாப்பிட்டால் இந்தப் பாவம் போகுமோ?" என்று ஆரம்பித்து, பஸ்ஸையே ஒரு கலக்குக் கலக்கிவிட்டாள். பஸ் கண்டக்டரை பஸ்ஸிலிருந்தவர்கள் அடிக்கவே போய்விட்டார்கள்.

எஸ்.வி. வி. ஒரு கலைஞர். அவர் எந்த விஷயத்தை எடுத்துக் கையாளலாம், எந்த விஷயத்தைக் கைவிட்டு விட வேண்டுமென்று யாரும் சட்டம் விதிக்க முடியாது. எதுவும், எவ்வளவு சிறிய விஷயமுமே, அவர் நோக்குக்கு உட்பட்டதுதான்—கலைக்குஅஸ்திவாரம்தான். ஏராளமாக எல்லோரும் லுங்கிப் புடவை மோகத்தில் மயங்கி அணிகிறார்கள்; ஒருவன் லுங்கிப் புடவை சாக்ஷியத்தை நம்பி, வேறு ஒருவன் பெண்டாட்டியைத் தன் பெண்டாட்டியென்று எண்ணித் தொட்டு, 'அடியே' என்று கூப்பிடுகிறான், ரகளைதான். ஐரோப்பாவிலே யுத்தம் நடப்பது பற்றிப் பெந்தம்மாள் என்ன நினைக்கிறாள் என்று பெரியவர்கள் என்று சொல்லப்படுபவர்கள் யாரும் கவலைப்படமாட்டார்கள். ஆனால், நாம் அறிந்து ஆனந்திக்கிறோம். பெந்தம்மாளின் பால்யத் தோழி பார்வதியை நாம் சந்திக்கிறோம்—அவளை நாம் மறக்கவே முடியாது. "வந்தாளே, இந்தப் பிள்ளை யார்,இந்தப் பெண் யார் என்று ஒரு கேள்வி கேட்கமாட்டாளோ?" என்றாள் பெந்தம்மாள். "அவளுக்குத்தான் அ வ ள் பெருமையைச் சொல்லிக்கொள்ளவே பொழுது போதவில்லையே" என்றாள் ரங்கு. 'உல்லாச வேளை'யில் நாம் அறிந்துகொள்கிறவர்கள் எல்லோரும் நம்மைவிட்டு அகலாத தோழர்கள். முகத்தைச் சுளிக்காமல் நாம் எங்கு சென்றாலும் நம்முடன் கூட வருவார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

முப்பது வருஷங்களுக்குமுன் நான் கோவையில் இண்டர்மீடியேட் வகுப்பில் படித்துக் கொண்டிருக்கும்போது எஸ். வி. வி. என்கிற மூன்று எழுத்துக்கள் கொண்ட பெயருடன் ஒருவர் தன் முதற் கட்டுரையை ஹிந்துப் பத்திரிகையில் வெளியிட்டார். ஆங்கிலத்தில்தான் எழுதினார் என்றாலும், அது முழுக்க முழுக்கத் தமிழ்க் கட்டுரைதான் என்றே சொல்லலாம். தமிழன் ஆங்கிலம் எழுதினால் இப்படித்தான் எழுதவேண்டும் என்று ஆங்கிலத்தில் ஆசைகொண்டிருந்த எனக்குத் தோன்றியது. எஸ். வி. வி. ஒரு ஏழெட்டு வருஷங்களுக்குப் பிறகு தமிழில் எழுதத் தொடங்கினார். அதனால் இன்றைய தமிழ் இலக்கியம் பிரமாதமான வளம் பெறவே செய்திருக்கிறது.

பூணூல் விஜயம்

உமா தேவி

அன்று காலை முதல் என்வீடு அமர்க்களப்பட்டுக் கொண்டிருந்தது. சாதாரணமாக, நம் வீட்டு விசேஷத்தைவிட, பிறர் வீடுகளில் ஏதாவது விசேஷம் நடந்து, நாம் போகும்போதுதான், நம் வீட்டு அமர்க்களத்தைப் பார்க்கப் பதினாயிரம் கண்கள் இருந்தாலும் போதாது. அன்று என் நண்பன் சுந்தரேசனின் பிள்ளைக்குத் திருநீர்மலையில் பூணூல் போடுவதாகவும், நாங்கள் கட்டாயம் வரவேண்டுமென்றும் கூப்பிட்டிருந்தான். நானும், சுந்தரமும் ஒண்ணாவது முதல் பி. ஏ. வரை ஒன்றாகப் படித்து, சம்சாரத்திலும் ஒரே சமயத்தில் காலெடுத்து வைத்தவர்கள். அதுவுமின்றி, என் மனைவியும், அவன் மனைவியும் ஒன்றாகப் படித்தவர்கள். கேட்பானேன் பிறகு? அதுவே, சுந்தரேசன் என் சிநேகிதனாக மட்டும் இருந்து நான் போனேனா, அன்று வீட்டில் கேட்கவே வேண்டாம் அமைதிக்கு! "ஒரு ஞாயிற்றுக்கிழமையாவது இந்த வீட்டுச் சள்ளையிலிருந்து எனக்கு விடுதலை இல்லையா?" என்று சகதர்மிணி சாகசம் செய்ய ஆரம்பித்துவிட மாட்டாளா...!

இன்று எல்லாருடைய உற்சாகமும் கரைபுரண்டு ஓடியதில் ஒன்றும் ஆச்சரியமில்லை. விடியற்காலம் நாலு மணிக்கே என் மனைவி எல்லோரையும் எழுப்பிவிட்டாள். நான் முதல் நாளே என் ஆபீஸில் தெரிந்த ஒருவரிடம் கார் கேட்டிருந்தேன்.

என் மனைவிக்கு அதிகாலையில் எழுந்து பழக்கமே இராததால், அந்தக் கோபம் முழுதுக்கும் அன்று நான் உரிமையானேன். முதல்நாள் சாயந்திரமே சொல்லி வைத்திருந்தும் வேலைக்காரி வரவில்லை.

நான் மெள்ள வென்னீர் உள் பக்கம் எட்டிப் பார்த்தேன். என் மனைவி அடுப்புடன் மன்றாடிக்கொண்டிருந்தாள். ஒரு பாடாக அடுப்புப் பிடித்து எரிந்துகொண்டிருந்ததைப் பார்த்துவிட்டு மெள்ள வெளியே வந்துவிட்டேன். ராஜம்—அதுதான் என் மனைவியின் பெயர்—மலர்ந்த முகத்துடன் வெளியே வந்தாள்.

இதற்குள் குழந்தைகளெல்லாம் ஒவ்வொருவராக எழுந்துவிட்டார்கள். குழந்தையானாலும் பெரியவர்களானாலும் சரி, கண்ணை விழித்துவிட்டால் பசி எங்கிருந்தோ வந்துவிடுகிறது! என் கைப்பெண் உஷா, "அம்மா, பாலு ஊ..." என்று ராகம் போட ஆரம்பித்துவிட்டாள். என்ன சமாதானப்படுத்தியும் கேட்கவில்லை. நான் மெள்ள அவளைத் தூக்கிக்கொண்டு வாசலில் சென்றேன். எதிர்த்த வீடு யாரோ சினிமாக்காரர்கள் வீடு. நான் மெள்ள குழந்தையுடன் வீதியை அடைந்ததும், அவர்கள் வீட்டு நாய் 'வள், வள்' என்று குலைக்க ஆரம்பித்துவிட்டது! அதைக் கேட்டுவிட்டு, அந்த வீட்டு எசமான் மாடியிலிருந்து, "டேய், யாரடா அது இந்த இருட்டுலே? பிடியுங்கடா, அவனை!" என்று சப்தம் போட்டார்!

எனக்கு அவமானமாகிவிட்டது. என் ஆத்திரத்தை எல்லாம் சேர்த்து உஷாவின் முதுகில் ஒரு அறை வைத்தேன். அவள் அந்தத் தெருவே அதிரும்படிப் போட்ட சப்தத்தில் என் மனைவி ஓடிவந்து, "போதுமே, குழந்தையைக் கொல்லாதீர்கள்!" என்று தானும் கூடக் கத்த ஆரம்பித்துவிட்டாள்!

அப்படியும் இப்படியுமாக அவளைச் சமாதானப்படுத்தினோம். [illegible] என் மனைவி, "நான் போய் முதலில் குளிக்கிறேன்" என்று புடவையுடன் ஸ்நான அறையில் நுழைந்தாள். அங்கிருந்தே, "ஐயையோ இதை வந்து பாருங்களேன்!" என்றாள்.

நான் 'என்னவோ, ஏதோ' என்று அலறிக்கொண்டு ஓடினால், அவள் சிரமப்பட்டு ஜலம் நிரப்பிய அண்டா சாய்ந்து ஜலமெல்லாம் கொட்டி அடுப்பு அணைந்துவிட்டிருந்தது! எனக்குச் சிரிப்பதா அழுவதா என்றே புரியவில்லை.

கடைசியில் பச்சை ஜலத்தில் குளித்துவிட்டு வந்தாள், என் அருமைப் பத்தினித் தெய்வம்! அவள் குளித்ததைப் பார்த்துவிட்ட உஷா, மறுபடியும் சுருதி கூட்ட ஆரம்பித்தாள், "நானும் இப்பவே குளிக்கணும், உம்..." என்று!

"உனக்கு பச்சை ஜலம் உடம்புக்கு ஆகாதடா, கண்ணு" என்றேன்.

அவளா கேட்கிறவள்? "அப்பமன்னா நீங்க கலியாணத்துக்குப் போகக் கூடாது..." என்று உரத்த குரலில் திரும்பவும் ஆரம்பித்துவிட்டாள்!

மணி ஏறிக்கொண்டே இருந்தது. நானோ பல்லை 'நற நற'வென்று கடித்தேன். அது ஒன்றுதான் என்னால் செய்யக் கூடியது!

"அம்மா..." என்று வாசலில் பால்காரன் குரல் கொடுத்தான். எனக்கு ஆச்சரியம் தாங்கவில்லை; ஏனெனில், அவன் ஒருநாளும் சொன்னபடி வந்ததே இல்லை!

"உம்... சொம்பைக் காண்பி" என்றேன்.

"இல்லிங்க, மாடு உதைச்சுடுத்துன்னு கோனாரு சொல்லச் சொன்னாருங்க..."

"கழுதை, இதைச் சொல்ல வாணுமாக்கும்? போடா, நீயும் உன் கோனாரும்!" என்று சப்தம் போட்டுவிட்டு, உள்ளே நுழைந்தேன்.

"இப்ப குழந்தைக்குப் பாலுக்கு என்ன பண்றது?" என்று என் மனைவி கத்தினாள்.

"ஏன், ஹார்லிக்ஸைக் கொடுப்பது" என்றேன் நான்.

அவள் உள்ளே போய்த் திரும்பிவந்து, "துளி ஹார்லிக்ஸ்கூட இல்லையே! நேத்து கொஞ்சம் பாக்கி வைத்திருந்தேனே!" என்றாள்.

அதற்குள் உஷா, "நான்தாம்மா நேத்திக்கு தின்னேன்" என்றாள். அவள் முதுகில் மறுபடி நாலு அடி!

இதற்குள் என் பிள்ளை அசோகுக்கும், ஸ்ரீராமுக்கும் 'யார் பாண்ட் நன்றாக இருக்கிறது?' என்று சண்டை!

இந்த அமர்க்களத்தில் டிரைவரையும் காரையும் மறந்துவிட்டிருந்தோம். எல்லோருக்கும் வயிறு காலி; அத்துடன் டிரைவரும் சீக்கிரம் வராத கோபம்!

"கலியாண வீட்டுக்குப் போனாலாவது காப்பி கிடைக்கும்" என்றாள் ராஜம். அதற்குள் அசோக், "கலியாண காப்பி வாண்டாம்மா; கீதா கபேலே சாப்பிடலாம்மா" என்றான்.

இதற்குள் வாசலில் கார் சப்தம் கேட்கவே, எல்லோரும் ஓடினோம். "சாமி..." என்று இழுத்தான் டிரைவர்.

"என்னடா?" என்றேன்.

"இல்லிங்க, எசமான் உங்ககிட்ட ஒரு பத்து ரூபா வாங்கிக்கச் சொன்னாங்க. வீட்டுலே அவசரம். அப்புறம் கொடுப்பதாகச் சொன்னாங்க"—எனக்குப் புரிந்துவிட்டது. பெட்ரோல் இல்லாமல் காரை அனுப்பியிருக்கிறான், என் அருமைச் சிநேகிதன்!

"என்னடா, பெட்ரோல் இல்லையா?" என்றேன்.

"இல்லாங்க... இருக்குதுங்க..." என்று முன்னுக்குப்பின் முரணாக இழுத்துவிட்டு, "இன்னும், அரைமணி ஓடுமுங்க" என்று விஷயத்தைச் சொல்லித் தொலைத்தான்!

எனக்கு வந்த ஆத்திரத்தில் எல்லாரையும் அறைந்துவிடலாமா என்று இருந்தது.

"ஏண்டா, இப்பொழுதுதான் மணி ஆறாகிறது. பெட்ரோல் பங்க் திறந்திருக்குமா? எங்கு போய் நடுத் தெருவில் நிற்பது?" என்றேன்.

"இல்லிங்க சாமி, அரை மணின்னு பேருக்குச் சொன்னேன். ஒரு மணிக்கு மேல ஓடுமுங்க. தைரியமா குந்துங்க வந்து" என்று அபயப்பிரதானமளித்தான் அந்த அசகாய சூரன்!

குழந்தை 'ஜில்'லுக்கு ஏழு மணிக்குத்தான் பால் கொடுக்கும் வேளையாதலால், அவன் சுகமாகத் தூங்கிக்கொண்டிருந்தான்.

'நான் முன்னாடி, நீ முன்னாடி' என்று எல்லோரும் போட்டி போட்டுக்கொண்டு காரில் ஏறினர்கள்.

நானும், ராஜமும் ஏறிக்கொண்டோம். காலை வேளையின் சுகமான காற்று வீசிக்கொண்டிருந்தது.

ராஜம் ஏறி உட்கார்ந்தவுடன் தன்னை மறந்து கண்ணை மூடிக்கொண்டாள். கார் ஒரு பர்லாங்கு சென்றிருக்கும். உஷா, "அம்மா, ஜில் எங்கேம்மா காணும்?" என்று ஒரு கேள்வியைப் போட்டாள்.

அப்போதுதான் ஏககாலத்தில் எல்லோரும் பார்த்தோம். ராஜம் திடுக்கிட்டு விழித்தாள். அவள் கோபம் முழுதும் உஷாவின் மேலேயே பாய்ந்தது! "சனியன், அபசகுனம்போல் காலையில் அழுதயோன்னோ அதுதான் குழந்தையை மறந்துவிட்டேன்..." என்று எரிந்து விழுந்தாள்.

நான் வண்டியைத் திருப்பி ஓட்டச் சொன்னேன். ராஜம் ஒரே பாய்ச்சலில் உள்ளே ஓடினாள். குழந்தை நிச்சிந்தையாய்த் தூங்கிக்கொண்டிருந்தது!

இதற்குள் பொழுது நன்றாக விடிந்துவிட்டது. குழந்தைக்குப் பசி வந்துவிட்டது. கையில் பிடிபடாமல் கதறியது. 'இதையெல்லாம் பார்த்துத்தான் பெரியவர்கள் சந்நியாசம் வாங்கிக்கொள் என்றார்களோ?' என்று தோன்றியது எனக்கு!

"சாமி, இரண்டு ட்ரிப் போனதுலே பெட்ரோல் ஆயிட்டுதுங்க" என்றான் அந்த டிரைவர் மகானுபாவன்!

"இப்போ என்ன செய்வது? பெட்ரோல் பங்க் திறக்க அரை மணியாகுமே?" என்றேன்.

சிவனே என்று வீதியில் ஒரு ஓரமாகக் காரை நிறுத்திவிட்டு உட்கார்ந்திருந்தோம். நான் குழந்தைகளுடன் கொஞ்ச தூரம் நடந்துவிட்டு வருவதாகப் போனேன். 'ஜில்' தாய்ப்பால் குடிக்கும் குழந்தையாதலால், எப்படியோ சமாதானமாகிவிட்டது.

மணி எட்டடித்ததும்தான் பெட்ரோல் பங்க் திறந்தான். 'என்ன செய்வது? கார் வைத்துக்கொண்டிருக்கிறவர்கள் அவர்கள் பெருமையை ஆபத்திலும் அவசரத்திலும்தானே காண்பிக்கவேண்டும்?' என்று எனது நண்பரை மனதாரத் திட்டிக்கொண்டே சென்றேன்.

அப்படியும் இப்படியுமாக, நாங்கள் போய்ச் சேரும்போது மணி பதினொன்றுக்குமேல் ஆகிவிட்டது. குழந்தைகளுக்கு வழியில் காப்பி வாங்கிக் கொடுத்தும், அவர்களுக்குப் பசி வந்துவிட்டது. என் நண்பன் கொடுத்த அட்ரஸை வைத்துக்கொண்டுதான் போனோம். நாங்கள் போய் நுழைந்ததும், கெட்டி மேளம் கொட்டியது. எங்கள் காரைக் கண்டதுமே, "வாருங்கள், வாருங்கள்" என்று நாலைந்து பேர் ஒரே குரலில் வரவேற்றார்கள்.

நாங்கள் உள்ளே போய் நுழைவதற்கும் பையன் பெண் கழுத்தில் தாலி கட்டுவதற்கும் சரியாக இருந்தது. ராஜம் என் மூஞ்சியைப் பார்த்தாள்; அவளை நான் பார்த்து அசடுவழியச் சிரித்தேன்! 'வீடு தவறி வந்துவிட்டோமோ?' என்ற எண்ணத்தில் அங்கிருந்த ஒருவரை விசாரித்தேன். அவர் மற்றொருவரிடம் போய் அதைச் சொன்னார். உடனே அந்தக் கலியாணப் பிள்ளையின் தகப்பனாரே எழுந்து வந்துவிட்டார்!

"நீ, நம்ப சோமு பிள்ளை ராஜா தானே?" என்றார்.

"ஆம், ஆம்" என்றேன்.

"அப்படின்னு நான் நினைச்சது சரிதான். நீ சின்னக் குழந்தையா இருக்கும்போது பார்த்தது. நான்தான் உனக்குக் கடிதாசு போட்டேன். உறவெல்லாம் எப்ப தெரிஞ்சுக்கறது? நன்றாக இருக்கு, தயக்கம்! உள்ளே போ!... யாருடா அங்கே? நம்ப சோமு பிள்ளை ராஜா வந்திருக்கான். உள்ளே அழைச்சிண்டு போ" என்றார்.

எனக்கும் என் மனைவிக்கும் ஒன்றுமே புரியவில்லை. அவரோ என் பெயரெல்லாம் சொல்லுகிறார், எனக்கோ அவர் யாரென்றே தெரியவில்லை!

நான் மென்று, முழுங்கி, "நான்... வந்து...இங்கே என் சிநேகிதன்..." என்று ஆரம்பிப்பதற்குள் அவர் குறுக்கிட்டு, "சிநேகிதரெல்லாம் அப்புறம் பார்த்துக்கலாம். முதல்லே சாப்பிட வா... நன்றாயிருக்கு, உறவுகாரரெல்லாம் இப்படியா, முகூர்த்தம் முடிந்துதானா வருவா?" என்று கோபித்துக்கொண்டார்.

என் மனைவி திருதிருவென்று விழித்துக்கொண்டிருந்தாள். மெள்ள நான் அவளைத் தனியே கூப்பிட்டு, "இது என்ன கஷ்டம்! இது யாருன்னே தெரியலே; அவரோ உறவு முறை தெரிந்தவர்மாதிரி பேசுகிறார்! சுந்தரேசன் பிள்ளை பூணூலுக்கும் போகாமல், இதென்ன வம்பு!" என்று என் ஆற்றாமையை அருமை மனைவியிடம் தெரிவித்துக்கொண்டேன்.

அவள், "பின் வீட்டு நம்பர் சரியாகத்தானே இருக்கு! ஒண்ணும் புரியலையே!" என்றாள்.

நான் மெள்ள நழுவிக் கூட்டத்துடன் வாசல் பக்கம் சென்று, காரில் ஏறிக்கொண்டு, டிரைவரிடம் "வண்டியை விடு!" என்றேன்.

அவன், "எங்கே சாமி விடுவது?" என்றான்.

"இங்கு இன்னும் எவ்வளவு வீட்டில் இன்று கலியாணம் என்று விசாரி" என்றேன்.

அவன் ஒன்றும் புரியாமல், எந்த வீட்டிலாவது வாழை மரம் கட்டியிருக்கிறதா என்று பார்த்துக்கொண்டே வண்டியை விட்டான். ஓரிருவரை விசாரித்ததில், அன்று வேறு கலியாணமே இல்லை என்று தெரிந்தது!

நான் வேறு விதியில்லாமல் திரும்பவும் வந்தேன். அதற்குள் வீட்டுக்காரர்

மதன் மஞ்சரி

மாத்திரைகள்

58 வருஷப் பிரசித்தியுடையது நரம்புத் தளர்ச்சி, மலச் சிக்கலைப் போக்கி ரத்த விருத்தியும் தேக புஷ்டியும் தரும் ஞாபகசக்தி உண்டாகி சந்தோஷ வாழ்க்கை பெறுவீர் 40 மாத்திரைகள் கொண்ட டப்பி ஒன்றின் விலை ரூ 1—4—0.

மதன் மஞ்சரி பார்மஸி

ராம்வாடி, கல்பாதேவிரோட், பம்பாய்-2

ஏஜண்டுகள்:—சேலம்: மாடர்ன் ஆயுர்வேதிக் ஸ்டோர்ஸ்; பெங்களூர்: சிடி மெடிகல் ஸ்டோர்ஸ், சிக்பேட். மற்றஇடங்களுக்கு ஏஜண்டுகளதேவை

பிடித்துக்கொண்டுவிட்டார். "எங்கு போயிருந்தாய்? இலை போட்டாய்விட்டது" என்றார்.

எனக்கோ அவமானம் தாங்க முடியவில்லை. யார் வீட்டுக் கலியாணத்துக்கோ வந்து, யார் வீட்டிலோ சாப்பாடு!

"இல்லை. நான் வந்து இங்கு..." என்று மறுபடியும் ஆரம்பிப்பதற்குள் அவர், "நன்றாக இருக்கு, நீ சங்கோசப்படுவது! எத்தனை வருஷமா உங்கப்பாவோடு எனக்குப் பழக்கம்! நீ என்னைப் பார்த்ததில்லை; அதனாலே உறவு விட்டுவிடுமா என்ன?" என்று சொல்லிக் கையைப் பிடித்து இழுத்துப் போனார். எனக்கோ சாதம் உள்ளேயே இறங்கவில்லை. அவரோ என்னைப் பேசவிடாமல், மேலும்மேலும் தானே பேசிக் கொண்டு போனார்.

என் மனைவியும் குழந்தைகளும் சாப்பிட்டுவிட்டுக் கிளம்பத் தயாராயிருந்தார்கள். என் மனைவிக்கோ என்னைப் பார்த்து, அவர்கள் எனக்கு என்ன உறவு என்று கேட்க வேண்டுமென்ற ஆவல். அது அவள் முகத்திலேயே தெரிந்தது!

எப்படியோ கார் நின்ற இடத்துக்கு வந்துவிட்டோம். எல்லோரும் அவ்வளவு சீக்கிரம் திரும்பிவிடுவதைப்பற்றிக் குறை கூறினார்கள். வீட்டுக்கார அம்மாளும், அவரும் காரண்டை வந்து வழியனுப்பினார்கள். எனக்கோ வந்தது முதல் ஒரே ஆச்சரிய உணர்ச்சியால் வாயே எழும்பவில்லை. பெரியவர் மெள்ளத் தயங்கிக்கொண்டே, "ராஜா, நீ ஒண்ணும் நினைச்சுக்க மாட்டேன்னு சொல்றேன். ஏன்னா, சோமுவும் நானும் உயிர் சிநேகிதர்கள். நீ கலியாணத்துக்கு வருவேன்னு நினைச்சேன். நீ இப்போ டெல்லியிலேதானே இருக்கே?" என்று நா தழுதழுக்கக் கேட்டார்.

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. நான் டெல்லியையே பார்த்ததில்லை!

ஒன்றும் விளங்காமல் தடுமாற்றத்துடன், "இல்லையே..." என்று ஏதோ உளறினேன்.

"ஓஹோ, இங்கே மாற்றிவிட்டார்களா?" என்று அதற்குள்ளாக அவராகவே மாற்றல் உத்தரவு போட்டுவிட்டார்!

"இல்லை, நீ டெல்லியிலே பெரிய வேலையிலே இருப்பதாகச் சொன்னார்கள். நம்ப மணிக்கு—அதுதான் என் பிள்ளை சின்னவன், நீ பாத்திருக்க மாட்டாய்—வேலைக்காக ரொம்ப அலையறான்... அவனை எங்கேயாவது இழுத்துவிட்டியானா தேவலை..." என்று கூடவே ஒரு இளிப்பு இளித்தார்!

எனக்கு எல்லாம் புரிந்துவிட்டது. அவர் யாரையோ, என் பேர் உள்ளவரை ஆவலாக எதிர்பார்த்துக் காத்திருந்திருக்கிறார்! நானும், என் தகப்பனார் பெயர், என் பெயர் எல்லாம் அவர் சொன்னதற்கு ஒத்திருக்கவே, யதார்த்தமாக எடுத்துக் கொண்டுவிட்டேன். மேலும் குட்டை குழப்ப இஷ்டமில்லாததால், ரொம்ப மரியாதையாக அவரிடம், "அதற்கென்ன, பார்க்கிறேன்" என்று ஒரு போடு போட்டுவிட்டு விடை பெற்றுக்கொண்டு, டிரைவரை "சீக்கிரம் விடப்பா" என்றேன்.

போகும் வழியில் என் பிள்ளை அசோக், "அவாத்து பாயசம் ரொம்ப நன்றாயிருந்துதப்பா" என்று சொல்லி நாக்கை 'சூள்' கொட்டினான். 'கொல்'லென்று சிரித்துவிட்டோம். ராஜம் ஜாடை காட்டினாள், டிரைவருக்குத் தெரிய வேண்டாமென்று! நாளைக்கு ஆபீஸ் முழுவதும் நொடியில் பரவிவிடும் எங்கள் ஓசிக் கல்யாண வைபவம்!

வீட்டுக்குள் நுழைந்ததும் ராஜம், "அவர் யாருன்னா? உங்களுக்கு உறவா? கடிதமே போடல்லையே?" என்றாள்.

எனக்கோ சிரிப்பை அடக்கவே முடியவில்லை. "இன்னிக்கு ஓசிச் சாப்பாடு கிடைக்கணும்னு இருக்கு. இல்லாட்டா திருநீர்மலைக்குப் போய்விட்டு பட்டினியாக வந்திருப்பேன்" என்றேன்.

"நன்னாருக்கு நீங்கள் அடிச்ச கூத்து" என்று செல்லமாகக் கடிந்தாள் ராஜம்.

"அந்த மனுஷ்யன் என்னைப் பேசவிட்டால்தானே, 'நான் உங்காத்துக் கலியாணத்துக்கு வரவில்லை' என்று சொல்லலாம். அதுவுமின்றி, அவர் என் பெயரையெல்லாம் சொன்னதும் நானும், 'சரி நமக்குத் தெரியாத ஏதோ உறவுபோலிருக்கிறது' என்று சாப்பிட்டு வைத்தேன். பிறகு காரில் ஏறும்போதுதான், விஷயம் வெட்ட வெளிச்சமாச்சு! நீயே சொல்லு, இவ்வளவும் ஆன பிறகு 'நான் அவன் இல்லை' என்றால், அவருக்கும் அவமானமாக இருக்கும்; எனக்கும் அவமானமாகப் போயிருக்கும் இல்லையா...? அதனால்தான் மத்தபடி வாயைத் திறக்காமல் வந்துட்டேன்..." என்று சகதர்மிணியிடம் சாங்கோபாங்கமாக விமர்சனம் செய்தேன்!

ராஜம் அடக்க முடியாமல் சிரித்தாள். "நாளைக்கு அந்த டெல்லி மனிதர் அவருக்குக் கடிதம் போட்டால்..." என்று ஒரு பிரச்னையைக் கிளப்பினாள்!

"போடட்டுமே! அவருக்கு என் வீடோ, அட்ரஸோ தெரியாது. யாரோ வந்து சாப்பிட்டார்கள் என்று சொல்லட்டுமே?" என்றேன் நான்.

இந்த அமர்க்களத்தில் சுந்தரேசன் வீட்டுப் பூணூலை மறந்தேவிட்டேன்! ராஜத்துக்கும் அப்போதுதான் நினைவு வந்தது. "நன்றாயிருக்கு, உங்க சிநேகிதர் காரியம்! பூணூலுக்கு வரச் சொல்லிவிட்டு, கடைசியில் அங்கு போனால், ஒண்ணையும் காணோம்!" என்று இரைந்து கொண்டிருந்தாள்.

எனக்குக் காலங்கடந்து ஞானோதயமாயிற்று. திடீரென்று தேள் கொட்டியதுபோல் ஒரு உணர்ச்சி உண்டாயிற்று. என் பிள்ளை அசோகைக் கூப்பிட்டு, "ஏண்டா, சுந்தரேச மாமாவாத்துப் பூணல் எத்தனாந் தேதி என்று காலண்டரில் எழுதினே?" என்று கேட்டேன்.

"அதுதான் இருபத்தெட்டாம் தேதின்னு எழுதினேன் அப்பா" என்றான், திருக்குமாரன்.

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. தப்பு முழுவதும் என்னுடையது. அன்று கலியாணக் கடிதத்தை உஷா கிழித்துவிட்டாள். நான் அவசரத்தில் அசோகிடம், "அந்தத் தேதியைக் குறித்து வைடா" என்றேன். அவன் ஒரு நாள் அதிகமாகக் குறித்துவிட்டான்! நானும் தேதியை மறந்துவிட்டேன். காலண்டரில் அவன் குறித்து வைத்திருப்பதே சரியென்று எண்ணிக்கொண்டு என் பூணூல் விஜயத்தைத் தொடங்கிவிட்டேன்! இதற்குச் சிரிப்பதா, அழுவதா? என் மனைவி ராஜத்துக்கு என்னை மட்டம் தட்ட ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைத்தது; அவ்வளவுதான்!

அதற்குள் நான் என் மனைவியை "வெள்ளிக்கிண்ணத்தை என்ன செய்தாய்?" என்று கேட்டேன்.

"என் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்ளாதீர்கள்! போதுமே, அப்பாவைப்போலத்தானே பெண் இருக்கும்? அங்கே எல்லார் எதிரிலும், 'அம்மா, இந்தா கிண்ணம்; அந்த மாமிக்குக் கொடு!' என்று என் கையில் கொடுத்தது இந்த முண்டம்! நான் என்ன பண்றது. மெள்ளக் கிள்ளினேன். காளி மாதிரி, 'மாமி, அம்மா கிண்ணத்தைக் கொடுக்கக் கூடாதுன்னு கிள்ளறா' என்று பெரிய சுருதியில் அலறினாள்.... அதனாலே தலைவிதியேன்னு கொடுத்துத் தொலைத்தேன். என் தலை எழுத்து, என் ஜாதகம், அப்படி!" என்று அலுத்துக் கொண்டாள், இல்லத்து அரசி!

பூணூல் விஜயத்துக்குப் பெட்ரோல் உட்பட ஐம்பது ரூபாய் செலவு. மறு நாள் என் சிநேகிதன் சுந்தரேசனைப் பார்த்தபோது, அவன் என்னுடன் முகம் கொடுத்தே பேசவில்லை. திருடனுக்குத் தேள் கொட்டினால் அவன் 'குய்யோ முறையோ'வென்று கத்தவா முடியும்? அது போலத்தான் என் நிலையும் இருந்தது!

★

விவாகம்

சௌ. கமலா — சி. கிருஷ்ணன்

பம்பாய், பாமர் லாரி கம்பெனியைச் சேர்ந்த ஸ்ரீ பி. ஆர். ஏ அய்யரின் புத்திரி சௌ கமலாவுக்கும் பம்பாய் கால்டெக்ஸ் (இந்தியா) லிமிடெடைச் சேர்ந்த ஸ்ரீ கே ஏ. கிருஷ்ணன், பி ஏ. ஆனர்ஸிற்கும் ஜூலை 1ல் விவாகம் நடைபெற்றது ஏராளமான நண்பர்களும் உறவினர்களும் வந்திருந்தனர்.

பிரமுகர் வரிசை:
ஸர் அந்தோனி ஈடன்

வேதனைச் சுழலில் சிக்கி மீள வழி தெரியாமல் அதிகம் அவஸ்தைப்படும் ஐரோப்பிய ராஜதந்திரி, இன்று இங்கிலாந்தின் பிரதமர்தான் என்பதில் சந்தேகமேயில்லை. பிரிட்டிஷ் சிங்கத்தின் பல்லைப் பிடித்துப் பார்ப்பதில் எகிப்தும் முனைந்துவிட்டதே இதற்குக் காரணம்.

சர்வதேச அரசியல் அரங்கம் ஸர் அந்தோனி ஈடனுக்கு இன்று நேற்று பரிச்சயமானதல்ல. ஐஸனோவர், குருஷேவ், மா ஸே துங் ஆகியோர் இருந்த இடம் தெரியாதிருக்கையில், ஹிட்லர், முஸோலினி, ஸ்டாலினுடன் பேச்சு நடத்தினார்!

'அப்பழுக்கற்ற ஆடை அணியும் அரசியல்வாதி' என்னும் பெயர் இவரை அண்டியதன் மர்மம், ஆதி முதலே ஆளுவதற்கென்று இவர் தயார் செய்யப்பட்டதுதான். அதற்கேற்ற உயர்தரப் பள்ளி, கல்லூரிப் படிப்புகளும் சித்தித்தன. 19 வயதில் ஈடன் துப்பாக்கி ஏந்தினார்; போர்முனையில் காயம் பட்டும் பராக்கிரமத்துக்காகப் பதக்கம் பெற்றார்.

28-வது வயதில் சட்டசபையில் பிரவேசித்து பத்து வருடங்களில் மாட்சிமை பொருந்திய சாம்ராஜ்யத்தின் அந்நிய மந்திரியாவதற்கு தோற்றமும், பிறப்பும் மட்டும் காரணமாயிருக்க முடியாது. ஆனால், நான்காண்டுகளில், ஹிட்லரைத் தாஜா செய்யும் முறையை ஆட்சேபித்து வெளியேறினாலும், சர்ச்சிலின் பாராட்டைப் பெற முடிந்தது. இதுவே இருவரையும் பிணைத்துவைத்தது. 'முன் ஆலோசனை இன்றியே இருவரும் ஒரே மாதிரி தான் சிந்திப்போம்' என்று சர்ச்சில், தமது யுத்த கால அந்நிய மந்திரியை சிலாகித்திருக்கிறார். ஈடன் வாரிசாக வரிக்கப்பட்டதிலும், இளம் வயதினளான சர்ச்சிலின் நெருங்கிய உறவுக்காரியை மணந்ததிலும் வியப்பென்ன?

ஐந்தாண்டுகள் முன்பு டோரி கட்சியினர் மீண்டும் பதவிக்கு வந்தபோதிலும், ராக்ஷச சர்ச்சிலின் நிழலாகத்தான் ஈடன் வளையவர முடிந்தது. 'பெரியவர்' விட்டுக்கொடுக்கும்வரை இளைய பட்டம் பொறுமையுடன் காத்திருந்து சென்ற வருடம்தான் முடி சூடிக்கொண்டது. அடுத்த மாதமே மக்களின் ஆமோதிப்பு முத்திரையும் கிடைத்தது, தேர்தலில்.

OOMMEN

இலங்கை வித்தம்

இலங்கை அரசாங்கம் இயற்றியுள்ள தனிச் சிங்கள மசோதாவை எதிர்த்து இலங்கை தமிழர்கள் நடத்தும் போராட்டத்துக்கு சென்னையிலும், பொதுவாக இந்தியாவிலும் ஆதரவு திரட்ட சமஷ்டிக் கட்சியினர் செய்யும் முயற்சிகளை சிங்கள ராஜ்ய வாதிகள் பலமாகக் கண்டிக்கிறார்கள். தமிழ்—சிங்களப் பிரச்னை இலங்கையின் உள்நாட்டுப் பிரச்னையாதலால், அதைப் பற்றி ஒரு அந்நிய நாட்டில் பிரசாரம் செய்வதோ அல்லது ஒரு அந்நிய நாட்டு மக்களின் ஆதரவைப் பெறுவதோ தேசத்துரோகமென்று சிங்களத் தலைவர்கள் கூறுகிறார்கள். பிரதம மந்திரி ஸ்ரீ பண்டாரநாயகா இதைப் பற்றிப் பேசியபொழுது, இதில் இந்தியா தலையிடுமானால், இலங்கை இந்திய நல்லுறவை அது பாதிப்பதாயிருக்குமென்று நாசூக்காக எச்சரித்தார். இலங்கையின் உள்நாட்டுப் பிரச்னையில் இந்தியா தலையிடும் பேச்சுக்கே இடமில்லையென்று சென்னை நிதி மந்திரி ஸ்ரீ ஸி. சுப்ரமண்யம் வெளியிட்டிருக்கும் அறிக்கையை பிரதமரின் கவனத்துக்கு 'மித்திரன்' திருபர் கொண்டு வந்தபொழுது அவர் மிகுந்த திருப்தி தெரிவித்தார்.

ஃ ஃ ஃ

சமஷ்டிக் கட்சியின் பொதுக் காரியதரிசியும், காங்கேசன்துறை எம். பி.யுமான ஸ்ரீ எஸ். ஜே. வி. செல்வநாயகம் பார்லிமெண்டில் இதே விஷயமாகப் பேசியபொழுது அநீதி இழைக்கப்படும் ஒரு சமூகத்துக்கு அந்த அநீதிகளை உலகறியச் செய்து நிவாரணம் தேடிக் கொள்ளும் உரிமையுண்டென்றார். தமிழ் பேசும் மக்களைப் படிப்படியாக ஒழித்துக் கட்ட இலங்கை அரசாங்கம் அடுத்தடுத்து எடுத்துவரும் நடவடிக்கைகளையும் ஸ்ரீ செல்வநாயகம் சுட்டிக் காட்டினர்.

தனிச் சிங்களச் சட்டத்தை எதிர்த்துப் போராட்டம் நடத்தத் தமிழர்களின் ஐக்கிய முன்னணியை ஏற்படுத்துவதற்காக இவ்வாரம் தமிழ்த் தலைவர்களின் மகாநாடு ஒன்று நடைபெற்றது. அப்பொழுது, இந்தியத் தமிழர்களின் பிரஜாவுரிமைக் கோரிக்கையை யாழ்ப்பாணத் தலைவர்களில் சிலர் முன்பு ஆதரிக்காமல் இந்தியர்களுக்கு என்ன நேரிட்டால்தான் நமக்கு என்ன என்று அலட்சிய மனோபாவம் காட்டினார்கள் என்பதை சமஷ்டிக் கட்சித் தலைவர்கள் இடித்துக் காட்டினார்கள். 'அன்று இந்தியத் தமிழர்களுக்குச் செய்த துரோகத்தின் பலனையே இன்று இலங்கைத் தமிழர் அனைவரும் அனுபவிக்கிறார்கள். இந்தியத் தமிழர்களின் ஓட்டுரிமை, பிரஜாவுரிமை, பார்லிமெண்ட் பிரதிநிதித்துவம் ஆகியவற்றை அரசாங்கம் பறித்த காரணம், தமிழ் பேசும் மக்களின் ஓட்டு பலத்தைக் குறைப்பதற்காகத்தான். தமிழ் மக்களைக் கூறுபோட்டு அழிக்கவே அரசாங்கம் முதலில் இந்தியர் தலையில் கை வைத்தது. ஆகையால், இன்று தோன்றியுள்ள பாஷைப் பிரச்னை இந்தியர் பிரஜாவுரிமைப் பிரச்னையின் ஒரு அம்சமேயாகும்.'—இப்படி வாதித்த சமஷ்டிக் கட்சித் தலைவர்கள், இந்தியர் பிரஜாவுரிமையை ஆதரித்துப் போராட்டம் நடத்தவேண்டுமென்று வற்புறுத்தினர்கள். இந்த யோசனையை மகாநாடு ஏகமனதாக ஒப்புக்கொண்டது. ஆயினும் போராட்டத்துக்கு செயல் கமிட்டியை நியமிக்கும் விஷயத்தில் அபிப்பிராய ஒற்றுமை ஏற்படாதபடியினால், மகாநாடு ஆகஸ்டு 4—ம் தேதிவரையில் ஒத்தி வைக்கப்பட்டது.

ஃ ஃ ஃ

இலங்கையிலுள்ள இந்திய வர்த்தகர்களும், இந்திய சிப்பந்திகளும் நிச்சயமற்றநிலைமையில் வாழவேண்டியிருப்பது வர்த்தகத்தையும், நாட்டின் பொருளாதாரத்தையும் எவ்வளவு கடுமையாகப் பாதிக்கிறதென்பதை இலங்கை இந்திய வர்த்தகச் சங்கத் தலைவர் ஸ்ரீ எஸ். பாலசுப்ரமண்யம் இவ்வாரம் நடந்த சங்கத்தின் வருடாந்திரப் பொதுக் கூட்டத்தில் பேசியபொழுது எடுத்துக் காட்டினர். "இந்தியர்களுக்கு இலங்கையைவிட்டு வெளியேறுமாறு திடீர் திடீரென்று நோட்டீஸ் வருவதனல், நிச்சயமற்ற நிலைமையில் தொழில் நடக்கவேண்டியிருக்கிறது. ஒவ்வொரு தொழிலிலும் எவ்வளவு இந்தியர்களை வைத்திருக்கலாமென்பதற்கு அரசாங்கம் ஒரு திட்டமான கோட்டாவை நிர்ணயித்து வெளியிட்டால், எல்லோருக்கும் நன்மையாயிருக்கும்" என்று ஸ்ரீ பாலசுப்ரமண்யம் தொடர்ந்து பேசுகையில் தெரிவித்துக் கொண்டார்.

அட்டைப் படம்.

★

'அழகுப் பை' ஆணங்கைப் பார்த்து வாயைப் பிளந்து அழகு காட்டுகிறதுபோலிருக்கிறதே, அந்த நீர்யானை! 'உனக்கு மட்டும் தானா வாய் நீளம்? எனக்கும்தான்; பாரேன்!' என்று காட்டுகிறதோ, அந்தப் போக்கிரி விலங்கு! அந்தச் சுட்டிப் பயல் 'விழுங்கிவிடுமோ?' என்று பயப்படும்வகையில் எத்தனை வியப்பை முகத்தில் வழிய விட்டுக் கொண்டு பார்த்துக்கொண்டிருக்கிறான்! பாவம், எத்தனைதான் தலையை நீட்டிக் கொண்டு எட்டி எட்டிப் பார்த்தாலும், அந்த ஒட்டைச் சிவிங்கிகளைச் சட்டை செய்வாரும் இல்லையே! மாமியும் மகனும்கூட இந்தக் காட்சி இன்பத்திலேயே சொக்கிப் போயிருக்கிறார்களே!

அபூர்வ மிருகமாகிய நீர்யானை, சென்னை மிருகக் காட்சி சாலைக்கு வருபவர்களையெல்லாம் இப்படிக் கவர்ந்து விடுவது சர்வ சாதாரணமான விஷயம். ஓவியர் 'ஸாகர்' கைப்பட்டுச் சித்திரமாகும்போது இதுவும் பெரிய விஷயமாகவே தோன்றுகிறது!

இலங்கை-இந்திய நீர்ப்பாசன மகாநாட்டிற்கு வந்த பாரதப் பிரதிநிதிகளுக்கு இந்திய ஹை கமிஷனர் அளித்த வரவேற்பில் இலங்கை பிரதமர் பண்டாரநாயகா, செயற்கை மழை ஆராய்ச்சி நடத்திய ஸ்ரீ கோஷ் என்பவருடன் சம்பாஷிக்கிறார்

இலங்கை - இந்திய வர்த்தகச் சங்கத்தின் வருடாந்திரக் கூட்டத்தில் அதன் தலைவர் ஸ்ரீ எஸ். பாலசுப்பிரமணியம் தமது தலைமைப் பிரசங்கத்தை நிகழ்த்துகையில் எடுத்த படம்.

ஒட்டகம்

மலையாளம்: எஸ்.கே.பொற்றெக்காட்

தமிழ்: சௌரி

எல்லோரும் அவனை 'ஒட்டகம்' என்று தான் அழைப்பது வழக்கம். நீண்ட, மெல்லிய கம்பித் தூண்கள்போலக் கால்கள்; கடப்பாறை மாதிரிக் கைகள்; கழுத்து நீண்ட பெரிய சீனு ஜாடி போன்ற மார்பு; இந்தச் சேர்க்கைகளுக்கு மேலே ஒல்லித் தேங்காய் மாதிரி ஒரு தலை! இதுதான் ஒட்டகம்.

பிப்பாய் வண்டி நிறையத் தண்ணீர் நிரப்பிக்கொண்டு இரவிலும், விடியற்காலையிலும் அதைத் தெரு வழியாக ஒட்டகம் இழுத்துக்கொண்டு வருவது ஒரு விசித்திரக் காட்சியாக இருக்கும். இரண்டு சக்கரங்கள் கொண்ட அந்தப் பிப்பாய் வண்டி, குட்டிபோட்ட பன்றிபோல ஒரு தீனக் குரலைக் கிளப்பிக்கொண்டு புறப்படும்போது, அதன்பின்னால் நாலைந்து சோதாப் பையன்களும் தொடர்ந்து வருவார்கள். அந்த நிலையிலேயே அவர்கள் சண்டை சச்சரவு, பாட்டு, கூத்து, பரிகாசம் எல்லாவற்றையும் நடத்திவிடுவார்கள். வண்டியை விரல்களால் தொட்டுக்கொண்டே இந்தப் பையன்கள் உதவி செய்வதாகப் பாவனை செய்வதை ஒட்டகம் உண்மை என்று நம்பிக்கொள்வான். வண்டிக் கொக்கிகளை இரு கைகளாலும் பலமாகப் பிடித்துக்கொண்டு, கீழுதடு



வெளியே தொங்க, அடிக்கடி மூக்கு விறைக்க, இங்குமங்கும் பார்த்துக்கொண்டே ஓடும் இந்த விசித்திரக் காட்சிதான் அவனுக்கு 'ஒட்டகம்' என்ற பெயரைச் சூட்டியது.

ஹோட்டலின் சாப்பாட்டு மேஜையின் மேல் பழகி, நாறிப்போன ஒரு துணித் துண்டுதான் ஒட்டகத்தின் இடுப்பைச் சுற்றி மறைத்துக்கொண்டிருக்கும். அவன் கணுக்காலில் ஒரு துணிப்பட்டி எப்போதும் கட்டப்பட்டிருக்கும். பல வருஷங்களுக்கு முன்பு ஏற்பட்ட காயத்திற்கு அறிகுறி அது. காயம் ஆறிப்போய், அந்த இடத்தில் மயிர் முளைத்து விட்டும்கூட அவன் துணிக் கட்டை அவிழ்க்கவில்லை. காலுக்கு ஒரு அலங்காரம் மாதிரிக் காட்சி அளித்த அந்தக் கட்டை அவிழ்த்தால், கால் முறிந்து செத்துப் போய்விடுவோம் என்ற பீதி அவனுக்கு.

ஹோட்டலின் விறகு அறைக்கு அருகில், எச்சில் தொட்டியோடு ஒட்டினாற்போல் ஒட்டகத்திற்கு வாசஸ்தானம். காலையில் வேலையை முடித்துவிட்டு, சுருட்டுத் துண்டைப் பற்ற வைத்துக்கொண்டு, அவன் இளைப்பாற உட்கார்ந்து விடுவான். அவன் சகாக்களான தெருப் பிள்ளைகள், அவன் கழுத்தையும், முதுகையும் கட்டிக்கொண்டு விளையாடத் தொடங்கிவிடுவார்கள். அதுதான் அவனுக்குப் பொழுதுபோக்கு. திடீரென்று ஒட்டகம் எழுந்து உடம்பை ஒரு உலுக்கு உலுக்குவான். தொத்திக்கொண்ட நாய்க் குட்டிகள்மாதிரி பையன்கள் கீழே விழுவார்கள். இந்த வேடிக்கையைக் கண்டு கழுதை சுரத்தில் அவன் உரக்கச் சிரிப்பான்.

ஒட்டகமும், அந்தப் பையன்களும் அப்பெரிய ஹோட்டலில் வேலை செய்து பிழைப்பவர்கள். ஹோட்டலுக்கு வேண்டிய தண்ணீர் முழுவதையும் பக்கத்துக் குளத்திலிருந்து கொண்டுவந்து நிரப்புவது ஒட்டகத்தின் ஜோலி. பதினாறு வருஷங்களாக அலுப்பு சலிப்பில்லாமல் அவன் அங்கே பணியாற்றி வருகிறான்.

பதினாறு வருஷங்களுக்கு முன்பு அவன் வாழ்க்கை எப்படி இருந்தது என்று யாருக்கும் தெரியாது. 'எட்டாள் சாப்பாட்டை ஒருத்தனே தீர்த்துவிடுகிற பிப்பாய் வயிறு' என்று ஹோட்டல் மானேஜர் அடிக்கடி ஒட்டகத்தைத் திட்டுவதுண்டு. தண்ணீர் கொண்டுவந்த நேரம் போக, மீதி வேளையில் விறகு உடைக்கிற வேலையையும் அவனே கவனித்து வந்தான்.

ஆகஸ்டுப் புரட்சியில் தேசமே கிடுகிடுத்தது. இரண்டாம் உலகப் போர் முடிவடைந்தது. இந்தியா விடுதலை பெற்றது. ஒட்டகத்திற்கு இதெல்லாம் தெரியாது. இந்த உலகத்தில் அசாதாரணமான சில நிகழ்ச்சிகள் நடக்கின்றன என்பதை இருமுறை அவன் அநுபவ பூர்வமாக உணர்ந்தான்.

ஒரு நாள் இரவு வழக்கம்போல் பிப்பாய் வண்டியை இழுத்துக்கொண்டு ஒட்டகம் வந்துகொண்டிருந்தான், வழியில் ஒரு தொழிற்சாலைக்கெதிரே மறியல் நடந்துகொண்டிருந்தது. திடீரென்று லாரி நிறையப் போலீஸ்காரர்கள் வந்து இறங்கினார்கள். உடனே தடியடிப் பிரயோகத்தைத் தொடங்கிவிட்டார்கள். மறியல் செய்பவர்கள், வேடிக்கை

பார்ப்பவர்கள் எல்லோருக்கும் பலத்த அடி. பிப்பாய் வண்டியை அங்கேயே விட்டுவிட்டு, ஒட்டகம் ஓடத் தொடங்கினான். அவன் முதுகிலும் ஓரடி பலமாக விழுந்துவிட்டது. தெருவுக்கு வந்தும் அவன் ஓட்டம் நிற்கவில்லை. இரு பக்கத்துக் கடைக்காரர்களுக்கும் காதில் விழும்படி "அடிக்க வர்றாங்க" என்று கத்திக்கொண்டே ஓடினான். ஊரில் உள்ளவர்களுக்கெல்லாம் அடி விழப் போகிறதென்று அவன் எண்ணம்.

ஒட்டகம் அன்று முழுவதும் விறகு அறையை விட்டு வெளியே வரவில்லை. ஹோட்டல் மானேஜர் எவ்வளவுதான் அறிவுறுத்தியும், அதட்டியும் அவனுக்குப் பயம் போகவில்லை. கடைசியில் பையன்களெல்லாம் கூடிப் பிப்பாய் வண்டியை ஹோட்டலுக்குக் கொண்டு வந்து சேர்த்தார்கள்.

இரண்டாவது சம்பவம், அந்தப் பிப்பாய் வண்டி ஒருநாள் அவன்மேல் சாய்ந்துவிட்டது. வேறு யாராவது இருந்தால், அப்போதே உயிர் போயிருக்கும். தலையிலும், உடலிலும் பலத்த காயங்களோடு ரத்தம் கசிய வண்டிக் கடியிலிருந்து ஒட்டகம் வெளியே வந்துவிட்டான். ஹோட்டல் மானேஜர் உடனே ஒரு ரிக்ஷாவில் அவனை ஏற்றி ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தான். ஒட்டகம் இறந்து விடுவான் என்றுதான் எல்லோரும் எண்ணிக்கொண்டிருந்தார்கள். ஆனால், இந்தக் கண்டத்திற்கும் அவன் பிழைத்துவிட்டான்.

மயக்கம் தெளிந்ததும் தான் வெள்ளையான மெத்தையின்மேல் படுத்திருப்பதை உணர்ந்தான். தன் உடல் முழுவதையும் ஒரு முறை பார்த்துக்கொண்டான். தலை, கழுத்து, முதுகு எல்லாவற்றிலும் வெள்ளைத் துணியால் கட்டுகள் போடப்பட்டிருந்தன. தன் கணுக்காலைப் பார்த்துக் கொண்டான். அங்கே துணிக் கட்டைக் காணோம். உடனே தலைக் கட்டை அவிழ்த்து, அதைக் கணுக்காலில் கட்டிக் கொண்ட பிறகுதான் அவனுக்கு நிம்மதி ஏற்பட்டது. சிறிது நேரம் கழித்து நர்ஸ் வந்து பார்த்தபோது, தலையிலிருந்து ரத்தம் வழிய ஒட்டகம் நினைவிழந்து கிடந்தான். தலைக்குப் புதுக் கட்டு போட்டுவிட்டுச் சென்றாள்.

ஒன்னரை மாதம் ஒட்டகம் ஆஸ்பத்திரியில் கிடந்தான். வெளி வராந்தாவின் ஒரு மூலையில் அவன் படுக்கை. ஒரு நாள் இரவு, ட்யூட்டியிலிருந்த டாக்டர், வராந்தாவில் ஏதோ சப்தம் கேட்டு விரைந்து வந்தார். ஒட்டகம், இரும்புக் கட்டிலை இழுத்துக்கொண்டு வராந்தாவில் நடமாடிக்கொண்டிருந்தான். பிப்பாய் வண்டி இழுக்கக் கிடைக்காததால் ஏற்பட்ட மனக்குறையை, இந்த விதமாகப் போக்கிக்கொண்டிருந்தான்.

அடுத்த தினமே அவனை ஆஸ்பத்திரியிலிருந்து வெளியேற்றிவிட்டார்கள். ஹோட்டலுக்குச் சென்றதுமே பிப்பாய் வண்டியை இழுத்துக்கொண்டு குளத்திற்குக் கிளம்பிவிட்டான்.

ஒரு நாள் ஒட்டகத்தை ஹோட்டல் மானேஜர் தன் அறைக்கு வரவழைத்தான். ஒட்டகத்திற்கு ஆச்சரியமாக இருந்தது. எதுக்காகக் கூப்பிடணும் என்று மூக்கையும், கீழுதட்டையும் சுருக்கிக்கொண்டு கொஞ்ச நேரம் யோசித்தான். பிறகு கூனிக் குறுகிக் கொண்டு, மரியாதையோடு கழுத்தை முன்னால் நீட்டிக்கொண்டு மானேஜர் அறைக்குள் நுழைந்தான்.

மானேஜர் அவனை அடியிலிருந்து நுனிவரை ஒருமுறை உற்று நோக்கினான். "டேய்! உன்னை ஒரு முக்கியக் காரியத்துக்காகத்தான் கூப்பிட்டேன். உனக்கு என்ன வயசு?"

ஒட்டகம் விழித்துக்கொண்டு நின்றான்.

"சந்தேகமாயிருக்கும். சரி, போகட்டும். நீ வெகு காலமாய் இந்த ஹோட்டலிலே வேலை செய்துண்டு வர்றே. உன் பேரிலே எனக்குத் தனி ஆசை உண்டுடா; டேய்! அதினாலே உனக்கு ஒரு கலியாணத்தைச் செய்து வைத்துடலாம்னு தீர்மானிச்சிருக்கேன். நீ என்ன சொல்றே?"

இதைக் கேட்டதும் ஒட்டகம் உள்ளுக்குள்ளேயே பூரித்துப் போனான்.

"பொண்ணு அருமையாக இருக்கும்டா. யார் தெரியுமா? இங்கே சுத்து வேலைக்கு வர்றாளே மாது, அவள்தான். நீங்க இரண்டு பேரும் இங்கேயே வேலை செய்யறதினாலே, கல்யாணத்துக்கு நீ ஒண்ணும் செலவு செய்யவேண்டாம். இருந்தாலும் கைச்செலவுக்கு இதை வெச்சுக்க" என்று கூறி, மூணு பத்து ரூபாய் நோட்டுகளை ஒட்டகத்தின் கையில் கொடுத்தான்.

ஒட்டகம் விழித்துக்கொண்டு நின்றான். பெண், விவாகம் இதெல்லாம் தன்னைப் பாதிக்காது என்றே அவன் இதுவரை எண்ணி இருந்தான். மானேஜருடைய இந்த ஏற்பாட்டைக் கேட்டதும், மூக்கையும், உதட்டையும் சுளித்துக் கொண்டு அறையை மேலும் கீழுமாகப் பார்த்துக்கொண்டு நின்றான். சில புது உணர்ச்சிகள் அவனுள் அலையாக எழும்பிக்கொண்டிருந்தன.

"என்னடா யோசிக்கறே? சீக்கிரம் பதில் சொல்லணும். உனக்குச் சம்மதம் தானேடா?" மானேஜர் பரிவோடு சற்று உரக்கக் கேட்டான்.

ஒட்டகம் பல்லை இளித்துக் தலையாட்டினான்.

"சரி, நீ போகலாம். நாளை ராத்திரி உன் கலியாணம். நாளைக்கு நீ தண்ணி கொண்டு வர்றதோ, விறகு பிளக்கிறதோ எதுவும் செய்யவேண்டாம்."

ஒட்டகம் குனிந்து மெள்ள வெளியே வந்தான். ஹோட்டல் பின் பக்கத்துக்குப் போனதும், வேலைக்காரப் பையன்களை அழைத்து, "நாளைக்கு எனக்குக் கலியாணமாக்கும்" என்று பெருமையாகச் சொல்லிக்கொண்டான்.

முதலில் அவர்கள் யாரும் அதை நம்பவில்லை. "என்ன கலியாணமா?" என்று கிண்டல் செய்தார்கள்.

மறுநாள் விடியற்காலையில் ஹோட்டல் மானேஜர் ஒட்டகத்தை அழைத்து ஒரு புதுச் சட்டையும், எட்டு முழம் வேஷ்டியும், துண்டும் கொடுத்தான். மணவாளனை புத்தாடை வேஷத்தில் கண்டபோதுதான் பையன்களுக்கு அவன் கலியாணத்தில் நம்பிக்கை ஏற்படத் தொடங்கியது.

"பொண்ணு யாரு?" அவன் முதுகில் ஏறித் தொங்கிக்கொண்டே ஒரு பையன் விசாரித்தான்.

"நாளைக்குப் பார்க்கலாம்." மதிப்பாகப் பதிலளித்தான், ஒட்டகம்.

அன்று இரவு வேலையெல்லாம் முடிந்து ஹோட்டலில் நிசப்தம் நிலவியது. பத்தாம் நம்பர் அறையில் கலியாண ஏற்பாடெல்லாம் தயாராக இருந்தன. புத்தாடைகள் உடுத்தி, தயக்கத்துடன் ஒட்டகம் உள்ளே நுழைந்தான். கணுக்கால் கட்டை அவன் அந்தச் சமயத்திலும் அவிழ்க்கவில்லை.

மணப்பெண் புல்லுப் பாயில் நாணிக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். ஒட்டகம்

அவனை ஒருமுறை நோக்கினான். தவிட்டு நிற மேனி, கொழுத்த உடல், இள வயசு. ஹோட்டலில் அடுக்களை வேலை செய்யும் மாதுதான் என்பதை உணர்ந்து கொண்டான். மிருக வெறி கலந்த ஆனந்தக் கிளர்ச்சி ஒருகணம் அவனை ஆட்டி வைத்தது. அதை அடக்கிக்கொண்டு அவளையே பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தான்.

மானேஜர், மேலும் சில சிப்பந்திகள் முன்னிலையில் ஸ்ரீமான் ஒட்டகத்திற்கும், ஸ்ரீமதி மாதுவுக்கும் திருமணம் சுருக்கமாக நிறைவேறியது. ஒட்டகத்தின் தோழர்களான சோதாப் பையன்களுக்கு அங்கு வர அநுமதி கிடையாது. அவர்கள் விறகு அறைக்குமேல் ஏறி நின்றுகொண்டு, இடுக்கு வழியாக இந்தத் திருமண வைபவத்தைக் கண்டு திருப்தி அடைந்தார்கள். நல்ல நிலா காய்ந்துகொண்டிருந்தபோதே, சட்டென்று ஒரு மழை பெய்து ஓய்ந்தது.

"ஒட்டகத்துக்குக் கலியாணம்; நிலவும், மழையும் பொழியுதுடா!" என்று கூவிச் சிரித்துக்கொண்டே, பையன்கள் இறங்கிப் போனார்கள்.

விவாகம் நிறைவேறியதும், பிறகு என்ன செய்யவேண்டும் என்று தெரியாமல் ஒட்டகம் விழித்துக்கொண்டு நின்றான். "வழக்கப்படி உன் இடத்திலேயே போய்ப் படுத்துக்க" என்று ஹோட்டல் மானேஜர் உத்தரவிட்டான். சிறிது நேரத்திற்கெல்லாம், கீழே குறட்டை விட்டுக்கொண்டு தூங்கும் பையன்களுக்கு நடுவில் மணவாளன் ஒட்டகமும் நீட்டிப் பரப்பிக்கொண்டு படுத்துவிட்டான்.

இந்த விதமாக, என்ன கிடைத்தது, என்ன பறிபோயிற்று என்பதைப்பற்றிச் சிந்திக்காமலேயே ஒட்டகம் தன் பழைய வாழ்க்கையையே தொடர்ந்து நடத்திவந்தான். வாழ்க்கையில் அவனுக்குப் புரியாத, புரிந்துகொள்ள முடியாத பல நிகழ்ச்சிகளில் ஒன்று அந்த விவாகம்.

மாதங்கள் கடந்தன.

வெளிப்படையாக ஒட்டகத்தினிடத்தில் எவ்வித மாறுபாடும் தென்படாவிட்டாலும், அவன் மனத்தில் ஏதோ இனந் தெரியாத சில கவலைகள், வெறுப்புகள் கிளர்ந்துகொண்டிருப்பதை அவன் உணராமலில்லை. பொதுவாக, எந்த வியாதியாலும் பாதிக்கப்பட முடியாத அவனை, ஏதோ ஒரு தலை வேதனை எப்போதும் வாட்டிக்கொண்டிருந்தது.

பிப்பாய் வண்டி இழுத்து வருகிறபோது தெருவில் இங்குமங்கும் நோக்குகிற அந்த மிடுக்குப் பார்வை இப்போது இல்லை. அவன், கழுத்துச் சுருங்கி, குனிந்த தலையுடன்தான் நடக்கிறான். இப்போதெல்லாம் அவனுக்குக் காரணமில்லாமலேயே கோபம் வருகிறது. கோபம் ஏற்படும்போதெல்லாம் தனக் குரல் பாய்ச்சிப் பரிதாபமாக அலறுவான்.

மாதுவை சில சமயம் அவன் சந்திப்பதுண்டு. அடுக்களையில் அவள் தேங்காய் அரைக்கிறபோதும், மசாலா சாமான்கள் வறுக்கிறபோதும், ஒட்டகம் வெளியே நின்றுகொண்டு உற்றுப் பார்ப்பான். தண்ணீர்த் தொட்டியில் தண்ணீர் நிரப்புகிறபோதுதான் அவனுக்கு இந்த வாய்ப்புக் கிட்டும். அப்போதெல்லாம், அங்கு வேலை செய்கிற அம்மு, ஒட்டகத்தைப் பார்த்து வாய் பொத்திச் சிரிப்பாள்.

அவன் இதையெல்லாம் சகித்துக் கொண்டிருந்தான்.

விவாகம் நடந்து ஆறு மாதமானதும், மாது கொழுகொழுவென்று ஒரு ஆண் குழந்தையைப் பெற்றெடுத்திருக்கிறாள் என்ற செய்தியை ஒட்டகம் அறிந்து கொண்டான்.

ஒருநாள் விடியற்காலையில் பிப்பாய் வண்டியை இழுத்துக்கொண்டு தெரு வழியாக அவன் வந்துகொண்டிருந்தான். கூட வந்த பையன்கள், "இதோ பாருடா, ஒட்டகத்துக்குக் குழந்தை டோய்!" என்று கத்தினார்கள்.

ஒட்டகம் கழுத்தைத் திருப்பிப் பார்த்தான். தெருவின் எதிர்ப்பக்க ஓரமாக மாது குழந்தையை அணைத்துக்கொண்டு போய்க்கொண்டிருந்தாள். ஒட்டகத்தின் கண்கள் விரிந்து பிரகாசித்தன. அவன் சாதாரண மனிதன்போலப் பெருந்தன்மையுடன் லேசாகப் புன்முறுவல் செய்தான். மெள்ள வண்டியை நிறுத்திக் கீழே வைத்துவிட்டு, மாதுவின் அருகில் சென்றான். மாது திகைத்துப்போய் அப்படியே நின்றுவிட்டாள். ஒட்டகம் அவள் அணைப்பிலிருந்து குழந்தையை எடுத்துக்கொண்டு பிப்பாய் வண்டிக்கு வந்து சேர்ந்தான். குழந்தையை ஒரு கையால் அணைத்துக்கொண்டு, மற்றொரு கையால் வண்டியை இழுத்துக்கொண்டு புறப்பட்டான்.

மாது கூக்குரலிட்டுக்கொண்டே வண்டியின் பின்னால் ஓடிவந்தாள். கூட வந்த பையன்களும் கூச்சலிடத் தொடங்கிவிட்டார்கள். இரைச்சலைக் கேட்டு அக்கம்பக்கத்திலிருந்தவர்கள் வேடிக்கை பார்க்கக் கூடிவிட்டார்கள். கூட்டத்தையும், அழுகைக் குரலையும் கேட்டு ஒரு போலீஸ்காரனும் அங்கு வந்து சேர்ந்தான். போலீஸ் தொப்பியைக் கண்டதும் ஒட்டகம் பிப்பாய் வண்டியை அங்கேயே போட்டுவிட்டுப் பாய்ந்து ஓடினான். எந்தப் பக்கம் ஓடவேண்டும் என்ற குறி இல்லாமல், பல தெருக்களைக் கடந்து, குழந்தையுடன் ஹோட்டலுக்கு வந்து சேர்ந்தான். அங்கேயும் கூட்டத்தோடு போலீஸ்காரன் வருவதைக் கண்டதும், குழந்தையை எடுத்துக்கொண்டு மாடிப் பக்கம் விரைந்தான். அங்கு ஒரு பழைய அறை திறந்து கிடந்தது. அதற்குள் புகுந்துகொண்டு, கதவை மூடி உள் தாழ்ப்பாள் போட்டுக்கொண்டான்.

ஹோட்டல் மானேஜர், கூட்டத்தினர் சிலர், மாது, போலீஸ்காரன் எல்லோரும் அறைக்கு வெளியில் நின்றுகொண்டிருந்தார்கள். "எலே! கதவைத் திறடா!" அதிகாரத்தோடு மானேஜர் கத்தினான்.

பதிலில்லை.

கதவை இடித்தபடியே மானேஜர் மறுபடியும் கத்தினான். "உன் மரியாதைக்குத்தாண்டா சொல்றேன், உடனே கதவைத் திற!"

"கொளந்தையை நான் கொடுக்கமாட்டேன்" உள்ளேயிருந்து ஒட்டகம் அழாக்குறையாகச் சொன்னான்.

"அதைப்பத்திப் பின்னலே பேசிக்கலாம். நீ முதல்லே கதவைத் திறந்து வெளியே வா!"

"இந்தக் கொளந்தை எனக்குத்தான் சொந்தம்." உள்ளேயிருந்து அதே தீனக் குரல்.

"நான் கத்தறது காதிலே விளல்லே. முதல்லே கதவைத் திறன்னு சொல்றேன்." மானேஜர் பலமாகக் கதவை இடித்தான்.

"அம்மாக்காரிதான் எனக்குக் கிடைக்கல்லே; இந்தப் பிள்ளையாவது எனக்கு வேணும்." ஒட்டகம் இரைந்து சொன்னான்.

"அவன் என்ன சொல்றான்? அது யார் குழந்தை?" போலீஸ்காரன் விசாரித்தான்

அசிரத்தை தொனிக்க மானேஜர் சொன்னான்: "இவள் குழந்தை அது."

"அது தெரிகிறது; குழந்தையினுடைய தகப்பன்?"

போலீஸ்காரனின் கேள்விக்குப் பதில் சொல்லாமலேயே ஒட்டகத்தைக் கூப்பிட்டு மானேஜர் சொன்னான்: "நீ கொளந்தையை என்னடா செய்யப் போறே?"

"நான் எங்காவது கொண்டு போய் வளர்ப்பேன்; முடியல்லேன்னா வித்துப் பிடுவேன்; இல்லே, கொல்லுவேன். இது என் கொளந்தை." ஒட்டகம் உள்ளேயிருந்து பதில் கொடுத்தான்.

"எலே, சோதா! நீ இவ்வளவு தூரத்துக்கு வந்துட்டியா? நீ கதவைத் திறக்கவில்லே, கதவை உடைச்சு உள்ளே புகுந்து, உன்னே நான் கொல்லுவேன்."

"இனிமே கதவை இடிச்சால், நான் கொளந்தையை ஜன்னல் வழியாகத் தெருவிலே வீசிப் போட்டிடுவேன் . . . ஹூம்!" ஒட்டகத்தின் பயமுறுத்தலுக்கு ஏற்றாற்போல், உள்ளேயிருந்து குழந்தையின் அழுகை அதிகமாயிற்று.

"ஐயோ! அந்த மிருகம் கொளந்தையைக் கொன்னுப்பிடுமே." மாது பெரிய குரலில் அழத் தொடங்கிவிட்டாள்.

"அளாதடா, கண்ணு! பாவோ, பாவோ . . ." உள்ளிருந்து ஒட்டகம் குழந்தையைச் சமாதானப்படுத்தப் பாடும் குரல் கேட்டது.

மானேஜருக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. கூடி இருந்தவர்களில் சிலர் இனி என்ன நடக்கப் போகிறதோ என்று பயந்துகொண்டிருந்தார்கள். பலருக்கு இது நல்ல பொழுதுபோக்காக இருந்தது. "இது சிவில் கேஸ், கிரிமினல் இல்லே. எனக்கு இதிலே ஒண்ணும் சம்பந்தமில்லே" என்று கூறிக்கொண்டே, போலீஸ்காரன் வெளியே போகப் புறப்பட்டான். மானேஜர் அவன் கையைப் பிடித்து நிறுத்தினான்.

"இங்கே ஒரு கொலை பாதகம் நடக்க இருக்கிறது. நீங்க இதைக் கவனிக்காமல் போகிறேன்னு சொல்லுறீங்களே." —மானேஜர் தானொரு 'பெரிய மனிதன்' என்பதைக் குரலில் காட்டிக்கொண்டு சொன்னான்.

"அப்படி ஏதாவது நடந்துட்டா, எனக்குச் சொல்லி அனுப்புங்க, போறும். அதுவரை எனக்கு இங்கே ஒரு வேலையும் இல்லே" என்று கூறிக்கொண்டே, போலீஸ்காரன் கீழே இறங்கிப் போய் விட்டான்.

இனி என்ன செய்வதென்று புரியாமல் மானேஜர் குழம்பிக்கொண்டிருந்தான். பலாத்காரமாகக் கதவை உடைத்து உள்ளே புகுந்தால், ஒட்டகம் தான் பயமுறுத்தியபடிக் குழந்தையைத் தெருவிலே வீசி எறிந்து விடுவான்; பெரிய அவக்கேடாகி விடும்.

"டேய்! குழந்தையை உனக்கே கொடுத்துடறேம். அது இப்படியே அழுது விறைத்துச் செத்துப் போகும்டா. நீ கதவைத் திறந்துடு. நாங்கள் உன்னை எதுவும் செய்யல்லே." மானேஜர் மிகக் குழைவாகச் சொன்னான்.

பதில் இல்லே. குழந்தையின் அலறல் மட்டும் தொடர்ந்து கேட்டுக்கொண்டிருந்தது.

"அவன் அங்கேயே அடைஞ்சு கிடக்கட்டும். பசி எடுத்ததும் தானே வெளியே வருவான்." கூட்டத்தில் ஒரு ஆள் யோசனை கூறினான்.

"மெள்ள மேல் ஓட்டைப் பிரித்து உள்ளே இறங்கிப் பார்த்தால் என்ன?" மற்றோர் ஆளின் கருத்து இது.

"அறைக்குள்ளே இறங்குவதற்குள்ளே அந்த ஆசாமியைக் கொன்றுவிடும் இந்த மிருகம்." மானேஜர் நம்பிக்கையோடு சொன்னான். பிறகு அலுத்துக்கொண்டே, "இவன் இதுக்குள்ளேயே எத்தனை நாள் தான் இருக்கான், பார்க்கலாம்" என்றான்.

"இவன் எக்கேடு கெட்டாவது தொலையட்டும். அந்தக் குழந்தை என்ன ஆகும்? அது அலறியே செத்துப் போகாதோ?" ஹோட்டல் ஏஜெண்ட் கருணாகரன் சொன்னான்.

"எது எப்படி இருந்தாலும், நாளைப் பொழுது விடியட்டும். அதுக்குள்ளே அவன் குணம் மாறாமல் இருக்கப் போகிறதில்லே; பார்க்கலாம்."

இதே தீர்மானத்துடன் மானேஜரும், மற்றவர்களும் கீழே இறங்கிப் போனார்கள். ஏஜெண்ட் கருணாகரன் அறைக்கு வெளியே காவல் இருந்தான்.

பிறகு, இரவில் மானேஜர் திரும்பி வந்து ஒட்டகத்தை உரக்கக் கூப்பிட்டான். பதில் இல்லே.

கடைசியில், கதவை உடைத்து உள்ளே நுழைய வேண்டும் என்று தீர்மானமாயிற்று. அப்படியே உடைத்துக் கொண்டு உள்ளே போய்ப் பார்த்தபோது, உத்தரத்திலிருந்து ஒட்டகத்தின் சவம் தொங்கிக்கொண்டிருந்தது.

ஒட்டகத்தின் மார்பில், குழந்தை துணியால் கட்டப்பட்டுக் கிடந்தது. அவன், அறையில் கிடந்த ஜமுக்காளத்தைக் கிழித்துப் பாதியைச் சுருக்குக் கயிறாகப் பயன்படுத்திக்கொண்டான். மீதிப் பாதியால் குழந்தையைத் தன் மார்போடு சேர்த்துக் கட்டியிருந்தான்.

மானேஜர் உள்ளே நுழைந்ததும், மெள்ளக் குழந்தையை அவிழ்த்து எடுத்தான். குழந்தையின் உடம்பு கொதித்துக் கொண்டிருந்தது. மார்பு மெள்ள அடித்துக் கொண்டிருந்தது.

"குழந்தை சாகவில்லே. குழந்தை பிழைத்துவிட்டது" என்று மானேஜரும் மற்றவர்களும் மாறிமாறிச் சொல்லிக் கொண்டே வெளியே வந்தார்கள்.

ஒட்டகத்தின் சவம், நாக்கு நீண்டு வெளியே தொங்க, தன் நீளக் கழுத்தைத் திருப்பி, பாதி திறந்திருக்கும் கண்களால் ஜன்னல் வழியாக அக்குழந்தையைப் பயங்கரமாக விழித்துப் பார்த்தது.

காற்று 'புஸ்' என்று அலறிக்கொண்டு வீசியது.

★

பரிசுக்கு ஏற்ற பரிசு

ஆஸ்கார் வைல்டு என்கிற ஆசிரியர் சிறு வயதில் நியூடிகேட் பரிசு என்ற பரிசு வாங்கினார். வருஷத்தில் சிறந்த கவிதைக்கு, வருஷா வருஷம் அளிக்கப்படும் பரிசு அது. "வருஷா வருஷம் ஒரு கவிக்கு நியூடிகேட் பரிசு கிடைப்பதுண்டு. இந்த வருஷம் நியூடிகேட் பரிசுக்கு ஆஸ்கர் வைல்டு கிடைத்ததுதான் பிரமாதம்" என்று சொன்னாராம் ஆஸ்கார்வைல்டு.

—எஸ். ராஜா.

ஜல தோஷத்தையும் சீதளத்தையும் நிறுத்த

பெப்ஸ்

உபயோகியுங்கள்

ஜலதோஷம், சீதளம், இருமல், தொண்டைப் புண், இன்ப்ளுயன்ஸா, பிராங்கைடிஸ் இவை ஏற்படும் ஆரம்பத்திலேயே பெப்ஸ் உட்கொள்ளுங்கள். பெப்ஸிலுள்ள குணமளிக்கும், மருந்து சத்துகள், ஈரல், சுவாசப்பை இவற்றுள் ஊடுருவிச் சென்று, தீங்கிழைக்கும் கிருமிகளை உடனே நாசம் செய்கின்றன. ரணங்களுக்கு நிவாரணமளிப்பதுடன், எரிச்சலை சமனப்படுத்துகிறது. டாக்டர்கள் பெப்ஸை சிபாரிசு செய்கின்றனர். குழந்தைகளும், வயோதிகர்களும் உபயோகிக்கலாம். தீங்கு விளைவிக்கும் மருந்துகள் இதிலில்லை.

PEPS

பெப்ஸ் தொண்டை மார்பு உபாதைகளுக்கு சமனமூட்டும் வில்லைகள்.

FPY-41-TAM

ஸோல் ஏஜண்டுகள்: தாதா & கோ.
86, நைனியப்ப நாயகன் தெரு, சென்னை-3.

டில்லி மிஸஸ்கள்

'தூரன்'

ஹோலி முடிந்து சில நாட்கள் ஆகிவிட்டன. வீட்டுத் தரையிலும் சுவர்களிலும் ஹோலி விளையாட்டின்போது பூசப்பட்ட வர்ணச் சாயங்கள் திட்டுத் திட்டாய் தென்பட்டன. டில்லி கேந்திர சர்க்காரின் காரியாலய அதிகாரிகளுள் ஒருவரான அத்ரியின் மனைவி மிஸஸ் அத்ரி அவர்களுக்கு, சில தினங்கள் முன்புதான் ஒதுக்கிக் கொடுக்கப்பட்ட புது வீட்டின் சுவர்கள் ஒருநாள் கூத்தில் அசிங்கமானதைப் பற்றி மனம் தாளவில்லை. சாயங்களை அழிக்க வேலைக்காரனை ஏவிக் கொண்டிருந்தாள். புதிதாய் நிர்மாணிக்கப்பட்ட அந்தக் காலனியின் ஒவ்வொரு வீடும் இப்படித்தான் வர்ண-விகாரப் பாழடைந்து கிடந்தது.

மிஸஸ் அத்ரி, அகலக்கரை போட்ட பங்களூர்ப் பட்டுச் சேலை அணிந்து கொண்டிருந்தாள். அரக்கு வர்ணப் பட்டும் சிவப்பு ரவிக்கையுமாக, வைர மணிந்த செவியுடன் அந்த வீட்டு வாசலுக்கு அவள் கண்யம் கொடுத்துக் கொண்டு நின்றாள்!

அதிகாரிகளான கணவன்மார்கள் ஆபீஸிலிருந்து திரும்பும்வரை ஒவ்வொரு காலனியும் அல்லி ராணியின் சாம்ராஜ்யம்தான். வேலைக்காரர்கள் வேலை செய்துவிட, இம்மனைவிமார்கள் தினத்தின் பெரும் பாகத்தை உபயோகமற்ற பேச்சிலோ, வேலைகளிலோ கழிப்பார்கள்.

மிஸஸ் ப்ருகு வீட்டில் பொழுது போக்க யத்தனித்தாள். ரேடியோவில் நல்ல பாட்டுக்கள் இல்லை. லகுவான படிப்பிற்கான பத்திரிகைகளைப் படித்தாகிவிட்டது. அவள் முதல்நாள் வாங்கின சின்னாளப்பட்டிப் புடவையின் ஸெலக்ஷன் தேவலையா என்று மிஸஸ் அத்ரி, மிஸஸ் சோணாசலம், மிஸஸ் ரகுவீர் இவர்களுடைய அபிப்பிராயத்தைக் கேட்க, அந்தச் சிவப்பில் கருப்புக் கட்டம் போட்ட சேலையை அரைக்கசைத்து வந்தாள். இந்தப் புது காலனிகளில் இன்னும் கடைத் தெருக்கள் ஏற்படவில்லையாகையால், களிமண் முதல் வைரம்வரையிலும் அங்காடிக்காரர்கள் வியாபாரத்திற்காகக் கொண்டு வருவார்கள். அவர்கள் ஆபீஸ் நேர ஆரம்பத்திற்குப் பின்தான் ஒருவர் பின் ஒருவராக அவரவர்களுடைய பண்டங்களைக் கூவிக்கொண்டு வருவார்கள். ஒரு விநாடி விடாமல் ஏதாவது ஒரு கூடைக்காரன் கூவிக்கொண்டேயிருப்பான். பொழுதுபோக்கிற்காக அங்காடிக்காரர்களைக் கூப்பிட்டு, விலை விசாரிக்கும் மிஸஸ்கள், மலிவு என்று நம்பிக்கையூட்டப்பட்டு, எதையாவது வாங்கினபடியிருப்பார்கள்!

மிஸஸ் ப்ருகு இப்படித்தான் முன்நாள் மத்யானம் வீட்டு போர்டிகோவில் பிரம்பால் பின்னப்பட்ட பச்சை நிறம் கொடுத்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டிருந்தபோது, இன்னும் சரியாகச் செப்பனிடப்படாத சாலை வழியே சைக்கிள்மீது பெரிய பொதியைக் கட்டிக் கொண்டு ஓர் வியாபாரி போய்க் கொண்டிருந்தான்.

"என்னப்பா மூட்டை அது?" என்று மிஸஸ் ப்ருகு வினவினாள்.

சைக்கிள் வியாபாரி சைகிளை வாசல் பூங்காவிற்கு வெளியே நிறுத்தி, மூட்டையைத் தூக்கிக்கொண்டு, ஒற்றையடிப் பாதை வழியாக மிஸஸ் ப்ருகுவை அணுகி, மூட்டையைக் கீழே வைத்தான். நெற்றி வியர்வையை வழித்துச் சுண்டி எறிந்துவிட்டு மூட்டையின் முடிச்சை அவிழ்த்தான்.

"சின்னாளப்பட்டிப் புடவையுங்க" என்று கருப்பு முகத்தில் வியாபாரி வினய வெள்ளைச் சிரிப்பை இழையவிட்டுக்கொண்டு கூறியபடியே, மூட்டையின் நான்கு தலைப்புகளையும் தரையில் தள்ளினான்.

வானவில்லை ஒடித்து ஒடித்து மடித்து வைத்ததுபோல, புடவையடுக்கு வெளிப்பட்டது!

மஞ்சள் உடலில் நீலக்கரை போட்ட முதல் சேலையை லாகவமாகப் பிரித்து, மிஸஸ் ப்ருகுவின் நாற்காலியிலிருந்து நீண்ட, கடியாரம் கட்டிய இடக்கையில், அவன் தரையிலிருந்தபடியே கொடுத்தான். ஒன்றன்பின் ஒன்றாக ஏழெட்டைக் கழித்துக் கட்டினபின், சிவப்பில் கருப்புக் கட்டங்களிட்ட புடவையின் முறை வந்தது. வியாபாரியின் அனுபவக் கண்கள் மிஸஸ் ப்ருகுவிற்கு இந்தப் புடவை பிடித்துவிட்டது புரிந்துவிட்டது.

"இது ஒங்க உடம்புக்குச் சரியான மோஸ்தருங்க" என்றான் அவன்.

"இதன் விலை?"

"இன்னும் பாக்கி ரகங்களையும் பாருங்க. அப்புறம் விலை பேசலாமுங்க. விலையெல்லாம் சகாயம்தான்" என்று நீட்டி முழக்கினான் வியாபாரி.

"இது எந்த ஊர் புடவை?"

"அசல் சின்னாளப்பட்டி. இதோ பாருங்க விலாசம். இப்பதான் கரோல் பாகுலே மிஸஸ் துரைசாமி அய்யர் அம்மாங்க நாலு எடுத்தாங்க. லோடி காலனிலே மிஸஸ் கோவாலப்பிள்ளை வீட்டு அம்மா இரண்டு எடுத்தாங்க. விநயநகரிலே மிஸஸ் சுந்தரப்பிள்ளை அம்மாவுக்கு ஒரு சேலை கொடுத்து இரண்டு மாசமா நனைச்சு கட்டறாங்க.." சேலை கட்டிய மாதரின் பட்டியல் வளர்ந்துகொண்டே இருந்தது!

வியாபாரி ஊரிலில்லாதவர்களைப் பேர் சொல்லி அழைப்பதில் பெரிய கவனக்

காரனுக இருந்ததுடன், டெல்லி அதிகார வர்க்க மனைவிமார்களுள் பொதுவாக வழங்கப்படும் "மிஸஸ்" பதத்திற்கு பிரா தான்யம் கொடுத்துப் பேசவும் தெரிந்து கொண்டிருந்தான். மிஸஸ் ப்ருகுவிற்கு வேறு புடவைகளில் நாட்டம் இல்லை என்று கண்டுகொண்ட வியாபாரி, புடவையின் நேர்த்தியைப் புகழலானுன்.

"கெட்டிச் சாயம், பட்டு தோத்துடும். இப்ப யாருங்க பட்டை லச்சியம் பண்ணராங்க? பட்டைப் போட்டு எவர்ஸில்வர் வாங்கினாலும் பிரயோசனம் உண்டு. சின்னாளப்பட்டிதாங்க இப்பல்லாம் பெரிய மனுசங்க கட்டறுங்க..." என்று அடுக்கினான்.

"அது சரி; விலையென்ன?"

"இதே சேலையை இருபத்தி ஒன்பதுக்கு இர்வின் ரோடுலே இருக்காங்களே மிஸஸ் கந்தப்பா அம்மா, அவங்களுக்குக் கொடுத்தேன். ஒங்களுக்கு வேணும்னு எட்டணு தள்ளிக்கோங்கோ."

"அஞ்சு கஜம் பட்டுப்புடவை சரிகையில்லாம கிட்டத்தட்ட இந்த விலைக்கு வருமே?"

"பட்டைத் தள்ளுங்க. யாரு அதைக் கட்டறுங்க. அதான் முன்னியே சொல்லிட்டேனே, பொதுநாயக ஜனநாயகத்திலே வெள்ளி, பட்டு இதுக்கெல்லாம் மௌசு ஏது? வெள்ளி மாதிரி இருக்கற எவர்ஸில்வர், பட்டு மாதிரி இருக்கிற சின்னாளப்பட்டி–இப்படித்தானே பாஷன் இப்போல்லாம்.." என்றான் வியாபாரி.

மிஸஸ் ப்ருகுவின் ஆடை பீரோவில், அடுக்கடுக்காய், திரௌபதை வஸ்திராபஹரணத்தில் குவிந்த புடவைகள் அவ்வளவும் அவளிடமே அடைக்கலமானது போல, பட்டுப்புடவைகள் இருந்தன. சின்னாளப்பட்டி புடவை ஒன்றுகூட இல்லை. ஸாப்ரூ ஹௌஸ் கச்சேரிகளிலும், கன்னுட்ஸர்கஸிலும், கறிகாய் மார்க்கெட்டுகளிலும் பெரிய கார்களில் வரும் எல்லா மிஸஸ்களும் சின்னாளப்பட்டிகளை அரைக்கசைத்து எழுந்தருளி வளையவர, தான் மட்டும் பிரளய காலத்திற்கும் பிராசீனமான பட்டுப் புடவையில் சாத்துப்படி செய்துகொண்டு போவது அவ்வளவு ரஸமாக அவளுக்குப் படவில்லை.

"விலை என்ன இருந்தாலும் ரொம்பத்தான். சொல்லிக் கொடுத்துட்டுப் போங்கோ" என்றாள் மிஸஸ் ப்ருகு.

"நீங்கதான் சொல்லணும். கட்ற விலையாயிருந்தா கொடுத்துட்டுப் போகாமே கட்டி எடுத்துக்கிட்டா போவேன்?" என்று சொல்லியபடி மூட்டை கட்டுவதை நிறுத்தாமலும், துரிதப்படுத்தாமலும், மிஸஸ் ப்ருகுவின் ஆவலை அளந்து கொண்டிருந்தான், அந்தக் கெட்டிக்கார வியாபாரி!

"இருபத்திரண்டுக்குக் கொடுங்க" என்றாள் மிஸஸ் ப்ருகு.

"கட்டாதுங்க. அஞ்சாவது கொடுங்க."

"மூணுன்னு போடலாம், போட்டுக்குங்கோ".

"சரி, நாலுதான் கொடுங்க. உங்களுக்காக!"

மிஸஸ் ப்ருகு சாமர்த்தியமாகப் பேரம் பண்ணிவிட்டதாக எண்ணி, தன்னைத் தானே மெச்சிக்கொண்டு, வியாபாரி கொடுத்த புடவையை உள்ளே எடுத்துக் கொண்டுபோய் வைத்துவிட்டு, பணத்தை எண்ணிக்கொண்டு வந்து வியாபாரியிடம் கொடுத்தாள்.

அந்தப் புடவையைக் காட்டித் தன் பேரத்தின் சாமர்த்தியத்தையும், புடவையின் உயர்வைப் பற்றிய போற்றுதலையும் கேட்க, அவள் மிஸஸ் அத்திரியின் வீட்டிற்கு மாத்யான்னிக விஜயம் செய்தாள்.

"எங்கே புடவை வாங்கினேள்? ரொம்ப நன்னு இருக்கே?" என்று மிஸஸ் அத்திரியே தன்னை நோக்கி எதிர்கொண்டு அழைப்பதைக் கண்ட மிஸஸ் ப்ருகு, அப்படியே புளகாங்கிதம் அடைந்தாள்.

"நேத்திக்கு வாசலிலே வந்துது, வாங்கினேன். விலை இருபத்தி நாலுதான். மலிவில்லை? பட்டுப் புடவையைவிட இது நன்னுயில்லை" என்று மிஸஸ் ப்ருகு, தேவையான பதிலிற்கு ஏற்ற கேள்விகளைப் போட்டபடி முன்னேறினாள்.

"இப்போ பட்டைக் கட்டிண்டு வெளிலே போகவே வெக்கமா இருக்கு. யாரு பட்டைக் கட்டிக்கறு? தோட்டிலேருந்து தொண்டமான்வரையிலும் சின்னாளப்பட்டிதான் கட்று! மிஸஸ் ப்ருகு, வியாபாரி வந்ததை எங்கிட்டயும் சொல்லப்படாதோ?"

இவர்கள் பேசிக்கொண்டிருக்கும் போது வாசலில் ஒரு டாங்கா வண்டி வந்து நின்றது. அதைவிட்டு சின்னாளப்பட்டி சேலை உடுத்திய ஒரு அம்மாளும், நடுவயதைத் தாண்டிய ஒரு புருஷரும் இறங்கினார்கள்.

"யாரையோ தேடிண்டு வரா" என்றாள் மிஸஸ் ப்ருகு.

"ஆமாம், மிஸஸ் ப்ருகு; டில்லிக்குப் புதுசுபோல இருக்கு."

டாங்காவை விட்டு இறங்கிய இருவரும் வீட்டுக் குறட்டில் நிற்கும் இரண்டு மிஸஸ்களையும் அணுகினார்கள்.

"ஏன்னு, அவர் பேரையும் மறந்துட்டு வீட்டு நம்பரையும் மறந்துட்டு வந்துட்டேளே? இப்படியா ஒரு ஞாபக மறதி?" என்று கணவரை நொந்தபடி அந்த அம்மாள் வந்தாள்.

"உனக்கு அந்தப் பொண் பெயர் நினைவில்லையா?"

"சீதாலட்சுமின்னு பேரு. அவளை நான் பார்த்ததே இல்லை. புருஷா பேரைச் சொல்லி விசாரிக்கறதா, பொம்மனாட்டி பேரையா?"

"மறந்து போச்சு. வேறு என்ன செய்யறது?"

இருவரும், மிஸஸ்கள் இருவரையும் கிட்டினார்கள். "யாரைத் தேடறேள்?" என்றாள் மிஸஸ் ப்ருகு.

"எங்கூர் பிள்ளையாண்டான் இங்கே வேலையா இருக்கான். அவனை மொட்டை, மொட்டைன்னு ஊரிலே கூப்பிடறது. அவன் முழுப்பெயரையும் அட்ரஸையும் இவர் வாங்கி வைச்சுண்டு இருந்தார். காசி, கயா, அலஹாபாத்னு பாத்துட்டு வரபோது கெட்டுப்போச்சு. இங்கே கரோல்பாகிலே வந்து இறங்கியிருக்கோம். மொட்டையைப் பார்க்கலாம்னு வந்தோம்."

இரண்டு மிஸஸ்களும் "திருதிரு" என்று விழித்தார்கள். வீட்டுச் செல்லப் பெயர்கள் உத்தியோகத்திற்கு வந்த இடத்தில் மறைந்துபோய், மறந்துகூடப் போய் விடுகின்றன.

"எந்த ஊர் உங்களுக்கு?" என்று மிஸஸ் ப்ருகு கேட்டாள்.

"கும்பகோணம்" என்றாள் வந்த அம்மாள்.

"அவருக்கும்தான்" என்றாள் மிஸஸ் அத்ரி.

"அந்தப் பெண் பேரு தெரியும். சீதாலட்சுமி."

"சீதாலட்சுமியா, கேள்விப்பட்டதில்லையே?" என்றார்கள் மிஸஸ் அத்ரி, ப்ருகு இருவரும் சேர்ந்து ஒருமித்த குரலில்.

"அந்தப் பொண்ணுக்கு தேவனும் பேட்டை. பெரிய இடத்துப் பொண்ணு".

"தேவனும்பேட்டையா?" என்றாள் மிஸஸ் அத்ரி குதூகலத்துடன். அது அவள் பிறந்தகம் ஆச்சே!

"அவ அப்பா தேவனும்பேட்டை கிருஷ்ண அய்யர்னு."

"அய்யோ அம்மாமி, அது நான்தான்! என்பேர்தான் சீதாலட்சுமி. அது மறந்தே போயிடுத்து, மிஸஸ் ப்ருகு, நாம எல்லாரையும், 'மிஸஸ் அவர்,' 'மிஸஸ் இவர்'னு சொல்லற பழக்கத்திலே. அவர் பேர் 'மொட்டை'ன்னும் தெரியாது" என்ற சீதாலட்சுமி, "வாங்கோ உள்ளே. யதேச்சையா சரியான வீட்டையே புடிச்சுண்டு வந்துட்டேள்! இப்ப எல்லாம் நம்ம பக்கத்திலேயும் சின்னாளப்பட்டிதான் அதிகம்போல இருக்கு. இந்தா மிஸஸ் ப்ருகு, நாளையிலேருந்து 'மிஸஸ் ப்ருகு' என்கிறது ரங்கநாயகி; 'மிஸஸ் அத்ரி'ங்கறது சீதாலட்சுமின்னு ஒரு பட்டியல் போட்டு வச்சுக்கணும். சொந்தப் பேரை மறக்கறது என்ன அவமானம், போ! வாங்கோ ரெண்டு பேரும் உள்ளே. அவரும் வர நாழியாச்சு. இந்த சின்னாளப்பட்டி புடவை அங்கேயெல்லாம் என்ன விலை?" என்று வந்தவர்களை வரவேற்றாள்.

ஊரிலிருந்து வந்த தம்பதிகள் டில்லி வாசிகளின் போக்கே புரியாமல் திக்குமுக்காடிய உணர்வுடன் பண்டைக் கதையில் பழைய "ஈ" தன் பெயரை மறந்து, குதிரை கனைக்கும்போது ஞாபகப்படுத்திக்கொண்ட பாட்டி கதையை எண்ணியபடி உள்ளே பிரவேசித்தனர்.

*

துப்பறியும்
சுப்புடு
பிரபல ஹோட்டல் ஆனந்தாவில் அன்று பெரிய விருந்து. கவர்னர், மந்திரிகள் மற்றும் கனவான்கள் பலரும் வந்திருந்தனர். சுப்புடுவும் வந்திருந்தான்.
சுப்புடு புதிதாக போட்டோகாமிரா வாங்கியிருந்தான். படம் எடுக்கக் கற்றுக்கொண்ட சுப்புடு, அதை எங்கு போனாலும் கூடவே எடுத்துப் போவது வழக்கமாகி விட்டது
விருந்து முடிந்ததும் அந்த உள்ளவர்களைப் போட்டோ பிடித்தான்
ஹோட்டல் ஆனந்தாவைப் போட்டோ பிடிக்க இதுதான் சரியான சமயம். ரொம்ப ஜோராயிருக்கும்
நல்ல தருணத்தில் ஒரு கனவான் வெளிவருகிறார். அவரையும் சேர்த்து எடுத்து விடுகிறேன்.
கிளிக்!
விருந்துக்குப் பிறகு பிரசங்கம் நடக்கும் மணிக்கணக்காகும். அதற்குள் பக்கத்திலிருக்கும் போட்டோ ஸ்டுடியோவிற்குப் போய் இதை 'டெவலப்' செய்து ஒரு 'ப்ரிண்ட்' போட்டுக் கொண்டு வந்து விடலாம்
இது இப்படியிருக்க, ஹோட்டல் ஆனந்தாவில் ஒரே அமர்க்களம்! கூச்சல்! விருந்துக்கு வந்திருந்த ஜ்வெல்லர் கோவிந்தசாமி பிள்ளையின் 'பர்ஸ்' காணாமற்போனதே காரணம்
எவ்வளவு ரூபாய் சார் இருந்தது?
ரூபாய் நோட்டுகளாக ஐயாயிரம் வைத்திருந்தேன். எனக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்த கனவான் பேரில்தான் சந்தேகம். அவர் எங்கே காணோம்?
அந்தக் கனவானைத் தேடுவதில் வந்திருந்தோர் அனைவரும் முழுமூச்சுடன் ஈடுபட்டனர். ஆனால் அவர் ஹோட்டல் ஆனந்தாவில் எங்குமே இல்லை.
இதற்கிடையில் ஹோட்டல் மானேஜர் போலீஸ் கமிஷனருக்குத் தகவல் கொடுத்தார்.
கமிஷனர் சார்! விருந்தில் ஒரு பெரிய நபரின் பணப்பை திருட்டுப்போய் விட்டது. நீர் வந்து அதைக் கவனித்தால் நல்லது.
சுமார் ஒரு மணி நேரத்திற்குப் பிறகு:
என்ன சுப்புடு! எங்கிருந்து வருகிறாய்? இங்கே பெரிய திருட்டு நடந்து விட்டதே! தெரியுமா உனக்கு?
தெரியாதே! நான் சிறிது நேரத்திற்கு முன் இந்த ஹோட்டலைப் போட்டோ எடுத்தேன். அதை ஒரு 'ப்ரிண்ட்' போட்டுக் கொண்டு வந்திருக்கிறேன். இதுதான் அது.
ஆஹா! இந்த ஆசாமியைத்தான் நாங்கள் தேடிக்கொண்டிருந்தோம்! இவர் ஏறிச் சென்ற காரும் இதில் காணப்படுகிறதே! பலே! சுப்புடு, பலே! பலே!
சுப்புடு சர்வக்ஞன் அப்பா!
சுப்புடு எடுத்த போட்டோவின் உதவியால் திருடன் கைது செய்யப்பட்டான்.
தொடரும்

அன்பின் எல்லை

சுகி

திருநெல்வேலி ஜங்ஷன் பிளாட்பாரத்தில் கண்ணைக் கசக்கிக்கொண்டு நின்றேன். சற்றுமுன்வரை சிரிப்பும் விளையாட்டுமாக இருந்தவன், முதுகில் சிலுசிலுவென்ற தூற்றல் விழுந்ததும், என் மனத்துள்ளும் சிந்தனை பிறக்கவே அழுகை வந்தது. ஆறு வருடங்களுக்கு முன், கொழும்பு சங்கரம் பிள்ளையை மரியாதையுடன் அனுப்பிய கௌரவம் பலருக்கு இருந்தது. இன்று, நட்புக்குக் கட்டுப்பட்ட என்னைத் தவிர யாரும் இல்லை. மேல்வானத்துச் சிவப்பு திடீரென்று மங்கி, சூரியஒளி மறைந்து மேகத்துள் பம்பிக்கொள்ள, இருள் பரவ ஆரம்பித்து; மழை ஓங்கி ஒரு பாட்டம் அடித்தது. கம்மென்ற மண்வாசனை எனக்கு இன்னும் அதிகமான பழைய எண்ணங்களைக் கிளறிற்று.

சங்கரம் பிள்ளை தம் மனைவி மீனாட்சியுடன் கொழும்புக்குப் பிரயாணம் ஆன தினத்தன்று ஒரே மழை. அதுவும் திடீரென்று பிடித்துக்கொண்டது. புதுப் பெண், புது மாப்பிள்ளையை வழியனுப்ப ஏகப்பட்ட கூட்டம். அதுவும் சங்கரம் பிள்ளையின் துணிச்சலுக்கு ஆதரவு தரும் கூட்டம். பணமுள்ளவர்களுக்குத்தான் பணத்தின் அருமை தெரியும் என்ற வாக்கைப் பொய்ப்பிக்கும் உள்ளத்தோடு நடந்த மாதிரி அமைந்தது அவர் காதலும் கல்யாணமும்.

கொழும்புச் சீமைக்குச் சென்று, அங்கேயே குடியிருப்பு உரிமை பெற்றவருக்கு பணக்கார இடத்தில் பெண் கொடுக்க அஞ்சினார்கள். அவர் தகப்பனாரோ சம்பாதித்தது போதும், ஊரோடு வாசலோடு இருந்தால், தகுந்த இடம் பார்ப்பதாகச் சொன்னார். ஆனால், விதியல்லவா இவர்கள் எல்லாரையும் ஆட்டிக்கொண்டிருக்கிறது! சங்கரம் பிள்ளை எதிர்பார்த்தாரா, மீனாட்சி அம்மாள் மனைவியாக வரப்போவதாக? மீனாட்சி அம்மாள் முதலியார் சாதி. இவர்கள் வீட்டுக்கு அடுத்த வீடு. அந்தப் பெண்ணுக்கு இருமுறை நிச்சயமாகி, இரண்டு முறையிலும் நிச்சயம் செய்யப்பட்டவர்கள் காலமாகிவிட்டார்கள். மூன்றாம் முறையாக நிச்சயம் ஆகியிருந்தது. இந்தத் தகவல் அறிந்த மாப்பிள்ளை வீட்டார் மறுத்துவிட்டார்கள்; மீனாட்சி, தான் வாழ்வதைவிடச் சாவது மேல் என்று முடிவு கட்டினாள்.

மீனாட்சி யாருக்கும் சொல்லாமல், தன் வீட்டுக்குப் பின்னால் இருந்த கிணற்றிலே குதித்துவிட்டாள் இரவு சமயம். அவள் விழுந்தபோது இரண்டாம் ஆட்டம் சினிமாவுக்குப் போய்வந்த சங்கரம் பிள்ளையைத் தவிர யாருக்கும் கேட்கவில்லை. பக்கத்து வீட்டுக் கிணற்றடியில் சப்தம் கேட்கவே, ஓடிப்போய் உள்ளே குதித்தார்; மூழ்கிக்கொண்டிருந்த மீனாட்சிக்கு உயிர் கொடுத்தார். மீனாட்சியோ தன் பரிதாப வரலாற்றைச் சொல்லி அழுதாள். இன்றில்லாவிட்டால் இன்னும் சில தினங்களில் தான் சாகப்போவதைத் தடுக்க முடியாது என்றாள். சங்கரம் பிள்ளையின் உள்ளத்தில் உணர்ச்சியும் அன்பும் குமுழியிட்டன.

•

"சாவுக்கு மத்தியில்தான் நாம் வாழ வேண்டும். அதற்காக அஞ்சினால் நடப்பது என்ன?" என்றார். மீனாட்சியின் கடுகடுப்பையோ மனக்கசப்பையோ அவர் அறியார்.

"நீங்கள் காப்பாற்றிவிட்டால் நான் பிழைத்துக்கொள்வேன் என்பது என்ன நிச்சயம்?"

அவளது கவலையும் கண்ணீரும் அவர் உள்ளத்தில் ஊடுருவின.

"அப்படியானால் என்னை மணம் செய்து கொள்ளச் சம்மதமா?" என்றார்.

"உங்கள் தாய் தந்தையர் ஒப்புக் கொள்ளமாட்டார்கள்."

"ஒப்புக்கொண்டால்?"

மீனாட்சி பேசவில்லை.

அவ்வளவு சுலபமாக யாரும் ஒப்புக் கொள்ளவில்லை. சிரித்துப் பேசினார்கள். சங்கரம் பிள்ளையின் வாக்கு ஒருபுறம்; மீனாட்சியின் வசீகரமான வனப்பு ஒருபுறம்; எல்லாவற்றுக்கும் மேலாக இலங்கை பெர்மிட் விசா காலாவதியாகும் தேதி மற்றொரு புறம். சங்கரம் பிள்ளை வீட்டார் எதிர்ப்பு மிகவும் பலமானது. இதற்கு எதிராகத் திருமணத்தைக் கோவிலில் நடத்தினார். என்

போன்ற நண்பர்கள் அதை ஆதரித்தோம். உண்டோம். உல்லாசமாகப் பேசினோம். அந்தக் கலியாணத்திற்கு பத்தாம் பசலிக் கிழடுகளும், கிழட்டு உள்ளம் படைத்த வாலிபர்களும் வராமற் போனால் என்ன?

ஃ ஃ ஃ

சங்கரம் பிள்ளையும் – மீனாட்சியம்மாளும் ரயில் ஏறினார்கள். ரயில் நிற்கவில்லை. இருவரும் கொழும்புக்குப் போனார்கள்; அவர்கள் போகும்போது கூட்டம் வந்தது. உற்றாரும் உறவினரும் வரவில்லை. நண்பர்கள் வந்தார்கள். ரயில் வர இன்னும் அரை மணி இருந்தது. திடீரென்று எப்படியோ மழை வந்தது. ஊரையே அழிப்பதுபோல மழை. ரயிலுக்குள் இருவரையும் நான் குடை கொண்டு ஏற்றினேன். அந்த மழையின் நினைவு இப்போது வருகிறது. வந்தால் என்ன? வருகின்ற ரயிலில் மீனாட்சி அம்மாள் இல்லை. சங்கரம் பிள்ளை மாத்திரம் தம்முடைய ஐந்து வயது மகள் 'ரதி'யுடன் வருகிறார்.

ரயில் வந்து நின்றது. இரண்டாம் வகுப்புக்குள்ளிருந்து ஒன்றரை டிக்கட்டுகள் இறங்கின; ரதியென்று பெயர் சரியாகத்தான் வைத்தார். அதே மீனாட்சியின் அகலக் கண்கள். இனிமையையும் குழைவையும் தேக்கி வைக்கும் பார்வை, தியாகத்தின் சின்னம் மறைந்து அதன் அடியிலே சிறு கன்று வளர்ந்து நிற்பது போல என் கண்ணிலே பட்டது. சங்கரனைக் கட்டிக்கொண்டு அழுதேன். எவ்வளவு சிரிப்போடு வழியனுப்பினேனோ அத்தனை துக்கத்தோடு அழுதேன். அவன் கண்களிலே துளி கவலை இல்லை. அழுது அழுது உள்ளத்தில் தழும்பு ஏறிவிட்டதோ? இனி அழுது பயனில்லை என்ற வேதாந்தம் பிறந்ததோ? அவர் துக்கத்தை மட்டும் காட்டிவிட்டு, "அழுது பயன் என்ன? நான் இனி அழுது பயன் இல்லை" என்றார். அதிகமான துன்பத்தைக் கண்டவர்கள் நெஞ்சம் கல்லைப்போல மாறி விடுகிறது. அப்படித்தான் கொழும்பு சங்கரம் பிள்ளையின் நெஞ்சும் கட்டுப்பட்டிருக்கிறது.

"இதுதான் என் குழந்தை ரதி. இவளைத் தெரியுமா?" என்று கேட்டார், மஞ்சள் நிறத்தில் பாவாடை உடுத்தியிருந்தது, பச்சையில் மேல்சட்டை, உலகத்து அழகெல்லாம் அந்தக் கன்னக் கதுப்பிலே வந்து குடிகொண்ட மாதிரி இருந்தது! சிரிப்பிலே மயக்கம் தரும் அன்பு.

"அம்மாவைப் போலவே இருக்கிறாள்."

"ஆமாம். நான் எதற்காக வந்தேன் என்று தெரியுமல்லவா?"

கடிதத்தில் எழுதியிருந்தார் நண்பர். அவர் வரவு மிகவும் தொல்லை நிறைந்தது.

தன் தாய் தந்தையர் விருப்பத்தைச் சம்பாதிக்க அவர் நேராக என் வேண்டுகோளை மறுத்து அங்கே போய் இறங்கினார். அவர்களுக்காக இவர் பொன்னும் பொருளும் போட்டு என்னவெல்லாமோ வாங்கி வந்திருந்தார். மீனாட்சியின் தமையன்கூட ரெயிலடிக்கு வராமல் போனது ஆச்சர்யம். ஆனால், இரண்டு வருடங்களுக்கு முன் மீனாட்சியை வரவேற்க அவள் அண்ணன் வந்திருந்தார். டாக்ஸி வைத்துக்கொண்டு வந்தாரே!

வண்டியில் நாங்கள் போய்க்கொண்டிருந்தபோது, மீனாட்சிக்கு நேரிட்ட ஆபத்து பற்றிச் சொன்னார். அதைவிட முக்கியமாக தமது வைராக்கியத்தையும் தெரிவித்தார்.

“இனிமேல் எனக்கு வாழ்க்கையில்லை. அவளைப்போல ஒரு பெண் பூமியில் பிறக்கலாம். அவள் வாழ்க்கைப்பட்டது போல, குடும்பம் நடத்தியதுபோல நடத்த முடியாது. அவளுடைய அன்பின் நினைவாக நான் இனி மணம் செய்து கொள்ளாமல் இ ரு க் க ப் போகிறேன். காரணம், வெகு அற்பம். அவள் திடீர்ச் சாவுக்கு ஒரு மாதத்திற்கு முன், நான் கிட்டங்கியிலிருந்து வந்து கதவைத் தட்டினேன். அவள் சிவந்த கண்களோடு கண்ணீர் மல்க கதவைத் திறந்தாள். அழுவதற்குக் காரணம் என்ன? ஒன்றும் இல்லை. எங்கள் வீட்டுக்கு நாலாம் வீட்டிலே ஒரு சிங்களவர். அவர் தம் குழந்தையைப் போட்டு ரத்தம் சொட்ட அடித்து விட்டார். அந்தக் குழந்தையும் ரதியும் சிநேகிதர்கள். ரத்தம் சொட்டச்சொட்ட ஓடிவந்த குழந்தையை மீனா பார்த்தாள். அதற்கு மருந்து போட்டாள். மறு கணம் குழந்தையின் தகப்பன் வந்தான். அதைக் கரகரவென்று இழுத்துப்போய் உதைத்தான். காரணம் ஒன்றுமில்லை, அது தாயில்லாக் குழந்தை. தன் இளம் மனைவியின் வார்த்தைக்கு மதிப்புக் கொடுப்பதற்காக சிறு பசலையை அடித்தான்!”

எனக்கே கேட்க முடியவில்லை. பெண்கள் இதயத்தில்தான் தியாகமும், அன்பும் பிறப்பதாகச் சொல்லுகிறார்கள். அங்கேதானா கொடுமையும் பிறக்கிறது?

“மீனாவின் உள்ளத்திலே பிறந்த அன்பு எத்தகையது?” என்றேன்.

“கேளுங்கள். மீனா அழுததன் காரணம் இன்றைக்குப் பலித்துவிட்டது. தன் மகள் ஒரு வேளை தாயை இழந்தால்? நான் மறு தாரம் கட்டிக்கொண்டால்?... அன்றைக்கு என் கையால் ரதி அடிபடுவாள். ரத்தம் சொட்டச் சொட்ட நான் உதைப்பேன். இதை எண்ணித்தான் அவள் அழுதாள். கண்கள் சிவக்கச் சிவக்க அழுதாள். எனக்கு வேடிக்கையாக அன்று பட்டது. இன்று என்ன ஆகிவிட்டது? மீனா எதை எண்ணி அழுதாளோ, அந்தக் கதி எனக்கு வரக்கூடாது. ஆனால், ஒரு பெண்ணைப் பெண்ணுள்ளத்தோடு வளர்க்கும் பொறுமை ஆணுக்கு இல்லை. என் பெற்றோரிடம் கெஞ்சிக் கூத்தாடி ரதியை இங்கே விட்டுப்போகவே வந்தேன்.”

சங்கரம் பிள்ளையின் உள்ளம், அவர் தம் மனைவி மீது கொண்டுள்ள ஆழ்ந்த அன்பு, எனக்குப் புலனாயிற்று. நான் உணர்ந்து என்ன பயன்?

வண்டி வாசல்படியில் நின்றதும் நான் இறங்கி, “என் வீட்டுக்குப் போகிறேன். உன்னுடைய தந்தை, உன் திருமணத்திற்குப் பின் என்னிடம் பேசியது இல்லை” என்றேன்.

நான் இ ற ங் கி ப் போய்விட்டேன். வண்டி நின்றதை ஜன்னல் வழியாக அவர் தாயார் பார்த்தாள்.

“அந்தப் பயல் உள்ளே கால் வைத்தால் வெட்டு ஒன்று துண்டு இரண்டு ஆகும்” என்று சொன்னார் அவர் தந்தை. அந்தப் பயமுறுத்தலுக்கும் அஞ்சாமல் உள்ளே போனதுதான் ஆச்சரியம்.

ஃ ஃ ஃ

கொழும்பு சங்கரம் பிள்ளை வந்து ஒரு வாரம் ஆயிற்று. என்னைப் பார்க்க வாராதது ஆச்சரியம்.

திடீரென்று வந்தார். அவர் பின்னால் ரதி குதித்துக்கொண்டு வந்தாள். உள்ளே இருந்த என் தங்கை “வாம்மா ரதி. உனக்கு நல்ல பெயர்தான்” என்றாள்.

“நான் வராததைப்பற்றி உங்களுக்குக் கோபம் இருக்கலாம். இந்தக் குழந்தையைச் சிலோனில் எங்காவது தள்ளியிருக்கலாம். பாழ்பட்ட இந்த நாட்டிற்கு வந்ததே என் தப்பு.”

அவர் எல்லாரிடத்தும் இடிபட்டிருக்க வேண்டும்.

“ஏன், என்ன காரணம்?”

“என் தாய் தந்தைகூட என்னிடம் இரக்கம் காட்டவில்லை. பணம் மாதம் நூறு அனுப்புகிறேன் என்று சொல்லுகிறேன். குழந்தை வேண்டாமாம்.”

“அப்படித்தான் சொ ல் லு வார்கள். விட்டுவிட்டுப்போனால் பார்த்துக்கொள்வார்கள். இதற்காக வருந்துவானேன்?”

“பக்கத்து வீட்டுக்காரரைப்பாருங்கள், தன் மனைவிக்கு ஏதாவது என்றால், தானே சமையல் செய்கிறாரே! நீங்கள் அது மாதிரி செய்தது உண்டா?”

“என்னையும் அந்த அம்மாளுக்குச் சமைத்துப் போடச் சொல்கிறாயா, என்ன?”

“என் தகப்பனார் சொல்லுகிறார். குழந்தைமீது எவ்விதமான கோபமும் இல்லையாம். அவனவன் செய்த தவறுதலை அவனவனே அனுபவிக்க வேண்டுமாம். அவர் சொல்லுகிற பெண்ணை இப்போதாவது மணந்துகொண்டால் இந்த ரதியை இங்கே வளர்ப்பாராம். எப்படி இருக்கிறது நியாயம்?”

நான் என்ன பேசுவது? மீனாமீது கொண்டுள்ள பாசம் எனக்குத் தெரியும். வண்டியில் வரும்போது சொன்னார். மீனாவின் வேண்டுகோள்படி யாரையும் மணந்துகொள்வதில்லை, என்று சொல்லியிருப்பதையும் எண்ணினேன். தகப்பனார் தட்டிக்கழிப்பதற்கு நல்ல பாயிண்ட் பிடித்தார். பையன் மறுதாரம் கட்டவும் போவதில்லை. பெற்ற பெண்ணையும் விட்டுப் போகப்போவதில்லை!

“நான் இனி ஒரு பெண்ணை மணப்பது இல்லை என்பது உறுதி. என் பெற்றோர்தான் இம்மாதிரி என்னைப் பரிதவிக்கச் செய்தாலும், அந்த மீனாட்சியின் தமையன் வீட்டில் கொண்டுவிடப் போனேன். அவராவது நல்லதனமாக ஏற்றுக்கொள்ளலாமே. அதுதான் இல்லை. பணம் அனுப்பும்போது வைத்துக் கொண்டு பராமரிக்க அ ன் பு ள் ள ஒருவர் என் உறவினருள் யாரும் கிடைக்க மாட்டார்களா?”

“மீனாவின் தமையன் என்ன சொன்னார்?”

“பெண்சாதிக்குப் பயந்த பயல்கள் நிறைந்த உலகமாக இருக்கிறது அல்லது புருஷனுக்குப் பயந்த உலகமாக இருக்கிறது. நியாயத்திற்குப் பயந்த உலகத்தைக் காணோம். மீனாவின் அண்ணன் அரைகுறையான மனத்தோடு ஒப்புக் கொண்டார். அன்று அவர் மனைவி ‘பணம் அனுப்புவது என்ன நிச்சயம்? அனுப்பாமல் நிறுத்திவிட்டால் யார் சோறு போடுவது? நோய் நொடியானால் யார் கவனிப்பது? நமது குழந்தை குட்டிகளைக் கவனிக்கவே ஆள் இல்லை. ஒப்புக்கொண்டால் நீங்கள்தான் அதைக் காப்பாற்ற வேண்டும்’ என்று எச்சரிக்கை கொடுத்தாள். மனுஷன் பயந்து மறுத்துவிட்டார்....”

திவலை திவலையாக அவர் கண்களிலே முத்துக்கள் உதிர்ந்தன.

“அழுவானேன்? இங்கே உள்ள பள்ளிக்கூடத்தில், அல்லது கொழும்பில் ஒரு பள்ளிக்கூடத்தில் சேர்த்துவிடுங்கள். உங்களுக்குக் கவலை இராது.”

“உங்களுக்கு அனுபவம் போதாது. பள்ளிக்கூடத்தில் விடுமுறை ஒன்று வருகிறதே. பெண் குழந்தையை வளர்க்கும் திறமையும், சந்தர்ப்பமும் ஆண்களுக்கு ஏது? ஆண்பிள்ளையாக இருந்தால் இங்கே கூட்டிவரப்போவதில்லை. இரண்டையும் வளர்க்கும் திறமை பெண்ணுக்குத்தான் உண்டு. பெண்ணை வளர்க்கும் வாய்ப்பு பெண்ணுக்கு மட்டுமே. புரியும்படியாக அதிகம் சொல்ல வேண்டுவதில்லை. எனக்குக் குடும்பம், வரவு செலவு என்று பிடுங்கல் இல்லாமல் தனியாக வாழப்போகிறேன். ரதிக்கு மட்டும்

யாராவது உதவி செய்தால் போதும்" என்றார்.

"உங்கள் தலைமையாளர் என்ன சொன்னார்?"

"அவர் சொல்வது என்ன? என்ன நெஞ்சழுத்தம் பாருங்கள். அவருடைய மைத்துனியை மணந்து கொள்ள வேண்டுமாம்; சொல்லுகிறார்! நான் திருமணஞ் செய்துகொள்ளவா வந்தேன்? கன்னா பின்னா என்று திட்டி விட்டு, இங்கே வருகிறேன். நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?"

"நான் சொல்வது உங்களுக்குப் பிடிக்கலாம். அதிகமான குழந்தை குட்டிக்காரன். உங்கள் ரதியைக் கூடுமானவரை வளர்க்கிறேன். ஆனாலும் தனியான சலுகை எதுவும் அவளுக்குக் கொடுக்க முடியாது. அதற்கு என் பொருளாதாரம் இடங் கொடுக்காது."

சங்கரம் பிள்ளை என் வீட்டையும், குழந்தைகளின் எலும்புந் தோலுமான நிலைமையையும் நோட்டம்விட்டார். நான் வஞ்சனையின்றி செய்யக்கூடும் என்றாலும் அவர் பணம் முழுவதும் அவர் பெண்ணுக்குப் போய்ச் சேராது என்பதையும் கண்டுகொண்டார்.

"ஆமாம், ரதியை இரண்டு தினங்கள் இங்கே விட்டுப் போகிறேன். ஊரில் என் தாயின் அம்மா பாட்டி இருக்கிறாள். அவளைக் கேட்டுப் பார்க்கிறேன். ஒரு வேளை அவள் என்னோடே வந்தாலும் சரி; இல்லையென்றால் இங்கே ஒரு வீட்டில் இக்குழந்தையை வைத்து வளர்க்க ஒப்புக் கொண்டாலும் சரி. கிராமத்து வரை போய்வருகிறேன். அங்கே போவதற்கு, நாலுமைல் நடக்க வேண்டும். ரதி தூக்கும் குழந்தையும் இல்லை; நடக்கும் குழந்தையும் இல்லை. என்ன சொல்லுகிறீர்கள்?"

நான் ஒப்புக் கொண்டேன். நண்பர் பத்து ரூபாய் நோட்டை உருவி என்னிடம் ஒப்படைத்தார். நான் சிரித்துக் கொண்டு, "இது தேவையில்லை. அவளுக்கு உரியதை வாங்கிக் கொடுப்பேன்" என்று திருப்பிக் கொடுத்தேன். தமது மகளைக் கூப்பிட்டார். ரதி உள்ளேயிருந்த என் தங்கையிடமிருந்து விடுதலை பெற்று வந்தாள்.

"நான் வர இரண்டு நாள் ஆகும். நீ இங்கே இருக்கிறாயா? அடடே, அதற்குள் யார் கலைந்துபோன தலையைச் சீவிவிட்டது?"

கைநீட்டிக் காட்டிற்று, ஜன்னலுக்கு அப்பால் நிற்கும் என் தங்கையை.

"இங்கே இரு. உனக்கு வேண்டியதை வாங்கி வைத்துக்கொள்ள இதோ பணம். நான் வந்து விடுகிறேன். வம்பு செய்யாமல் இருக்க வேண்டும்."

❀ ❀ ❀

குழந்தையென்றால் அதுவல்லவா குழந்தை! சிறிதும் வம்பு செய்யாமல் "போய் வா" என்று உத்தரவு கொடுத்தது. இவ்வளவு நல்ல குழந்தையை யாரும் சந்தோஷமாக வளர்க்கலாம். அவர் போய்விட்டார். ஒரு வம்பு தும்பு செய்யாமல் இருந்தது. அதனுடைய பேச்சுத் திறமையே அலாதி! தன் தாய் பற்றிய நினைவுக் குறிப்புகளை என் தங்கையிடம் சொல்லிக் கொண்டிருந்தது அக்குழந்தை. ஒரு சம்பவம்:

"பாலமின்னு சொன்னேனே, அவன் எங்கள் வீட்டுக்குப் பக்கத்திலே உள்ள சிங்களப் பையன். அவனுக்குச் சித்தி வந்தது முதல், அவன் தினந் தினம் அடியும் உதையும் படுவான். என் அம்மா போய் சாதம் கொடுப்பாள். சில சமயம் நான் தின்பண்டங்கள் கொடுப்பேன். பாவம், சித்தியென்றால் ஏன் அடிக்கணும், அழ விடணும், கொடுமை செய்யணும்?"

குழந்தை உள்ளத்திற்குப் புரியாத மர்மம்.

ரதியின் கேள்வி, இன்று நேற்று பிறந்த கேள்வியா? என்றும் கேட்கப் படும் கேள்வி, எனக்கும் புதிர் புரியவில்லை.

இரண்டு நாளில் தன் பாட்டியைக் கூட்டிக் கொண்டு வருவார் என்று எதிர்பார்த்தேன். வெறுங் கையோடு மட்டுமல்ல, பாட்டியைத் திட்டிக் கொண்டும் வந்தார், சங்கரம் பிள்ளை!

"என்ன, போன காரியம்?"

"ரொம்ப மோசம். தான் முடியாது என்று சொன்னாலும் பாவாயில்லை. அந்தக் கிழவி என்ன சொன்னாள் தெரியுமா?"

"மனசில் கொள்ளாமல் திரும்பிப் போங்கள். இல்லை, இந்த ஊரோடு இருந்து விடுங்கள்."

"இங்கே இருக்க முடியாதே. நான் இலங்கைவாசி. கொழும்புக்கு நான் போகிறேன். அதற்குள் ஒரு ஏற்பாடு செய்ய வேண்டும். கிழவி சொன்னது தான் நெஞ்சை அறுக்கிறது. 'கொழும்பிலே எவளையாவது சேர்த்துக் கொண்டு நாளை உன் மகளை மறந்து போவே. ஒரு வேளை எவளையாவது சேர்த்துக்கொண்டு தான் இதைத் தள்ள இங்கே வந்தியோ என்னமோ? அந்த பாவத்தை நீதானே கொண்டு போய்ச் சேரு' என்று சொல்லி விட்டாள். எப்படி இருக்குது உலகம்?"

"உலகத்தின் இயல்பைச் சொன்னாள் உங்கள் பாட்டி. இன்றில்லா விட்டால் நாளை அப்படி ஒரு திருமணம் நடக்கத் தானே செய்யும்?" என்றேன்.

"நீங்களுமா இப்படிச் சொல்வது?"

என் மீது கோபம் வந்து இரைந்து சொன்னார். அந்த வேளையில் எதிர் பாராதவிதமாக என் தங்கை என்னை உள்ளே அழைத்தாள். நான் எனக்குப் புத்திமதியை எதிர்பார்த்து உள்ளே போனேன்.

குழந்தை ரதி, "எங்க வீடு ரொம்ப பெரிசு. அதிலே குடிதண்ணீர் குழாய் இருக்குது. மின்சார விசிறி ஏழு இருக்குது. கேளு" என்று ஏதோ சொல்லிக் கொண்டிருந்தது. அதன் வாய் புதைத்து என் தங்கை சொன்னாள். நான் அதைக் கேட்டு அயர்ந்து போனேன்.

❀ ❀ ❀

மறு வாரம்.

அதே திருநெல்வேலி ஜங்ஷன் பிளாட்பாரத்தில் ரயிலைப் பார்த்துக்கொண்டு நின்றோம். திருவாளர் சங்கரம் பிள்ளை இரண்டரை டிக்கெட்டுடன் வந்தார் அவர் பின்னால் பிரகாசமான முகத்தோடு அவரது மனைவியும், அவள் அருகாக, அவர் இந்திய மண்ணிலேவிட்டுப் போக வந்த குழந்தையும் நின்றுகொண்டிருந்தது. குதூகலத்துடன் சிரித்துக்கொண்டு நின்றனர். ரெயில் பிரயாணிகள்—இப் புதிய தம்பதியைப் பார்த்து யாரும் சிரிக்கவில்லை. அவரவர் பாடு அவரவருக்கு.

நான் வீட்டுக்குள் போனபோது, வழக்கத்தைவிடச் சந்தோஷமாக என் மனைவி வரவேற்றாள். அவளுக்குத் தெரியும், பத்து வருஷமாக வீட்டுக்குள் ஒரு பெண் மணமாகாது இருந்தால், அந்தப் பெண் இதயம் படுகின்ற துயரங்கள் எவ்வளவு என்று. பெண்ணல்லவா!... வழக்கமாக என் பார்வையில் படுகின்ற என் தங்கையை – ஏழ்மையினால் வீட்டுக்குள்ளேயே இருந்து விட்டவளைக் காணவில்லை. அவள் இன்பத்தை அடைய வேண்டுமென்றுதான் மீனாட்சி உலகை விட்டு மறைந்தாளோ?

"ஏதோ இப்படியாவது விடிவு காலம் வந்ததே. இனிமேல் நமக்குப் பாரமில்லை" என்றாள் மனைவி. எவ்வளவு பெரிய பெருமூச்சு!

எனக்கு எல்லாம் கனவாய் இருக்கிறது. சங்கரம் பிள்ளை வந்தது, அவர் பெற்றோர் மறுத்தது, மற்றவர்கள் திட்டியது, எல்லாவற்றுக்கும் மேலாக ரதி என் தங்கையைப் பிடித்துக் கொண்டது, சங்கரம் பிள்ளை ஒப்புக்கொண்டது, என் தங்கை வெட்கத்தையும்விட்டு, "அண்ணா, இந்தக் குழந்தையின் வாழ்க்கையில் எனக்கு அன்பு பிறக்கிறது. இதற்காக நான் அவரை மணக்கச் சம்மதம். இல்லாவிட்டால் குழந்தையையாவது என்னிடம் கொடுத்துவிட்டுப் போகச் சொல்லுங்கள்" என்று துணிந்து சொன்னது—எல்லாமே எனக்குக் கனவுக் காட்சிகள்தாம்! அவள் துணிவுதான் சங்கரம் பிள்ளையின் உள்ளத்தில் இரக்கம் பிறப்பித்தது. அது கனிந்து கலியாணத்தில் முடிந்து, இன்று ஆனந்தமாக ரெயிலில் உல்லாசமாகப் போய்க் கொண்டிருக்கிறாள்!

எவருமே வாழ்வின் ஆரம்பத்தையும், அதன் போக்கையும் அறுதியிட்டுக் கூற முடியாது. அது பெரிய மர்மம்.

எங்கள் வைத்தியரைக்கேளுங்கள்

213 ஸ்ரீமதி ம. டெல்லி.

குறிப்பிட்ட மருந்துகள், தனிச் சரக்குகள்–இவை கிடைக்குமிடம் யாது?

214.

பனிக் காலத்தில் முகம், கை கால்களில் பனிவெடிப்பு ஏற்படுகிறது. மேல் தோல் உரிந்து ஜலம் முதலியவை பட்டாலும் எரிச்சல். எண்ணெய் தேய்த்துக் குளித்தால் ஒரு நாள் நன்றாக இருக்கிறது, மறு நாள் வழக்கம்போல் ஆகிவிடுகிறது. சில சமயம் ஜாஸ்தியானால் கட்டம் கட்டமாக வெடித்துக்கொண்டு ரத்தம் கசிகிறது. என்ன செய்யலாம்?

கூடிய சீக்கிரத்தில் பதிலை எதிர்பார்ப்பதாகவும், பதில் தபால் செலவிற்காக ¾ அணா ஸ்டாம்பு வைத்திருப்பதாகவும் எழுதியுள்ள அன்பர், ஸ்டாம்பு வைக்க மறந்துவிட்டார். கேள்வி, பதில், ஊர் பெயர் ஒன்றையும் மித்திரனில் பிரசுரிக்கவேண்டாம் என்றும் எழுதியிருக்கிறார்.

இவருடைய ஊரையும் பெயரையும் பிரசுரிக்க வேண்டாமென எழுத இவருக்கு உரிமையில்லை என்பேனானால், நமது அரசியல் சட்டம் அவ்வுரிமையை அளிக்கிறது என்று இவர் சண்டைக்கு வரலாம்.

வரப்போவது மழை பனி குளிர் காலங்கள். வாசகர்களில் பலருக்கு இக்கேள்வி பதில்களால் பயனிருக்கலாம். ஆகவே கேள்வி பதில் இரண்டையும் பிரசுரிக்க எனக்கு உரிமையில்லை என்று சொல்ல நண்பருக்கு உரிமையில்லை.

மேலும், 'பஞ்சபாண்டவர் எனக்குத் தெரியாதா? கட்டில் காலைப்போல மூன்று பேர் என்று சொல்லி, இரண்டு விரலை நீட்டிக் காண்பித்து, ஒன்று என்று எழுதி அதையும் அழித்துவிட்டான்' என்று ஒரு கதை. பதிலுக்காக இவர் செய்துள்ள வசதி இக்கதைக்கு ஒத்திருக்கிறது. இதையும் வாசகர்களுக்குச் சொல்லாவிட்டால் நானே எல்லோருக்கும் என் செலவில் பதிலெழுதவேணுமென்ற நிலைமை ஏற்படும். இதைச் சமாளிக்க முடியுமா? "நான் கடிதம் எழுதினேன்; பதிலே வரவில்லை" என்ற புகாருக்குத்தான் இடங்கொடுக்க முடியுமா? இதைத் தெரிவித்ததும் எனது லாப நஷ்டத்தையொட்டி அவசியம். இவ்வுரிமையும் எனக்கில்லை என மறுக்க நண்பருக்கு உரிமையில்லை!

நிற்க, விவரம் கொடுத்துள்ள இந்நோயாளி, தினசரி மலபந்தமின்றி சரிவர வெளிக்குப் போகிறதா என்பதைத் தெரிவிக்கவில்லை. சருமத்தைப் பற்றிய ரோகங்களில் இந்தத் தகவல் மிகவும் அவசியம். ஆயினும்,

திக்தகம் அல்லது மஹாதிக்தகம் என்னும் கிருதத்தில் காலை மாலை 1—2 டீஸ்பூன் அளவு உள்ளுக்குச் சாப்பிடுவது, நால்பாமரைக் கஷாயத்தில், ஸேவ்ய சந்தனாதியைக் கல்கமாய்க் கூட்டி, தேங்காய்ப் பாலுங்கூட்டிக் காய்ச்சிய தைலத்தை தினசரி உடம்புக்குத் தேய்த்துக் குளிப்பது. திராக்ஷாதி கஷாயத்தை அவசியமானபோது குடித்து மலபந்தமில்லாமல் பார்த்துக்கொள்வது. இவைதான் இவர் செய்யவேண்டியது. இனி ஜனவரி மாதம் வரையில் இந்த மழை, குளிர்காலமிருக்குமே. இதற்குள் குறை குணங்களைத் தெரிவித்தால் நல்லது. ஆனால் பதில் கடித விஷயத்தில் 'பஞ்சபாண்டவர்...' என்றபடி செய்யக்கூடாது.

215 எஸ். பி. ஆர். மதுரை.

கூபன் அனுப்பவில்லை.

216 சென்னை–17.

கேள்வி பதில்களைப் பிரசுரிக்க வேண்டாமென்று எழுதியிருக்கிறார். விஷயமும் எழுதி எழுதிக் கரையாய்ப் போனது. இதற்கு ஏன் தான் இத்தனை ரகஸியமோ!

ஆனால் ஒரு விஷயம். உடனே பதில் போடவும். நாள் கடத்த வேண்டாம் என்று உத்தரவிடும் இந்த பட்டதாரி,

◉◉◉◉◉◉◉◉◉◉◉◉◉◉◉◉◉◉◉◉◉◉◉◉◉◉◉◉◉◉

குச்சாமாமா

◉◉◉◉◉◉◉◉◉◉◉◉◉◉◉◉◉◉◉◉◉◉◉◉◉◉◉◉◉◉

பதிலுக்கு ஏன் தபால் கூலி வைக்கவில்லை?

217 வே. சென்னை–17.

முகப்பருவுக்கு என்ன செய்யலாம்?

கேள்வி 179க்கு எழுதிய பதிலைப் பார்க்கவும்.

218

ஸ்திரீகளுக்கு மட்டும் உண்டாகும் வியாதியைப் பற்றிக் கேள்வி. பிரசுரிப்பது பண்பல்ல. நேரிட பதிலளிக்கப்பட்டது.

219 எம். எஸ். வை. மாயூரம்.

நெடு நாளைய கர்ணநாதம். இதனால் உண்டான பாதிர்யம் (காது கேட்காமை) என்ன செய்யலாம்? க்ஷீரபலா தேய்த்து ஸ்நானம் பண்ணலாமா?

தலைக்கு உபயோகிக்க வேண்டியது க்ஷீரபலா தைலந்தான். ஆனால் தினசரி தடவுவது, பிசுவாக இடுவதும், பிறகு ஒரு கந்தைத் துணியால் துடைத்துவிடுவதும் தான் செய்யத்தக்கதே தவிர தலைக்கு ஸ்நானம் செய்யக்கூடாது. செய்யவே கூடாது.

"ஐயய்யே! எண்ணெயைத் தேய்த்துவிட்டு ஸ்நானமும் செய்யாவிட்டால் தலையில் ஜிட்டு அதிகமாகி அருவருப்பையுண்டாகிவிடுமல்லவா?" என்று கேட்பீர்கள். ஸ்நானம் செய்யக்கூடாதென்பது சாஸ்திரம். செய்யாமலிருப்பது ஹிதகரம் என்று அனுபவம். நானாயிருந்தால் செய்யமாட்டேன். அவ்வளவுதான். தவிர, உள்ளுக்கும் அச்வகந்தா லேகியம் (தஞ்சை அரண்மனை முறை) சாப்பிட்டு வரவும்.

வாரத்தில் ஒன்றிரண்டு நாள் போராஸ் கஹால் என்று பல தரமும் குறிப்பிட்டுள்ள மருந்தில் சில துளிகளைக் காதில் விட்டுப் பஞ்சை வைக்கவும். சுமார் 4 அல்லது 6 மாதத்தில் கணிசமான குணம் காணும்.

220 எஸ். ஆர். ஜெ. சென்னை 28.

அடிக்கடி பிடிக்கும் ஜலதோஷம், சளி, இருமல், சுவாசகாசம், ஜுரம். உடம்பில் அதிகமான சூடு. மண்டைக் கொதிப்பு. என்ன செய்யலாம்?

சொல்லிச் சொல்லி கரையாய்ப்போன விஷயம். வாசகர்கள் கேட்டுக்கேட்டு காது புளித்துப் போனதுங்கூட. மறுபடி மறுபடி 'இம்பொஸிஷன்' எழுத வைக்கிறீர்கள்!

அச்வகந்தா லேகியம் (தஞ்சை அரண்மனை முறை), கூஷ்மாண்ட ரஸாயனம் இரண்டையும் மாறி மாறிக் காலை மாலை சாப்பிட்டு வருவது.

தசமூலாரிஷ்டத்தில் 1 டீஸ்பூன் அளவு சிறிது ஜலத்துடன் ஆகாரத்திற்குப் பின் தினம் 2 வேளை சாப்பிட்டு வருவது.

இரவில் அஸ்தமனத்திற்கு முன்பே சாப்பிட்டு விடுவது—மலபந்தமில்லாமல் பார்த்துக்கொள்வது.

தலைக்கு–அஸனவில்வாதி தைலத்தில் சிறிது உச்சியிலிட்டு அரைக்கித் தேய்த்து விடுவது. மற்றபடி தலைக்குக் குளிக்கக்கூடாது. நூறு நமஸ்காரம் செய்யச் சொல்லி யாரோ சொன்னார். குற்றாலம் நீர் வீழ்ச்சியின் கீழ் தினம் 1 மணி வீதம் 40 நாள் குளித்தால் மண்டையிலுள்ள உஷ்ணந்தீருமென்று மற்றொருவர் சொன்னார். இதெல்லாம் செய்யலாமா? என்பது போன்ற கேள்விகளுக்கு நான் என்ன பதில் சொல்லக்கூடும்?

பதிலைத் தெரியப்படுத்தத் தபால் கூலி அனுப்பவில்லையே! எப்படித் தெரியப்படுத்துவது?

குடும்ப வைத்தியக் கட்டுரைத் தொகுப்பு அச்சாகிவிட்டால் மேடி விஷயத்தை மித்திரனிலேயே அறிவிப்பர். நான் பிரத்யேகமாக எழுதவேண்டுமென்பதில்லை.

221 என். கே. சிவகாஞ்சி.

எனக்கு சதா சளி முதலியன.

என் மனைவிக்கு காதில் நீர்வடிதல்—சிறிது மந்தம். என்ன செய்யலாம்.

கேள்வி 220ன் விடையைப் பார்க்கவும்.

கேள்வி 219ன் விடையைப் பார்க்கவும்.

222 அ. புதுவை.

ஸ்திரீகளுக்கே பிரத்யேகமான வியாதியில் ஒன்று. வியாதியின் விவரத்தை வெளியிடல் முறையல்ல. நேரிட பதிலை எழுதவோ, விலாசமோ தபால் கூலியோ அனுப்பவில்லை, என்ன செய்வது?

விடையோ மித்திரனில் வெளியாகு மென்று கட்டாயமாக எதிர்பார்த்திருப்பார். என்ன செய்வது?

கோமூத்ர சிலாஜது சேர்ந்த சதாவரீ ரஸாயனம் என்னும் மருந்தில், காலையில் வெறும் வயிற்றிலும், இரவில் ஆகாரத்திற்குப் பிறகும் ½—1 தோலா வீதம் சாப்பிட்டு வரவும்.

ஒரு மாதமானதும் குணாகுணத்தை எழுதவும்.

223 ஆர். ப. புதுக்கோட்டை.

குறிப்பிட்ட மருந்துகள் கிடைக்குமிடத்தை அறிய விரும்பியுள்ளார்.

224 என். பா. புதுடில்லி.

உயரம் அதிகரிக்கத் தாங்கள் தெரிவித்த உபாயத்தை 9 மாதமாக அனுஸரித்து வருகிறேன். குணத்தைக் காணவில்லை. வயது 23; உயரம் 5 அடி 4 அங்குலம். இன்னும் மூன்று நான்கு அங்குலமாவது உயரம் அதிகரிக்கவேண்டும். உள்ளுக்கு ஏதாவது மருந்து சாப்பிடலாமா? பதிலெழுதவும்.

தம்பீ! பொறுமையுடன் ஏற்கெனவே தெரிவித்த உபாயங்களைச் செய்து வரவும். காலையில் விழிப்புற்றதும் படுத்திருந்த நிலையிலேயே உடம்பை உருவிவிட பலாச்வகந்தாதியை உபயோகிக்கவும். பொதுவாக, வளர்ச்சியை விரும்புவோருக்கு அச்வகந்தா லேகியம் உள்ளுக்குச் சாப்பிடத்தக்கது. இதனால் உயரம் அதிகரிக்குமென்று உறுதி கூற முடியாது. பதிலைத் தெரிவிக்க அனுப்பியிருப்பதாய் எழுதியுள்ள 'கவர்' கிடைக்கப் பெறவில்லை. ஆகவே, நேரிட பதில் எழுதவில்லை.

225 ஆர். சா. தம்பிக்கோட்டை.

கூப்பன் அனுப்பவில்லை.

226 ஸ்ரீமதி ரு. ஆத்தூர்.

குறிப்பிட்ட மருந்தின் செய்முறையை எழுதச் சொல்லி பணித்துள்ளார். "கரையாய்ப் போன விஷயமென்று தள்ளாமல், விளக்கமாய் தயவுசெய்து எழுதவும்" இவ்வகை "இம்போஸிஷனை" எழுத முடியாதம்மா, மன்னிக்கவும். சென்ற 10 வருஷமாக எழுதிப் பிரசுரமாகியுள்ள வீட்டு வைத்தியக் கட்டுரைகள் தொகுக்கப்பட்டு, விரைவிலேயே ஒரு புத்தக வடிவில் வெளியாகும். அதில் ஒரு பிரதியை வாங்கி, அவசியமான தகவலைத் தெரிந்துகொள்ளுங்கள்.

229 ஆர். ரா. கோயம்புத்தூர்.

4 வயது குழந்தை. மா நிறம். சென்ற கோடையில் காலில், கணுக்காலுக்கும் முழங்காலுக்குமிடையில் வேர்க்குரு போல் தோன்றியது. அது இப்போது கால் முழுவதும் வியாபித்திருப்பதோடு, தோல் உரிந்து திட்டுத்திட்டாகப் பளபளப்பு பெற்று இருக்கிறது. வேறு ஒரு வித உபாதியும் இல்லை. என்ன செய்ய ஸாமீ! பழைய பிரதிகளைப் பார்க்கும்படி எழுதாமல், நேரிடையாக பதிலை எழுதவும்.

பழைய பிரதிகளைக் குறிப்பிட வேண்டாமென்பது ஏற்க முடியாதது. வருஷாரம்பத்திலேயே எழுதியதை மறுபடியும் எழுத முடியாது. பழைய பிரதிகளைக் கருத்தாய் எடுத்து வைத்துக் கொள்ள வேண்டுமென்று அறிவிக்கப்பட்டது. ஆயினும் இக்குழந்தையின் விஷயம் வேறு.

ஆல், அரசு, அத்தி, கல்லால் இவற்றின் மேற்புரணி நீக்கிய உள்பட்டையைச் சம பாகத்தில் இடித்து உலர்த்தி வைத்துக்கொள்ளவும். இதில் ஒரு பலம் எடுத்துச் சிறியதொரு மூட்டையாகக் கட்டித் தண்ணீரைவிட்டுக் காய்ச்சிய பிறகு மூட்டையைப் பிழிந்து எடுத்துக் களைந்துவிட்டு, ஜலத்தைக் குளிக்கவும் கைகால் கழுவவும் உபயோகித்து வரவும்.

வெட்டிவேர் (விளாமிச்சன் என்பர் சிலர்) சந்தனக்கட்டை, செம்மரம், வெள்ளி லோத்துப்பட்டை, தாளீச பத்திரி, கோஷ்டம், சீந்தில் கொடி, தகரைவேர் இவற்றையும் (அல்லது ஒன்றிரண்டு கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை) சமனிடையில் இடித்து சலித்து வைத்துக்கொள்ளவும். இந்த சலித்த சூர்ணத்தில் அன்றாட உபயோகத்திற்குத் தேவையான அளவை எடுத்து அம்மியிலிட்டு அரிசி கழுவிய (கழு) நீர்விட்டு வெண்ணெய்போல் அரைத்துக் கழுநீரிலேயே குழைத்துக் கால் முழுவதும் பூசிவிடவும். காயக்காய மேன்மேலும் பூசிக்கொண்டே இருக்கவும். காய்ந்த பிறகு அப்படியே விட்டுவிட்டால் குழந்தை ஓடியாடுவதில் இப்பற்றெல்லாம் உலர்ந்து உதிர்ந்து விடும். அல்லது முதலில் சொன்ன கஷாயம்விட்டு நனைத்துக் கழுவிச் சுத்தமாக்கிவிடலாம்.

இரண்டு மருந்துகளும் மேலுக்கு மட்டும்தான். இவற்றை இரண்டு மாதம் செய்து வரவும். பிறகு குணாகுணங்களைத் தெரிவிக்கவும்.

வாரியர்

நீலீ பிருங்காதி

தைலம்

காந்தி மிக்க கருங் கூந்தல் செழிப்பாக வளருவதற்கும், கொட்டிப்போகாமலிருப்பதற்கும், கொட்டிப்போன இடங்களில் மறுபடி முளைப்பதற்கும் மிகச் சிறந்தது.

குளிர்ச்சிமிக்க ஸ்நான தைலமும்கூட

விலை 16 அவுன்ஸ் புட்டி ரூ. 6/-

கபரீ தைலம் ரூ. 5/-

★ ★

ஆரிய வைத்தியர் கே. எஸ். வாரியர் அவர்களின்

அஷ்டாங்க ஆயுர்வேத சாலா,

சைனு பஜார்

தெப்பக்குளம், திருச்சி.

(நிறுவனம்: 1936)

சாஸ்திரோக்தமாக தயார் செய்யப்பட்ட எல்லா ஆயுர்வேத மருந்துகளும் எங்களிடம் கிடைக்கும். ஜாபிதாவுக்கு 0-1-6 ஸ்டாம்புடன் எழுதவும்.

பல்லில்லாத கிழக் குரங்கொன்று, வாழ்க்கையில் அடி எடுத்து வைத்திருந்த இளம் யுவனையும் யுவதியையும் காப்பாற்றிப் புண்ணியம் தேடிக்கொண்டது. இல்லாவிடில், கொடிய ஸர்ப்பத்தின் நச்சுப் பல்லுக்கு அவர்கள் இரையாயிருக்க வேண்டும்.

ராமுவும் அவன் சகோதரி ராஜமும் ஒரு நாள் பிற்பகலில், தகப்பனாரின் மோட்டாரில் ஆலப்புழையிலிருந்து கொல்லத்துக்குப் புறப்பட்டனர். வெயில் சுட்டுப் பொசுக்கியது. கண்ணுக்கெட்டிய தூரம்வரை வெண்மையான மணல் பரப்பு. தரையிலிருந்து வீசிய எதிரொளி கண்களைக் கூசச் செய்தது. கடுகிச்செல்லும் காரில் உல்லாஸச் சவாரிகூட இன்ப வேதனையாகத்தான் இருக்க முடியும். போதாக் குறைக்கு டயர்களிலொன்று திடீரென வெடித்துவிட்டது. டிரைவர் கீழிறங்கி, பழுதான டயரை மாற்ற ஏற்பாடுகள் செய்துகொண்டிருந்தான். அசையாத மோட்டாரில், கடும் வெயிலில் உட்காரமாட்டாமல் ராஜமும் ராமுவும் வெளியேறினர்.

சமீபத்திலிருந்த 'காவு' அவர்களை அன்புடன் அழைப்பதுபோலிருந்தது. நெடிது வளர்ந்திருந்த மரத்தினடியில் தங்கிச் செல்ல இருவரும் தீர்மானித்தனர். காற்று சுகமாக வீசியது. அடர்ந்த மர நிழலில் வெயிலே தெரியவில்லை. சுற்றிக் கண்ணோட்டம் விட்ட இருவர்களுடைய கவனத்தையும் இழுத்தது, பழுத்துக் குலுங்கிய முந்திரி மரமொன்று. முறுக்கேறிய உடலில் இள ரத்தம் பாயும் ராமு, உடனே செய்வது என்னவென்று நிச்சயித்துவிட்டான், மரத்திலேறுவது அவனுக்கு ஒருபொழுது போக்கு! முந்திரிப் பழங்களை மடி நிறையக் கட்டிக் கொண்டால், வழிநெடுகத் தின்றுகொண்டு போகலாமே! ராஜத்துக்கும் இஷ்டம்தான். இருவரும் உற்சாகமாக முந்திரி மரத்தை அணுகினர்.

அங்கு அவர்களுக்கு நல்ல வரவேற்பு காத்திருந்தது. திடீரென அணிவகுத்து எதிரில் நின்ற குரங்குக் கூட்டம், பற்களை அகல விரித்துக் காட்டியது. அதற்குத் தலைமை தாங்கியதுபோல் நின்றது, பல்லில்லாத கிழக் குரங்கு. ராமு ஒரு அடி முன்னேக்கி வைத்தான். உடனே குரங்குகள் கிரீச்சிட்டுக் கத்தும். பின் வாங்கினால், பல்லை இளித்துக்கொண்டு ஏதேதோ சைகை காட்டும். இளைஞனுக்குக் கோபம் மூண்டது. வாயில் வந்தபடி வசைமாரிகள் பொழிந்தான். கற்களை வாரி வீசுவதாக மிரட்டினான். ஏதும் பலிக்கவில்லை. மேற்கொண்டு முன்னேறினால், குரங்குகள் பாய்ந்து விடுவதுபோல மிரட்டின.

ராஜத்துக்கு சந்தேகம் எழுந்தது. ஒருவேளை தங்களுடைய 'புனித பூமி'க்குள் பிரவேசிக்கலாகாது என்று குரங்குகள் தடை போடுகின்றனவா? ஏனெனில், மேற்குக் கடலோரப் பகுதிகளில் திட்டுத் திட்டாக விட்டு வைக்கப்பட்டிருக்கும் காடுகள், ஸர்ப்ப ராஜனுக்கு பக்த கோடிகள் அளித்துள்ள மான்யம். இவற்றுக்குத்தான் 'காவு' என்று பெயர். பட்சிகளும் பாம்புகளும், நரிபோன்ற சிறிய விலங்கினங்களும் அங்கு இஷ்டம்போல வாழலாம். மானிடரின் தாக்குதலுக்கு அஞ்சத் தேவையில்லை. ஆகவே, 'காவு'க்குள் பிரவேசித்து, குரங்குகளை அடித்து விரட்டுவது பாபமல்லவா?

ராமுவும் ராஜமும் இந்த ரீதியில் வாதாடத் தொடங்கினர். சலசலவென்ற ஓசை கேட்டு ராஜம் திரும்பினாள். முந்திரி மரத்தினடியில் காய்ந்த சருகுகளிடை ஏதோ நெளிந்தது. பாம்பு ஒன்று தங்களை நோக்கிப் பாய்ந்தோடி வருவதைக் கண்டாள். சகோதரனை இழுத்துக் கொண்டு ஓட்டம் பிடித்தாள். அவர்களைத் துரத்தி வந்தது பெரிய பாம்பு ஒன்று. இளம் யஜமானர்களின் ஓட்டத்தையும், சந்தடியையும் கேட்டுத் திரும்பிப் பார்த்தான் டிரைவர். கையிலிருந்த ஆயுதங்களைக் குறி பார்த்து பாம்பை நோக்கி வீசினான். இலக்கு தப்பவில்லை. நொடிப் பொழுதில் ஸர்ப்பம் வீழ்த்தப்பட்டது. பின்னர் மூவருமாகச் சேர்ந்து ரஸ்தா அருகில் அதைப் புதைக்கக் குழி தோண்டினர்.

இதற்குள் அண்டை அசலில் நின்ற கிராமவாசிகள் பலர் கூடிவிட்டனர். பாம்பைப் பார்த்துவிட்டு, அது 'கொம்பேறி மூர்க்கன்; கடித்தால் மருந்துகிடையாது' என்று அபிப்பிராயம் தெரிவித்தனர். அவர்களில் முதியவரொருவர் சொன்னார்: 'இந்த மாதிரி 'காவுக்'குள் பிரவேசிப்பவர்களை மிருகங்களும் பாம்பும் தாக்குவது இது முதல் தடவையல்ல. தங்களுடைய குட்டிகளை மனிதன் திருட வருவதாக அவை அஞ்சுகின்றன. முந்திரி மரத்தில் அந்தப் பாம்பு முட்டையிட்டுக் குஞ்சு பொறித்திருக்கும்'

'பாம்பு விரட்டியது சரிதான். ஆனால், கிழத்தின் தலைமையில் குரங்குகள் எதற்காக வழி மறித்தன?' என்று வினவினான் ராமு.

'பல்லில்லாத குரங்கு இந்தக் 'காவு' வாசிகளில் வயசானது. முன்பு ஒரு தடவை கர்ப்பிணியைக் கடிக்கப் போன பாம்பை, அது பிடித்துக் கடித்துக்கொன்றது. அப்போதுதான் அதன் பற்கள் உதிர்ந்து போயின. அதற்கு உண்மையில் மனித சுபாவம்தான்' என்றார் முதியவர்.

ராமுவும் ராஜமும் மோட்டாரிலிருந்து ஆரஞ்சுப் பழங்களைக் கொணர்ந்தனர். மரத்தினடியில் வைத்தனர். கிழக் குரங்கைத் தவிர, மற்றவைதான் அவற்றை எடுத்துக்கொண்டன. முதியவர் யோசனை பேரில், சில பழங்களைக் கையில் எடுத்துச் சென்று கிழக் குரங்கை ராமுவும் ராஜமும் கூப்பிட்டுக் கொடுத்தபின்னரே அது வாங்கிக்கொண்டது.

அதன் பிறகு, அந்தப் பக்கம் போகும் போதெல்லாம் கிழக் குரங்குக்குப் பரிசுகள் எடுத்துப் போகாமல் ராமுவும் ராஜமும் செல்வதில்லை.

ஆபீஸ் ஸ்தாபிதம்: 1924

பிரபல ஜோதிஷர்

மஹாராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர் ஒரு வருஷ பலன் மாதவாரி எழுத ரு 5. ஆரூடம் 3 கேள்விகளுக்கு ரூபா 2. ஜா..ம் அல்லது எழுதும் நேரம் தேவை

பண்டித காழியூர்

ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்

தபோநிதி

யாகராய நகர், மதராஸ்-17

தபால் பெட்டி 1417

திரைக்குப் பின்

ஆர்வி

23

தீவுபோல் துண்டித்துப் போன அந்தத் துளி நிலப் பகுதி வெறும் சகதியாகிவிட்டது. மீட்பு வேலை மறுநாள் மாலைதான் சாத்தியமாயிற்று. ஆனால், அந்த ஒரே நாள் இரவில் ஊர் நாற்றம் எடுத்துவிட்டது.

இடுகாட்டில் ஆடும் கூத்தன், தான் வதியும் பதியையே பிணக்காடாக்கி, ஒடுங்கிய இடம் தெரியாதபடி கர்ப்பக் கிருகத்தினுள் மூட்டுப் போல் ஒளிந்து கொண்டிருந்தான். அழுகி வரும் பிண வாடை குடலைப் புரட்டிக்கொண்டிருந்தது. நரகம்போல் ஆகிவிட்ட ஆலயத்தின் பிராகாரத்தில் வந்து முடங்கி, அனைவரும் அந்தப் பயங்கர இரவைக் கழித்தார்கள். மக்கிப்போன நெடியும், அழுகல் பிண நாற்றமும் இராப் பொழுதை யுகமாக வளர்த்துக்கொண்டிருந்தன.

ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என்று கிட்டத்தட்ட இருநூறு பேர்தான் உயிரோடு எஞ்சியிருந்தார்கள். துன்பமும் துயரமும் வேற்றுமையையெல்லாம் ஒதுக்கிவிட்டு, அவர்களை ஒன்றுக்கிவிட்டன. மணல் பாய்ந்த அந்தக் கட்டாந் தரையில் அவர்கள் வரைமுறை என்ற வரம்பு இன்றி, வெட்கம், கூச்சம் என்ற உணர்ச்சி, வேற்றுமை இன்றி, இன பேதமின்றி, விகல்பமான நினைவுஇன்றி ஒருவர்மேல் ஒருவர் நெருக்கிக் கொண்டும், ஒருவரை ஒருவர் இறுக அணைத்துக் கொண்டும் விழுந்து கடந்தார்கள். மூன்று நாட்களாகக் காணாத தூக்கம் அந்த அமாவாசை இருளைப் போல அவர்களைக் கவிந்துகொண்டிருந்தது. ஈரம் ஊறிய தரை உடலை நமுநமுவென்று அரித்துப் பிடுங்கிக்கொண்டேயிருந்தது. மழை அழுக்கிலே ஜனித்த உயிர் அணுக்கள் காற்றிலே கலந்து, மூச்சோடு புகுந்து மடிந்துகொண்டிருந்தன.

கண்ணைக் குருடாக்குகிற அந்த இருள் காலமெல்லாம் இப்படியே கழிந்து விடக் கூடாதா என்று அவர்களுக்கு இருந்தது. இந்த இருள்தான் எத்தனை இதமாக இருந்தது! இனம் தெளிவாகாத மயக்க நிலையில், அந்தகாரத்தின் வியாபகத்தில், இன்னது செய்கிறோம் என்று புரியாத குருட்டுக் குழப்பத்தில், கணவனை இழந்த ஒருத்தி மனைவியை இழந்த ஒருவனைக் கணவன் என்றே பிரமையாக எண்ணிக்கொண்டிருந்தாள். சாவு அத்தனை லேசாக, விரைவாக, நெஞ்சிலே உறைத்துப் பரிசயமாகவில்லை. எங்கோ போயிருந்த புருஷன், வேலையிலிருந்து நேரங் கழித்துத் திரும்பி வந்து, தூக்கத்தில் மென்தோளைத் தழுவுகிற வழக்கத்தை அவள் உணர்வு மறந்து விடவில்லை. இனி அது நடக்க முடியாத ஒன்று என்ற நம்பிக்கை அவள் நெஞ்சிலே இன்னும் செத்து மடியவில்லை. அகன்ற தோளில் அவளுடைய கைதுவள, காய்த்துப் போன அவன் கை அதைக் கனிவோடு பற்ற, அந்த மருள் மயக்கத்தில் இளஞ் சூடான மூச்சும், சிறு உறுத்தலான இடை வெளியும் நுட்பமான சுக வேதனையைத் தந்தன. பொழுது என்றும் விடியாமலே போய்விடக் கூடாதா? விடிந்துவிட்டால் கனவுறக்கம் எல்லாம் விலகி, நினைவு தெளிந்து விடுமே! தேறிய இன்பவுணர்ச்சியெல்லாம் தேய்ந்து துன்பச் சுழலாகி விடுமே! கற்பனை அடுக்குகள் எல்லாம் இடிந்து, உண்மைப் பொடியாகி விடுமே! திரும்பத் திரும்ப மனம், வயிறு, உடல் எல்லாம் பசிக் கொடுமைக்கு உள்ளாக வேண்டுமே!

இரண்டிலே இருள் எது, பகல் எது?

இன்னும் என்ன கொடுமை வந்து இழுத்துப் பிரித்துவிடுமோ என்கிற திகிலோடு கிழவி பேரனையும், பேத்தி தாத்தாவையும், தாயும் தந்தையும் தம் மகனையும் மகளையும், பெண் தன் கணவனையும் திக்கற்ற பையனைப் பக்கத்திலிருந்தவனும் ஆதரவோடு இறுகப் பற்றியணைத்துக்கொண்டு கும்பலாகப் படுத்திருந்தார்கள். பாட்டியின் அணைப்பிலே பாமினி பயம் மூண்டிப் போய்ப் பதுங்கியிருந்தாள். டாக்டருக்கு அருகிலே அரவிந்தன் முடங்கியிருந்தான். குஞ்சம்மாளின் பெண் அவனை மறு பக்கத்தில் விடாமல் கட்டிக்கொண்டு தூங்கினாள். தூக்கத்திலே திடுக் திடுக்கென்று உடல் தூக்கி வாரிப்போட, அவனை இறுகப் பற்றிக்கொண்டாள். கையும் காலும் மரத்துக் கனக்கும்வரையில் அரவிந்தன் பல்லைக் கடித்துக்கொண்டு பொறுத்துப் பார்த்தான். ஆயினும் தூக்கத்தில் ஏதோ ஒரு புலன்மட்டும் விழித்துக் கொண்டிருந்தது. அது விலகிக் கிடந்தவர்களையெல்லாம் நெருக்கிச் சேர்த்துவிட்டு, நெருங்கிக் கிடந்தவர்களையெல்லாம் ஒதுக்கி விலக்கிவிட்டு, விதியின் கை போல வேடிக்கை செய்துகொண்டேயிருந்தது.

கங்குலின் கனத்த திரையினுள்ளே, பயங்கர அமைதியைக் கிழித்துக்கொண்டு தீனமான அழுகைக் குரல் ஒன்று திடீரென்று கேட்டது. செத்துக் கிடந்த பிணம் ஒன்றின் பிரிந்து போன ஆவிதான் திரும்பி வந்து ஓலமிடுகிறதோ என்று அலறியடித்து விழித்துக் கொண்டவர்கள், கண்களை இறுகப் புதைத்துக்கொண்டு, மூச்சு முட்டத் திணறிப் போனார்கள். தலை தூக்க நடுக்கமாக இருந்தது. சோக ரஸத்தையெல்லாம் பிழியும் ஜீவ ஸ்வரங்களையெல்லாம் சுருதி லயம் கெடாமல் பற்றிக்கொண்டு சஞ்சாரம் செய்யத் தொடங்கியது அந்த அழுகை. மெல்ல மெல்ல, படிப்படியாக ஏறிச்சென்று, குரலுக்கும் எட்டாத ஒரு மர்ம ஸ்வர ஸ்தானத்தைத் தொட்டு உலுக்கிவிட்டு வந்தது. டாக்டர், அரவிந்தன், பாமினி முதலானோர் வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்தார்கள். அகண்ட அமைதி நிலவிய வானத்தைக் கூறலாகப் பிளந்து கொண்டு சென்ற அந்தச் சோக ஒலியின் அதிர்ச்சியில் அவர்கள் மீண்டும் சுருண்டு விழுந்தார்கள். பயத்தின் விளிம்பை எட்டிய அந்த அமானுஷ்ய அழுகையொலி, தானாகத் தணிந்து வருகிற சமயத்தில்தான் அது அவர்களிடையே படுத்திருந்த பெண்ணொருத்தியின் பேதைக் குரல் என்ற நிதானம்

தொடர் கதை

உண்டாயிற்று. அருகிலே ஒருவன் அப்போதுதான் சற்றுப் பயம் தெளிந்து, அவளைத் தீண்டிப் பிடித்து, மெல்லப் பக்கலில் படுக்க வைத்தான். தன்னை மறந்த அவள் தலையை அப்படியே தன் தோள் மீது சாய்த்துக்கொண்டான். நேரம் அழுகையை மாற்றிக்கொண்டிருந்தது.

சற்றைக்கெல்லாம் விம்மிக் கேவுகிற ஒலி ஒன்றுதான் கேட்டது. உள்ளம் மேவிய இதமான உணர்வை உதடுகள் இடையிடையே முனகலாக ஒலித்தன. புஸ் புஸ்ஸென்று கலந்த மூச்சொலியின் அரவம் முனகலைத் தடுத்தது. சிறிது நேரம் முனகலும் பெருமூச்சும்தான் மாறிமாறிக் கேட்டன. பயத்தினால் கண்களைப் புதைத்துக்கொண்டவர்கள் ஒன்றும் புரியாமல் இருட்டை விழித்துப் பார்த்தார்கள். ஆணும் பெண்ணுமாகிய இரு உருவங்கள் ஒன்றாகி, அந்த மனிதக் குவியலின் நடுவே முட்டுப்போல உட்கார்ந்திருந்தன. பிறகு அந்த நிலையிலேயே குவியலுக்கு நடுவே சாய்ந்தன.



புதிரும் பரிவும் கலந்த கூச்சத்தோடு அத்தனை பேரும் முகத்தைத் திருப்பி மூடிக்கொண்டு விட்டார்கள். சோகத்தின் கடையெல்லையில், அங்கே சிறுமைக்கும் நகைப்புக்கும் இடமில்லை. ஈரத் தரை கூட நமைச்சலைத் தந்து தொந்தரவு செய்யவில்லை. அமைதி, அமைதி—பிறகு அசைவு, இசிவற்ற அமைதி..வானமும் வையமும் அசைவற்ற பெருமுயக்கத்தில் மூழ்கிக் கிடந்தன. பிணத்தின் நெடியில்லை; இருளின் பயமில்லை, ஒன்றுமேயில்லை.

கிழக்கு வெளுக்கும் சமயத்தில் அரவிந்தன் கண் விழித்துப் பார்த்தான். பாமினி கைகளால் முழங்காலைக் கட்டிக்கொண்டு யாரையோ வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் பார்வைக்கு இலக்கான பெண் சாதுவாக, அமைதியாக, தலையைக் கோதி முடிந்துகொண்டிருந்தாள். கண்களில் விவரமில்லாத, எதிலும் ஊன்றாத பார்வை. மேலாடையெல்லாம் இருக்க வேண்டிய இடத்தில் இல்லை. பிறர் தன்னைக் கவனிப்பார்களே என்ற அச்சமோ கூச்சமோ அவளுக்கு இருந்ததாகவும் தெரியவில்லை. ஆசை உணர்வுகள் இல்லாத வெறும் யந்திரத்தைப்போல, முடிந்த தலையை அவிழ்ப்பதும் மீண்டும் மீண்டும் முடிவதுமாகவே அவள் உட்கார்ந்திருந்தாள்.

அரவிந்தன் அவளையும் பாமினியையும் மாறி மாறிப் பார்த்து விட்டு, “இவளா?” என்றான் மெல்லிய குரலில்.

பாமினி அவனுக்கு உடனே பதில் சொல்ல விரும்பாமல், ஆத்திரத்தோடு மட்டும் பார்த்தாள். அரவிந்தன் அதைச் சிறிதும் பொருட்படுத்தாமலே, “உன்னைத்தான்; இவள்தானா அது?” என்று கேட்டான்.

பாமினி ஆண் வர்க்கத்தைக் கண்டே அருவருப்புப் படுவதுபோல முகத்தைச் சுளித்துக் கொண்டு திரும்பிக் கொண்டாள். அந்தப் பெண்ணோ கை அசந்து போகாமல் செய்ததையே மீண்டும் மீண்டும் செய்துகொண்டிருந்தாள்.

பக்கத்தில் படுத்திருந்தவன், “தா, வடிவு! சும்மா இரும்மா!” என்று அவள் கையைப் பிடித்து நிறுத்திப் பார்த்தான். அவள், அவன் கையைத் திமிறி உதறி விட்டு, மறுபடியும் தலையை முடியத் தொடங்கினாள்.

“முத்தையன்தானா?” என்றான் அரவிந்தன், முகத்தைத் திருப்பாமலே. அதற்கு அவன் பதிலை எதிர்பார்க்கவில்லை; அதனால் கிடைக்கவுமில்லை.

சூரியோதயம் ஆயிற்று. ஒளிவு மறைவெல்லாம் நாமாகச் செய்துகொண்ட விகாரங்கள் என்பதுபோல ஊர் ஒரே பொட்டலாகக் கிடந்தது. கைலாசநாதர் கோயில் இருந்த திசையில் ஒரே மண் முட்டாகத் தெரிந்தது. காசாங் காடெல்லாம் கட்டாந் தரையாகக் காட்சியளித்தது. கிளியனூர் போகும் வழிமட்டும் ஒரே வெள்ளக் காடாகத் தெரிந்தது. இன்னும் தண்ணீர் வடியவில்லை; ஓடி வழிய வகையில்லாமல் அந்தப் பிரதேசம் கண்ணுக்கு எட்டியவரையில் நீர்த் தேக்கமாக இருந்தது.

பிராகாரத்தில் குழுமியிருந்தவர்கள், நாற்றம் பொறுக்காமல் கோவிலை விட்டு சாவடியிருந்த திடலுக்கு வந்தார்கள். உடைமை, சுமை, பொறுப்பு என்று ஒன்றுமில்லை. அழுக்கு வெளுத்த மனத்துடன் அவர்கள் வெறுங் கையோடு, ஒருவரோடு ஒருவர் பேசிக் கேட்க விஷயமில்லாமல், கால் எட்டினமட்டும் நடந்து திரிந்தார்கள். குப்பென்று அழுகிய நெடி வீசும் இடத்தில், மூக்கைப் பிடித்துக் கொண்டார்கள். கோயில் வாசலிலே புயலையும் கடலையும் எதிர்த்து, நெஞ்சு உரப்போடு நின்ற இலவமரத்தின் அடியில் மண்ணிலே புதைந்த இரண்டு கால்கள் மட்டும் வெளியே தெரிந்தன. உடல், தலையெல்லாம் கடல் தள்ளிய மணலிலே புதைந்து கிடந்தன. உயிரோடு இருந்தவர்களும், வெறும் உடலோடு மண்டபத்தில் நாறிக் கிடந்தவர்களும் போக எத்தனை பேர் காணாமல் போனார்களோ, என்ன ஆனார்களோ என்ற கணக்கு யாருக்கும் தெரியவில்லை. எடுக்கவும் முடியவில்லை. உயிரோடு இருந்தவர்களைத் தேடிப் புதிதாக அழுதார்கள். உயிரோடு இல்லாதவர்கள் கூட்டத்தில் எங்கேயோ இருப்பதாக எண்ணி ஆறுதல்பட்டார்கள்.

யார் எல்லாம் குமுறி அழுதார்களோ, அவர்களையெல்லாம் பாமினி பார்த்துக் கொண்டேயிருந்தாள்; யாரெல்லாம் திகைத்துப் பிரமை பிடித்ததுபோல் உட்கார்ந்திருந்தார்களோ, அவர்களையெல்லாம் அவள் பார்த்துக் கொண்டேயிருந்தாள். கும்பலாகக் கூடி நின்றால், அதையும் பார்த்துக் கொண்டிருந்தாள். தனியாக மருகி நின்றால், அதையும் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் தன் கண்களை இமைத்ததாகவே அரவிந்தனுக்குத் தோன்றவில்லை. அப்படி ஏன் பார்த்தாளோ, அதுவும் அவனுக்குப் புரியவில்லை.

டாக்டர் மேல் துண்டினால் வாயைப் பொத்திக் கொண்டு, குனிந்த தலை நிமிராமல் இங்கும் அங்குமாய் நடந்துகொண்டிருந்தார். பிராகாரத்தில் தலையை அவிழ்த்து அவிழ்த்து முடிந்துகொண்டிருந்த வடிவு, இப்போது சாவடித் திடலில் படுத்து, வெயில் உறைக்க உறைக்கத் தூங்கிக்கொண்டிருந்தாள். அரை நிர்வாண ஆடையோடு இருந்த அவளைப் பார்க்க அத்தனை பேரும் அஞ்சிக் கூசினார்கள்.

எல்லாவற்றையும் சகித்துக் கொண்டிருந்த டாக்டர், இதைப் பார்த்தவுடனே தலையைக் கவிழ்த்துக்கொண்டு சின்னக் குழந்தை மாதிரித் தேம்பித் தேம்பி அழுதார். அரவிந்தன் மட்டும் இன்னும் கொஞ்சம் சுறுசுறுப்பாகத்தான் இருந்தான். வெளி உதவி பெறுவதற்கு என்னவெல்லாம் செய்ய வேண்டும் என்று யோசித்து யோசித்துப் பார்த்தான். எப்படியாவது இரண்டொருவராவது கிளியனூர் போய்விட்டால் அத்தனை பேரையும் எப்படி மீட்பது என்பதை ஆராயலாம் என்று அவனுக்குத் தோன்றிற்று. ஆனால், அதைச் செய்வது யார்? இத்தனை பலத்த உயிர்ச் சேதம் இந்தப் பகுதியில் நடந்திருக்கிறது என்று யார் போய் அங்கே எடுத்துச் சொல்வது? அவன் போகலாம்; இங்கேயே உட்கார்ந்து இந்தச் சோகக் காட்சியைச் சகித்துப் பார்த்துக் கொண்டிருப்பதைவிட எந்தக் கஷ்டத்தையும் ஏற்றுப் பொறுத்துக் கொண்டு விடலாம்.

ஆனால், அவன் டாக்டரிடம் இது பற்றி மெல்லப் பேச்செடுத்தபோது அந்தப் பெண் தேள் கொட்டியது போல் கீழே விழுந்து துடித்து அழுதாள்; முதலில் அரவிந்தனுக்குக் காரணம் புரியவில்லை. பிறகுதான் புரிந்தது. அவளை விட்டு அவன் பிரிய நினைத்தாலும் அவள் அவனை விட்டுப் பிரியத் தயாராக இல்லை என்பதை அவன் அறிந்துகொண்டான். இந்தக் கால்கட்டு உயிரே போவதானாலும் தன்னை விட்டு விலகாது என்ற அளவுக்கு அவனுக்கு நிச்சயமாகி விட்டது. இந்த விபரீதமான நிலைக்கு எது காரணமோ அதுதான் அவனுக்கே விளங்கவில்லை. காலைச் சுற்றின பாம்பின் கதைதான். டாக்டர் அவனைப் பார்த்து, “சரி, நீ போக வேண்டாம்; நடப்பது நடக்கட்டும்” என்றார். சந்தேகக் கண்களோடு அந்தப் பெண் டாக்டரையும் அரவிந்தனையும் மாறி மாறிப் பார்த்தாள்.

“உன் பெயர் என்ன?” என்றார் டாக்டர், அவளைப் பார்த்து.

“தங்கச்சி—” என்றாள் அவள்.

“வேறே யார் இருக்காங்க உனக்கு?”

“ஒருத்தருமில்லே—”

“மாமா, தாத்தா, பெரியப்பன், சித்தப்பன்?”

“இருக்காங்க எல்லாரும்; ஆனா நான் எங்கியும் போக மாட்டேன்.”

“ஏன்?”

“நாங்க அங்கே போனதில்லே; அவுங்களும் எங்களைச் சேக்கிறதில்லே.”

“ஏன்?”

“அது ஏன்னு தெரியாது. எங்கம்மாவைத்தான் கேக்கணும்!”

“இப்பத்தான் அம்மா இல்லையே!”

“அதனாலே இனிப் போகவே முடியாது.”

“உங்க அப்பா?”

“இல்லே.”

“இல்லேன்னா?”

“இருக்காரோ, செத்திட்டாரோ? முந்தியே செத்திட்டாருபோலிருக்கு!”

“உனக்குத் தெரியாதா?”

“ஒத்தருக்குமே தெரியாது.”

“அப்ப இனிமே என்ன செய்வே?”

“என்னத்தைச் செய்யிறது?”

“இவனையே பின்னே ஏன் விடாமல் கழுத்தைக் கட்டிக்கொண்டு இருக்கே?”

“என்னை அவர்தானே முதல்லே..அவர்தானே முதல்லே..”

“என்ன முதல்லே?”

“பயப்படாதேன்னு.....”

“சொன்னாரா?”

“தெரியாதா.. உ.. ஊ”– என்று அவள் மீண்டும் குலுங்கி அழத் தொடங்கிவிட்டாள். அவள் அழுகை ஓய்ந்தால் போதும் என்று ஆகிவிட்டது அவருக்கு.

24

முதல் நாள் விமானத்திலிருந்து போட்ட பொட்டலங்களில் மிச்சம் மீதி இருந்ததைத் தின்றுவிட்டு, எல்லாரும் குடிக்கத் தண்ணீர் இல்லாமல், தாகம், தாகம் என்று தவித்தார்கள். வெள்ளக் காடாகத் தேங்கிக் கிடந்த தண்ணீரைக் குடிக்க அவர்களுக்குத் துணிவில்லை. சற்றுத் தூரத்தில் விழுந்து கிடந்த மரக் கிளை ஒன்றில் அகப்பட்டுக் கொண்டு ஒரு கன்றுக்குட்டி வயிறு மதகளித்து விறைத்துக்கொண்டிருந்தது. தண்ணீருக்கு மேலே தெரியும் அதன் உடலைப் பார்த்த பிறகும் யாருக்கு அதைச் சேந்திக் குடிக்க மனசு வரும்? மேலும், அது கடல்பாய்



ந்த உப்புத் தண்ணீர். ஈரத் தரையும், சுள்ளென்று எரிக்கும் வெயிலும், தாகத்தை அதிகப்படுத்தின.

பாமினி காலை முதல் யாரிடமும் ஒரு வார்த்தையும் போய்ப் பேசவில்லை. பேச வந்தவர்களிடமும் வார்த்தை கொடுக்கவில்லை. எல்லாவற்றையும் மிரண்ட தோற்றத்துடன் வெறிக்க வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுடைய நெஞ்சுக்குள்ளே ஓர் எரிமலையே கனிந்து குமைந்துகொண்டிருந்தது. பசி, தாகம், சோர்வு, மயக்கம் எல்லாம் சேர்ந்து அவளை வதைத்தன. அவளுடைய பாட்டியோ சாகாத குறைதான். தன்னை மறந்த மயக்கத்தில் கிடந்த வடிவுக்குப் பக்கத்தில் அவளும் விழுந்து கிடந்தாள். உயிர் இருப்பது மூச்சு விடுவதிலிருந்துதான் தெரிந்தது.

மணி மூன்று இருக்கும். மீண்டும் விமானம் வட்டமடிக்கும் சப்தம் கேட்டது. எல்லாரும் வெகு ஆவலோடு அண்ணாந்து பார்த்தனர். நேற்றுமாதிரி விமானம் ஊரின்மீது பறந்து வரவில்லை. எல்லைவரையில் வந்துவிட்டு அது திரும்பிக் கிழக்குத் திசை ஓரமாகவே செல்லத் தொடங்கியது. ஆரவிந்தனும் மற்றும் சிலரும் ஆடைகளைத் தூக்கி விசிறிக் காட்டிச் சைகையெல்லாம் செய்தனர். பலம் இருந்தமட்டில் சப்தம் போட்டுக் கூவினர். அதனால் எந்தப் பயனும் ஏற்படவில்லை. அந்தச் சப்தம் விமானியின் காதுக்கு எட்டாது என்பதும் அவர்களுக்குத் தெரியும். அந்தச் சமிக்ஞைகளை அவர்களால் பார்க்க முடியாது என்பதும் தெரியும். ஏதோ அதில் ஒரு திருப்தி!

வெளியுலகத் தொடர்பற்ற நிலையில், பொழுதும் சாய்ந்து வருவது அவர்களுக்கு எல்லையற்ற கலக்கத்தைக் கொடுத்தது. ஒன்றுமே செய்ய முடியாமல் இருந்த கையாலாகாத் தனத்தை எண்ணி நொந்துகொண்டார்கள். ஆயினும் டாக்டர் அவர்களிடையே இருந்தது அவர்களுக்குத் துளி நம்பிக்கையைக் கொடுத்துக்கொண்டிருந்தது. அவர்களுக்காக இல்லாவிட்டாலும் அவரை முன்னிட்டாவது எப்படியோ வெளியுதவி வந்து விடும் என்று அவர்கள் எண்ணினார்கள். டாக்டர் மனம் இடிந்து, வாய் புதைக்க, மறுக்க் கொண்டிருந்தார். எல்லாருடைய துன்பங்களையும்விட அவருடைய துன்பங்கள் கரையில்லாதது என்று உண்மையில் யாருக்குத் தெரியும்? பெயரும் புகழும் கிடைக்கவிருந்த அந்த மகத்தான சந்தர்ப்பம், இப்படி வீணாகச் சீரழிந்து போய்விட்டதே என்றுகூட அவர் இடிந்து போகவில்லை. கஷ்டமே இன்னது என்று தெரியாமல் இத்தனை காலம் அதிகார வசதியும், பண வசதியுமாகக் கொழித்த அவருக்கு, இந்தக் கஷ்டம், துன்பங்களையெல்லாம் சகிக்கும் படியான நிலை வந்து விட்டதே என்று பிறருக்குத் தோன்றலாம்; ஆனால் அவருக்கு அதுகூடப் பெரிதாகத் தோன்றவில்லை. லட்சம் லட்சமான பணமும், செய்த வேலைகளும் பாழாக விட்டனவே என்றும் அவர் மறுகிப் போகவில்லை. நூற்றுக் கணக்கில் வேலை செய்தவர்கள் காணாமல் பலியாகி விட்டதற்காகவும் அவர் கலங்கவில்லை. ஆனால், இனி எந்தக் காலத்திலும் இந்தச் சான்றுகளைப் பிரிக்க முடியாமல் போய்விட்டதே என்ற ஒரு கவலைதான் அவரை வாய்மூடியாக்கி விட்டது. செத்தவர்களை அடக்கம்கூடச் செய்ய முடியவில்லையே என்ற குறையும் அவரை வாட்டிக்கொண்டேயிருந்தது. இனி இருப்பவர்களுக்கும் இந்தக் கதி நேர்ந்து விடப் போகிறதே என்கிற பயமும், உள்ளூற அவருக்கு இருந்து வந்தது. எல்லாருக்கும் தைரியம் சொல்லி, வழி காட்ட வேண்டிய நிலையில் உள்ள அவருக்கு, யாராவது தேறுதல், யோசனை எல்லாம் சொன்னால் தேவலை என்று ஆகிவிட்டது.

கைலாசநாதர் ஆலயத்தில் பல உத்தியோகஸ்தர்களும், நூற்றுக் கணக்கான ஜனங்களும் வேலை செய்துவந்தார்கள். அவர்கள் எல்லாரும் என்ன ஆனார்களோ? இன்னும் சுற்று வட்டாரங்களில் அங்கங்கே நாலு பேர், ஐந்து பேர் என்று இடிந்து பாழான மண்டபங்களையும் கோபுரங்களையும் ஆராய்ந்து வந்தார்கள். அவர்களை எல்லாம் எந்தக் கணக்கில் சேர்ப்பது என்றே புரியவில்லை. நஷ்டக் கணக்கில் சேர்த்தால், எண்ணிக்கை நாலு ஸ்தானத்துக்கு வந்து விடும் போலிருந்தது. இதையெல்லாம் நினைத்துப் பார்க்கவே பயங்கரமாக இருந்தது. ஊரையே சூறையாடிய கடல், அவரையும் அடித்து இழுத்துக்கொண்டு போயிருக்கக் கூடாதா? இப்படித்தான் அவர் மனம் உண்மையிலேயே விரும்பியது. அதிலே இன்னொரு லாபம்கூட அதிகப்படியாக உண்டு. எந்தப் புகழையும் பெயரையும் அவர் ஒரு பொருட்டாக மதிக்கவில்லையோ, அதுகூட அவருக்குக் கிடைத்திருக்கும். அவர் முயற்சியை யாரும் என்றென்றும் மறக்கமாட்டார்கள். சரித்திரத்தின் ஏடுகளிலே அவர் பெயர் அழியாமல் ஏறியிருக்கும். ஆனால், இன்று இத்தனை துன்பங்களையும் துயரங்களையும் நேரில் கண்டு அநுபவிக்கும்படியான ஒரு மகத்தான துர்ப்பாக்கியம் அவருக்கு நேர்ந்துவிட்டது.

பழமொழிச் சித்திரம்

மலையைக் கெல்லி எலியைப் பிடித்தானாம்.

கருத்துரை:—வானளாவி நிற்கும் மலையைச் செதுக்கினான் சிற்பி! செதுக்கிய பின் எழுந்ததோ ஒரு எலியின் சிலை!!

இயற்கையின் உற்பாதங்களில் இது மிகவும் கொடுமையானது என்றே அவருக்குத் தோன்றியது. பூமி பிளந்து வெடித்திருந்தால், கண் மூடிக் கண் திறக்கும் நேரத்தில் நாடு—நகரம், நாகரிகம் எல்லாவற்றையுமே நோகாமல் விழுங்கியிருக்கும். இப்படிச் சிலரைத் தவிக்க விட்டுவிட்டு, சிலரை மட்டும் எடுத்துக்கொண்டு ஓர வஞ்சனை செய்யாமல் இருந்திருக்கும். மரணத்தின் தலைவாயிலை நேரில் பார்த்து விட்டு, திரும்பவும் வந்திருப்பது போன்ற பயங்கரம் வேறு ஒன்றுமில்லை.. சாவு என்பதுதான் எத்தனை பாரபட்சமற்ற முடிவைச் செய்து விடுகிறது! அங்கே, 'அவன் பெரியவன், இவன் எளியவன்' என்ற வேற்றுமையில்லை. படித்தவன், படிக்காதவன், நல்லவன், கெட்டவன் என்பதற்காக ஸ்பெஷல் மரியாதை மட்டுக்கள் இல்லை. இதையெல்லாம் மனிதன்தான் ஏற்படுத்தியவன். மனிதன் மட்டும் என்ன, உயிர்கள் எப்படி ஜடமாகத் தோன்றினவோ, அப்படியே எல்லாம் ஜடமாக அந்தச் சாவின் பெருந் திரைக்குப் பின்னே மறைந்து விடுகின்றன. பெண்கள் என்று பிரத்தியேக இடம் கிடையாது, தனிச் சலுகை எதுவும் கிடையாது. உரிமைப் பாதுகாப்பு என்று ஒன்றும் கிடையாது. மெல்லியலார், மடவார், பேதையர், கோதையர்—என்றெல்லாம் அந்தத் திரைக்குப் பின்னே இலக்கியப் பிரிவு ஒன்றும் கிடையாது. குழந்தைகள், கிழவர்கள் என்றெல்லாம்அங்கே பெரிய பந்தி, சின்ன பந்தி எதுவும் கிடையாது. அதன் மந்திரக் கரங்களிலே வேதனைப் படுவாரும் இல்லை. சாவு என்பதுதான் எத்தனை சாந்தியையும் இன்பத்தையும் கொடுத்து விடுகிறது! அதுவும் ஒரே நொடியில்! உடலோடு இருக்கும் நாம், உடலைப் பிரிந்து சென்றவர்களுக்காக அழுகிறோமே, எத்தனை பைத்தியக்காரத்தனம்! இன்னும் இந்த நாற்றமும், வேண்டாத அழுக்குச் சுமைகளும், பிரிவுகளும் வேற்றுமைகளும் ஏற்படுத்திக் கொண்டு இந்த உடலோடு அவதிப் படுகிறோமே, அதற்காகவல்லவா அழ வேண்டும்!...

மணிக்கு ஒருவித ஆசனங்களில் மாறி உட்காரும் டாக்டர், சாவின் இன்பத்தைக் கற்பனை செய்துகொண்டே வெயிலில் மண்டை பிளக்க, தரையில் கால் குரக்களி வாங்க, வெள்ளெழுத்துக் கண்கள் வேதனையைத் தர, ஜடம்போல உட்கார்ந்திருந்தார்.

வீல் வீல் என்று அந்த ஒரு வயதுக் குழந்தை வாய் ஓயாமல் அலறிக் கொண்டிருந்தது. அதிர்ச்சிக் கலக்கத்தில் இருந்த அந்த வடிவு, ஆழ்ந்த தாக்கத்தில் கையையும் உடலையும் போட்டு முறித்துக் கொண்டிருந்தாள். வாய் விவரமற்ற ஒலிகளை முனகிக்கொண்டேயிருந்தன. "தண்ணி! தண்ணி!"

டாக்டருக்கு இந்தக் காட்சி பொறுக்கவில்லை. மற்றக் கவலைகளையெல்லாம் வாங்கிக்கொள்ளாத அவருடைய உள்ளத்தில் இந்த வேதனைமட்டும் வேல் போல் துளைத்துச் சென்றது. அவர் முத்தையனைப் பார்த்து, "போய்ப் பக்கத்தில் உட்கார்ந்து, உடம்பைப் பிடித்து விடு பரவாயில்லை. ஆபத்தில் வெட்கம் என்ன, பாவம் என்ன?" என்று கூறினார், அவருடைய யோசனை நல்ல பலனைக் கொடுத்தது. அந்தப் பெண்ணின் உடல் மந்திரத்துக்குக் கட்டுப்பட்டதுபோல் முத்தையனின் ஸ்பரிசத்தை உணர்ந்து நிதானப்பட்டு விட்டது. கைகள் அவன் கைகளை உறுதியாகப் பிடித்துக் கொண்டிருந்தன.

திடீரென்று வடமேற்குத் திசையாக, கிளியனூர்ப் பாதையில் எதையோ பார்த்துவிட்டு அரவிந்தன் கத்திக் கொண்டே துள்ளியெழுந்தான். அவனைத் தொடர்ந்து அந்தப் பெண் தங்கச்சியும் மற்றவர்களும் எழுந்து ஓடினார்கள். ஏழெட்டுப் படகுகளும், கட்டு மரங்களும் போட்டுக்கொண்டு, பல தலைகள் ஊர்ந்து வருவது தெரிந்தது.

அந்திப் பொழுதுக்கு முன்னே, மீட்பு வேலைக்காக, சாரணர்கள், தொண்டர்கள், சமூக ஊழியர்கள், போலீஸ் சேவகர்கள் என்று அலைஅலையாகப் பலர் வந்து சேர்ந்து விட்டார்கள். சாவடி மேட்டில் தங்கியிருந்த ஆண் பெண்கள் பெரும்பாலோரும் தங்கள் நிலையை முற்றிலும் மறந்து தொப்புத்தொப்பென்று எழுந்து குதித்தார்கள். எழுந்திருக்காதவர்கள் ஐந்தே பேர்கள்தான். டாக்டர், அந்த வடிவு, முத்தையன், பாமினி, அவள் பாட்டி! மற்றவர்கள் துன்பம் துயரம் பயம் எல்லாவற்றையும் ஒட்ட உதறுவதுபோலத் துள்ளித் துள்ளிக் குதித்தார்கள். துக்கத்தையெல்லாம் குமட்டிக் கக்குவதுபோல் காச்சு மூச்சென்று கத்தினார்கள்.

கிளியனூர் தலைமை ஸ்தலத்திலிருந்து முக்கிய அதிகாரிகள், டாக்டரையும் அரவிந்தனையும் தேடுவதற்காக மீட்புப் படையினருடன் சேர்ந்து முதல் கோஷ்டியில் வந்திருந்தார்கள். கிளியனூரை மையமாக விட்டுவிட்டு, புயலும் கடலும் மற்றக் கிராமங்களைமட்டும் சீரழித்திருந்த கதை அவர்கள் வந்து சொன்ன பிறகுதான் தெரிந்தது. இயற்கையின் திருவிளையாடலில் 'எது, என், எப்படி?' என்ற கேள்விகளுக்கு இடம் ஏது? இறைவனின் மாயம்தான் இயற்கையின் மாய விளையாட்டும். இத்தனைக்கும் கிளியனூர் கொஞ்சம் பள்ளமான பகுதி. காட்டை அடுத்த ஊர். காற்று வாட்டத்தில் உள்ள வடமேற்கில் கணக்காக அமைந்த கிராமம். ரயில்வே ஸ்டேஷனில் வேய்ந்திருந்த ரயில் ஓடுகள் பறந்ததைத் தவிர, வேறு புயலின் வேகம் இருந்ததற்கான அறிகுறிகள் சிறிதுமே இல்லை. ஆனால், உயரமான பகுதிகளிலும் வாட்டமில்லாத பகுதிகளிலும் இருந்த சுற்றுப்புறக் கிராமங்கள் சர்வ நாசமாகிச் சீரழிந்து போயிருந்தன. ஏராளமான கால் நடைகளுக்கும் மனிதர்களுக்கும் உயிர்ச் சேதம் உண்டாகியிருந்தது. ஒரு கிராமத்தில் ஒரு தெரு முழுவதிலும் ஒரு வீட்டிலாவது மேற்கூரையே இல்லை. சுவர் இடிந்து உயிரிழந்தவர்களும், மரம் விழுந்து உயிரிழந்தவர்களும் உத்தேசமாகத்தான் தெரிந்ததே தவிர, உண்மைப் புள்ளி விவரங்கள் தெரியவே இல்லை.

டாக்டருக்கு இத்தனைக்கும் நடுவில் மற்றொரு விவரம் மனச்சாந்தியைக் கொடுத்தது. கைலாசநாதர் ஆலயத்தில் வேலை செய்துகொண்டிருந்த ஆபீஸர்கள், சிப்பந்திகள் எல்லாரும் கடு மழையாக இருக்கும்போதே கிளியனூருக்குப் போய்ச் சேர்ந்துவிட்டார்கள். மீட்புப் படைக்கு வழி காட்டியாக வந்த வஸந்தனை, அப்படியே இறுகக் கட்டிக்கொண்டு விட்டான் அரவிந்தன். தனக்குத் தெரிந்தவர்களையெல்லாம் மீண்டும் உயிரோடு காண நேர்ந்ததைக் கண்டு வஸந்தன் பச்சைக் குழந்தைமாதிரி தாவித் தாவிக் குதித்தான். அந்த வேகத்தில், தலைகால் தெரியாத ஆனந்தத்தில் அவன் பாமினியின் தோளைப் பிடித்து, கழுத்துச் சுளுக்கிக் கொள்ளுமோ என்று பயப்படும்படிக் குலுக்கிவிட்டான். அந்த இம்சையைப் பொறுக்க முடியாமல் பாமினி அவனைப் பிடித்துத் தள்ளின பிறகுதான் அவனுக்குத் தன் தவறு தெரிந்தது.

"மன்னிக்கணும், மன்னிக்கணும்!" என்று சலாம் போட்டுக்கொண்டே அவன் முத்தையன் மீது இடறி விழுந்தான். மீண்டும் "கெக் கெக்கே" என்று விழுந்த வெட்கம் தாங்காமல்சிரித்துக்கொண்டே, அவன் டாக்டர் முன்னால் மரியாதையை மறந்து போய் மண்டி போட்டுக்கொண்டு பைத்தியம் பிடித்ததுபோலச் சிரித்தான். திடீரென்று எழுந்து போய் அரவிந்தனை அள்ளித் தூக்கிக்கொண்டு கரகரவென்று பம்பரமாகச் சுற்றினான். நொந்து போயிருந்த அரவிந்தனின் கதறலை அவன் காதிலேயே வாங்கிக் கொள்ளவில்லை. திடீரென்று கூட்டத்திலே யாரையோ பார்த்துவிட்டு, அரவிந்தனுக்குத் தலை சுற்றும்போது கீழே அவனை விட்டுவிட்டு, அங்கே ஓடிப் போய், "என்ன, குருக்கள் ஐயா! பூணூலைப் புயலுக்குப் பறிகொடுத்தூட்டிங்களா!" என்று கூவினான். சுற்றிய மயக்கத்தில் சுருண்டு விழப் போன அரவிந்தனைப் பிடித்துக்கொண்டாள் தங்கச்சி. "இந்தா இந்தா, நீ விடு அவரை!" என்று அவளைக் கையைப் பிடித்து இழுத்து விட்டு, அவன் மீண்டும் பாமினியிடம் ஓடினான். "ஓ—நீங்க.." என்று எதையோ சொல்ல வந்தவன் சொல்லாமல் மடங்கி ஓடி வந்தான்.

[illegible]வுக்கு நிதானம் உண்டாகக் கால் மணி நேரம்போல ஆகிவிட்டது. அப்புறம்தான் அங்கே நிகழ்ந்திருந்த கோரக் காட்சிகள் அவன் மனசிலும் மற்றவர்கள் மனசிலும் பதியத் தொடங்கின.

வஸந்தனோடு வந்திருந்த நாகநாத சர்மா, மனத்தைத் தளர விடாத உறுதியுடன், "உம்.. உம். வஸந்தா! அரவிந்தா! முதலில் அந்தப் பெண்கள், கிழவிகள் எல்லாரையும் ஒரு பாட்ச் படகில் ஏற்றி அனுப்புங்கள்.. இருட்டுவதற்குள் இந்த இடத்தைக் காலி செய்ய வேண்டும்!" என்றார்.

மீட்புப் படையினர் மிகச் சுறுசுறுப்பாக வந்த வேலையில் முனைந்தனர். இணையற்ற ஊக்கத்துடனும் கைச்சுருக்குடனும் அத்தனை பேரும் அங்கேயிருந்தவர்களை அப்புறப்படுத்தினார்கள். எல்லாரையும் ஏற்றி விட்டுவிட்டுக் கடைசியாகத்தான் அரவிந்தன் சர்மாவோடும் வஸந்தனோடும் புறப்பட்டான். அரவிந்தன் என்று சொன்னால், தங்கச்சியையும் தனியாகச் சொல்ல வேண்டியதில்லை என்பதுபோல அவளும் அவனோடுதான் புறப்பட்டாள்.

(தொடரும்)

ஷாவும் வெட்கப்பட்ட விஷயம்!

பர்னார்ட்ஷா எப்பொழுதுமே இடக்காகப் பதில் சொல்லுவதில் சமர்த்தர். பலர் அவரைப் புகழ்ந்தாலும், அவரை இகழ்வதற்குச் சிலரேனும் இருந்துவந்தனர்.

ஒரு சமயம் ஷாவை ஒரு இளைஞர் சங்க ஆண்டு விழாவுக்குத் தலைமை வகிக்கும்படிக் கேட்டுக் கொள்ளும் ஒரு கடிதம் அவருக்குக் கிடைத்தது. பதில் கிடைக்கத் தாமதம் ஏற்படவே, சங்கத்தினர் அடுத்தடுத்து இரண்டு கடிதங்கள் எழுதித் தங்கள் சங்கத்துக்குத் தலைமை தாங்கித் தங்களை கௌரவிக்குமாறு கேட்டுக்கொண்டனர். இதற்கும் ஷா பதில் எழுதவில்லை. கடைசியாக நான்காம் முறையும் கடிதம் ஒன்று வந்தவுடன், கார்டு ஒன்று எடுத்து, "இந்த வைபவத்துக்குத் தலைமை தாங்க நான் முற்றிலும் தகுதியற்றவன். தகுதி வாய்ந்த வேறு யாரையேனும் பார்த்துக்கொள்ளவும்" என பதில் எழுதிவிட்டார்.

இதைக் கண்ட சங்கத்தினர், மறுபடியும் கடிதம் ஒன்று ஷாவுக்கு எழுதினர், ஆனால் முற்றிலும் வேறு விதமாக. "நீங்கள் அவ்விதம் கூறக்கூடாது. மறுபடியும் ஒரு தடவை யோசித்து, உங்கள் கடைசித் தீர்மானத்தைத் தெரிவிக்கக் கோருகிறோம். ஏனெனில், நீங்கள் முடியாதென்றால், ஷெர்லி டெம்பிளை (ஒரு நடிகைச் சிறுமி) தலைமை வகிக்கச் சொல்லிக் கேட்டுக்கொள்வதாக முடிவு செய்திருக்கிறோம்."

ஷா இதைப் படித்துவிட்டுக் குன்றிப் போனார்!

—கே.

அம்பு முதல் அணுகுண்டு வரை

65. காலம் அறிந்தான்

நமது கிராமங்களிலே ஒரு பழக்கம் உண்டு. அதாவது கொடும்பாவி கட்டி இழுப்பது. வைக்கோல் அல்லது சோளத் தட்டையினலே ஓர் உருவம் செய்வார்கள். மனிதனைப் போன்றதோர் உருவம். அதன்மீது களிமண்ணைப் பூசுவார்கள். விதவிதமான வர்ணங்களைத் தீட்டுவார்கள். பிறகு ஊரார் பலருங் கூடி அந்த உருவத்தின் காலிலே கயிறு கட்டி இழுப்பார்கள். தெருக்கள்தோறும் இழுத்துச் செல்வார்கள். தாரை, தப்பட்டைகள் முழங்கும். பின்னே பலர் அந்த உருவத்தைச் சுற்றிவந்து மாரடித்துக்கொண்டு அழுவார்கள். இவ்வித ஆரவாரத்துடன் அந்த ஊர்வலமானது ஊர் முழுதும் சுற்றும். பிறகு அந்த உருவத்தை ஊருக்கு வெளியே இழுத்துச் செல்வார்கள். அங்கே அதற்குக் கொள்ளி வைத்துக் குடமுடைப்பார்கள்.

இது என்ன வழக்கம்? ஏன் இவ்விதம் செய்கிறார்கள்? பருவ மழை தவறினல்—அதாவது மழை பெய்யாமல் இருந்தால்—இப்படிக் கொடும்பாவி கட்டி இழுப்பார்கள். கொடும்பாவி கட்டி இழுத்தால், மழை பெய்யும் என்று சொல்வார்கள்.

கொடும்பாவிக்கும் மழைக்கும் என்ன சம்பந்தம்? பகுத்தறிவுக்குச் சிறிதும் பொருத்தமாயில்லை என்று சொல்லத் தோன்றும்.

ஆனல், சிறிது ஆழ்ந்து கவனித்தால் இதன் பொருள் விளங்கும்.

கொடும்பாவி கட்டி இழுக்கும் பழக்கம் நமது நாட்டில் மாத்திரம்தான் இருப்பதாக நினைக்க வேண்டாம். ஐரோப்பாவிலும் உண்டு. இதலி, பிரான்ஸ் முதலிய நாடுகளிலும் இத்தகைய பழக்கத்தைக் காணலாம்.

66. இது என்ன வழக்கம்

ஆயிரக்கணக்கான ஆண்டுகள் முன்பு வாழ்ந்த மனிதன் என்ன கண்டான்? வெயில் கண்டான்; மழை கண்டான். ஆனல், வெயில் காலத்திற்குப் பின் மழை காலம் வரும் என்று திட்டமாக அவனுக்குத் தெரியாது, சந்தேகம்.

வெயில் காலம் அவனது பகை. வெயில் காலத்திலே நீர் நிலைகள் வற்றின. பயிர்கள் கருகின. மழை வந்தால் பயிர் செழிக்கும். பயிர் செழித்தால் அவனுக்கு மகிழ்ச்சி. எனவே, அவன் மழையை எதிர்பார்த்தான். வானத்தை நோக்கியிருந்தான்.

எப்போது மழை வரும் என்பது அவனுக்குத் தெரியாது. மழைத் தெய்வத்துக்குக் கோபம். அதனல் தான் வரவில்லை. இப்படி அவன் நினைத்தான். மாரியாத்தாளுக்குப் பிடிக்காதவன் எவனே இருக்கிறன். அதனல்தான் மாரி மனம் இரங்கவில்லை. அவனைக் கொன்று மாரியின் மனம் மகிழச் செய்ய வேண்டும் என்று எண்ணினன்.

அந்த எண்ணமே கொடும்பாவி கட்டி இழுக்கும் வழக்கமாயிற்று. ஆயிரக்கணக்கான ஆண்டுகள் முன்பு—மனிதன் அறிவு வளம் பெருத காலத்திலே செய்த ஒரு வழக்கம், இன்றும் நம்மிடையே நிலைத்து நிற்கிறது. ஆனல், இந்த வழக்கம் நிலைத்ததாலேயே அந்த நாளில் மனிதன் எப்படி நினைத்தான் என்பதை நாம் அறிய முடிகிறது.

ஆகவே, மனிதன் முதன்முதலாகப் பயிர்த் தொழில் செய்த காலத்திலே—அந்தத் தொடக்க நாளிலே—பருவங்களைப்பற்றி அறியாதிருந்தான். பருவ

காலங்கள் அடுத்துவரும் என்று அவனுக்குத் தெரியாது.

ஆண்டுகள் பல சென்றன. மனிதன் அநுபவம் பெற்றான். வெயில் காலம், பிறகு மழை காலம், அதன்பிறகு பனிக் காலம் என்று மாறி மாறி வருவதை அறிந்தான்.

காலத்தை உணர்ந்தான். கணக்கிடத் தொடங்கினான். பருவ காலங்களை யொட்டி எண்ணினான்.

அப்போது மாதம், கிழமை, நாள் முதலியன இல்லை. இவை பின்னே வகுக்கப்பட்டன.

67. காற்றும் காலமும்

ஆற்றின் கரையிலே வாழ்ந்த மனிதன் மரத்தினாலே படகுகள் செய்தான் அல்லவா? அவற்றின் உதவியினாலே நீரிலே ஊர்ந்தான். நீண்டதூரம் பயமின்றிச் சென்றான்.

சில சமயங்களில் அவன் சோர்வடைந்தான். நீண்ட தூரம் துடுப்பு வலிக்க முடியவில்லை. கஷ்டமாயிருந்தது. அப்போது காற்று வேகமாக வீசியது. மனிதன் எழுந்து நின்றான். காற்றின் சக்தி அவனைத் தள்ளியது. அந்த மோதலினால் படகு சிறிது வேகமாகச் சென்றது. இதைக் கண்டான் மனிதன். காற்று வீசும்போது எழுந்து நிற்பான். படகு வேகமாக ஓடும். அது அவனுக்கு ஆனந்தமாயிருக்கும். கொஞ்சகாலம் கழித்து இதுவும் அவனுக்கு அலுப்பாயிருந்தது.

ஒரு சமயம் படகில் செல்கையில், காற்று வீசியபோது ஒரு பெரிய பாயை விரித்துப் பிடித்தான். காற்று அதிலே வேகமாக மோதியது. படகு விரைந்து சென்றது. இதைக் கண்டான் மனிதன். மகிழ்ச்சி கொண்டான். படகிலே ஒரு கொம்பைக் கட்டினான். அதிலே பாயை விரித்துக் கட்டினான்.

இப்போது பாயின்மீது காற்று மோதியது. படகு வேகமாகச் சென்றது. மனிதன் ஆனந்தமாக உட்கார்ந்தான்.

பருவ காலங்களின் தன்மையை அறிந்த பிறகு, பயமில்லாமல் படகோட்டத் தொடங்கினான், நீண்ட தூரம் பிரயாணம் செய்தான். எப்போது காற்று வீசும், எப்போது மழை வரும் என்பது அவனுக்குத் தெரியும். ஆகவே, ஆற்றோரமாகவே கடலுக்குச் சென்றான். பல இடங்களுக்குப் போனான். போன வழியே திரும்பினான்.

இப்போது அவனுக்கு மிகுதியும் துணிவுண்டாயிற்று.

68. ஏரும் எருதும்

ஆண்டுகள் சென்றன. மனிதனின் பயிர்த் தொழில் வேகமாகப் பெருகிற்று. முன்பு சிறிது இடத்திலே பயிர் செய்தான் மனிதன். இப்போது பெரிய அளவில் பயிர் செய்யத் தொடங்கினான். அது அவனுக்குக் கஷ்டமாயிருந்தது. பெரிய நிலப் பரப்பை வெட்டுவது சிரமமாயிருந்தது. எனவே, அவன் மற்றொரு சக்தியைத் தேடினான். அந்தக் கோடரியிலே கயிறு கட்டி, அவன் மனைவி இழுத்தாள். அவன் கோடரியைப் பூமியிலே அழுந்தினான். மண் புரண்டது.

தொடக்கத்தில் இது சிறிது சுலபமாயிருந்தது. நாளடைவில் இதுவும் அலுப்பாயிருந்தது. எனவே, கோடரியிலே நீளமானதொரு கொம்பைக் கட்டினான். அதை எருதின் கழுத்திலே பிணைத்தான். எருதை விரட்டினான். எருது வேகமாக ஓடிற்று. வெகு விரைவிலே மண் புரண்டது. கண்டான் மனிதன். ஆனந்தம் கொண்டான். அது முதல் ஏர் பிடித்து வயலை உழுதான். பயிர் செய்தான். அவனது பயிர்த் தொழிலுக்கு உதவி புரிந்த சக்திகள் இரண்டு; அவை ஏரும் எருதும்.

அன்று முதல் தனக்காக உழைக்கக் கூடிய மற்றொரு சக்தியைக் கண்டுபிடித்தான் மனிதன்.

மனித வாழ்வு வெகு வேகமாக முன்னேறியது.

69. வாளும் போரும்

மனித குலம் பெருகிற்று. கூட்டங்கள் பலவாயின. ஆற்றோரங்களிலே வசித்த இக்கூட்டங்களுக்குத் தலைவர்களும் தோன்றினார்கள். அரசுகளும் ஏற்பட்டன.

நாளடைவில் இந்த அரசுகள் ஒன்றுடன் ஒன்று போரிடத் தொடங்கின.

அஹிம்சையின் வெற்றி

ஸ்ரீ சிவானந்த ஸரஸ்வதி தன் குடிலை விட்டு வெளிவந்த சமயம். அதிகாலை நேரம். ஜீப்பில் வந்தவன் உயர்ந்த வெள்ளை ராணுவ அதிகாரி. அன்னிய ஆட்சி நடந்த காலம் அது.

அஞ்சலி செய்து வரவேற்ற ஸ்வாமிஜீயையும் மதிக்காமல் டக்கென ஜீப்பிலிருந்து இறங்கி, தூண்டிலும் கையுமாக அண்மையிலிருந்த குளம் ஒன்றுக்கு விரைந்து சென்றுவிட்டான்.

"இவ்விடம் ஜீவ வதை செய்வதை ஸ்வாமிஜி விரும்புவதில்லை" என்று தன் குருவின் விருப்பத்தைத் தெரிவித்தார் ஒரு சிஷ்யர், அந்த வெள்ளையரிடம்.

சிறிதும் இதை லட்சியம் செய்யாமல், தூண்டிலை இப்படியும் அப்படியுமாகப் போட்டு தன் வேலையில் முனைந்திருந்தான் அவன்.

விஷயம் அறிந்த ஸ்வாமிஜி சற்று நேரம் ஆகாயத்தையே உற்று நோக்கிவிட்டு தன் குடிலுக்குள் சென்றுவிட்டார்!

அஸ்தமன சமயமும் நெருங்கிவிட்டது. இன்னும் அவன் கருத்துக் கலையவில்லை!

கடைசியாக ஸ்வாமிஜியை நெருங்கிய அவன் "உங்கள் விருப்பம் நிறைவேறிவிட்டது. நான் வெறுங்கையுடனேயே போகிறேன் பாருங்கள்!" எனக் கூறிக்கொண்டே ஜீப்பிலேறி விர்ரெனச் சென்றுவிட்டான்.

—கே.

போர்க் கருவிகள் செய்யத் தொடங்கினான் மனிதன். வாள், வேல் முதலிய கருவிகளைச் செய்தான். உலோகங்களில் வடித்துக் கொடுத்தான்.

மனிதக் கூட்டம் ஒன்றை மற்றொன்று அழிக்க முற்பட்டது. போர்! போரிடுவதே தொழிலாயிற்று. போர் செய்வதிலே பெருமைகொண்டான் மனிதன். மனிதனை மனிதன் அழிப்பதிலே ஆனந்தம் கொண்டான்; அடக்கி ஒடுக்கி ஆட்சி செய்வதிலே மகிழ்ச்சியடைந்தான்.

காட்டிலே மிருகங்களை வேட்டையாடிய மனிதன், இப்போது மனிதர்களை வேட்டையாடினான். சகஇனத்தை வேட்டையாடினான். அது ஒரு விளையாட்டாகத் தோன்றியது அவனுக்கு. வேட்டையாடும் உணர்ச்சி அவன் ரத்தத்திலே ஊறியிருந்தது.

ஆயிரக்கணக்கான ஆண்டுகள் சென்றன. எனினும், அந்த மிருக உணர்ச்சி அவனிடமிருந்து நீங்கவில்லை. கொன்று குவிப்பதும், குத்திக் கிழிப்பதும் அவனை விட்டு அகலவில்லை.

காட்டிலே வாழ்ந்த மிருகங்கள் எக்காரணமும் இன்றிக் கொன்றன. ஆனால், நாட்டிலே வாழ்ந்த மனிதன் காரணம் காட்டிக் கொன்றான்.

ஒரு கூட்டம் வாழ்வதற்காக மற்றொரு கூட்டம் அழிந்தது; அழிக்கப்பட்டது. அழிவுக்குப் போர் துணை செய்தது.

எனவே, போரும் வாளும் மனிதனின் பொழுது போக்காக விளங்கின.

70. நாடும் நாட்டமும்

வாளேந்திய மனிதன் வாளா இருப்பானா? இருக்கமாட்டான். அவனது நாட்டமெல்லாம் நாட்டின்மீதிருந்தது. எந்த நாட்டைப் பிடிக்கலாம் என்று துடிதுடித்தான்.

நாடு கவர்தல் நாகரிகம் என்று கருதப்பட்டது. அரசனின் கடமைகளில் அது ஒன்று என்று எண்ணப்பட்டது. எனவே, மனிதன் நாடு பிடிக்கத் தொடங்கினான்.

ஆதியிலே ஒருவனை மற்றொருவன் கொன்று தின்றான். பின்னே மிருகங்களைக் கொன்று தின்றான். அப்புறம் மற்றவர் சேகரித்து வைத்த பொருள்களைக் கொள்ளை கொண்டான். பிறகு மற்றவர் வாழும் பகுதியையே கவரத் தொடங்கினான்.

மற்றவர் பொருளைக் கவர்ந்தான்; நாட்டைக் கவர்ந்தான்; மற்றவரை ஏவல் செய்யத் தொடங்கினான்.

மற்றவர் நாடுகளைக் கொள்ளைகொண்டு அவர்களையும் சிறைப்படுத்திக்கொண்டு வருவது வழக்கமாயிற்று.

மனிதனை மனிதன் அடிமை கொள்வது தோன்றியது. மனிதன் தன் இனத்தையே அடிமை கொண்டான். அவர்களை வேலை செய்யச் சொன்னான். மிருகங்களை வேலை வாங்கியதுபோல மனிதனையும் வேலை வாங்கினான்.

(தொடரும்)





இடத்தின் மஹிமை

ஓமென்றுரைத்து நிதம் ஒழுக்கம் துளித்தவரு
நேமமெறிப பாபபான் நெடுநாட்கு முன்பிருநதான்
காலங் கலிகாலங் கட்டுதிட்டம் கால் மாடு
வேலைவெட்டி பார்த்துழைக்க வேட்கையுற்றானையனிவன்

சொந்த வயலுழுது சோளம் பயிராக்கி
அந்தரத்தில் பரணபோட்டு அதிலிருந்து காவல் செய்தான்

கானற் பொறி பறக்கும் கடும் வெய்யில் அன்றங்கே
சேனைக் குதிரைகளும் சேவகரும சூழ்ந்துவரப்
போஜன் மகராஜா புகுந்துவிட்டான் வேட்டைவழி
ராஜனுக்கும் சேனைகட்கும் ராட்சஸர்போல் பசிதாகம்

பரணுச்சிமேல் நிற்கும் பார்ப்பனனும் பரிவுடனே
வரவேற்றுபசரித்தான வாழ்த்துரைத்தான் வாயார.

வேட்டையிலே களைத்துவிட்டீர் வெள்ளரிக்காய் பறித்துண்பீர்
காட்டுக்குள்ளிதுதானென் கைகிடைத்த விருந்தென்றான்

நீர்வேட்கை மிகுந்ததனால் நிலந்தடவிப் பறித்துண்பார்
உண்பவரை யுபசரிக்க உயர்பரண் விட்டிறங்கியவன்
கண்பறி போனதுபோலக் கடுகடுத்து வசைபொழிந்தான்

முன்பின் முரணாக மொழிவதிவன் ஏனென்று
தன்பின் வருமமைச்சன் தனைக்கேட்டான் போஜனவன்

பரண்மீது மறுபடியும் பார்ப்பனனார் ஏறியதும்
முரண்பாடு நிகழ்ந்ததுபார்! முன்போலுபசரித்தார்

மந்திரி; பரணிருக்குமிடமஹிமை பார்ப்பனனின் மனமாற்றம்
அரணியத்திற் கீடாக அவன் விரும்பும் பொருள்கொடுத்து
நிலமிதைநீ வாங்கென்றான் நினைத்தபடி நடந்தாச்சு!

விளைநிலத்தை வெட்டியதும் விக்கிரமாதித்தனவன்
பளபளக்கும் தவிசிருக்கப் பார்த்தவனும் வியப்படைந்தான்.

(தொடரும்)

வயதும் வீரமும்

அரசன் பிரம்மதத்தனுக்கு அருமை மகன் பிறந்திருந்தான். குழந்தை வெகு அழகாக இருந்தது. வெறும் நோஞ்சானாக இல்லாமல் நல்ல வாளிப்பான தேகத்துடன் பிறந்திருந்தது அது. ராஜலக்ஷணங்களெல்லாம் அதன் ஒவ்வொரு அங்கத்திலும் அமைந்திருப்பதாக, சாத்திரம் அறிந்த பெரியோர்கள் சொல்லினர். இந்தக் குழந்தை பிற்காலத்தில் பெரிய வீரனாகத் திகழ்வான் என்றும் அவர்கள் சொன்னார்கள். அப்படிப்பட்ட ஒரு குழந்தையைப் பெற்றதில் அரசனுக்கு அளவில்லாத மகிழ்ச்சி! யாருக்குத்தான் சந்தோஷமாக இராது, போதிசத்துவரையே குழந்தையாகப் பெறுவதென்றால்!

குழந்தை ராஜசேகரன் கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து கல்வி கற்கும் பருவத்தை அடைந்தான். ஆகவே, அவனை தக்ஷசீலத்திற்கு அனுப்பி, கல்வி கேள்விகளில் சிறந்த ஒரு முனிவரிடம் படிக்க வைத்தான், அரசன்.

அந்த முனிவரிடம் படித்த மாணவர்களிலெல்லாம் ராஜசேகரனே முதல்வனாக இருந்தான். அவன் அங்கு கற்றது வெறும் படிப்பு மட்டுமல்ல; வீரப் பயிற்சிகளும் பயின்றான். அம்பு எய்தல், வாட்போர் செய்தல், கதை எடுத்துக்கொண்டு போரிடுதல் ஆகிய வீரப் பயிற்சிகளில் சிறிது சிறிதாகத் தேர்ந்துவந்தான் ராஜசேகரன்.

படிப்பும் பயிற்சியும் முடிந்து அவற்றி லெல்லாம் சிறந்த புலமை பெற்றவுடன், குருநாதரைப் பிரிந்து நாடு திரும்பவேண்டியதாயிற்று. அப்படிப் பிரிந்துபோகும் தருணம், முனிவர் இளைஞன் ராஜசேகரனை இழுத்து அணைத்துக்கொண்டு கண்ணீர்விட்டார். ‘மகா புத்திசாலியான மாணவனைப் பிரியுங் காலமும் வந்ததே’ என்றுதான் அவர் அப்படி மனம் வருந்தினார். இருந்தாலும் என்ன செய்வது? ஒரு இளவரசனை எத்தனை காலம்தான் தன் குருகுலத்தில் அடைத்து வைத்திருக்க முடியும்? அதனால் நாடு செல்ல ராஜசேகரனுக்கு அனுமதி கொடுத்தார்.

இளவரசன் ராஜசேகரனுக்கு ராஜ்யம் செல்ல அனுமதி கொடுத்த அம்முனிவர், அவனுக்குப் பல அஸ்திரங்களையும்கூட அளித்தார். தனது அன்பளிப்பாக

-அஸ்வத்தாமா-

அவர் அளித்த அந்த அம்புகளும், வாளும், கதையும் மிகவும் வலிமை வாய்ந்தவைகளாகும். தன்னிடம் இருந்த மிகச் சிறந்த அஸ்திரங்களைத்தான் முனிவர் ராஜசேகரனிடம் கொடுத்தார்.

முனிவரிடம் விடை பெற்றுக் கொண்டு, அஸ்திரங்களையும் சுமந்துகொண்டு, இடையில் இருந்த ஒரு அடர்ந்த காட்டின் வழியே நடந்து சென்றுகொண்டிருந்தான் ராஜசேகரன். நடுவில் எதிர்ப்பட்ட சில வழிப்போக்கர்கள் ராஜசேகரனை அருகில் அழைத்து, “அப்பா, இந்தப் பக்கமாகப் போகாதே. கொஞ்ச தூரத்தில் ஒரு கொடிய ராக்ஷசன் இருக்கிறான். அவன் உன்னை அடித்துக் கொன்றுவிடுவான். வழியறியாமல் இந்தப் பக்கமாகச் சென்ற எத்தனையோ பேர்களை அவன் இப்படி அடித்து விழுங்கியிருக்கிறான். ஆகவே, அழகான இளைஞனாகிய நீ, இவ்வழியாகச் செல்லாமல் வேறு பாதையில் செல்!” என்று எச்சரித்தனர்.

ஆனால், இதற்கெல்லாம் ராஜசேகரன் பயப்படவில்லை. “அப்படியா? நீங்கள் அஞ்சவே வேண்டாம்! அவன் என்னைக் கொன்று தீர்க்கமுடியாது; நான் தான் அவனை வென்று தீர்ப்பேன்!” என்று சொல்லிவிட்டு அவ்வழியே சென்றான்!

சிறிது தூரம்தான் சென்றிருப்பான் ராஜசேகரன். அங்கே பருத்து, திரண்ட, இமயமலையைப் போல பெரிய ராக்ஷசன் ஒருவன் நின்றுகொண்டிருந்தான். அவன் உடலெல்லாம் ரோமம் வளர்ந்து வெகு கோரமாகக் காட்சியளித்தது. பாதத்திலிருந்து கழுத்து வரை ஒரே மயிர்க்காடாக இருந்தது! கோரைப் பற்கள் நீண்டு பயங்கரமாகக் காட்சியளித்த அவன் முகத்தைக் கண்டாலே யாரும் கிடுகிடுத்துப் போய் விடுவார்கள்! பாட்டைத் தலையுடன், பனைமரம்போல் உயர்ந்து, கன்னங்கரேல் என்றிருந்த அந்த ராக்ஷசனைக் கண்ட ராஜசேகரன், ஒருகணம் திகைத்தான். பிறகு சமாளித்துக் கொண்டு, கம்பீரமாக மார்பை நிமிர்த்தி நின்றான்.

சின்னஞ் சிறுவன் ஒருவன் தன் எதிரில் நிற்பதைக்கண்ட ராக்ஷசனும் ஒருகணம் மலைத்துத்தான் போனான்! ‘என்ன தைரியம் இந்தப் பயலுக்கு! என்ன வீறாப்பாக நிற்கிறான் நம் முன்னே!’ என்று நினைத்தான் அந்த அரக்கன். பிறகு தனது உடலை ஒரு உதறு உதறிக்கொண்டு, “ஏ, பயலே! என்ன அகங்காரம் உனக்கு, என் முன் இப்படி நிற்க! உன்னை நசுக்கிச் சட்டினியாக்கி வயிற்றுக்கு இரையாக்கிவிடுவேன் தெரியுமா?” என்று, காடே கிடுகிடுக்கும்படிப் பயங்கரமாகக் கத்தினான் அந்தக் கோர ராக்ஷசன்.

ராக்ஷசன் தன்னைப் பார்த்துக் கத்தியதைக் கேட்ட ராஜசேகரன், பயத்தால் நடுநடுங்கவில்லை; கலங்கிக் கதறவும் இல்லை. பேசாமல் தனது வில்லில் அம்பைப் பூட்டி, அந்த அரக்கன்மீது எய்தான். ஒன்று, இரண்டு, மூன்று என்று பல அம்புகள் விட்டான் ராஜசேகரன். ஆனால், அந்த அம்புகளின் கதி என்னவாயின? முனிவர் தம்மிடமுள்ள சிறந்த அஸ்திரங்கள் எனக்கொடுத்த அவைகளின் கதி என்னவாயின? அத்தனை அம்புகளும் அந்த அரக்கனின் ரோமங்களில் போய் சிக்கிக்கொண்டன; அவ்வளவுதான்! அவற்றால் அந்தப் பாவியை ஒன்றும் செய்யமுடியவில்லை! பதிலாக அந்த ராக்ஷசன் ‘கெக்கெக்கே’ என்று கோரச்

ஜோசியம் பலித்த விதம்!

*

ஏழை ரிச்சர்டின் பஞ்சாங்கம் என்கிற புஸ்தகத்தை 1732ல் பெஞ்சமின் பிராங்க்ளின் என்பவர் பதிப்பித்தார். பல வருஷங்களாகப் பஞ்சாங்கங்கள் பதிப்பித்து, ஏராளமாக விற்று வந்த டைடன் லீட்ஸ் என்பவர் அவ்வருஷம் இறந்துவிடுவார் என்று பெஞ்சமின் பிராங்க்ளின் குறிப்பிட்டிருந்தார் தன் பஞ்சாங்கத்தில்.

குறிப்பிட்ட தேதியில் டைடன் லீட்ஸ் இறக்கவில்லை. ஆகவே, அடுத்த வருஷத்து டைடன் லீட்ஸ் பஞ்சாங்கத்தில், பெஞ்சமின் பிராங்க்ளினின் பஞ்சாங்கம் முழுப் பொய்யென்றும் அதை யாரும் வாங்கக்கூடாதென்றும் ஒரு குறிப்பிருந்தது. டைடன் லீட்ஸ் சாகாததே பெஞ்சமின் பிராங்க்ளினின் பஞ்சாங்கம் பொய் என்பதற்கு ஆதாரமாகக் காட்டப்பட்டது. அத்துடன் நிறுத்தாமல் டைடன் லீட்ஸ், தனக்குப் போட்டியாக வந்த பஞ்சாங்கக் கர்த்தாவை வாயில் வந்தபடியெல்லாம் திட்டி எழுதினார்.

அடுத்த வருஷத்திய ஏழை ரிச்சர்டின் பஞ்சாங்கத்தில் பதில் எழுதினார் பெஞ்சமின் பிராங்க்ளின். “டைடன் லீட்ஸ் என்பவர் பல வருஷங்களாகப் பஞ்சாங்கங்கள் பதிப்பித்து எல்லோருடைய புகழுக்கும் ஆளான ஒரு கனவான். அவர் தவறுதலாக யாரையும் ஒரு வார்த்தையும் சொல்லமாட்டார். கோபமே வாராதவர் அவர்; நல்லவர். அப்படிப்பட்டவர் பெயரில் என்னைப்பற்றிக் கேவலமாக யாரோ எழுதியிருக்கிறார்கள். டைடன் லீட்ஸ் என்பவர் பெயரை உபயோகித்து, அவர் இறந்த பிறகும் இறக்கவில்லை என்று பொது ஜனங்களை ஏமாற்றி, பஞ்சாங்கங்களை வெளியிட்டுப் பணம் பண்ண யாரோ கயவன் செய்த சூழ்ச்சி இது. டைடன் லீட்ஸ் நாம் சொன்னபடிச் செத்துவிட்டார். போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்” என்று எச்சரித்தார் பெஞ்சமின் பிராங்க்ளின்.

அதற்குப் பிறகு “நான் உயிருடன்தானிருக்கிறேன்” என்று டைடன் லீட்ஸ் எத்தனையோ அறிக்கைகள் விட்டார் எனினும் அவர் பஞ்சாங்கத்தை வாங்குவாரில்லாமல் போய்விட்டது. பெஞ்சமின் பிராங்க்ளினின் ஏழை ரிச்சர்டின் பஞ்சாங்கம் அமோகமாக விற்பனையாயிற்று.

அந்த நாட்களில் பஞ்சாங்கங்களில் செய்திகள், கிரஹசஞ்சாரம், கட்டுரைகள், வருஷத்தில் நடந்த—நடக்கப்போகும் செய்திகள் எல்லாம் காணப்படும். பெஞ்சமின் பிராங்க்ளின் சொன்ன ஜோசியம்—அதாவது டைடன் லீட்ஸ் சாகிற காரியம்—அவர் சொன்ன தேதிக்கு ஆறு வருஷங்களுக்குப் பிறகுதான் நடந்தது.

—எஸ். ராஜா.

சிரிப்புச் சிரித்துக்கொண்டிருந்தான்!

அம்புகளெல்லாம் தீர்ந்தும் பயன் ஏதும் இல்லை என்பதைக் கண்ட ராஜசேகரன், தனது கதையை எடுத்துக்கொண்டு அவனுடன் சண்டைக்குப் போனான். ஆனால், அதுவும் அந்த ரோமக் காட்டில் சிக்கிக்கொண்டுவிட்

கடைசியாக, தன் கைகளைக் கொண்டே அந்த அரக்கனைத் தொலைக்கவேண்டும் என்று கருதிய ராஜசேகரன், கை முஷ்டியை மடித்துக்கொண்டு அவனை நெருங்கி அவன் காலில் ஒரு குத்துவிட்டான்! கால் ஒன்றுதான் அவன் கைக்கு எட்டும்படியாக இருந்தது! அதனால் ஏற்பட்ட பயன், இரண்டு கைகளும் அரக்கனின் காடி மயிரில் மாட்டிக் கொண்டதுதான்!

பிறகு தலையால் மோதியும், கால்களால் உதைத்தும் பார்த்தான் இளவரசன். ஆனால், ஒன்றும் பயனில்லை. அவைகளும் மாட்டிக் கொண்டதுதான் மிச்சம்!

இத்தனையையும் சகித்துக் கொண்டு பிரமித்து நின்ற ராக்ஷசன், இப்போது 'ஹஹஹஹஹா' என்று பயங்கரமான சிரிப்பு ஒன்று சிரித்தான். "தம்பீ, உன் ஜம்பம் ஒன்றும் என்னிடம் சாயவில்லைபோலிருக்கிறதே! ஏதோ, சின்னப்பையன் என்று பார்த்தால், துள்ளு துள்ளு என்று துள்ளுகிறாயே!" என்று ராஜசேகரனைக் கேலி செய்தான் அந்த அரக்கன்.

அப்பொழுதும் ராஜசேகரன் கலங்கவில்லை. அவனுடைய தைரியம் அந்த இக்கட்டான சமயத்திலும் அவனைக் கைவிடவில்லை. அரக்கனின் காடி மயிர்களில் மாட்டிக்கொண்டிருந்த அந்த நிலையிலேயே ராக்ஷசனுக்குப் பதில் சொன்னான் அவன்.

"ஹே, ராக்ஷசனே! உன்னைப் பற்றி ரொம்பவும் பிரமாதமாக நினைத்துக் கொள்ளாதே! இன்னமும் உன்னை என்னால் வெற்றி பெற முடியாதென்று நீ நினைத்து விடாதே. நானறிந்த மஹாமந்திர மொன்றை என் மனத்துக்குள்ளாகவே நினைத்துக்கொண்டாலும் நீ தொலைந்தாய்! ஆனால், இது வரையில் அதை உன்மீது பிரயோகிக்க வேண்டாம் என்று நினைத்திருந்தேன். மேலும் நீ துள்ளுவாயானால், அந்த மந்திரத்தை நிச்சயம் உச்சரிக்கத்தான் போகிறேன். அப்போது நீ செத்து ஒழிவது திண்ணம்!" என்று ராஜசேகரன் வெகு உறுதியான குரலில் கூறினான்.

இதைக்கேட்ட ராக்ஷசனுக்கும் கொஞ்சம் யோசனையாகவே இருந்தது. 'இவ்வளவு கொடூரமாகத் தன்னிடம் நேருக்கு நேராகவே போர் செய்ய வந்தவன், சாதாரண மனிதனாக இருக்க முடியாது. அத்துடன் இவன் சிறுவனாக இருந்த போதிலும் அஸ்திரப் பயிற்சியில் தனக்குள்ள தேர்ச்சியையும், தனது அஞ்சாத ஆண்மையையும் நிரூபித்தே இருக்கிறான். இத்தகைய இவன், நிச்சயம் மந்திரம் அறிந்தவனாகவே இருப்பான். அஸ்திரங்களுக்கெல்லாம் ஈடு கொடுத்த தனது உடல், நிச்சயம் மந்திரத்துக்குக் கட்டுப்பட்டு, செத்தொழிந்துவிடக்கூடும்' என்று ராக்ஷசன் தனக்குள்ளாகவே நினைத்து, வெலவெலத்துப் போனான்.

உடனே, ராஜசேகரனை விடுவித்து, அவனைத் தானே நாட்டின் எல்லையில் கொண்டு விடுவதாகச் சொல்லி, அழைத்துச் சென்றான்.

ராஜ்யத்தின் எல்லையை இருவரும் அடைந்ததும், ராக்ஷசன் விடை பெற்றுக்கொண்டான். அப்போது ராஜசேகரன் அந்த அரக்கனை நிறுத்தி "அப்பா, இந்தக் கொலைபாதகத் தொழிலை எத்தனை காலந்தான் நடத்திவரப் போகிறாய்? ஒன்றும் அறியாத அப்பாவி மனிதர்களை வதைத்து, பாவத்தை மலைமலையாகக் குவித்து வைப்பதனால் பயன் என்ன? இன்னும் இழிவான பிறவி அடைவது தானே! ஆகவே, இந்தக் கொடுமையான வாழ்வை விட்டுவிட்டு, நல்ல மனிதனாக வாழத் துவங்கு. அப்போதுதான் அடுத்த பிறப்பிலாவது நீ நல்வழிப்படலாம்" என்று அவனுக்கு அறிவுரை புகன்றான்.

இந்தச் சொல்லைக்கேட்டு உள்ளம் உருகிப்போன அரக்கன், அன்று முதல் காட்டில் கிடைக்கும் காய்கறி, கனிகளைமட்டும் புசித்துக்கொண்டு, அந்தப் பாதை வழியே செல்லும் மனிதர்களுக்கெல்லாம் ஆதரவாக இருந்து, பல வகையில் உதவியாக இருந்தான்.

சின்னஞ்சிறு வயதிலேயே மிகுந்த வீரத்தைக் காட்டிய ராஜசேகரன், பிற்காலத்தில் மகாவீரன் என்று புகழ்பெற்றான்.

(புத்த ஜாதகக் கதைகளில் ஒன்று இக்கதை.)

நான் ஒண்ணும் எழுத மாட்டேன். நீங்கதான் அப்பாவுக்கு எழுதணும்..."

"என்ன எழுதட்டும்?"

"எனக்கென்ன தெரியுமாம். என்ன வேணுமானாலும் எழுதுங்கோ!"

"என்ன வேணுமானாலும் எழுதட்டுமா? ..."

"ஐயோ ..! என் வாயை ஏன் பிடுங்கறேள்...நான் உங்ககூடப் பேசல்லே போங்கோ!"

"டாக்டர் விமலா கிட்டே ஒரு சர்டிபிகேட் வாங்கு. அதையும் சேர்த்து வைத்து உங்கப்பாவுக்கு, பொண்ணுக்கு ஒரு வருஷம் லீவு வேணுமாம்னு எழுதறேன்...!"

"..."

"சுசரிதா... ..."

அவள் பேசாமடந்தையாகிவிட்டாள். வார்த்து எடுத்த வெண்கலச் சிலையெனச் சிந்தனையில் மயங்கி உட்கார்ந்து விட்டாள்.

மந்திரமூர்த்தி மேஜை மீது கிடந்த ஆங்கிலப் பத்திரிகையைக் கையில்

தாய்மை

பி.வி. பாரதீயன்

எடுத்து அதிலே பார்வை செலுத்தினன். முழுப் பக்க விளம்பரம் ஒன்று அவன் பார்வையிலே தங்கி நின்றது. "உங்கள் குழந்தை புஷ்டியுள்ளதாக வளர..." கொட்டை எழுத்துக்களுக்கு அருகிலே, இரண்டு கைகளையும் அகல விரித்துக்கொண்டு ஆர்வம் பெருகும் கண்களுடன் கொழுக்கட்டை போன்ற தடிப்புடன் கூடிய உருவம் படைத்த குழந்தை ஒன்று படத்திலே!

அவள் பக்கம் திரும்பினன். சிலை கண்ணீர் பொங்க உட்கார்ந்திருந்தது.

"சுசரிதா!.."

"ஹாம்..."

"இதுலே ஒரு விசேஷமான விஷயம் பாரு....."

ஏதோ புதிய சமாசாரம் என்கிற எண்ணத்தில் ஆசையுடன் கையை நீட்டிப் பத்திரிகையை வாங்கினள். "என்ன கேலி வேண்டிக் கிடக்கிறது, எல்லாத்துக்கும் மேலே...," அவன் மேல் கோபமும் ஆத்திரமும் ஒருங்கே பொங்கின. வெட்டுவதுபோலப் பார்வையை வீசிவிட்டுப் பத்திரிகையும் கையுமாக சமையற் கட்டிலே நுழைந்தாள். அவர்களது இரண்டே அறைகள் உள்ள இல்லத்திலே ஒன்று வசிக்கும் அறை, மற்றொன்று சமையற்கட்டு.

மந்திரமூர்த்தி வாய்விட்டுச் சிரித்தான் அவள் செய்கையைக் கண்டு.

சற்றைக்கெல்லாம் சமையற் கட்டில் நுழைந்து கவனித்தான். அவள் அந்தக் குழந்தையின் படத்தை ஆசையுடன் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் என்னென்ன எண்ணினளோ!

எண்ணவும் முடியாத வேகத்திலே சம்பவங்கள் ஒரு வருடத்திலே நடந்தேறியிருந்தன. பாட்னாவிலே பிறந்து வளர்ந்து வந்த சுசரிதா, அங்கே சர்க்கார் அதிகாரியாக இருந்தமுத்துச்சாமிஅய்யரின் மூத்தகுமாரி. அவருடைய அண்ணா அவரைப் பார்ப்பதற்காக பாட்னா வந்தபோது அழகே உருவாய் நின்ற சுசரிதாவைப் பார்த்து விட்டு, அவரது பழைய கால நோக்குப்படி வயதுவந்த பெண்ணுக்கு திருமணம் முடித்து வைக்க வேண்டியது தனது கடன் என்று தீர்மானித்து, தான் திரும்பியபோது அவளையும் அழைத்துக் கொண்டு வந்தார் தமிழ் நாட்டிற்கு. பல திக்குகளிலும் ஜாதகங்கள் அனுப்பினர். பம்பாயில் வேலை பார்த்த அவர் பிள்ளையும், தில்லியில் இருந்த மருமகனும் கண்ணுக்குப் பிடித்தவர்களாகத் தோன்றிய அத்தனை பிள்ளைகளையும் அணுகி ஆவன செய்ததிலே அகப்பட்டான் மந்திரமூர்த்தி. சர்க்கார் உத்யோகம். சம்பளம் கை நிறைய. பரீட்சைகள் தேறி முன்னுக்கு வர நிறைய வாய்ப்புகள். வாட்டசாட்டமான உடல் கட்டு. முகத்திலே தெளிவு. இன்னும் என்ன வேண்டும்?

ஜாதகம் சுமாராகப் பொருந்தினாலும் போதும் என முடிவு கட்டினார் பெரியப்பா. அண்ணா பார்த்துப் பிடித்த பிள்ளை நிச்சயமாகத் தகுந்தவனாக இருப்பான் என உறுதி பூண்டாள் சுசரிதா. பெயருக்குப் பிள்ளை பெண்ணைப் பார்க்கும் ஒரு நிகழ்ச்சியை நடத்தி, உடனுக்குடனாக நிச்சயதார்த்தம் செய்தார்கள். ஒரே வாரத்தில் இருந்த சுபதினத்தில் அம்மி மிதித்து அருந்ததி பார்க்கும் பாக்கியம் பெற்றாள் சுசரிதா.

"மந்திரமூர்த்தி என்ன மந்திரம் போட்டானோ தெரியவில்லை! கல்யாணத்தின் போது சண்டை சச்சரவுகள் இருந்தாலும், கல்யாணம் நடந்த இரண்டாம் மாதமே, 'என்னை உடனே பம்பாய்க்கு அழைத்துப் போய் விடுங்கள்!' என்று பிடிவாதம் பிடிக்கிறாளே இந்தப் பெண்!" என்று பெரியப்பா கேலி செய்தார். சுசரிதா கணவனுடன் வாழப் பம்பாய் வந்து சேர்ந்துவிட்டாள். பெரியப்பாவுக்குப் பெண் கிடையாது. நான்கைந்து மாதங்கள் தன் வீட்டில் வைத்திருந்து, பிறகு அவள் புருஷன் வீட்டுக்கு அனுப்பலாம் எனத் திட்டமிட்டிருந்த அவர் ஆசையில் மண் விழுந்தபோது, அவர் அப்படிச் சொன்னதில் ஆச்சரியப்பட ஒன்றும் இல்லை அல்லவா?

சுசரிதா மந்திரத்தின் அன்பிலே கட்டுண்டாள். அவள் அழகிலே மந்திரம் பெருமையும் பூரிப்பும் நிரம்பித் திளைத்தான்.

நான்குமாதங்கள் ஜோடிப்புறாக்களென, பார்க்க வேண்டிய இடங்கள் பம்பாயிலே எத்தனை உண்டோ அத்தனைக்கும் பஸ், டாக்ஸி, ரெயில் எல்லாவற்றிலும் ஏறி இறங்கிச் சுற்றினர், சுசரிதாவும் மந்திரமூர்த்தியும்.

மந்திரத்தின் எண்ணங்கள், செயல்கள் எல்லாவற்றிலும் சுசரிதா முன்னே நின்றாள். அவள் அவன் காரியாலயத்திற்குச் சென்ற வேளைகளிலே 'ஆபீஸ் உத்யோகம் என்பதெல்லாம் இல்லாமல் எப்போதும் என்னுடனேயே அவர் இருக்கும்படியான வாய்ப்பு இருந்தால், எத்தனை நன்றாக இருக்கும்' என்று ஏங்கித் துடித்தாள்.

சுசரிதாவின் சிவந்த முகத்திலே வெண்மை படர்ந்து, நாவிலே ஜலம் நிறைய ஊறி, வயிற்றுப் பசி மந்தித்த போது, அவள் தனக்கு ஏதோ வியாதி வந்துவிட்டது என எண்ணத் தலைப்பட்டாள். வம்பு பேசுவதோ கேட்பதோ பாட்னாவில் வளர்ந்த அவளது வாழ்விலே இருந்ததில்லை. தகப்பனார் நாள் தவறாமல் இரவில் "இன்று என்ன படித்தாய்!" என்கிற கேள்வியை அவளது சிறு வயது முதலே கேட்டு வளர்த்ததிலே, படிப்பு, பாட்டு இரண்டும்தான் அவள் உலகில் தெரிந்து கொண்டவை. நிறையப் பேசிப் பழகக்கூட மந்திரத்திடம்தான் கற்றுக் கொள்ளத் தொடங்கியிருந்தாள்.

அவளது உடல் கோளாறை அறிந்த மந்திரமூர்த்தி, அவளிடம் வேடிக்கையாக, "நிலைமை கவலைக்கிடம்" என்றான். வெகுளியாக இருந்த அவள் "இது என்ன வியாதி?" என்றாள்.

சுவரில் மாட்டியிருந்த காலண்டர் அவனுக்கு உதவியாக நின்றது. படத்திலே சிவனும் பார்வதியும் உட்கார்ந்திருந்தார்கள். பார்வதி தேவியின் மடியிலே குழந்தை குமாரக் கடவுள் அருட்சோதியாக வீற்றிருந்தார்.

"பார்வதியின் மடியிலே யார் பார்த்தாயா? . . . ."

அவளுக்குப் புரிந்து விட்டது. முகம், 'நிஜமாகவா?..முப்பத்தைந்து நாட்கள்..?

நான்..' என்று, அவள் உள்ள வெளியிலே வெட்டிப் பாய்ந்த பல மின்னற் கேள்வியின் அபிநயத்தைக் காட்டிவிட்டு, வெட்கத்தால் குனிந்து கொண்டது!

வெட்கம் தாள முடியவில்லை அவளுக்கு! கல்யாணமாகி எவ்வளவு நாட்கள் ஆகிவிட்டன? முழுக்க ஆறு மாசம் முடியவில்லை! என்ன அவசரம் அதற்குள்ளாக? பெரியப்பா வரும்போதே கேலி செய்தார். "அங்கே போய் ஆறு மாசமாகிறதுக்குள்ளே சுசரிதா திரும்பி வரப்போகிறாள். சீக்கிரம் சீமந்தம் நடந்தால்தானே அவள் பிள்ளையைவிட்டு என்னை விரட்ட முடியுமாம்! இல்லையா?" என்றார் அவர். 'எதற்காக அவர் சொன்னபடி ஆக வேண்டுமாம்? எனக்கு ஒன்றும் குழந்தை வேண்டாம்!..' சிந்தனை, சிந்தனை, சதாசர்வதா சிந்தனைதான். மறந்துவிட்டுக்கூட அவளால் இருக்க முடியவில்லை.

மந்திரமூர்த்திக்கும் மனதுக்குச் சற்று பிடிக்காமல்தான் இருந்தது. எல்லோரும் சிரிக்கப் போகிறார்களே என்று நினைத்தான். தவறு ஒன்றும் இல்லைதான். இருந்தாலும்.. அவன் யோசனை எங்கெங்கோ ஓடியது. அவனுக்கு அண்ணா, தம்பி ஒன்பது பேர். அவளுக்கு தங்கை, தம்பிகள் ஐந்து பேர். நல்ல செழிப்பான குடும்பங்கள்தான்... 'தனக்கும் பெரியவர்களுடைய ஆசீர்வாதங்கள் பொய்க்காமல் 'நிறைய பிள்ளை பெண்களோடு' பெரு வாழ்வோ!' என்று அவன் மனத்தில் சிந்தனை எழுந்தது.

❖ ❖ ❖

வாழ்விலே நடப்பவைகளில் பல நம்ப முடியாதபடி அமைகின்றன. பல நாம் எதிர்பார்க்க முடியாதபடி அமைகின்றன. மந்திரமூர்த்தி அன்று ஒன்பது மணிக்குக் காரியாலயத்திற்கு புறப்படும்போது சுசரிதாவை, மாலையிலே நண்பர் ஒருவர் இல்லத்திற்குப் போய்வரத் தயாராக இருக்குமாறு சொல்லிவிட்டுப் புறப்பட்டுச் சென்றான். மாலையிலே அவன் வீடு திரும்பியபோது சுசரிதா முனகிக்கொண்டு படுத்திருந்தாள். குளிர் ஜுரம் கண்டிருந்தது அவளுக்கு.

ஜுரம் உடலின் உஷ்ணத்தை வெகுவாக அதிகமாக்கியது. உதிரத்திலே தகித்த வெப்பக் கொதிப்பிலே உதிரத்தில் வளர்ந்த கரு சிதைவுற்றது! நான்கு மாதம் வளர்ந்துவிட்ட அவள் சிசு அழிவுற்றது!

பாராயண புத்தகங்கள்

கந்தர் கலிவெண்பா (2 அணா) சரஸ்வதி அந்தாதி (2 அணா) அபிராமி அந்தாதி) (2 அணா) கந்தரனுபூதி 2 அணா) திருமுருகாற்றுப்படை (3 அணா) நால்வர் நான்மணி மாலை (2 அணா) விநாயகர்அகவல் (2 அணா) லக்ஷ்மிஸ்தோத்ரம் (2 அணா) ஆனந்தலஹரி (2 அணா) சௌந்தர்ய லஹரி (2 அணா) விஷ்ணு சஹஸ்ர நாமம் (6 அணா) லக்ஷ்மி சஹஸ்ரநாமம் (6 அணா) லலிதா சஹஸ்ரநாமம் (8 அணா) வெங்கடேச சஹஸ்ரநாமம் (6 அணா) ராம சஹஸ்ரநாமம் (6 அணா சுப்ரமணிய சஹஸ்ரநாமம் (6 அணா) கிருஷ்ண ஸஹஸ்ரமநாமம் (6 அணா) லக்ஷ்மி ந்ருஸிம்ம சஹஸ்ரநாமம் (6 அணா) குமரேச சதகம் 5 அணா) கோவிந்த சதகம் (3 அணா) அறப்பளீசுர சதகம் (5 அணா) திருவேங்கடசதகம் (5 அணா) தண்டலையார் சதகம் (3 அணா) திருவருட்பா (8 அணா) திருப்புகழ் (2 அணா) தாயுமானவர் பாடல் (4 அணா பட்டினத்தார் பாடல் (4 அணா) தேவாரத் திருமுறைகள் (12 அணா)

நீதி நூல்கள்

நாலடியார் (6 அணா) நீதிநெறி விளக்கம் (2 அணா) ஆசாரக் கோவை (4 அணா வாக்குண்டாம் (2 அணா) கொன்றைவேந்தன் (2 அணா) வெற்றிவேற்கை (2 அணா) நலவழி (2 அணா) நன்னெறி (2 அணா) திருக்குறள் பாக்கெட் சைஸ்) 8 அணா; திருக்குறள் சுருக்கம் (மூலமும் உரையும் 8 அணா; திருக்குறள் பரிமேலழகர் உரை-பாக்கெட சைஸ்) ரு 4.

வாவிள்ள
ராமஸ்வாமி சாஸ்த்ருலு & சன்ஸ்,
(P.B 1372) 292, எஸ்பிளனேட் சென்னை-1.

சுசரிதா உடல் பலவீனமடைந்தாள். உள்ளம் வருந்தியது. தாயாக வேண்டும் என்று விரும்பியோ விரும்பாமலோ தாய்மையுற்ற அவள் கொஞ்சங் கொஞ்சமாகத் தனக்குப் பிறக்கப்போகும் பிள்ளையைப் பற்றிய எண்ணங்களிலே மகிழ்ந்து திளைத்துக் கொண்டிருந்தாள். முளைத்திருந்த ஆசைப் பயிர் அழிவுற்றதிலே துக்கமடைந்தாள்.

மந்திரம் அவள் உயிர் பிழைத்தாளே என்பதிலே மகிழ்வு பெற்றான். மருந்தும், டானிக்கும் நிறைய வாங்கிக் கொடுத்தான். சுசரிதா பழைய பலம் பெற நாளாகும் என்றாள் டாக்டர் விமலா. 'அவள் ஒரு வருடம் தாய் வீடு சென்று இருந்து வருவது உத்தமம்' என்பதாகத் தனிமையிலே மந்திரமூர்த்தியிடம் சொன்னாள் டாக்டர்.

மந்திரமூர்த்தி டாக்டரின் கருத்தைப் புரிந்துகொண்டான்.

* * *

புரிந்துகொள்ள முடியாத மனப் பக்குவம் படைத்தவளாகத் தோன்றினாள் சுசரிதா. உடம்பைத் தேற்றிக்கொள்வதற்காகப் பிறந்தகம் போய் இருந்து வருமாறு வேண்டினான் மந்திரமூர்த்தி அவளிடம். அவனை விட்டுப் பிரிந்து போகமுடியாது எனக் குழந்தையைப்போலச் சண்டித்தனம் செய்தாள் அவள். போதாததற்கு பாட்னாவிலிருந்த அவளது தகப்பனார் வேலைத் தொந்தரவு காரணமாகப் புறப்பட்டு வாத் தனக்கு சௌகரியமில்லை என்றும், ஓரிரு மாதத்தில் நீண்ட ரஜாவிலே வரப்போவதாகவும், அதுவரை பொறுத்திருக்க வேண்டுமென்றும் எழுதினார்.

மந்திரமூர்த்தி தனது காரியாலய வேலையோடுகூட மனைவிக்கும் சிசுருஷை செய்ய வேண்டியதாயிற்று. நாள் தவறாமல், வேளை தவறாமல் மருந்தும் டானிக்கும் புகட்ட வேண்டிய கைங்கரியத்தை அவன் செய்ய நேர்ந்தபோது, இருபது வயது நிரம்பிவிட்டாலும். அறிவிலே ஆறேழு வயதுகூட நிரம்பாத குழந்தை சுசரிதா என்கிற முடிவுக்கு வந்தான்.

அவளது உடல் தேறியது. இரண்டு மாதங்கள் சிலேட்டிலே எழுதிப் பார்த்து அழித்த மாதிரி மறைந்துவிட்டன. சுசரிதாவின் மனப்பாங்கு மாறிவிட்டது. உடம்பு சரியாக இல்லாமல் இருந்தபோது ஏற்பட்ட வேதனைகளை மறந்துவிட்டாள்.

அவளும் அவனுமாக மாலையிலே வெளியே போகும்போது எதிரே ஏதாவது குழந்தையைக் கண்டால், "குழந்தை நன்றாக இருக்கிறது இல்லை!" என்று கேட்டாள். முன்பெல்லாம் தாயும் குழந்தையுமாக வருபவர்கள் அவள் கவனத்தை அவ்வளவாகக் கவரவில்லை. ஆனால் இப்போது?

"நீங்களே சொல்லுங்கோ, அழகா சின்னக் குழந்தை இருந்தால், நன்னா இருக்கும் இல்லையா? பொழுது போறதே தெரியாது! நீங்க ஆபீஸுக்குப் போனால் எப்போ வருவேள்னு காத்துண்டே இருக்க வேண்டாமே!..."

"ஆமாம்!...." அவன் முதல் தடவையாக சுசரிதா இதைச் சொன்னபோதுதான் புரிந்து கொண்டான், அவளுக்குள்ளே ஒரு பெரும் புரட்சி நடந்து கொண்டிருக்கிறதென்று! முன்பெல்லாம், 'குழந்தைகள் இருந்தால் தொந்தரவு, வெளி இடங்களுக்குப் போக முடியாது, நிம்மதியாக இருக்க முடியாது' என்று அடியோடு குழந்தையே வேண்டாம் என்பதுபோல் பேசிய அவள், இப்போது முழுக்க மாறியிருப்பது அவனுக்குப் புரிந்தது. பிறக்காத குழந்தைக்குத் தாயாக இருந்தவள், பிறக்கும் என்கிற ஆர்வத்திலே வளர்த்திருந்த ஆசைகளை நெஞ்சிலே நிறுத்திக்கொண்டுவிட்டாள்; இனி அவள் குழந்தைகளைக் கண்டால் அப்படித்தான் பேசுவாள் என்பதையும் தெரிந்து கொண்டான்.

டாக்டர் விமலா கூறிய உபதேசம் அவன் நினைவிலே இருந்தது. சுசரிதாவின் உள்ளத்திலே மிகுந்த வேகத்திலே பொங்கி வளர்ந்த ஆசைத் தீயை அவன் எப்படி அணைக்கமுடியும்? வெகுளி மனம் படைத்த குழந்தை அவள்!

மறுபடி டாக்டரிடம் உதவியை நாடினான் அவன். சுசரிதாவின் மனநிலையை மறைத்தும் மறைக்காமலும் எப்படிக் கூறமுடியுமோ அப்படி மிகுந்த சிரமத்துடன் கூறினான் மந்திரம். டாக்டரும் பெண்ணல்லவா? டாக்டர் சிரித்தாள், அவன் சிரமப்படுவதைக்கண்டு. அவன் சொல்ல வந்ததைப் புரிந்துகொண்டுவிட்டாள், அவள்.

"மனத்தெம்புக்கு ஈடாக உலகிலே எதுவும் கிடையாது. அவளைப் பரிசீலித்து, நாளையே 'இனி உனக்கு எந்த பயமும் இல்லை' என்று சொல்லிவிடுகிறேன். மனோதத்துவப்படி அவள் ஆசையை ஒட்டிய காரியம் நிகழுமானால், பயப்படுவதற்கு ஒன்றும் இல்லைதான்!" என்றாள் டாக்டர்.

சுசரிதாவின் பிள்ளைப்பித்து வளர்ந்து வந்தது.

ஐந்தாறு மாதங்கள் சென்றபோது டாக்டர் விமலாவிடம் சுசரிதா போக வேண்டிய நிலை வந்தது.

டாக்டர் விமலா சிரித்துக்கொண்டே அவளைப் பரிசீலித்து முடிந்தவுடன், "....'இன்னும் ஏழு மாதத்தில் எங்கள் நர்ஸிங்ஹோம், ஒரு புதிய ஜீவனை உலகத்துக்கு அறிமுகப்படுத்தப் போகிறது' என்று மிஸ்டர் மந்திரத்திடம் சொல்லுங்கள்!" என்றாள்.

அன்று சுசரிதாவின் மனத்திலே ஏற்பட்ட இன்ப உணர்ச்சி அவள் வாழ்விலே வேறு என்றுமே ஏற்பட்டதில்லை!

★

வெட்டுக்காயம், சொரி சிறங்கு, வேனில்கட்டி, தீப்பட்டபுண், கரப்பான், முகப்பரு, சேத்துப்புண், கொப்புளம், பத்து முதலிய சகல சரும வியாதிகளையும் போக்கும் களிம்பு.

சைபால் CIBOL

ரமணீஸ் **பேபி கிரைப்**

குழந்தைகளுக்கு ஏற்படும் மாந்தம், வயிற்றுவலி, வயிற்றுப் பொருமல், பல் முளைக்கும்போது ஏற்படும் வயிற்றுப் போக்கு முதலிய சகல அஜீரணக் கோளாறுகளையும் போக்கி, புஷ்டி அளிப்பது.

நவீன யந்திர சாதனங்களால் தயாராகிறது

"எல்லிஸ் பாம்" (ELLIS BALM)

ஜலதோஷம், நரம்புவலி, தலைவலி, பல்வலி, மார்சளி, முதலியவைகளைப் போக்கவல்லது.

எமது பாக்டரியில் எல்லா மருந்துகளும் நவீன யந்திர சாதனங்களாலேயே தயாராகின்றன.

தயாரிப்பவர்கள்:

தி சௌத் இந்தியன் மானுபாக்சரிங் கம்பெனி,
மதுரை.

நவ நாகரீகத் குறிப்புகள்

காசினி

'பிள்ளை பார்த்தல்'

"ஏன்ன அத்தை இப்படி ஒரேயடியாகப் பத்து நாளைக்குக் 'காம்ப்' போட்டுவிட்டீர்கள்? நீங்கள் இல்லாமல், உப்பு இல்லாத ஊறுகாய்போலவும், புளிப்பில்லாத மோர்போலவும்....!" என்று வேதவல்லி—சாரி கூறிக்கொண்டிருக்கும் போதே, "எதிலும் ருசியே இல்லாமல், எல்லாம் 'சப்'பென்று இருந்தது! முற்றிலும் உண்மை!" என்று ராஜம்—நாதன் குறுக்கிட்டாள்.

என் மாமி விசாலம், தான் ஊருக்குப் போகுமுன் பங்களூரை ஒரு நடை பார்க்க வேண்டும் என்று ரொம்பவும் ஆசைப்பட்டாள். பட்டணத்தைவிட இவள் கிராமம் பங்களூருக்கு அருகாமையில் இருந்தும், அந்த ஊரை இதுவரையில் பார்த்ததில்லையாம். அவளுடன் துணை சென்ற என் அத்தை, இன்று தான் வந்தாள்.

"உம்....உங்களுக்கு என்ன? இதுவும் சொல்லுவீர்கள், இன்னமும் சொல்லுவீர்கள்!" என்றாள் என் அத்தை.

"உண்மையாகவே சொல்லுகிறோம்! அதுவும், நீங்கள் இல்லாமல் உங்கள் மருமாள் திண்டாடியே போனாள்!" என்றாள் வேதவல்லி—சாரி.

"ஆமாம் அத்தை. எனக்கு ரொம்பவும் கஷ்டமாகத்தான் இருந்தது. அதுவும், வீட்டை விட்டுச் சட்டென்று கிளம்பவே முடியவில்லை?" என்றேன்.

'போறது போ! அத்தை அருமை சாகாமலே தெரிந்ததா? பங்களூரில் என்ன விசேஷம்?" என்று ராஜம்-நாதன் கேட்டாள்.

"பிள்ளை பார்க்கும் படலம்!" என்றாள் என் அத்தை ரத்னச் சுருக்கமாக.

"பிள்ளை பார்க்கும் படலமா? அதென்ன கூத்து?" என்று பார்வதி கேட்டாள்.

"அதையேன் கேட்கிறாய்! நாங்கள் ஒரு சிநேகிதி வீட்டில்தான் தங்கினோம். அதாவது அவளுடைய தகப்பனை என் தம்பிக்குத் தெரியுமாம். அவளுக்குக் கலியாணத்துக்கு இரண்டு பெண்கள் ஜோடியாக நிற்கிறது கள். அவர்கள் வழக்கம், பெண் தன்னைச் சிங்காரம் செய்துகொண்டு பிள்ளை வீட்டுக்குப் போக வேண்டுமாம். அவர்களுக்குப் பெண்ணைப் பிடித்திருந்தால் போச்சு, இல்லாவிட்டால் அவள் மறுபடியும் மற்றொரு பிள்ளை வீட்டை முற்றுகை இடவேண்டியதுதானாம்! எனக்கு அதைப் பார்க்கக் கஷ்டமாக இருந்தது.

★

'வாசலில் விலைக்குவரும் சாமான் மாதிரி, பெண்ணை வீடுவீடாக அழைத்துப் போவார்களா என்ன!' என்று கேட்டே விட்டேன். 'இது எங்கள் வழக்கம். என் பெண்களுக்கு இஷ்டமில்லைதான். பிள்ளை வீட்டார், 'கலியாணம் ஆகவேண்டுமானால், பெண்ணை அழைச்சுண்டு வந்து காட்டுங்கள்; இல்லாவிட்டால், பேஷா வீட்டோடு வைத்துக்கொள்ளுங்கள்' என்று கண்டிப்பாகச் சொல்றாளே?' என்று அவள் வருத்தப்பட்டாள். அதுவும் வயசு வந்த பெண்கள்; இருபதும், பதினெட்டும் ஆகிறது!" என்று என் அத்தை அங்கலாய்த்தாள்.

"பிள்ளையும் வீட்டில் இருப்பானா?" என்று கேட்டாள் பார்வதி.

"பின்னே? அவன் தானே தாலியைக் கட்டவேண்டும்! இந்த வழக்கம் எங்களவர்களிடம் இன்னும் இருக்கிறது. எங்கள் வீட்டில் இப்படிச் செய்யமாட்டோம். வழக்கம் என்னமோ இருக்கு!" என்றாள் வேதவல்லி—சாரி.

"வெட்கக் கேடு! முதலில் இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கவேண்டாமோ?" என்று பார்வதி கோபமாகக் கேட்டாள்.



"நாம் என்ன செய்ய முடியும்? ஒரு மகாநாடு கூடி கண்டனம் செய்யலாம்! ஆனா, பழக்கம் என்று ஒன்று இருந்துவிட்டால், அது லேசிலே மாறுது. அடுத்த தலைமுறையிலாவது இதெல்லாம் இல்லாமல் இருக்கா பார்க்கலாம்" என்றாள் வேதவல்லி—சாரி.

"உண்மையான வார்த்தை. இப்படி வயசான பெண்களைப் பிள்ளை வீட்டுக்கு அழைச்சுண்டு போனது எனக்கு எப்படியோ இருந்தது. அவர்கள் என்னமோ இதைச் சாதாரணமாகத்தான் எடுத்துக்கொண்டா. நான் சொன்ன அப்புறம்தான் அவாளுக்கும் என்னமோபோலிருந்தது. ஒரு லாபம், பஜ்ஜியும், ஸொஜ்ஜியும் இவா பண்ண வேண்டாம்!" என்றாள் என் அத்தை.

"வெட்கக் கேடு! முதலில் இதற்கு ஒரு வழி தேடியே ஆகவேண்டும். இது நமக்கு எல்லாருக்குமே அவமானம்!" என்றாள் பார்வதி.

"இப்படி எத்தனையோ காரியங்கள்! என்ன செய்வது? ஆமாம், பங்களூரிலே வேறு என்ன விசேஷம்?" என்று வேதவல்லி—சாரி பேச்சைத் திருப்ப முயன்றாள்.

"அவா வீட்டிலே பச்சைப் பட்டாணியில் ஒரு தினுசுக் கறி பண்ணி இருந்தார்கள். புது தினுசா, நன்னா இருந்தது" என்றாள் என் அத்தை.

"இதற்குத்தான் தேவலோகத்திலிருந்து, பாதாள லோகத்துக்குத் தாண்டுவது என்று பேர்!" என்று பார்வதி 'வெடுக்'கென்று சொன்னாள்.

"உனக்கு என்ன வந்துவிட்டது!" என்று ராஜம்—நாதனும், "என்ன சொல்லுகிறாய்?" என்று என் அத்தையும் கேட்டார்கள்.

"பிள்ளை வீட்டிற்கு ஒரு பெண்ணை அழைத்துப் போவது நமக்கு எல்லோருக்குமே வெட்கக்கேடு என்று பேசிக்கொண்டிருக்கும்போது, பட்டாணிக் கறியில் மனது லயிச்சால், தேசம் எப்படி உருப்படும்?" என்று பார்வதி கொஞ்சம் காரமாகவே கேட்டாள்.

"இல்லாவிட்டால் இப்போ என்ன செய்யணும்? நீ எம்பிக் குதித்ததினால் அவா வழக்கம் மாறிவிடுமோ?" என்று கேட்டாள் என் அத்தை.

பேச்சை முற்றவிடாமல், ராஜம்—நாதனும், வேதவல்லி—சாரியும் "நேரமாகிவிட்டது" என்று எழுந்தார்கள்.

இப்படி ஒரு வழக்கம் இருப்பது உனக்குத் தெரியுமோ? "என் மருமானைப் பெண் பார்க்க எத்தனை வரன் வந்தாச்சு! எனக்கு ரொம்ப கஷ்டமாக இருக்கு!" என்று எழுதி இருந்தாயே? இந்த மட்டும் வரன் நம்ம வீட்டிற்கு வரதுதான் வழக்கம் என்றிருப்பதற்குச் சந்தோஷப்படு. இதுதான் நல்ல வழி. பச்சைப் பட்டாணிக் கறி செய்யும் முறை உள்பட அடுத்த கடிதத்தில்! இப்போ நேரமாச்சு!

★

மோகமுள்

தி. ஜானகிராமன்

இந்த இருள் யாருக்காக? எங்கோ ஆயிரக்கணக்கான மைலில் விமானங்களை வைத்துக்கொண்டு 'குண்டு போட்டுவிடுவேன்' என்று பயமுறுத்திக் கொண்டிருந்த எதிரியின் கண்ணில் மண்ணைத் தூவுகிறார்களாம்.

யாருக்காக இருந்தாலும், பார்வதியையும், யமுனாவையும் அந்த இருள் நன்றாகப் பிடித்துக்கொண்டிருக்கிறது. யமுனாவின் அழகின் தோல்வியே இப்படி இருளாக விழுந்திருக்கிறதா? ஒருகணம் இந்தப் பிரமை அவனுக்கு ஏற்பட்டது. போர், அச்சம் ஒன்றிலும் சம்பந்தப்படாமல், இந்தக் குடும்பத்தின் இருள், அதன் தோல்வியின் இருளே இப்படித் திக்கிலும் தெருவிலும் விழுந்து பரந்திருந்தது போலிருந்தது. மறுகணம் பாபு விழித்துக்கொண்டான். நடை தடைபட்டு, காவேரிப்பாலத்தின் அருகில் நின்றுவிட்டோம் என்று உணர்ந்து, மீண்டும் நடக்கத் தொடங்கினான்.

பார்வதி முன்மாதிரி இல்லை. ஆளே மாறிவிட்டதுபோலிருக்கிறது. அவளுடைய சாந்தமும் பொறுமையும் திரும்பி வராத வழிக்கு நீங்கிவிட்டாள் போலிருந்தது. யமுனாவைக் கண்டிகசந்து பொருமிய அவளுடைய பார்வையையும், பேச்சையும் கண்டு பாபுவின் உள்ளம் அஞ்சிற்று; கலங்கிற்று.

நான்தானே அதற்குக் காரணம்? வாக்குக் கொடுத்தபடி, எங்காவது ஓடி யலைந்து நல்ல வரனைக் கொண்டு வந்து தந்திருந்தால்?....

பார்வதிக்கு என்ன, பைத்தியம் பிடித்துவிட்டதா? தாலி கட்டாத, மனைவி என்று பெயர் கொடுக்காத, "கலியாண"த்திற்கு இவள் எப்படி இணங்குகிறாள்?

அவர்கள் 'வாழ்ந்த' நாட்களெல்லாம் நினைவுக்கு வருகின்றன. சுப்ரமண்யம் கவலை, தேவை இவற்றை என்னவென்று தெரியாமல்தான் இந்தக் குடும்பத்தை வைத்திருந்தார். பதினான்கு, பதினைந்து வயதில், செக்கச்செவேலென்று, உயரமாக, அரக்கு நிறத்தில் ஜரிகைத் தலைப்புப் பட்டுப் பாவாடை — அந்தப் பாவாடைதான் எவ்வளவு உயரம், எவ்வளவு மடிப்பு! அலையோட, யமுனா நடந்ததும், சிரித்துச் சிரித்துக் கூடத்துக்கும், வாசலுக்கும் பாபுவைத் தூக்கிக் கொண்டு ஓடியதும், தலைக்குமேல் அவனைப் பிடித்துத் தூக்கியதும், எறிந்து பிடித்ததும்,...நிறைவின் ஓட்டம்; அது வசதியின் துள்ளல்.

பார்வதியின் வீடு உறவினர்கள் வந்து மொய்த்த வண்ணமாகத்தானிருக்கும். அவளுடைய ஒன்றுவிட்ட தம்பிகள், அக்காக்கள், தங்கைகள், இன்னும் ஏதேதோ உறவு சொல்லிக்கொண்டு வரும் அத்தங்கா, அம்மங்காக்கள் வந்து தங்கிச் சாப்பிடுவதும், கச்சேரி கேட்கப் போவதும், அந்தக் காலத்துப் பேசாத படம் பார்க்கப் போவதும், தலை நிறையப் பூ வைத்துக்கொள்வதும், ஐந்துகால் பின்னல், ஏழுகால் பின்னல் என்று பார்வதி அவர்களுக்குப் போட்டு விடுவதும், பின்னலுக்குத் தாழம்பூ தைப்பதும் — இவையெல்லாம் எங்கே போயினவோ! அந்த மனிதர்கள் இப்போது எங்கு ஒளிந்துகொண்டிருக்கிறார்கள்? அவர்களுக்கெல்லாம் இந்தக் குடும்பம் சரியும் நிலைமை தெரியாதோ என்னவோ! ஆனால், தெரிந்தவன் ஒருவன் இருக்க வேண்டும். அவனுக்குத் தெரியாமல் இருக்க முடியாது. எப்படிக் குடும்பம் நடத்துகிறார்களோ என்று அவன் ஒரு முறையாவது, ஒரு நிமிஷமாவது யோசிக்காமல் இருந்திருக்க முடியாது. அவனிடம் போய் நியாயத்தை எடுத்துச் சொல்வோம் என்று போன வருஷம் சொன்ன உடனேயே யமுனாவிற்குக் கோபம் குமுறிக்கொண்டு வந்தது. பார்வதிக்குச் சம்மதந்தான். ஆனால், நடக்குமா என்பதுதான் அவள் சந்தேகம்.

இரவு முழுவதும் பாபுவுக்கு சங்கடமாக இருந்தது. வேதனை வேறு கிளர்ந்தது. தான் என்னமோ கடமை தவறிவிட்டதாகத் தோன்றிற்று. அப்போதே அவனிடம் போய் நியாயத்தை எடுத்துச் சொல்லியிருக்கவேண்டும். சூட்டோடு சூடாகச் செய்யவேண்டிய காரியம். இவர்களைக் கேட்டதே தப்பு. எரியும் வீட்டில் அகப்பட்டுக் கொண்டவர்களை, தப்புவிப்பதா, வேண்டாமா என்று அவர்களையே கேட்பதுபோல் இருக்கிறது, நாம் யோசனை கேட்பது. அவன் முரடனாக இருக்கலாம்; முட்டாளாக இருக்கலாம்; நெஞ்சைத் துடைத்துவிட்டு உட்கார்ந்திருக்கலாம். ஆனால், யார்தான் நியாயத்திற்குப் பயப்படமாட்டார்கள்? பாபத்திற்கு யார்தான் பயப்படமாட்டார்கள்?

மறுநாள் வெள்ளிக்கிழமை. அன்று காலேஜுக்குப் போக வேண்டியிருந்தது. சனிக்கிழமை காலையில் எழுந்து குளித்துவிட்டு, பஸ்ஸில் தந்தமங்கலத்திற்குக் கிளம்பினான் பாபு.

★ தொடர் நாவல் ★

நந்தமங்கலத்து வாய்க்கால் மதகிற்குப் பஸ் வரும்போது பத்து மணிக்கு மேலாகிவிட்டது.

இறங்கிச் சிறிது தூரம் நடந்து ஊருக்குள் திரும்பியதும், பாபுவுக்கு உடல் கூசிற்று. திண்ணையில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தவர்கள் சட்டென்று பேச்சை நிறுத்தி, அவனை உற்றுப் பார்த்தது என்னமோ செய்தது. இந்தக் கிராமத்து பார்வையிலேயே உடலைக் குன்ற அடிக்கிற ஏதோ ஒன்று இருப்பது போல் தோன்றிற்று. அவனுக்கு அனுபவமுள்ள பார்வைகள் இரண்டு. யார், என்ன என்று யோசிக்கிற சாதாரண பார்வை. இன்னொன்று, 'ம்...பிரமாதம், டவுனிலிருந்து வந்துவிட்டானாக்கும். உன்னைவிட எங்களுக்கு எல்லாம் தெரியும்' என்கிற அலட்சியப் பார்வை. அசட்டையாகப் பார்க்காமல்தான் இருந்துவிடுகிறார்களா? அசட்டையும், அகாம்பாவமுமாகப் பார்த்துப் பார்த்துக் கோபத்தை உண்டு பண்ணிவிடுவார்கள், 'நான் இப்போது டவுனிலிருந்து வருகிறேன், நீங்கள் எல்லாரும் பட்டிக்காடு. உங்களைவிடத் தெரிந்தவன் என்று சொன்னேனா, நினைத்துக்கொண்டேனா? ஏன் இப்படிப் பார்க்கிறார்கள்?' என்று எண்ணிக்கொண்டே, நடந்தான் பாபு. சுப்ரமண்யத்தின் வீட்டு வாசலில் யாருமில்லை. படியேறி நடையில் நின்று கூப்பிட்டபோது, ஒரு பதினைந்து வயதுப் பெண் வந்து "யார்?" என்று கேட்டது.

"சுந்தரம் அய்யர் இருக்கிறாரா?"

"இல்லையே"

"எங்கே போயிருக்கார்?"

"வாழைக் கொல்லைக்குப் போயிருக்கார்?"

"எப்ப வருவார்?"

"இனிமே சாப்பிடத்தான் வருவர்."

"எப்ப போனார்?"

"காலமேயே போயிட்டார்"

"எப்ப வருவர்னு தெரியுமா?"

"மத்யானம் ஒரு மணி ஆகும்."

"யார்றீ அங்கே?" என்று ஒரு குரலும், பின்பு உருவமும் வந்தன.

பாபுவுக்கு அதிர்ச்சியாக இருந்தது. பாலம்மாள் சிரசை முண்டம் செய்து, நார்ப்பட்டும், விபூதிப்பட்டையும் துலங்க, ஆசாரக் கைம்பெண்ணாகக் கூடத்தில் வந்ததைக் கண்டு, அப்பால் திரும்பிக்கொண்டான் பாபு. அவளை நேராகப் பார்க்க முடியாமல் இனம் தெரியாத கூச்சத்திலும், வேதனையிலும் முகம் தானாகத் திரும்பிக்கொண்டது.

"யாரு?"

"நான்தான்"

"பாபுவா?"

"ஆமாம்"

"எப்ப வந்தேப்பா?"

"இப்பதான் வந்திண்டிருக்கேன்"

"ஊரிலேர்ந்தா வரே?"

"கும்பகோணத்திலேர்ந்து வரேன்"

"கை, கால் அலம்பிட்டு சாப்பிடு முன்னாடி"

"இல்லே, காலமே நிறைய டிபன் பண்ணிப்பிட்டேன்"

"டிபன் எத்தனை நாழியிருக்கும். டிக்கா, போய் இலையைப் போடு"

"இல்லியே, நான் வந்து . . ."

"முடிஞ்சதைச் சாப்பிடறது. சுந்தரம் வந்து, குளிச்சு, ஜபம் பண்ணி சாப்பிடறதுக்கு ரண்டு மணியாகப் போறது. ஏதோ இருக்கிறதை சாப்பிட்டுப்பிட்டு, அப்பறம் காரியத்தைப் பார்க்கிறது."

டிக்கி என்ற அந்தப் பெண் இலையைப் போட்டுவிட்டது. பாபு தட்ட முடியாமல் உட்கார்ந்து கொண்டான்.

"கும்பகோணத்திலேர்ந்தா வரே?"

"ஆமாம்"

"பாபநாசத்திலே இறங்கிப்பிட்டு வறியா?"

"இல்லே"

"அப்பா பாபநாசத்திலேதானே இருக்கார்?"

"ஆமாம்"

"கும்பகோணத்திலே யமுனாவைப் பார்க்கிறதுண்டா?"

"நேற்றுக்கூடப் பார்த்தேன்"

"சௌக்யமா இருக்காளா?"

"ஏதோ இருக்கா" என்று சொல்லிவிட்டு பாபு நிமிர்ந்தபோது, பாலம்மாள் தரையைப் பார்த்துக் கொண்டிருந்தாள். "நான் என்ன செய்வேன்?" என்று அவள் கண் தரையைப் பார்த்துச் சொல்வதுபோலிருந்தது.

'நீ நினைக்கிறதுதான் நானும் நினைக்கிறேன். நான் ஒன்றும் செய்ய முடியவில்லையே' என்று சொல்வதுபோல் தோன்றிற்று. இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்த மாத்திரத்தில் புரிந்து கொள்ளும் இந்தக் க்ஷணம் விந்தையாகத்தான் இருந்தது பாபுவுக்கு.

"கலியாணத்துக்கு ஏதாவது வரன் திகைஞ்சுதாமா?"

"ஒண்ணும் இல்லைபோலிருக்கு."

"கலியாணத்துக்குப் பிரயத்னம் பண்ணிண்டாவது இருக்காளோல்லியோ?"

"பண்றதுபோல் தோண்றது."

"என்னமோ எல்லாத்துக்கும் வேளை வரவாண்டாமா? வேளை வந்தா, தானே நடக்கிறது"

"அப்படீன்னு நாம சும்மா உட்கார்ந்திருக்க முடியுமா?" என்றான் பாபு.

"அது முடியுமா . . .?"

"ஏதோ நடக்க வேண்டிய காரியம், செய்ய வேண்டிய காரியம் நடக்கும், செய்வான்னு எதிர்பார்க்கிறோம். எல்லாம் தானே நடக்கும்னு சும்மா உட்கார்ந்திருக்க முடியுமா?" என்று தலை நிமிராமல் சொன்னான் பாபு.

"அதென்னமா முடியும்? நாம் செய்யறதைச் செய்ய வேண்டியதுதான். நல்லபடியா முடிச்சுக் கொடுக்கிறது பகவான் பொறுப்பு."

"பகவான் பொறுப்பில்லாம இருந்துட்டார்னா?"

"பகவான் அப்படியிருப்பாரா?"

"இல்லாம இருந்தார்னா சரி. இருந்துவிட்டார்; அப்ப என்ன பண்றது?"

"டிக்கா, டிக்கா" என்று ரசம் கொண்டு வந்த தன் பேத்தியைக் கூப்பிட்டு, "டிக்கா, சுப்பச்சி இருந்தாள்னா நான்

தமாஷ் தம்பதி

★

"வடக்கே பெரிய பூகம்பமாமே! பத்திரிகையில் போட்டிருந்ததே, படித்தீர்களோ?... பூகம்பம்னு என்ன? அது எப்படியிருக்குமோ தெரியவில்லே..."

"அதுவா? அது ஏற்படும்பொழுது இந்தவீடே கிடுகிடென்று ஆடும்!"

"அப்படியா? நீங்கள் பார்த்திருக்கிறீர்களோ?"

"பார்க்காமல் என்ன? எவ்வளவோ தடவை பார்த்திருக்கிறேன்."

"நான் பார்த்ததில்லையே?"

"நீ எப்படிப் பார்க்க முடியும்? அது ஏற்படுவதற்கு காரணகர்த்தாவே நீதானே?"

★

ரண்டு படி அவல் கேக்கறேன்னு வாங்கிண்டு வாயேன் . . சீ . . கொஞ்சம் போயிட்டு வரியோ?" என்று சட்டென்று ஞாபகம் வந்ததுபோல் பாலம்மாள் சொல்லவே, ரசப் பாத்திரத்தை அவனிடம் கொடுத்துவிட்டு, டிக்கி வாசல் பக்கம் போனாள்.

"வரன் ஒண்ணுமே திகையலையா, யமுனாவுக்கு?"

"இல்லே"

"எப்படியிருக்கா அவா"

"நகையெல்லாம் ஒண்ணொண்ணா வித்துதிண்டிருக்கா. சாப்பிட்டாகணுமே."

"பொம்மனாட்டிகளுக்குக் கையைக் கட்டிப் போட்டு வச்சிருக்கு. இல்லாட்டா இதெல்லாம் ஏற்பட்டிருக்காது."

பாபு பேசாமலிருந்தான். இவள் வயிற்றில் சுந்தரத்தைப் பிறப்பித்த விதியின் கொனஷ்டையை நினைத்து அவனுக்கு எரிச்சல் கிளம்பிக் கொண்டிருந்தது. இவளுடைய கையைப் பிடித்துக் கட்டக்கூடிய ஒரு உரிமை இவள் பெற்ற பிள்ளைக்கே கிடைத்திருக்கிற வேடிக்கையை எந்த தர்மத்தின், எந்த சட்டத்தின், எந்த விதியின் கொனஷ்டை என்று சொல்கிறது? இவனும் தேற்று வந்தவன் தானே?

"உங்க பிள்ளே வரதுக்கு நாழியாகுமா?"

"ஒரு மணிக்குத்தான் வரான். அவனைப் பார்க்கத்தான் வந்திருக்கியா?"

"ஆமாம்."

"என்ன விசேஷம்?"

"எல்லாம் இப்ப பேசிண்டிருக்கிறது தான்."

"பார்வதி எதாவது சொல்லச் சொன்னாளா?"

"அவா அப்படி சொல்றவா இல்லே. எனக்குத்தான் பார்த்திண்டிருக்க முடியலே. கேக்கலாமேன்னு வந்தேன். நான் வரதுகூட அவாளுக்குத் தெரியாது. தெரிஞ்சா வேண்டாம்னு கட்டை போட்டுடுவா."

"ம்..." என்று பெருமூச்சு விட்டாள் பாலம்மாள். "போய்க் கேளு. ஆளும் தேளும் வேலே செஞ்சிண்டிருப்பன். தனியாக் கூப்பிட்டுக் கேளு. நான் சொல்றதையெல்லாம் சொல்லியாச்சு."

"உங்களேப்பத்தி எனக்கு எந்தவித பயமும் இல்லே."

"நீ சொல்லிப்பிட்டாப் போருமா? ஊரு, உலகம் எல்லாம் நான் ஒரு பாவமும் அறியாதவன்னு தெரிஞ்சுக்க வாண்டாமா சொல்லு. பாவத்தைவிட அபவாதம் பெரிசு."

"உங்களுக்கென்ன அபவாதம் வரப் போறது?"

"அப்படியா? குட்டி குரைச்சா நாய் தலேயிலேதான் பழி வரும்."

"என்னமோ, வராம இருக்கட்டுமே. நான் கேக்கறேன்.., வாழைக் கொல்லேக்கு எப்படிப் போறது?"

"சாலேயிலே ஏறி கிழக்கே போனா, ஒரு வெத்திலே பாக்குக் கடை இருக்கும். அதுக்கு அடுத்த கொல்லேதான். ஒரு சமயம் அங்கே இல்லாட்டா, களத்திலே இருப்பன். இன்னிக்கி அறுப்பாள் விட்டிருக்கானும். அங்கே இருந்தாலும் இருப்பன். வாழைக் கொல்லேயிலே இல்லேன்னா, நேரப்போனா, பிடாரி கோயில் தெரியும். அதை ஒட்டினாப்போலத்தான் களம் இருக்கு."

எழுந்து கையலம்பிவிட்டு அவன் திரும்பும்போது டிக்கி ஆவலோடு வந்துகொண்டிருந்தாள்.

"பேசிப்பிட்டு அப்படியே போயிடாதே. இஞ்ச வந்துட்டுப் போ" என்றாள் பாலம்மாள் அவன் புறப்படும் போது.

வாழைக் கொல்லேயில் சுந்தரம் இல்லாததைக் கண்டு, களத்தை நோக்கி நடந்தான் பாபு. குறுவை அறுப்பு பெரும்பாலும் முடிந்து, பல இடங்களில்

நீர்ப்பரப்புதான் தெரிந்தது. சில இடங்களில் ஒட்டடம் விலத்தியாக வளர்ந்து தண்ணீருக்கு மேல் தலையசைத்துக் கொண்டிருந்தன. பின்னறுப்பாக சில வயல்களில் அங்குமிங்கும் நடந்து கொண்டிருந்தன. பிடாரி கோயில் ஆலமரத் திட்டுக்கு நாலு வயல்கடைக்கப்பால் சுந்தரம் தடியும் கமுக்கட்டில் வெற்றிலைப் பெட்டியுமாக நின்றுகொண்டிருந்ததைக் கண்டான் பாபு. வரப்பின் இருமருங்கிலும் அறுத்துப் போட்ட கதிர்கள் அரிக்காய்ச்சலுக்காக வயலிலேயே கிடந்தன. தூரத்தில் ஒட்டடப் பயிர்போட்ட நிலங்களில் அறுத்த கதிர்களை வயலிலேயே போட முடியாமல் தலைக்கட்டாகத் தூக்கிக்கொண்டு ஆட்கள் களத்தை நோக்கி நடந்துகொண்டிருந்தார்கள்.

"அட நீங்களா, யாரோ மாதிரியிருந்தது" என்று வரவேற்றார் சுந்தரம். "இப்பத்தான் வரேளா?"

"வந்து உங்க வீட்டிலெ சாப்பாட்டை முடிச்சிண்டு வரேன்."

வரப்பில் வரும்போது சிறிது தூரத்தில் அவரைப் பார்த்த பாபுவுக்கு இருந்த பயம், அவர் மலர்ச்சியுடன் வரவேற்றதைப் பார்த்து, சற்று தெளிந்து கொண்டிருந்தது.

"எப்ப வந்தே?"

"அரை மணியாச்சு."

"பாபநாசத்திலேர்ந்தா வரே?" ஒரு சமயம் எப்போது வந்தீர்கள், இன்னொரு சமயம், எப்போது வந்தாய்—அவருக்கே அவனை எந்த மரியாதையுடன் அழைப்பது என்று தீர்மானிக்க முடியவில்லை போலிருக்கிறது.

"இல்லை, கும்பகோணத்திலேர்ந்து."

"ஓகோ, இன்னிக்கு சனிக்கிழமையாக்கும். லீவா இருக்கும்."

அகராதி

தமிழ் மொழியில் முதல் முதலாக (1732) அகராதி இயற்றியவர் வீரமா முனிவர் என்பவர். சதுரகராதி என்று பெயர் அதற்கு. அதற்குமுன் நிகண்டு என்கிற பெயரால் வழங்கிய நூல்களில் அகர வரிசையைக் கைக்கொள்ளாததால் வார்த்தைகளைத் தேடிக்காணுவது சிரமமாக இருந்தது. அகராதி முறையை அரைகுறையாகக் கையாண்டு சிதம்பர ரேவணசித்தர் என்று ஒரு வீரசைவர் 1594-ல் அகராதி நிகண்டு என்று ஒரு நூலைச் செய்தார். பெஸ்கி என்பவர் இத்தாலியிலிருந்து இந்தியாவுக்கு 1710-ல் வந்து 1747 முடிய மதபோதனை செய்யும் கடமையில் தமிழ்நாட்டில் ஈடுபட்டிருந்தார். சிலகாலம் திருச்சியில் சந்தா ஸாஹிபுக்கு மந்திரியாகவும் இருந்ததாகத் தெரிகிறது. வீரமா முனிவர் என்று பெயரைத் தமிழ்ப்படுத்திக்கொண்டு அவிவேக பரிபூரண குருகதை என்று வசன நூலும், தேம்பாவணி என்று ஒரு காவியமும், பல இலக்கண நூல்களும் செய்தார். அவற்றில் சதுரகராதியும் ஒன்று. பெயரகராதி, பொருளகராதி, தொகையகராதி, தொடையகராதி என்கிற நான்கு அகராதிகளும் அடங்கியதால் இதற்குச் சதுரகராதி என்று பெயர்வைத்தார். டாக்டர் ஜான்ஸன் எழுதிய ஆங்கில அகராதி (1755)க்கு முன்வந்த அகராதி என்று இதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு பார்த்தால், வீரமா முனிவருக்குத் தமிழில் இருந்த ஆர்வம் நன்கு விளங்கும். இந்த சதுரகராதியில் பெயரகராதிப் பகுதியில் மட்டும் சுமார் 12000 சொற்கள் இடம் பெற்றிருக்கின்றனவாம்.

சதுரகராதியைத் தவிர, ஒரு தமிழ்—பிரெஞ்சு அகராதியும், போர்த்துகீய - லத்தீன் - தமிழ் அகராதியும் இவர் தொகுத்து முறையே 1742-லும், 1744-லும் வெளியிட்டார். —எஸ். ராஜா.

"ஆமாம்."

சுந்தரம் பின்பு அவனுடைய அப்பா, அம்மாவைப்பற்றியெல்லாம் விசாரித்தார். படிப்பைப்பற்றி விசாரித்தார். இரண்டு, மூன்று ஆங்கிலக் கவிகளின் பெயரைச் சொல்லி, சின்ன வயசில் நெட்டுருப் பண்ணின இரண்டு மூன்றுக் கவிதைகளைக்கூடச் சொல்லி, அந்தக் காலத்துப் பதிவுகளை எடுத்துக் காட்டினார். மேலுக்கு அதைப் பாராட்டிக் கொண்டிருந்த பாபு, நான் இப்போது சொல்லப்போவது உன் மனதில் பதிய வேண்டுமே என்று உள்ளுக்குள் கவலைப் பட்டுக் கொண்டிருந்தான். விஷயத்தை எப்படி ஆரம்பிப்பது என்ற திகைப்புடன் தட்டித் தடவிக்கொண்டிருந்தது மனம்.

"எங்கே இப்படி இவ்வளவு தூரம்?" என்று கால் மணி கழித்துத்தான் கேட்டார் அவர். "கட்டைப் பயலே, என்னென்னமோ தடவிக் கொடுக்கிறே? ஓங்கி அடிப்பியா? இது என்ன கதிரா, உங்க வீட்டுக் குழந்தையா, எண்டாஎல. . . . போட்ரு" என்று கத்தினார்.

"உங்களைத்தான் பார்க்க வந்தேன்."

"என்னையா! என்ன?"

"தனியாப் பேசணும்."

"அவசரமோ?"

"எனக்கு இருக்கிற போதுக்கு அவசரம்தான்."

சுந்தரம் எழுந்து பிடாரி கோயிலை நோக்கி இரண்டு வயல்கடை தாண்டி வந்தார். கூட நடந்தான் பாபு. ஒரு அகல வரப்பின்மேல் இருவரும் நின்று கொண்டார்கள்.

"என்ன விசேஷம்?"

"சுருக்கமாச் சொல்லிவிடறேன். பார்வதி ஒவ்வொரு நகையா வித்திண்டிருக்கா. நெல்லு அனுப்பறதைக்கூட நிறுத்திப்பிட்டேளாமே?"

"பின்னே என்ன செய்யறது?"

"நிறுத்தறது நியாயம்தானான்னு எனக்கு சந்தேகமாயிருக்கு."

"எனக்கு சந்தேகமாக இல்லை."

"உங்க கூடப் பிறந்த தங்கையாயிருந்தா,..."

"அதனாலெதான் வீட்டை நான் எடுத்துக்கலெ. அவாளுக்கே இருக்கட்டும்னு விட்டுட்டேன்.. அவா ஏதாவது சொன்னாளா?"

"அவா அனுப்பிக்கவே இல்லை. நானாகத்தான் வந்தேன்."

"உனக்கு என்ன அவ்வளவு அக்கறை அவா பேர்லே" என்று ஒரு பார்வை பார்த்தார். சந்தேகமும், எரிச்சலும் மண்டியிருந்த அந்தப் பார்வையை இப்போது பாபுவுக்கு நேராகப் பார்க்க முடிந்தது. யமுனாவிடம் தான் கொண்ட எண்ணத்திற்குப் பிராயச்சித்தம் செய்து கொண்டு விட்டோம் என்ற தன்னம்பிக்கை அவனுக்குத் தைரியமளித்தது.

"மனுஷன் என்ற முறையில் எனக்கு அக்கறை இருக்கிறதிலே என்ன தப்பு?"

"நீ மனுஷனா இருக்கிறதை வாண்டாம்ங்கலெ. நீ மனுஷனா இருக்கிறதனாலேயே சொல்றேன். அப்பா இதுவரையில் ஒண்ணரை லட்சம்வரையில் கொடுத்திருக்கார் அந்தக் குடும்பத்துக்கு. உங்கிட்ட இதெல்லாம் சொல்லணும்கிற அவசியம் இல்லை. நீ வந்திருக்கே இதுக்காக. அதனாலெ சொல்லுகிறேன்."

"இது பழங் கணக்குப் பாக்கற சங்கதியா? இப்ப ஏதாவது செய்யணும்கிறதுதான் எனக்கு."

"எனக்குக் குழந்தை குட்டிகள் இருக்கு. பையன்களெல்லாம் மேஜராயிட்டான்னா நானும் பதில் சொல்லி ஆகணும்."

"பையன்களுக்கு விவரமாச் சொல்றதும் உங்க கடமை."

சென்னையில் கிடைக்குமிடங்கள்;-
ஸ்கூல் வியூ ஸ்டோர்ஸ்,
96, தம்புச் செட்டித் தெரு. சென்னை-1.
M. S. ஸ்டோர்ஸ்,
1-17H. மௌண்ட் ரோடு. சென்னை-2.
அப்பா அன் கோ;
246. நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் ரோடு.
சென்னை.

"இனி மேலே எங்க வீட்டு வாசல் படியிலே காலை வச்சே, ஒட்ட நறுக்கிப்பிடுவேன். ஜாக்ரதை!"

"என் கடமைதான். ஆனால், எங்கப்பா அந்தக் கடமையைச் செய்யலே. நானும் போனாப் போறதுன்னு அவர் போகிற வரைக்கும் பாத்திண்டுதானிருந்தேன்."

"உங்களுக்கு ரத்தபாசம்கூட உறைக்கலியே."

"உறைக்கிறது. அதனாலே நான் அந்த வீட்டை இன்னும் நான் எடுத்துக்கலே. ஒண்ணே ஒண்ணு செய்யறேன். வீடு அவாபேரில் இல்லெ. அதை சாசனம் பண்ணிக் கொடுத்துடறேன்."

"வீடு அவாபேரில் இல்லியா?"

"இல்லை... அதைக் கொடுத்திடறேன். வேற ஒண்ணும் செய்றதுக்கில்லை. நாமும் ஜாக்கிரதையாத்தான் இருக்கணும். எப்ப பார்த்தாலும் பாய்சாகப் புக்கு நடக்கிறாப்போல நடந்திண்டிருக்குமா? கண், காது தெரியாம செலவு பண்றதை நிறுத்திக்கணும். கடிவாளத்தை இறுக்கப் பிடிக்கணும். பிள்ளைக் குழந்தையா இருந்தாலும் பரவாயில்லே. நாலு காசு சம்பாதிப்பன்."

"பிள்ளைக் குழந்தையாயிருந்தா இப்ப நான் வந்திருக்கவே மாட்டேனே."

"அது சரி... பெண்ணாகப் பிறந்து விட்டது, செலவினம். ஜாக்ரதையாத்தான் செலவு பண்ணணும்."

"சாப்பாட்டுக்கு நெல் அனுப்பறதுகூட உங்களுக்கு ஒரு பாரமாயிருக்குமா?"

"இப்பவே ஊரிலே தலைகாட்ட முடியலே."

"தலைகாட்ட முடியாம என்ன?"

"நான் ஒண்ணும் சொல்றதுக்கு இஷ்டப்படலெ. வீட்டை மாத்திரம் கொடுத்துடறேன். வேற எந்த விதமான சம்பந்தமும் வாண்டாம்."

"தர்மம், நியாயம் ஒண்ணுக்கும் கட்டுப்படமாட்டேங்கறேளே."

"கட்டுப்பட்டுத்தான் சொல்றேன். இல்லாட்டா, அன்னிக்கே இன்னொருத்தனை இருந்தா, வீட்டை விட்டுக் காலி பண்ணச் சொல்லியிருப்பன்."

"யாரும் அப்படிச் சொல்லியிருக்க மாட்டான்."

"சரி; நானே போக்கிரி ஆயிட்டேன்னு வச்சுக்கோ."

"நான் அந்த மாதிரி ஒண்ணும் சொல்லலியே இப்ப உங்களை."

"பின்னே நீ சொல்றதுக்கு என்ன அர்த்தம்?"

பாபு நயமாகச் சொல்லிப் பார்த்தான். சிரித்துச் சிரித்து வேடிக்கையாகச் சொல்லிப் பார்த்தான். அவர் அசைகிற ஆளாகத் தெரியவில்லை. அதிகமாகப் பேசினால், வீட்டையே எடுத்துக் கொண்டு விடுவான்போலிருக்கிறது.

"செத்துப்போன உங்கப்பாவுக்குத் திருப்தி வேண்டாமா?"

"பாபு, நீ சிறு பையன். அநாவசியமா உன்னோட பேசி, பொழுதை வீணா அடிக்கிறதிலே என்ன பிரயோசனம்? நீ படிக்கிறவன். இவா யாரு? நீ யாரு? உனக்கும் அவாளுக்கும் என்ன சம்பந்தம்? நீ பாட்டுக்கு படிச்சு, பாஸ் பண்ணி உன் வேலையைப் பார்ப்பியா? யார் நகை வித்தா என்ன, நட்டு வித்தா என்ன? ஆண்டவன் செயல். எதோ நடந்தின்டிருக்கு. நீயும், நானும். யாருக்காகக் கவலைப்பட்டு முடியும்? அவாவா தலையெழுத்து. நாமல்லாம் உழைச்சுப் பாடுபடறவா. அவா உட்கார்ந்திண்டு சாப்பிடறவா. பணம், பொருள், அதை, மானமா அடையறதுக்கு நாம படற கஷ்டம்—இதெல்லாம் அவாளுக்கு என்னமாத் தெரியப்போறது? கை நிறையக் கொடுத்தா, மல்லிகைப்பூ பந்து பந்தா வாங்கி வச்சுப்பா. மைசூர் பாகாப் பண்ணித் திம்பா. பட்டுப் புடவையா வாங்கிக் கட்டிப்பா. ஒண்ணுவிட்ட அண்ணா பிள்ளை வெத்திலை பாக்குக் கடை வச்சு போண்டியாப் போறதுக்கு முந்நூறு நானூறுன்னு எடுத்துக் கொடுப்பா. அத்தங்கா ஆம்படையான் கடன்பட்டுப் பிட்டான்னு நோட்டுக்கூட எழுதி வாங்கிக்காமே, ஐநூறு அறுநூறுன்னு ரூபாயைத் தூக்கிக் கொடுப்பா. தங்கை வீட்டு மாட்டுக் கொட்டில் வருஷாவருஷம் புதுசு பண்ண வேண்டியிருக்கேன்னு சிமண்டு போட்டு, தகரம் அடிச்சுக் கொடுப்பா. அவாளுக்கு இந்த வெயிலும் வேர்வையும் தெரியுமா?"

"அவாகூட உறவு முறையைக் கைவிடலைபோலிருக்கே. ஒண்ணுவிட்டது, ரண்டுவிட்டதுன்னுகூடப் பார்க்காம செய்யறான்னு நீங்க சொல்றேளே."

"ஒண்ணுவிட்டது நாலுவிட்டதுக்கெல்லாம், நந்தமங்கலம் சுந்தாம் இப்படி மண்டை வெடிக்கிற வெயில்லே நிக்கணுமா?"

பாபு ஒரு மணி நேரம் அசைத்துப் பார்த்தான். இவன் பேச்சு வெறும் சிமிட்டியில் தண்ணீரைத் தெளித்தாற்போல் மனதையும், பிடிவாதத்தையும் இன்னும் கெட்டியாக்கிக்கொண்டே இருந்தது. கடைசியில், அவனுக்கே தலை குனிவாக இருந்தது. நெல்லை வயலிலிருந்து வீட்டுக்குக் கொண்டுவந்து கண்ணால் காண்கிற வரையில் படுகிற பாட்டையும், கவலையையும், விழிக்கிற இரவுகளையும் அவர் சொல்லும்போது வாயடைத்து நின்றான் அவன். ஒன்றுக்கும் உபயோகமில்லாத, நாட்டுக்கு உபயோகமில்லாத படிப்பு என்கிற ஆடம்பரத்தில் வீண் பொழுதைப் போக்குகிற சோம்பேறி என்று உள்ளத்தைக் குனியவைத்தது அவர் பேச்சு. அவர் அரைமணி பேசி முடித்த பிறகு, "அப்ப நான் கடைசியிலே வெறுங்கையோடத் திரும்பணுமா?" என்றான் பாபு.

"வெறுங்கையோடப் போவானேன்? நல்ல பேயந்தார் இருக்கு. அதை எடுத்துக் கொடுக்கிறேன். பஸ்ஸிலே போட்டுண்டு போ. அவாளுக்கும் கொடு" என்றார் அவர்.

ஏதோ சொல்லி மழுப்பிவிட்டு, அவரிடம் விடைபெற்றுக்கொண்டு திரும்பி வந்தான் அவன்.

அவனுக்காகக் காத்துக்கொண்டிருப்பதுபோல, வாசலுக்கு நேராக முற்றத்தில் இருந்த பெஞ்சின்மீது உட்கார்ந்திருந்தாள் பாலம்மாள்.

"வாப்பா, பாத்தியா?"

"பாத்தேன்...இப்ப பஸ் இருக்குமோல்லியோ?"

"ம்..இருக்கும்..டிக்கீ, டிக்கீ.."

டிக்கி அடுக்களையிலிருந்து புஸ்தகத்தில் வைத்த விரலுடன் கூடத்திற்கு வந்தாள்.

"கொல்லையிலே ரோஜாப்பூ நாலஞ்சு பூத்திருந்தது பாரு. அதையும், மல்லிகையும் மொட்டுக்கட்டியிருந்தது. காயரும்பில்லாம, முத்தின அரும்பாப்பாத்து

பாத்ருடுவின் "பாலசஞ்சீவினி" REGD

குழந்தைகளின் **ஈரல் குலைக்கட்டி** வியாதிகளை சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் அசல் விஜயங்கரம் மருந்து. எல்லா மருந்து கடைகளிலும் கிடைக்கும். போலிகளைக் கண்டு ஏமாறுநீர்

Dr. பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,

19, தெற்குமாடவீதி, மயிலாப்பூர், மதராஸ்-4. போன்: 71354.

கும்பகோணம் கிளை: 7, சாரங்கபாணி கோவில் கீழ வீதி.

இருக்கிறத்தை எடுத்துண்டு வாயேன்." டிக்கி கொல்லைப்பக்கம் போனதும், "வந்த காரியம் பலிக்கலை மாமி. அதிகமாப் பேசினு, வீட்டையே பிடுங்கினுடு வேன்னு சொல்லாம பயமுறுத்தறார் உங்க பிள்ளை."

"ம்" என்று யோசனையில் ஆழ்ந்தாள் பாலம்மாள்.

ஒரு நிமிஷம் கழித்து ஒரு பெருமூச்சு விடுவதைத் தவிர, அவளால் ஒன்றும் செய்ய முடியவில்லை. உள்ளே எழுந்து போய், கடுதாசிப் பொட்டலம் ஒன்றைக் கொண்டு வந்தாள்.

"நீ வந்து கேட்டது எல்லாம் அவா ளுக்குத் தெரியணும்னு தோணி, அவா ளும் சரின்னு ஒப்புக்கிண்டா, இதைக் கொண்டு கொடு. கொஞ்சம் அவல் இருக்கு. குசேலஸ்வாமி அவலைக்கொண்டு போனார். ஐச்வரியமாக் கிடைச்சுது. இஞ்ச தலை கீழே இருக்குன்னு சொல்லு. நான் என்ன செய்வேன்?" என்று பொட் டலத்தைக் கொடுத்தாள் அவள்.

டிக்கி மல்லிகை, ரோஜாவைக்கொண்டு வந்ததும், அதையும் வாங்கிக்கொண்டு விடை பெற்றான் பாபு.

பஸ்ஸில் போகும்போதும் அவலையும் புஷ்பப் பொட்டலத்தையும் மாறிமாறிப் பார்த்துக்கொண்டிருந்தான் அவன். தன் னுடைய பௌருஷம் எல்லாம் பெண்டுகள் தின்னுகிற அவலாக, பெண் கள் சூடுகிற வாடப்போகும் மென்மலராக மாறி அடங்கிக்கிடப்பதுபோல் தோன் றிற்று அவனுக்கு. வெட்கமும் கையாலா காத்தனமும் அவன் ஆண்மையைக் கண்டு நகைத்தன. அர்த்தமில்லாமல் செய்த இந்தப் பிரயாணத்தில் சூன்யத் தைத் தவிர ஒன்றும் காணவில்லை. மன தில் மட்டும் தோல்வியும் இயலாமையும் மண்டிக் கிடந்தன.

ஃ ஃ ஃ

பஸ்ஸை விட்டுக் கும்பேச்வரன் கோயி லுக்கு அருகிலேயே இறங்கி, திரு மஞ்சன வீதியை நோக்கி நடந்தான் அவன்.

ரங்கண்ணு வீட்டிற்குள் நுழையும் முன்பே தம்புராவின் நாதம் சுருதி சுத்த மாகக் கேட்டுக்கொண்டிருந்தது. உள்ளே போனதும் யார் யாரோ வந்து உட்கார்ந் திருந்ததைப் பார்த்தான் அவன்.

ரங்கண்ணு உட்கார்ந்திருந்தார். சாம் பன் இருந்தான். ஷண்முகம் இருந்தான். எதிரே நாலு பேர் உட்கார்ந்திருந்தார் கள். எல்லாரும் சாணிக்கலரில் கோட்டு அணிந்திருந்தனர். எல்லாத் தலைகளிலும் குல்லாய். எல்லாருக்கும் மீசை. கறுப் பாக இருந்தார்கள். உட்கார்ந்திருந்த போதே எல்லோரும் பஞ்சகச்சம் கட்டி யிருந்ததுபோலிருந்தது. நம் தேசத் தவர்களே இல்லை. நால்வரில் ஒருவர்— வயது ஐம்பதிருக்கும்— தம்புராவை மீட்டிக்கொண்டிருந்தான். தஞ்சாவூர்த் தம்புரா இல்லை. தந்தத்தில் கமல வேலை கள் ஒன்றும் இல்லாத மொட்டையாக ஒரு தம்புரா. மீரஜ் சுரைக்குடத்துடன், நாட்டுப்புறத்துப் பெண்ணைப்போலக் காத்திரமாக அவன் தோளில் சாய்ந்தி ருந்தது அது. பெரிய நாதமாக எழுப் பிற்று அது. இவ்வளவு பெரிய நாதம் எதற்கு என்று பாபுவுக்குப் புரியவில்லை.

"பாபுவாடா, வா" என்றார் ரங்கண்ணு. "நல்ல வேளையா வந்தியே! நல்ல சமயத் துக்கு வந்தே. உட்கார்" என்றார். பாபு உட்கார்ந்துகொண்டான்.

அவர்கள் அணிந்திருந்த கோட்டுகள் புதிதாகவும் இல்லை. சாணி நிறத்தில் கசங்கலும் அழுக்கும் ஏறியிருந்தன. இடுப்பு வேஷ்டிகளில் நல்ல பழுப்பு.

தம்புராவை மீட்டிக்கொண்டிருந்த வன், பின்னால் உட்கார்ந்திருந்தவர்களி டம் திரும்பி, அவர்கள் பாஷையில் இரண்டு நிமிஷம் பேசினான். மராத்தி பாஷைமாதிரி இருந்தது.

சுருதி மூன்றரைக் கட்டை இருக்கும். ரங்கண்ணுவின் தம்புராவின் நாதத்தைப் போல மெல்லியதாக இல்லை. பெரிய நாத மாக, கனநாதமாக எழுந்து, கூடம் முழு வதும் நிரப்பிக்கொண்டிருந்தது.

கண்ணை மூடிக்கொண்டிருந்தான், மீட்டிக்கொண்டிருந்தவன். ஒரு நிமிஷம் கழித்து, வாயைத் திறந்து சுருதி சேர்த் தான்.

எல்லோர் முகத்திலும் அந்தக் குரலைக் கேட்டு ஒரு மலர்ச்சியும் பிரமிப்பும் ஒளிர்ந்தன. சாரீரத்தில் ஒரு கனம். ஒரு கம்மல். பெரிய தூணைப்போன்ற சாரீரம். இவ்வளவு கனத்திற்கு இவ்வளவு இனிமை கொடுத்தது அந்தக் கம்மல் தான். 'ஆ...' என்று நீண்டு கார்வை கொடுத்து, சுருதியோடு நின்றுகொண்டி ருந்தான் அவன். அவனோடு பக்கத்திலி ருந்த இன்னொருவன்—இருபத்திரண்டு வயதிருக்கும்—அந்தப் பையனும் சேர் ந்து கார்வை கொடுத்தான். பெரியவன் குரலில் இருந்த அழுத்தம் இதில் இல்லை. ஆனால், இனிமைக்குக் குறைவில்லை.

இது என்ன சாரீரம்! இவ்வளவு [illegible] மாகவா மனிதக் குரல் இருக்க முடியும்! இந்தக் குரலுக்குத்தான் எவ்வளவு பலம்! ஆ....ம் என்று அலட்சியமாக மூச்சைப் பிடித்துக்கொண்டு நின் றது பாபுவுக்குக் கவலையாகத் தானிருந்தது, இவ்வளவு மொத்த மான சாரீரம், மேலே போய் எப்படி எட்டப்போகிறது என்று. ஆனால், மந்த் ரத்தை நாலு நிமிஷம் நின்று பிரமிக்க அடித்துவிட்டு, அவன் படிப்படியாக ஏறி, மேல் ஷட்ஜமத்தில் ஏறி கம்பீரமாகக் கார்வை கொடுத்து நின்றபோது, அவன் உடல் புல்லரித்தது. புல்லரித்ததோடு கண்ணில் நீர் மல்கிற்று. என்ன திவ்ய மான சாரீரம்!

ரங்கண்ணு கண்ணை மூடி, புன்னகை யுடன் [illegible]கொண்டிருந்தார். ஆகா ஆகா எ[illegible] ஆகாகாரம் செய்தார். மகுடி முன் ராகம்போல அவர் உடல் ஆடிக் கொண்டிருந்தது. அந்த சாரீரம் கார்வை யோடு நிற்கவில்லை. பிரமாதமான புரளல் களுடன் அது புரண்டபோது, அவர் விநாடிக்கு விநாடி ஆகாகாரம் செய்துகொண்டிருந்தார். கடலைத் தாண்டுமுன் அனுமான் தன் பலத்தை அறிந்துகொள்ள மரங்களையும் மலைகளை யும் தட்டிவிட்டு, அங்குமிங்கும் அலைந்து விர்ரென்று மேலே கிளம்பியதுபோல, கீழே நின்றுகொண்டிருந்த சாரீரம் மேலே ஏறி சஞ்சரித்ததைக் கேட்கும் போது பாபுவின் உள்ளத்தில் என்னென் னமோ உருவங்கள் எழுந்தன. கடைசி யில் உருவங்கள் அழிந்து, குரலிலேயே லயித்துவிட்டான்.

"ஆகா, ஆகா... கந்தர்வ சாரீரம்டா. இது மனுஷ்ய சாரீரம் இல்லை" என்று ரங்கண்ணு கண்ணை மூடிக்கொண்டே சொல்லிக்கொண்டிருந்தார்.

அவர்கள் இருவரும் வேறு நினைவில் லாமல் பாடிக்கொண்டிருந்தார்கள். இடை கழி நிலையில் தெருவில் போகிறவர் களின் கூட்டம் வந்து மொய்த்துக்கொண் டிருந்தது.

மூன்று மணி நேரத்திற்கு மேல் பாடி னார்கள். பெரிய மழை பெய்து ஓய்ந்த மாதிரி இருந்தது. ஆண்மையும் சக்தியும்



நிறைந்த இந்தக் குரல்களுக்குப் பிறகு, பேசின பேச்செல்லாம், எலி முனு முனுப்பதுபோலிருந்தது.

"பாபு, என்ன சாரீரம் பாத்தியாடா?" என்றார் ரங்கண்ணா. பாபுவுக்குப் பதில் பேசத் தெரியவில்லை. அவர்களைக் குழந்தைமாதிரி பார்த்தான்.

"மகாராஷ்டிர தேசமாம். யாத்திரை போறாளாம் ராமேச்வரத்துக்கு. இப்படி க்ஷேத்ரங்கள்லேல்லாம் இறங்கி இறங்கிப் பாத்திண்டு போறாளாம். இவர் பிள்ளையாம் இந்தப் பையன்."

பெரியவர் புன்சிரிப்பு பூத்துக் கொண்டிருந்தார்.

"நேத்திக்கி கும்பேச்வரன் கோயில்லே பாடிண்டிருந்தாராம். ஷண்முகம் திருவையாத்திலே வந்தவன், அங்கே போய்க் கேட்டுண்டு நின்னானாம். இருக்கிற ஜனங்கள்ளாம் பிச்சைக்காரங்கன்னு நெனச்சிண்டு, நாலணா எட்டணான்னு காசு போட்டுதாம். ... வாங்கி, அங்கியே உண்டி... பார்ட்டுப் பிட்டாளாம் இவா."

பாபு சங்கு சொல்லிக் கொடுத்த அரை குறை ஹிந்தியை, மறந்துபோன ஹிந்தியை, ஞாபகப்படுத்திக்கொண்டு, என்னென்னமோ கேட்டுப் பார்த்தான். அவர்கள் சொல்வது இவனுக்குப் புரிய வில்லை. அவர் சொன்னதற்குமேல் அதிகமாக ஒன்றும் தெரிந்துகொள்ள முடிய வில்லை.

வாசலில் கார் வந்து நிற்கும் சப்தம் கேட்டது. கூடவே செருப்புச் சப்தம் கேட்டது. இரண்டு மூன்று பேர் வந்தார்கள்.

"ராமு வந்திருக்கார்" என்று எழுந்து பார்த்த பாபு, ரங்கண்ணாவிடம் தெரிவித்தான். சாம்பனும் ஷண்முகமும் எழுந்து கொண்டார்கள்.

பாலூர் ராமு "நமஸ்காரம் அண்ணா" என்று வடக்கத்தியார்களைப் புரியாமல் ஒரு தடவை பார்த்துவிட்டு, ரங்கண்ணாவை விழுந்து நமஸ்காரம் செய்தார்.

"எப்ப வந்தே?"

"இன்னிக்கித்தாண்ணா" என்று எழுந்து, அவர் காலைத்தொட்டுக் கண்ணில் ஒற்றிக்கொண்டார் பாலூர் ராமு.

பாபுவுக்கு உடனே ஞாபகம் வந்தது. "திருட்டுப் பயடா இந்த ராமு" என்று

கவர்னரும் மன்னிப்பு கோரினார்

ஸர் தேஜ்பஹதூர் ஸாப்ரூ ஐக்கிய மாகாணத்தில் சட்ட மெம்பர் அப்பொழுது. ஸர். ஹார்கோர்ட் பட்லர் என்பவர் கவர்னர். கவர்னர் ஒரு சமயம் தன் சிநேகிதர்களிடம் பேசிக்கொண்டிருந்த போது, மோதலால் நேருகைதானதற்கு, ஸாப்ருதான் காரணம் என்றாராம்.

இவ்விஷயம் ஸாப்ருவுக்கு எட்டியது. மிகக் கோபம் அடைந்த ஸாப்ரு, உடனே வைஸ்ராய் ரீடிங் பிரபுவுக்கு எழுதிய கடிதத்தில், "இந்தத் துடுக்குச் செய்கைக்கு ஹார்கோர்ட் மன்னிப்புக் கோர வேண்டும் அல்லது வேலையை ராஜிநாமாச் செய்ய வேண்டும். தானும் என் வேலையை விட்டு விட்டு, அவர்மேல் வழக்குத் தொடங்குகிறேன். பட்லரின் ஏழு தலைமுறையாலும் நான் கோரும் மான நஷ்டத் தொகையை ஈடு செய்ய முடியாது என்பதை அவர் அறியட்டும்" என்று குறிப்பிட்டாராம்.

ரீடிங் பிரபுவுக்கு இச்சம்பவம் மிக வேதனை அளித்தது. அச்சமயம் இந்தியா வந்திருந்த வேல்ஸ் இளவரசரும், கவர்னரின் செய்கையில் இருந்த பிசகையும், ஸாப்ரு கோரிக்கையின் நியாயத்தையும் உணர்ந்தாராம். கேட்க வேண்டுமா? சிறிது காலத்தில் கவர்னரிடமிருந்து மன்னிப்புக் கோரிய கடிதம் ஒன்று ஸாப்ரு மேஜையை அலங்கரித்தது. —கே.

ரங்கண்ணா சொல்வதை நினைத்து, அவன் உதட்டில் புன்னகை தவழ்ந்தது.

"அண்ணா அண்ணான்னு விழுந்து விழுந்து காலைப் பிடிப்பன். கையைக் கட்டிண்டு அடிமைமாதிரி நிப்பன். காசுன்னா விழுந்து மூர்ச்சை போட்டுடுவன்! இல்லாட்டா இதோ வந்துப்பிட்டேன்னு நழுவிப்பிடுவன்" என்று ரங்கண்ணா சொல்கிற பாலூர் ராமு இவர்தான்.

பாலூர் ராமு ரங்கண்ணாவிடம் குரு குலவாசம் செய்தவர். அவர் இப்போது சென்னையோடு போய்விட்டார். கதர் வேஷ்டி, கதர் பஞ்சகச்சம் என்று தேசபக்தியையும் அரசியல் வாதிகளிடமும் பத்திரிகைக்காரர்களிடமும் குருகுலவாசம் செய்ததுபோலப் பெற்றுக் கொண்டுவிட்டார். இரண்டு வருஷத்திற்கு முன்னால் பார்த்ததைவிட நாலு சுற்று உடல் பருத்திருந்தது. பெரிய வக்கீல்கள், நீதிபதிகள், ராஜ்ய நிர்வாகிகள், மந்திரிகள் எல்லாரும் அவருக்கு சமஅந்தஸ்து கொடுத்துவிட்டார்கள் இப்போது. எட்டு வருடங்களுக்கு முன்பு தஞ்சாவூரில் சாம்பு நடத்துகிற உற்சவத்தில் அவர் ஒல்லியாக, முகத்தைப் பழிப்புக் காட்டிக்கொண்டு பாடிய காட்சி நன்றாக ஞாபகம் இருக்கிறது. மறுநாள் காலையில் "அண்ணா, இந்த பனியன் நன்னாருக்கே" என்று சாம்புவின் ஜவுளிக் கடையில் வந்து அவர் கெஞ்சியதும் நன்றாக ஞாபகமிருக்கிறது. ஆனால், அந்த இறைஞ்சும் இளிப்புக்குப் பதிலாக, இப்போது ஒரு அலட்சியப் புன்னகை வந்திருக்கிறது. அந்த அலட்சியம்தான் கோட்டுப் போட்டுக்கொண்டிருந்த வடக்கத்தியார்களைப் பார்த்தது. "அண்ணாவுக்கு என்ன வேலை? இந்த மாதிரி தெருவிலே போறவன் யாரையும் கூட்டிவச்சிண்டு கூத்தடிப்பர்!" என்ற புன்னகை சிரிப்பதுபோலிருந்தது. ராமுவோடு இன்னும் இரண்டு பேர் வந்திருந்தார்கள். பெரிய மனிதர்கள் தனியாகப் போகமுடியாது என்பதையும் ராமு கற்றுக்கொண்டுவிட்டார்.

"சவுக்யம்தானே?"

"இருக்கேண்ணா."

"மெட்ராஸ் எல்லாம் எப்படி இருக்கு?"

"சௌக்யமா இருக்கு, அண்ணா அனுக்ரகத்திலே."

உடனே வடக்கத்தியார்களைக் காட்டி, அவர்கள் சாரீரத்தைப்பற்றி ஒரு அத்தியாயம் ஆரம்பித்தார் ரங்கண்ணா. "அப்படியா?..பேஷ்..அப்படியா?" என்று மனசோடு ஒட்டாத ஆச்சரியத்துடன் கேட்டுக்கொண்டிருந்தார் ராமு.

"படே வித்வான்" என்று திடீரென்று ஒரு சிரிப்புடன் ஒரே வார்த்தையில், ராமுவை அவர்களுக்கு அறிமுகப்படுத்திவிட்டு, மறுபடியும் அவர்களைப் பாடச் சொன்னார் ரங்கண்ணா.

(தொடரும்)



தலைநகர் பால்.....

ஆசியாவின் பல்வேறு நாடுகளையும் சேர்ந்த எழுத்தாளர்கள் இந்தியத் தலைநகரில் இந்த வருஷ இறுதியில் மகாநாடு கூடப் போகிறார்கள். அதற்கான ஆயத்தக்கூட்டம் சென்ற ஜூலை 28, 29-ம் தேதிகளில் சிறப்புற நடந்தேறிற்று. பர்மா, சைனா, கொரியா, நேபாளம், வியட்னாம், பாரதம் முதலான பல்வேறு நாடுகளைச் சேர்ந்த சிறந்த எழுத்தாளர் பலரும் இதில் கலந்துகொண்டு, முழு மகாநாட்டிற்கான ஏற்பாடுகள் குறித்து ஆலோசனை நடத்தினார்கள்.

காகாசாகேப் கலேல்கரின் தலைமையிலான இந்தக் கூட்டத்தை இந்தியாவின் உயர் ராஜதந்திரியான ஸ்ரீ வி. கே. கிருஷ்ண மேனன் ஆரம்பித்து வைத்து ஆசி கூறினார். இந்த ஆயத்தக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தவர்களில் ஒருவரான டாக்டர் மூல்க்ராஜ் ஆனந்த், ஆசிய தேசங்களின் கலாசார மறுமலர்ச்சியில் எழுத்தாளரின் பங்கைப் பற்றி விவரித்தார். பிரபல எழுத்தாளரான டாக்டர் மூல்க்ராஜ் ஆனந்த் தவிர, பனாரிஸிதாஸ் சதுர்வேதி, ஜெய்னேந்திர குமார் ஆகியோரும் இந்த ஆயத்தக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

இந்திய மொழிகள் அனைத்தின் பிரதிநிதிகளும் வங்காளி, குஜராத்தி, ஹிந்தி, காஷ்மீரி, மலையாளம், மராத்தி, ஒரியா, பஞ்சாபி, தமிழ், தெலுங்கு, உருது, கன்னடம், ஆங்கிலம் ஆகிய மொழி எழுத்தாளர் பலரும் கலந்துகொண்டனர். அங்கங்கே உள்ள எழுத்தாளர் சங்கங்கள், தம் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்பியுள்ளன. சென்னை ராஜ்யத் தமிழ் எழுத்தாளர் சங்கப் பேரவை சமீபத்தில் தேர்ந்தெடுத்த 4 பிரதிநிதிகளில் ஒருவரான— பிரபல எழுத்தாளர் ஸ்ரீ கே. எஸ். ஜம்புநாதன், தமிழ் மொழியின் பிரதிநிதியாக மகாநாட்டில் கலந்துகொள்கிறார். டாக்டர் மூல்க்ராஜ் ஆனந்த், தமது துவக்க உரையில் ஆசிய நாடுகள் பலவற்றில் தமிழ்க் கலாசாரம் பரவியிருந்ததைக் குறிப்பிட்டபோது, வெளிதேசப் பிரதிநிதிகளும்—ஏன்—இந்திய எழுத்தாளரும் கூட, தமிழ் மொழிபற்றி விசாரித்தனராம். தமிழ்நாட்டுப் பத்திரிகைகளுடைய வாசகர்களின் தொகையைக் கேட்டபோது, அவர்கள் அப்படியே அசந்து போனதாகத் தமிழ்ப் பிரதிநிதி ஜம்புநாதன் தெரிவித்தார். தமிழ் மொழி இந்தியாவின் புராதனப் பழம் பெரும் மொழி என்ற வகையில் ஆயத்தக் கூட்டத்திலும் சரி, வருஷ இறுதியில் நடக்கவிருக்கும் முழு மகாநாட்டிலும் சரி, அதற்குரிய சிறப்பு ஸ்தானத்தை அடையும் என்பதில் சந்தேகமில்லை. இந்த ஆயத்தக் கூட்டம், குறுகிய அவகாசத்தில் ஏற்பாடானதால், இன்னும் சிறப்பான வகையில் அமைய இயலாது போயிற்று. தமிழகத்தின் தலைசிறந்த எழுத்தாளர்கள் பெருந்தொகையில் இந்த வருஷ இறுதி மகாநாட்டில் கலந்துகொண்டு சிறப்பிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறார், தமிழ்ப் பிரதிநிதி.

இந்த ஆயத்தக் கூட்டத்துப் பிரதிநிதிகள் அனைவரையும் – அதாவது நூறு பேரையும் அழைத்து, வரவேற்பு ஒன்றுக்குத் தமிழர் ஏற்பாடு செய்து, தமிழ் மொழிச்சிறப்பை உணர்த்தியிருக்கலாம். தமிழ் மொழிபற்றிப் பிறருக்கு விவரம் தெரிவிக்கும் நூல்களை வினியோகித்திருக்கலாம். ஆனால், இந்த முயற்சிகள் எல்லாம், டிசம்பர் மகாநாட்டில் தட்டாது செய்யவேண்டிய பணியாகும். தலைநகரில் தமிழ் எழுத்தாளர், கவிஞர்கள், நாடகாசிரியர்கள், மொழிபெயர்ப்பாளர்கள் முதலானோர் சுமார் 25, 30 பேர்கள் இருப்பார்கள்; அவர்கள் எல்லோரும் ஒன்று திரண்டு, தமக்கென எழுத்தாளர் கழகம் ஒன்றை அமைத்துக்கொண்டு சிறப்புறப் பணியாற்றலாம். தவிர, இம்மாதிரியான மொழி மகாநாடுகள் நடக்கும் சமயத்தில் அந்தக் கழகம், தமிழ் மொழிக்கு அபார சேவை செய்ய வாய்ப்பு இருக்கிறது. தலைநகர் எழுத்தாளர் இது விஷயமாகக் கவனித்துச் செயலில் இறங்க முற்படுவார்களாக.

ஃ ஃ ஃ

தில்லி சர்வகலாசாலை வருஷந்தோறும், பரீட்சை நடத்தி, தகுதிமிக்க மாணவர்களுக்கு கல்லூரிப் படிப்பிற்கென உதவிப் பணம் வழங்கி வருவது வழக்கம். அத்தகைய அகில இந்தியத் தேர்வில் இந்த முறை தமிழ் மாணவர்கள் பலருக்குப் பெரும் வெற்றி. தில்லி ராஜ்யத்தில் ஹையர் செகண்டரி பரீட்சையில் முதலிடம் பெற்ற மதராஸிப் பள்ளி மாணவன் எஸ். பத்மநாபனும், என். நடராஜன் என்ற மாணவனும் மாதம் நூறு ரூபாய் விகிதம் மூன்றாண்டு காலம் பெற்று வருவார்கள்; மாதா மாதம் இருபத்தியைந்து ரூபாய் உதவிச் சம்பளத்திற்குரிய ஆறு மாணவர்களில் குமாரி ஆர். சரஸ்வதி, ஆர். சுப்ரமண்யம், என். வெங்கடராமன், ஆர். பார்த்தசாரதி ஆகியோர் தமிழ் மாணவர்கள் என்பது மகிழ்ச்சி தரும் சேதி அல்லவா?

ஃ ஃ ஃ

'சுதந்திரம் எனது பிறப்புரிமை' என்ற தாரக மந்திரத்தை வழங்கிய லோகமான்ய பாலகங்காதர திலகரின் நூற்ற[illegible]னத்தைச் சென்ற திங்கள், செவ்வ[illegible]கிழமைகளில் தலைநகரில் அதிவிமரிசையாகக் கொண்டாடினார்கள்.

ஃ ஃ ஃ

துளசிதாசரின் ஜன்மதின விழா, வெள்ளிக்கிழமையன்று தில்லி பிராந்திய ஹிந்தி சாஹித்ய சம்மேளனத்தின் ஆதரவில், மந்திரி சத்யநாராயண சின்ஹாவின் தலைமையில் விமரிசையாக நடந்தேறிற்று; முதன் மந்திரி ஸ்ரீ குருமுக் நிஹால்சிங் விழாவைத் துவக்கிவைத்துப் பேசுகையில், "துளசிதாஸரின் கவிதை, காலத்தை வென்ற உயரிய இலக்கியம்" என்று பாராட்டினார். "துளசிதாஸ் தமது அமரப் பாக்கள் மூலம் அறநெறியையும் பக்தி மார்க்கத்தையும் மக்களிடையே பரப்பிய மஹான்" என்று மந்திரி சின்ஹா கூறினார்.

தலைநகரில் உள்ள இதர மொழியினரின் ஸ்தாபனங்கள், அதுவும் குறிப்பாக, இலக்கியக் கழகங்கள் பலவும்கூட, இந்தியாவின் இலக்கிய கர்த்தாக்களின் விசேஷ தினங்களைக் கொண்டாடுவது வரவேற்கத் தக்கதாயிருக்கும். உதாரணமாக, தமிழ்ச் சங்கத்தார் துளசிதாசர் தினத்தைக் கொண்டாடும்வகையில், துளசிதாஸ் ராமாயணம்பற்றியும், கம்பர் ராமாயணம் பற்றியும் பேச்சுக்கு ஏற்பாடு செய்திருக்கலாம். ஹிந்திக்காரர்களையும் மற்றவர்களையும்கூட அழைத்து, அத்தகைய நிகழ்ச்சிகள் நடத்துவதன் மூலம் – இந்திய நாட்டு மொழிகள், பரஸ்பரம் ஒன்றையொன்று ஓரளவாவது தெரிந்துகொள்ள வாய்ப்பு ஏற்படும். இந்த வருஷத் துவக்கத்தில் தில்லித் தமிழ்ச் சங்கத்தார் நடத்திய உரைக் கோவையின் மாதிரியில் அடிக்கடிப் பன்மொழிப் புலவர்களை ஒருங்கே கூட்டி, இலக்கிய சர்ச்சைகளுக்கு மேன்மேலும் ஏற்பாடு செய்வது தலையாய பணியாயிருக்கும். தலைநகரில், நாட்டின் பிரதான மொழிகளைச் சேர்ந்த அறிஞர்களுக்குக் குறைவேயில்லை. தில்லி இலக்கியக் கழகங்கள் அவர்களை அணுகி, தக்கபடிப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

குழந்தைகளின்
எந்த வியாதிக்கும் உயர்ந்த
சிகிச்சை அளிப்பது

"பால்சாதி"

முற்றிலும் ஆயுர்வேத முறையில் தயாரிக்கப்பட்டது. குழந்தைகளுக்கு ஏற்படும் மாந்தம், காய்ச்சல், இருமல், மலச்சிக்கல், பல் முளைக்கும்போது ஏற்படும் வலி முதலியவைகளை அடியோடு அகற்றிவிடுகிறது.

ஒரு டப்பியின் விலை ரூ. 1.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

விபரங்களுக்கு கீழ்க்கண்டவருக்கு எழுதுக:

VAIDYA J. G VARADH OFFICE,
NADIAD.

ஸ்டாக்கிஸ்டுகள்:—

தாமோதர் & கம்பெனி.
113, நைனியப்ப நாயக்கன் தெரு,
சென்னை-3.

நட்சத்திரப் பேட்டி

"நான் ஒரு நடிகன். நடிப்பு மூலம் பொதுமக்களுக்குக் கலை வி[illegible] பதே என்னுடைய குறிக்[illegible] இந்தக் கடமையில் என்[illegible]ம் ஏதாவது குறையிருந்தால், அதை எடுத்துக் கூறுங்கள். பத்திரிகையாளர்கள், கலைஞர்களுக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டும். இருக்கிறார்கள் என்பதே என்னுடைய கருத்து. குறைகளைத் தாராளமாகக் கண்டிக்கலாம், தந்தை தன் குழந்தையைக் கண்டிப்பதுபோல. ஆனால், கண்டிக்கிறேன் என்று கூறி, எந்தத் தந்தையும் தன் குழந்தையை நாற்சந்தியில் நிறுத்தி நையப்புடைக்கமாட்டான், தன் குழந்தை என்ற அபிமானம் அவனுக்கு இருக்கும், கட்டாயம் இருந்தாக வேண்டும். கலைஞர்களைப் பத்திரிகையாளர்களும் இவ்வாறே பாவிக்க வேண்டும்" என்று பிரபல நடிகரான என். டி. ராம ராவ் சென்ற ஞாயிறன்று தென்னிந்திய சினிமாப் பத்திரிகையாளர் சங்க விருந்தின்போது கூறினார்.

"விமர்சகர்கள் என்ற ரீதியில் எங்கள் கலைப் பணியைப் பாராட்டவோ, கண்டிக்கவோ உங்களுக்குத் தாராளமாக உரிமை உண்டு. ஆனால், கலைஞர்களின் சொந்த வாழ்க்கையைப்பற்றி உங்கள் பத்திரிகைகளில் எழுதி, எங்கள் முகத்தில் கரியைப் பூச முயற்சி செய்ய வேண்டாம். எங்களிடம் குறைகள் இருக்கின்றன என்பதை ஒப்புக்கொள்கிறேன். ஆயினும், உலகத்தில் யாரிடம்தான் குறைகள் இல்லை? எல்லோரையும் விட்டு விட்டு, எங்கள் பிரத்யேக வாழ்க்கையை மட்டும் பிரத்யேகமாகக் கவனிப்பானேன்?" என்று உருக்கமாக வினவிய ஸ்ரீ ராம ராவ், நல்ல உயரமும், சிவந்த மேனியும், புன்முறுவல் தவழும் முகமும் படைத்தவர். அவருடைய தோற்றத்தில் கம்பீரமும் சாந்தமும் ஒருங்கே பரிமளிக்கின்றன. கேள்விகளுக்குப் பதில் அளிக்கும்போது, தன் கோபத்தையோ ஆத்திரத்தையோ வெளிக்காட்டாமல் அதைத் தன் புன்முறுவலால் மூடிக்கொள்கிறார். சரளமான ஆந்திர நாட்டு ஆங்கிலத்தில் அவர் பதிலளிப்பது கேட்க ருசிகரமாக இருக்கிறது.

தென்னிந்திய நடிகர்களிலே படித்துப் பட்டம் பெற்ற நடிகர்கள் வெகு சிலரே. அவர்களில் என். டி. ராம ராவ் ஒருவர். பீ. ஏ. படித்துத் தேர்ந்த அவருக்குப் பிரக்யாதி தேடித் தந்தது, தென்னிந்தியப் பட உலகத்திற்கு சாவித்திரியைத் தந்த தெலுங்குப் படமான 'சம்சாரம்'தான். அது அவரது மூன்றாவது படமாயினும், அதில் அவரது நடிப்புத் திறமையை மக்கள் பூரணமாக [illegible]ணர்ந்து ரசிக்கச் சந்தர்ப்பம் கிடைத்[illegible]து.

பட உலகில் புகுமுன் மற்ற நடிகர்களுக்கு ஏற்படும் சோதனைகள் ராம ராவுக்கும் ஏற்பட்டன. ஆனால், பிடிவாதக்காரர் அவர். எடுத்த காரியத்தைத் திறமையுடன் செய்து முடிக்கும் ஆற்றல் அவரிடம் உண்டு. இதற்கு ஓர் உதாரணம் கூறலாம்:

1942-ம் வருஷம் விஜயவாடா எஸ். ஆர். கலாசாலையில் என். டி. ராமராவ் படித்துக்கொண்டிருந்தபோது, மாணவர்கள் ஒரு நாடகம் நடத்தினார்கள். அந்த நாடகத்திலே பெண் வேஷம் அணிந்த நடிகனுக்கு அவனது நடிப்பைப் பாராட்டி விசேஷப் பரிசு அளிக்கப்பட்டது. ஆனால், நாடகம் பார்த்தவர்களுக்குமட்டும் ஒரு சந்தேகம் தீரவில்லை. கதாநாயகி வேஷம் தரித்த அந்த மாணவன், தன் முகத்தை ஒரு சல்லாத் துணியால் மறைத்துக்கொண்டிருந்ததேன் என்பதுதான் அது. அந்த மாணவன் மீசை வைத்துக்கொண்டிருந்ததே இதற்குக் காரணம் என்பது பின்னர்தான் புலனாயிற்று. ஒரு நாள் கூத்துக்கு மீசையை எடுக்க அவன் விரும்பவில்லையாம். என்ன சொல்லியும் கேட்க மறுக்கவே, நாடக டைரக்டர் அவனை மீசையுடனேயே நடிக்க அனுமதித்தார். —இவ்வாறு முகத்தில் சல்லாத் துணியுடன் பார்ப்போர் பிரமிக்கும்படி நடித்து, பரிசும் பெற்றுவிட்ட அந்த மாணவன் வேறு யாருமல்ல; என். டி. ராம ராவ் தான்!

புகையிலை வியாபாரியொருவரின் புத்திரரான ராம ராவுக்குச் சொந்த ஊர் மசூலிப்பட்டினத்திற்கருகே உள்ள ஒரு கிராமம். அவர் படித்து வளர்ந்ததெல்லாம் விஜயவாடாவில். ஆரம்பக் கல்வியை அங்கே முடித்துக்கொண்டு, குண்டூர் கிறிஸ்டியன் கலாசாலையில் சேர்ந்தார். நடிப்புக் கலையிலே ஆர்வமுள்ள ராம ராவ் பரீட்சைகளில் தவறிவிட்டார். ஆயினும், விடாப்பிடியாகப் படித்துப் பாஸ் செய்துவிடுவதென்று உறுதி பூண்டார். நடுவே தந்தையின் புகையிலை வியாபாரத்தையும் கவனித்துக்கொண்டார்.

எம். ஏ. வி. பிக்சர்ஸின் 'சம்பூர்ண ராமாயண'த்தில் ஸீதா (பத்மினி), லக்ஷ்மண (நரசிம்ம பாரதி) சமேதராக ராமபிரான் (என். டி. ராம ராவ்)

ராம ராவின் நாடக நடிப்பைக் கண்ட சிலர், இவரை எப்படியாவது பட உலகத்திற்குக் கொண்டுவந்துவிட வேண்டுமென்று முயற்சி செய்தனர். டைரக்டர் ஸி. புல்லையா அப்பொழுது தாம் டைரக்ட் செய்துவந்த 'கொல்லபாமா' என்ற படத்தில் வந்து நடிக்குமாறு ராம ராவை அழைத்தார். ஆனால், சிறிது காலத்திற்குள் புல்லையாவே அந்தக் கம்பெனியை விட்டு வெளியேறிவிட்டதால், அந்த யோசனை அத்துடன் கைவிடப்பட்டது. தனது மற்றொரு படத்தில் நடிக்க மீண்டும் புல்லையா அழைத்தபோது ராம ராவ் பரீட்சைக்கு மும்முரமாகப் படித்துக்கொண்டிருந்ததால், அதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அதன்பிறகு அவரது கவனம் நடிப்பிலிருந்து திரும்பி, உத்தியோகத்தின் பக்கம் நாட்டம் கொண்டது.

அவர் உத்தியோகத்திற்கு வேட்டையாடிக்கொண்டிருக்கும் போதுதான் டைரக்டர் பிரசாத் அவரைச் சந்தித்தார். நல்ல நடிகன் வேண்டும் என்று தேடிய டைரக்டர் பிரஸாதும், சிறந்த டைரக்டரின்கீழ் நடிக்க வேண்டுமென்று விரும்பிய ராம ராவும் இதனால் பெருமகிழ்ச்சியடைந்தனர். ஆனால் துரதிருஷ்டவசமாக அவர்கள் எந்தக் கம்பெனியை நம்பியிருந்தார்களோ, அந்தக் கம்பெனி படமெடுக்கும் யோசனையைக் கைவிட்டுவிட்டது. ஆகவே, நடிகனாகும் ஆசையை அறவே உதறித் தள்ளிவிட்டு, ராம ராவ் உத்தியோகத்தையே மீண்டும் தேடிச் சென்றார். விரைவில் விஜயவாடா சப் கோர்ட்டில் உதவி நாஸர் உத்தியோகம் கிடைத்தது. அந்த உத்தியோகத்திலிருந்தபடியே நேஷனல் ஆர்ட் தியேட்டர் என்ற கோஷ்டியில் பங்கெடுத்துக்கொண்டு நாடகங்களில் நடித்தார். அது மட்டுமல்ல, நேஷனல் ஆர்ட் தியேட்டரின் ஜீவ நாடியாக இவரே விளங்கினார், இவர்கள் இலவசமாகச் சிறந்த நாடகங்களை நடத்தினார்.

பட உலகில் புகுந்து நடிகனாக வேண்டும் என்ற ஆசையை மறந்து, இன்னும் கொஞ்சம் பெரிய உத்தியோகமாக ஏதாவது கிடைக்காதா என்று எண்ணிய ராம ராவுக்கு, சப் ரிஜிஸ்ட்ரார் வேலை கிடைத்தது. குண்டூருக்குச் சென்று பதவியேற்றார். ஆனால், அந்த உத்தியோகம் அவருக்குத் திருப்தியளிக்கவில்லை.

இந்தச் சந்தர்ப்பம்தான் அவரது வாழ்க்கையிலே ஒரு திருப்பத்தை அடைந்த கட்டம். நடிப்பா, உத்தியோகமா என்று மனப்போர் நடத்திக்கொண்டிருந்த ராம ராவுக்கு, ஒரே சமயத்தில் இரண்டு படங்களில் நடிக்க அழைப்பு வந்தது, சென்னையிலிருந்து. 'மனதேசம்' என்ற படத்தில் ஒரு சிறு கதாபாத்திரத்தை ஏற்று நடிக்கும்படி பிரஸாத் அழைத்தார். டைரக்டர் பி. எஸ். சுப்பா ராவ், தாம் தயாரித்த 'பல்லிடூரு பில்லா' என்ற படத்தில் கதாநாயகனாகவே நடிக்கும்படி அழைத்தார். எனவே, ஸ்ரீ ராம ராவ் தமது பதவியை ராஜிநாமாச் செய்துவிட்டு, சென்னைக்கு வந்து சேர்ந்தார்.

'பல்லிடூரு பில்லா'வில் அவருடைய நடிப்பு பிரமாதமாக இருந்தது. அதில் அவர் ஒரு ஜல்லிக்கட்டுக் காளையுடன் சண்டை போட்ட காட்சி மயிர்க்கூச்செறியும்வண்ணம் அமைந்தது. இதில் அவருக்குக் காயமும் ஏற்பட்டதாம். படப்பிடிப்பாளர்கள் காமெராவை விட்டுவிட்டு ஓடிவந்து இவரைப் பிடிக்கும்படி ஆகிவிட்டதாம். இப்படி ரத்தம் சிந்திப் பிறந்த காட்சி இயற்கையாக அமையாது போகுமா!

இதன் பின்னர்தான் 'சம்சாரம்' படம் வந்தது. அதில் நடித்ததும் ராம ராவ் நட்சத்திரப் பதவியை அடைந்துவிட்டார். அதன் பிறகு அவர் நடித்த படங்கள் ஒவ்வொன்றிலும் அவரது புகழ் ஓங்கிக்கொண்டே வந்தது. விஜயாவின் 'கல்யாணம் பண்ணிப்பார்', வாஹினியின் 'மல்லேஸ்வரி', விக்ரமாவின்

'திருட்டு ராமன்'தான் இப்படி காய்கறிக் கூடையை சுமக்கவைக்கிருன் சாவித்திரியை

'தெனாலிராமன்' ஆகிய படங்களில் அவருடைய நடிப்பு பிரமாதமாக அமைந்தது. தன்னுடைய நேஷனல் ஆர்ட் தியேட்டர்ஸின் பெயரில் 'பிச்சி புல்லையா' என்ற படத்தை சொந்தத்திலும் தயாரித்தார் ராம ராவ். அது ஆந்திர நாடெங்கும் வெற்றிகரமாக ஓடியது.

தற்போது அவர் பல படங்களில் நடித்து வருகிறார். அவைகளில் முக்கியமாகக் குறிப்பிட வேண்டியவை, விஜயாவின் 'சசிரேகா பரிணய'த்தில் கிருஷ்ண வேஷம், எம். ஏ. வி. பிக்சர்ஸாரின் 'ராமாயண'த்தில் ராமர் ஆகியவையாகும். விநோதாவின் 'சிரஞ்சீவலு' என்ற சமூகப் படத்திலும் அபாரமாக நடித்துள்ளாராம். இது விரைவில் வெளிவர இருக்கிறது.

எந்தக் கதாபாத்திரத்தைக் கொடுத்தாலும், அதை ஏற்று நடிக்கும் ஆற்றல் படைத்த நடிகர்களில் ராம ராவும் ஒரு[illegible] சாம்ராஜ்யத்தின் மன்ன[illegible]தேவராயராக 'தெனாலி ராமன்'ல் நடி[illegible]கார். அந்தப் பாத்திரத்தி[illegible]குள்ள குறுதிசயம், காம்பீர்யம், தந்தி யாவற்றையும் இவரிடம் கண்டோம். அதேமாதிரி 'வேலைக்காரி மகன்' என்ற படத்தில் இவர் ஒரு ஜட்கா வண்டிக்காரனாக வந்து, அந்தப் பாத்திரத்திலே நாம் வியக்கும்வண்ணம் அற்புதமாக நடித்துள்ளார். தமிழைப் பொறுத்த வரையில் அதைப் பேசத் தெரியுமேயொழிய படிக்கத் தெரியாது. கூடிய சீக்கிரம் இந்தக் குறையையும் போக்கிக் கொண்டுவிடப் போகிறாராம்.

இவ்வாறு குறையிருந்தால் திருத்திக் கொள்ள விழையும் மெச்சத்தக்க மனோபாவமுடைய ராம ராவ் சிறந்த கலைஞர் மட்டுமல்ல, ஒரு சமூக ஊழியரும்கூட. ராயலசீமையைப் பஞ்சம் பீடித்தபோது, நடிகை வரலட்சுமியோடு ஆந்திர நாடெங்கும் சூறுவளி வேகத்தில் சுற்றுப் பிரயாணம் செய்து, பெருந் தொகையை வசூலித்துப் பஞ்ச நிவாரணத்திற்கு அளித்தவர் அவர்.

தற்போதைய பட உலகம்பற்றி அவரிடம் பேசியபோது அவர், "என்னைவிட இதைப்பற்றிக் கூற நீங்கள்தான் தகுதியுள்ளவர்கள்" என்று கூறிச் சாமர்த்தியமாகத் தப்பித்துக்கொள்ளப் பார்த்தாலும், சிற்சில கேள்விகளுக்குப் பதிலளிக்காது போகவில்லை:

"தமிழ் ரசிகர்கள்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?"

"ரசிகர்கள் எந்த நாட்டிலும் ஒரே மாதிரிதான். ஆந்திர ரசிகர்களைப் போலவேதான் தமிழ் நாட்டு ரசிகர்களும் என்னைப் பாராட்டுகிறார்கள்."

"எந்த மாதிரி பாத்திரங்களை ஏற்று நடிக்க உங்களுக்கு விருப்பம்?"

"உணர்ச்சிகள் நிறைந்த உன்னதமான பாத்திரங்கள்."

"நடிக்க ஒப்புக்கொள்ளுமுன் கதையைக் கேட்பதுண்டா?"

"உண்டு. ஆயினும், பணம் போடும் முதலாளிகளுக்கு இல்லாத சிரத்தை இதில் நமக்கென்ன இருக்கிறது? எனவே,

'சிவசக்தி'யில் அம்பி[illegible]வும் ஈ. வி. ஸரோஜாவும், அழகாக ஆடுகின்றனர்.

அவர்கள் கொடுக்கும் வே[illegible] ஏற்று நடிக்கிறேன்."

"நடிகர்களுடைய குள[illegible]களை [illegible] வேண்டாம் என்கிறார்கள். ப[illegible] யாளர்கள் பொதுஜனங்களின்ப[illegible] களுக்குள்ள கடமையை நி[illegible] வேண்டாமா?"

"பொதுமக்களுக்கும் கலைஞர்களுக்கும் நடுவே இணைப்புச் சங்கிலிபோல் இருப்பவை பத்திரிகைகள். இதன்மூலம் நாங்கள் பெருமையும், கியாதியும் அடைகிறோம். அதே சமயம் எங்கள் பிரத்யேக வாழ்க்கைபற்றி எழுதி, பொதுமக்கள் முன் எங்கள் முகத்தில் கரி பூச வேண்டாம் என்றே கூறுகிறேன். என்னிடம் உள்ள குறைகளை நேரில் கூப்பிட்டுக் கேட்டு, நீங்கள் தெரிந்துகொள்ளலாம்."

"நடிகர்கள் பல படங்களில் ஒரே சமயத்தில் நடிப்பதால், படத்தின் தரம் குறைந்து போகிறது. ஏன் நடிகர்கள் யாவரும் சேர்ந்து குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள படங்களில் மட்டும் நடிப்பதென்று வைத்துக்கொள்ளக்கூடாது?"

"இது காரிய சாத்யமில்லை. பல படங்களில் நடிப்பதால் பூரணத் திறனை வெளியிட இயலாது போவதுடன் உடல் நலமும் குன்றுகின்றபோதிலும் தாட்சண்யத்துக்குக் கட்டுப்பட்டு புதிய ஒப்பந்தங்களை ஏற்கவேண்டியிருக்கிறது. மேலும், குறிப்பிட்ட காலம்வரைதான் ஒரு நடிகன் புகழின் உச்சியில் இருக்க முடியும். இந்தக் காலத்திலே அவன் தன் பிற்கால வாழ்க்கைக்கு வசதி தேடிக்கொள்ள வேண்டாமா?"

"பொதுவாகப் படத் தொழிலில் உள்ள நிலைமை உங்களுக்குத் திருப்திகரமாக இருக்கிறதா?"

"இருக்கிறது. எங்களுக்குள் சௌஜன்யம் நிலவுகிறது."

"பொதுஜனங்களுக்குக் கலை விருந்து அளிப்பதே உங்கள் லட்சியம் என்கிறீர்கள். அதாவது, வெறும் பொழுதுபோக்கு தான் தேவை என்று நீங்கள் கருதுகிறீர்களா? அதோடு பொதுஜன ரசனையை உயர்த்த வேண்டும், படங்களில் போதனம்சம் சேர வேண்டும், அவற்றின்மூலம் ஒழுக்க தரம் உயர வேண்டும் என்றெல்[illegible]ங்களுக்கு அபிலாஷை இல்லையா?"

"இருக்கிறது. ஆனால், இருந்து [illegible]ன்ன பயன்? காலம் அதற்கு [illegible]னுசரணையாயில்லையே! போட்ட [illegible]னத்தைத் திரும்ப எடுப்பதே [illegible]ம்மப் பிரயத்தனமாக இருக்கும் போது, போதனம்சத்தை எங்கே கவனிப்பது? உதாரணமாக, 'தோடு தொங்கலு' என்ற படத்தை எடுத்துக்கொள்ளுங்கள். உயர்ந்த நோக்கோடு தயாரிக்கப்பட்ட படம்தான் அது. ஆனால், ஆந்திராவில் மகத்தான தோல்வியையல்லவா அடைந்துவிட்டது!"

"என்ன காரணம்?"

"காலம் பக்குவமாயில்லை என்றுதான் சொல்லவேண்டும். எனவே, துணிச்சலாக இம்மாதிரிப் படங்கள் எடுத்து நஷ்டப்பட யாரும் முன்வராதது இயற்கைதானே? இம்மாதிரி துணிச்சல் பிறந்து, நல்ல படங்கள் எடுக்கப்பட வேண்டுமானால், சர்க்கார் சகாயம் அத்தியாவசியம் என்பதை அறிவுறுத்தத் தேவையில்லை. சினிமாக் கலையை அங்கீகரித்து, சிறந்த படங்களுக்குப் பரிசுகளும் அளிக்க முற்பட்டிருக்கும் சர்க்கார், ஏன் இம்மாதிரிப் படங்களை ஒரு வார காலமாவது ஓட்ட வேண்டுமென எல்லாத் தியேட்டர்களையும் வற்புறுத்தக் கூடாது?"

"இந்தப் பரிசுகள்பற்றி உங்கள் கருத்து என்ன?"

"நிச்சயம் வரவேற்கப்பட வேண்டியவை இவை, நம் முயற்சி வீண்போகவில்லை என்று ஆறுதல் அளிப்பதோடு, மேற்கொண்டு முனைந்து முயலவும் ஆக்கமளிக்கக் கூடியவை!"

"பத்திரிகையாளரே இப்பரிசுகளை அளிக்கலாமா?"

"அவர்கள் அளித்தால், அதைவிடச் சந்தோஷம் தரக்கூடியது வேறில்லை. மற்ற எவரையும்விட அவர்களுக்கே இதற்கு அதிகத் தகுதி உண்டு என்பதுதான் என் கருத்து."

படத் தொழில்பற்றி அபிப்பிராயம் கூறத் தன்னைவிடப் பத்திரிகையாளர்களே ஏற்றவர்கள் என்று கூறிய ஸ்ரீ ராமராவ், அவர் இதுகாறும் நடித்துள்ள படங்களில் சிறந்ததைத் தீர்மானிக்கக் கூடியவர்களும் அவர்களே யெனச் சிரித்தவண்ணம் கூறி, நழுவிக்கொண்டு விட்டார். இவ்வாறு சுமுகமாகப் பேசும் ராம ராவ், பத்திரிகையாளரிடம் மட்டுமல்லாமல் எவரிடமும் சௌஜன்யமாகப் பழகும் குணம் வாய்ந்தவர். தன் மனைவி குழந்தைகளுடன் உத்தமமான கிருஹஸ்தனாக வாழ்க்கை நடத்துபவர். சிறந்த கலைஞர். தென்னாட்டின் படக்கலை வளர்ச்சியிலே தமது பங்கைத் திறமையுடனும், பொறுப்புடனும் செலுத்தும் சிந்தனையாளர். அவர் இன்னும் பல காலம் தொடர்ந்து கலைப்பணி செய்ய வேண்டும், இன்னும் சிறக்கச் செய்ய சந்தர்ப்பங்கள் கிடைக்கவேண்டும் என்று எந்த ரசிகர்தான் விரும்பாமலிருப்பார்?

சந்திரபாபு சடைமுடி தரிப்பதேன், அவரிடம் தங்கவேலு தகராறு செய்வ[illegible] என்ற மர்மமெல்லாம் ஜூபிலி பிலிம்ஸாரின் 'மர்ம வீரனை'ப் பார்த்தால் விளங்கி[illegible]ம்.

நகர அரங்கம்

சென்னை பின்னி கம்பெனி பொழுது போக்குக் கிளப்பைச் சேர்ந்த அமெச்சூர் நடிகர்கள் 'மனோரதம்' என்ற தமிழ் சமூக நாடகத்தை ஜூலை 28-ந் தேதி அண்ணாமலை மன்றத்தில் நடித்தனர்.

உலகநாதத்தின் பிள்ளை நாகாராஜன் அப்பாவி ஜாதிலிங்கத்தை ஏமாற்றி உல்லாச வாழ்க்கை நடத்துகிறான். ஜாதிலிங்கம் தன் பெண் ஜெயந்தியை அவனுக்கு மணம் முடிக்கத் தீர்மானித்து விடுகிறார். இதை ஜெயந்தி வெறுத்து, தன் அத்தான் தியாகராஜனை மணக்க உறுதி கொள்கிறாள். நாகாராஜனின் சூழ்ச்சி காரணமாகத் தியாகராஜன் எவ்வளவோ தொல்லைகளுக்கு உள்ளாகிறான். இறுதியில், நாகாராஜனின் தீய நடவடிக்கைகளை அவனுடைய சகோதரி புஷ்பா வெட்டவெளிச்சமாக்கியதுடன், அவனைத் தந்திரமாகப் போலீஸ் வசம் ஒப்படைத்துவிடுகிறாள். ஜெயந்தி தான் நேசித்த தியாகராஜனை மணந்து, தன் மனோரதத்தை நிறைவேற்றிக் கொள்கிறாள் – இவ்விதம் காலத்திற்கேற்ப கதை எழுதியிருப்பதுடன் நகைச் சுவையும், கருத்தாழமும் பொருந்திய வசனங்களையும் அமைத்துக் கொடுத்திருக்கிறார் ஸ்ரீ டி. கே. கோவிந்தன். சிற்சில இடங்களில் அனாவசிய சம்பாஷணைகளை நீக்கியிருக்கலாம் என்பதைத் தவிர, குறைகூற இடமேயில்லை. இவற்றோடு காதுக்கினிய கீதங்களும், கண்ணைக்கவரும் சீன்களும் நாடகத்தைப் பிரமாதமாக்கிவிட்டன.

நாகாராஜனாகத் தோன்றிய ஸ்ரீ டி. பாலகிருஷ்ணனுக்குத்தான் முதல் பரிசு கொடுக்கவேண்டும். இவர் தம் பாகத்தை உணர்ச்சி ததும்பவும், இயற்கையாகவும் நடித்து, நாடகத்திற்கே ஜீவன் அளித்தார். இவருக்கு அடுத்தபடியாகத் தியாகராஜனாகத் தோன்றிய ஸ்ரீ டபிள்யூ. ஜே. சுந்தரராஜ் விறுவிறுப்பாகவும் கம்பீரமாகவும் நடித்தார். கதாநாயகியாக நடித்த 'ஜெயந்தி' ஸ்ரீமதி டி. ஆர். கோகிலா தம் பாகத்தைத் திறம்பட வகித்தார். 'உலகநாதம்' பாகம் ஏற்ற ஸ்ரீ ஏ. கே. சீனிவாசன் உருக்கமாக உழைத்து நடித்தார். 'ஆனந்த'னாக வந்த ஸ்ரீ டி. தம்பிராஜு சிற்சில இடங்களில் மிகையாக நடித்திராவிடில் நன்றாக இருந்திருக்கும். 'ஜாதிலிங்கம் பிள்ளை'யாகத் தோன்றிய ஸ்ரீ எஸ். என். பிள்ளை திறம்பட நடித்தார். 'புண்ணியகோடி' ஸ்ரீ எம். சுப்பிரமணியம் நடிப்பும் உருக்கமாக இருந்தது. 'பேயாண்டி' ஸ்ரீ ஏ. ஆர். சுந்தரவிநாயகம், 'மனோரஞ்சிதம்' ஸ்ரீ பி. சீனிவாசலு, 'புஷ்பா' குமாரி டி. ஆர். சரோஜா ஆகியோர் நடிப்பும் தேவலை. 'பட்டாள'மாக நடித்த ஸ்ரீ என். திருமலை ஹாஸ்யச் சுவையுடன் நடித்தார்.

நாடக டைரக்ஷன் பொறுப்பை ஸ்ரீ எஸ். டி. சாம்வேல் திறமையாக நிர்வகித்திருக்கிறார். புதுவை ஸ்ரீ டி. ஜெயராமன் பாடல்களை அமைத்துக் கொடுத்திருக்கிறார். ரஞ்சன் கோஷ்டியின் பின்னணி சங்கீதமும் நன்றாக இருந்தது. 'மேக்கப்', காட்சி ஜோடனைகள், உடை எல்லாம் எடுப்பாக இருந்தன. நாடகத்திற்குத் தலைமைவகித்த சென்னை கார்ப்பரேஷன் கவுன்ஸிலர் ஸ்ரீ கே. எம். சுப்பிரமணியம் நடிகர்கள் அனைவரையும் பாராட்டினர்.

ஃ ஃ ஃ

சென்னை மாமத்து மந்திரி ஸ்ரீ ஆர். ஷண்முகராஜேஸ்வர சேதுபதியைத் தலைவராகக் கொண்ட ஆர்டிஸ்ட் சம்பைன்ஸ் கோஷ்டியினர் சென்ற ஜூலை 25-ந் தேதி மியூஸியம் தியேட்டரில் 'உயிருள்ளளவும்' என்ற தமிழ் சமூக நாட[illegible] நடித்தனர்.

தங்கள் உ[illegible]ருள்ளளவு[illegible] தங்களிடையே ரகஸியம் ஏதும் இருக்[illegible] கூடாது என்று மனோரமாவும் சேக[illegible] ஒப்பந்தம் செ[illegible]துகொண்டு மணந் கொள்கின்றனர். விதி செய்த சதிய[illegible] ஒரு ரகசியம் அவர்களிடையே ஏற்ப[illegible] விடுகிறது. கர்ப்பமுற்ற மனோரமா, தனக்கு இந்தத் தடவை பெண் குழந்தையையே அளிக்கப் போகிறாள் என்று தன் தங்கையின் கணவர் பரசுராமிடம் சேகர் கூறுவதை ஒட்டுக் கேட்டுவிடுகிறாள் மனோரமா. மனோரமாவும் அவளது நாத்தி கிரிஜாவும் ஒரே நாளில் ஒரே நர்ஸிங் ஹோமில் பிரசவிக்கின்றனர். மனோரமாவுக்குப் பிறந்த குழந்தையோ ஆண். தன் கணவன் எதிர்பார்த்தது நடக்கவில்லையே எனச் சஞ்சலமடைந்தாள் மனோரமா. கிரிஜாவுக்குப் பிறந்த பெண் குழந்தையை அவள் யோசனைப்படியே பரிமாறிக்கொள்கிறாள் மனோரமா. மாற்றப்பட்ட பெண் சம்யுக்தைக்கும் மனோரமாவின் மூத்த பிள்ளை பிருத்விக்கும் கல்யாணமாக வேண்டுமென்று வாக்குறுதி வாங்கி இறந்துவிடுகிறாள் கிரிஜா. இவர்கள் சகோதரி சகோதரன்போல் வளருகின்றனர்; சேகர் வீட்டிலேயே வாழ்ந்து வருகின்றனர். உண்மை ரகசியத்தை மனோரமா இவர்களிடம் மாத்திரமே கூறுகிறாள். நர்ஸ் எழுதிவைத்த கடிதத்தின் மூலம் இறுதியில் ரகஸியம் வெளிப்பட்டு, சிக்கல்கள் தீர்ந்து சம்யுக்தைக்கும், பிருத்விக்கும் மணம் நடந்து நாடகம் சுபமாக முடிகிறது.

இந்த நாடகத்தில் பிரதான பாகம் ஏற்ற 'சேகர்' ஸ்ரீ பாலசந்திரும், 'பரசுராம்' ஸ்ரீ வர்மனும் தங்கள் பாகங்களை உணர்ந்து உழைத்து நடித்தனர். 'மனோரமா'வாக நடித்த ஸ்ரீ ராமன் உருக்கமாகவும் உணர்ச்சியுடனும் நடித்தார். 'அசோக்' ஸ்ரீ தங்கத்துரை நடிப்பு விறுவிறுப்பாக இருந்தது. 'ரவி' ஸ்ரீ ஹரிகிருஷ்ணன் நடிப்பு முதல்தரமாக அமைந்தது. 'பிருத்வி' ஸ்ரீ ராமஸ்வாமி திறம்பட நடித்தார். வில்லனாகத் தோன்றிய விட்டல் ஸ்ரீ மணிவேந்தன், சற்று உழைத்து நடித்திருக்கலாம். 'ஹனுமந்தன்' ஸ்ரீ நாகேஸ்வரராவ் இடை இடையே தோன்றிச் சபையோரை வயிறு குலுங்கச் சிரிக்கவைத்தார். 'பூமாலை' ஸ்ரீ கோவிந்தராஜன், 'ஆறுமுகம்' ஸ்ரீ மணவாளன் ஆகியோர் நடிப்பும் பரவாயில்லை. 'சம்யுக்தை' குமாரி லீலாவும் சுமாராக நடித்தார். சிறுவனாக நடித்த மாஸ்டர் கலைமணி சபைக் கூச்சமில்லாமல் நடித்தது போற்றத்தக்கது.

இந்த நாடகத்திற்குக் கதை, வசனம் எழுதியவர் 'ராகினி' என்ற ஸ்ரீ கோபாலகிருஷ்ணன். சங்கீத டைரக்ஷன் பொறுப்பை ஸ்ரீ பஷீர் அஹமத் ஏற்றுக் கொண்டிருந்தார். 'அனந்தன்' ஸ்டேஜ் டைரெக்ஷன் செய்தார். நாடகத்தில் மருந்துக்கு ஒரு பாட்டுக்கூட இல்லையாதலால், பின்னணி சங்கீத கோஷ்டிக்கு வேலையே இல்லாமலிருந்தது. ஓரிரண்டு இடங்களி[illegible] சில பாட்டுக்களைச் சேர்த்[illegible]தால் [illegible]பையினர் ஆயாசம் குறைந்[illegible]மக்கப், சீன்கள் நன்றாக [illegible]ன.

ஃ ஃ

[illegible] ஞாயிற்றுக்கிழமை தியாகராய[illegible] கிருஷ்ண[illegible] சபை ஆதரவில் [illegible]ஞ்சை சகோதரர்க[illegible] 'மூன்று நட்சத்திரங்கள்' என்ற தமிழ் சமூக நாடகத்தை நடித்தனர்.

கணவன் நடத்தையில் சந்தேகம் கொண்ட மனைவி, அவனைத் திருத்தி தன்வசமாக்கிக்கொள்வதை நாடகம் சித்திரிக்கிறது. போட்டோகிராபர் தாமோதரன் எதிர்வீட்டில் உள்ள வடநாட்டு ஹிந்தி நடிகை சிநேகப்பிரபா மீது காதல் கொள்கிறான். இதை வீட்டு வேலைக்காரி மூலம் அவன் மனைவி சாவித்திரி அறிந்து வருத்தமடைகிறாள். தன் தம்பி சந்தானத்தின் சகாயத்துடன், தன் கணவனின் மனதைத் திருப்பிக் கற்பரசியாக விளங்குகிறாள் சாவித்திரி.

நாடகத்தில் அதிக பாத்திரங்கள் இல்லை. தாமோதரனாக நடித்த ஸ்ரீ வி. வ.ராமன் உழைத்து நடித்தார். ஆனால், நீண்டுபோன வசனம் காரணமாக அவர் நடிப்பு சோபிக்கவில்லை. சந்தானமாக நடித்த ஸ்ரீ வி. நாராயணஸ்வாமி சுமாராக நடித்தார். இரு வேஷங்களில் தோன்றிய ஸ்ரீமதி எஸ். ஐ. ராணி நடிப்பு தேவலை. சுந்தாவாகத் தோன்றிய ஸ்ரீமதி எஸ். சரோஜா திறம்பட ஹாஸ்யச் சுவையுடன் நடித்தார். குமாரி கல்பகத்தின் ஜப்பானிய நடனம் நன்றாக இருந்தது.

இந்த நாடகத்திற்குக் கதை—வசனம் எழுதியவர் தஞ்சை ஸ்ரீ என். விஸ்வநாதன். பாடல்களை ஸ்ரீ கோ. கந்தசாமி அமைத்துக் கொடுத்திருக்கிறார். ஸ்டேஜ் டைரக்ஷன் பொறுப்பை தஞ்சை ஸ்ரீ வி. எஸ். குமார் ஏற்றிருந்தார். நாடகத்தில் மேலும் சில சீன்களைச் சேர்த்திருக்கலாம். சிற்சில இடங்களில் அனுசித வசனத்தையும் தவிர்த்திருக்கலாம்.

—கே ஆர். எஸ்.

ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர் கீர்த்தனைகள்

சங்கீத கலாநிதி டி. எல். வேங்கடராமய்யர் உதவியது

ஸ்வரப்படுத்தியவர் ஸ்ரீ அரியக்குடியின் சிஷ்யரான ஸ்ரீ பி. ராஜம் அய்யர் அவர்கள்

பல்லவி

பர்வத ராஜகுமாரி ஸ்ரீ பார்வதி

...லிமாம் பரமேச்வ... (பர்வத)

அநு...

...ன்... ச... ...ரி
3

...ருகுஹ ஜனக... ...னி
3

மத்யம கா...

சர்வாணி சம்பு மோஹினி
4

சரச்சந்த்ரிகா தவள ப்ரகாசினி (பர்வத)
3 4

சரணம்

கைலாஸபுர விலஸித ப்ரஸித்த
3 4

காமேச்வரி கஞ்ஜலோசனி

கவி ஹ்ருதயாவேசினி பாசமோசனி
3

பாக சாஸனாதி தேவ பாலினி
3 3

மத்யம காலம்

காலஹந்த்ரி த்ருபுராதி மர்த்தனி
3 3 3

கந்தர்ப்ப ஜனகாபாங்க வீக்ஷணி
3 3

கைவல்ய ப்ரதாயினி காவ்யாலாப
3

விநோதினி மந்தஹாஸினி (பர்வத) (28)
3 3

ஸர்வானந்தமய சக்ரத்தில் வஸிப்பவளும், குருகுஹனுக்குத் தாயாரும், மாசற்றவளும், சர்வாணீ எனப் பெயர் கொண்டவளும், பரமசிவனை மயக்குபவளும், சரத்கால சந்திரனைப்போல வெண்ணிறமாகப் பிரகாசிப்பவளும், கைலாஸபுரத்தில் விளங்கும் காமேச்வரியும், தாமரை விழியாளும், கவியின் ஹ்ருதயத்தில் பிரவேசிப்பவளும், பாசத்தை அகற்றுபவளும், இந்திரன் முதலான தேவர்களைக் காப்பவளும், காலனைக் கொல்பவளும், திரிபுரன் முதலியோரை அழிப்பவளும், மன்மத விகாரத்தை உண்டுபண்ணும் கடைக்கண் பார்வை யுடையவளும், கைவல்யத்தைக் கொடுப்பவளும், காவ்யங்களைப் படிப்பதால் களிப்புறுபவளும், புன்முறுவலுள்ளவளும், பரமேச்வரியும், பர்வதராஜனான ஹிமவானுடைய புத்ரியுமாகிய ஹே பார்வதி, என்னைக் காப்பாற்றுவாயாக.

ராகம் : ஸ்ரீரஞ்ஜனி (22-வது மேளத்தில் ஜன்யம்) தாளம் : ஆதி.

ஆ : ஸரிகமதநிஸா.
அவ : ஸ்நிதமகரிஸா.

	I	O	O
	பல்லவி		
1	ஸ்ா; ஸ்நிநீதா தமாதநீ தாமா	மரிரிககரிரீ ;	கரிரிக ரிஸஸரி
	ப.ர்வ.. தரா...ஜகு	மா...ரி...	....ஸ்ரீ ..
	ரிஸநீதா; தநிஸா; மகரிமக	மா ; நிததநி	நிஸ்ாநி தமதநி
	பா....ர்வ தி.பா..ஹி.	மாம்ப.ர.	மே..ச்வ.ரி.
2	ஸ்ரிக்ரிஸ்ர,ரி ஸ்நிநீதாம தமதநீ,தமா	ம ரிரிககரிரீ	;;;;
	ப...... ர்வ.. தரா.... ஜகு	மா...ரி..	....
	அநுபல்லவி		
1	ஸ்ா; ஸ் நிநீதா தா ஸ்நி ஸ்ா ரீ	ஸ்ா ரீம்க்ரீ	ஸ்ா ரி\க்ா,ம் ரீ ,க் ரிஸ்நீ
	ஸ.ர்வா...னந்..தம	ய ச க்ர	வா.. ...ஸி..னி..
2	ஸ்ா,க்ரி ஸ் நிநீ தா தா ஸ்நி ஸ்ாரீ	ஸ்ா ரீம்க்ரீ	ரீ .க்ம்ா,க் ரீ ,க் ஸ்ரி
	ஸ...ர்வா.. னந்.. தம	ய ச .க்ர	வா.....ஸி..னி.
	க்ர; க்ம்ம்ரிக்க்ரீ ஸ்நிநித	மதமதநித நீநித	ஸ் [illegible] த நிஸ்ா
	ஸத் கு. ரு .கு. ஹ ஜ.ன.	[illegible] ..நி	[illegible] னி
	மத்ய[illegible]		
	ஸ்ா நி தநீ தநித ம க ரிகமா,க	[illegible]	[illegible] நி
	ச ர்வா ,ணி சம். பு மோ . ஹி. னி . ச	[illegible] ந்த்ரி கா [illegible]	[illegible] ரி (பர்வத)
	ம\ரீகமா; தா நிநிதா தநி	[illegible] நிநி தமத மதநீ	[illegible]
	கை. லா.ஸ பு.ர வி.	ல.ஸி.த...	ப்ர ஸ [illegible]
	\ரீ.கமா; தா மத மதநித நீ	ஸ்நி தாஸ்நி தம த நி	ஸ்ா ஸ்.நி ஸ்ா [illegible]
	கா. மே ச்வரி......	கம்... ஜ லோ.	. [illegible] ..னி.
	க்ரி/ ம் ம்க்ம்ா; ம்ரிக்க்ரீ	ஸ்ா ஸ்ா ; ஸ்நி	ஸ் [illegible] ம தநிஸ்ா
	கவிஹ்ருத யா வே. சி	னி பா . ச.	மோ [illegible] .. ச.னி
	க்ரி/க் ஸ ஸ்ா\தா.நி ஸ்ா ஸ்ா தாரிஸ்நி	தா தமாத\நீதா	மரிகக ரீஸா
	பா... க சா.. ஸ ஞ...	தி தே.. .வ	பா...லினி
	மத்யம காலம்		
	மகம தா நீ ஸ்நி த நித\மா த நி	க்ரிஸ்ா நி ஸ்நித	நிநி தம\தா நிஸ்
	கா ல ஹந்த்ரீ த்ருபுரா . தி மர்த்த னி	கந் தர்ப்ப ஜனகா	பா ங்க விக்ஷணி
	க்க்ரிக்ம்ா ரிக்ா ரிஸ்ா ரிஸ் ஸ் நி	ஸ் நிதம க மதநி	தாஸ்நி நித\மா த நி
	கை.வல். ய ப்ரதாயி னி கா .வ்யா.	லா .பவி நோ . தினி	மந்...த ஹாஸி னி

(பர்வத)

★

மக்கள் முன்னேற்றக் கட்சியின் உதவி நிதிக்காக சென்ற மாதம் 19-ந் தேதி அண்ணாமலை மன்றத்தில் ஸ்ரீமதி கமலா லக்ஷ்மண், குமாரி ராதா ஆகிய இருவரும் நடனக் கச்சேரி செய்தனர்; விஜய நகரம் மஹாராணி சாஹேபா அந் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்து இருவருக்கும் பரிசுகள் வழங்கினர்.

★

'ஹம் ஔர் தும்' என்ற படத்தில் குங்கும்

Regd. No. 2514.
Registered as a Newspaper in CEYLON. The Swa



L. 263-X52 TM

இந்தியாவில் தயாரித்தது

Printed and Published by N. Rajagopalan, at the 'Swadesamitran' Press, 'Victory House' Mount Road, Madras, Editor: C. R. Srinivasan, B. A.